முத்திரை பதித்த மூன்றாண்டு
முதலிடமே அதற்குச் சான்று

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்
வெளியீடு

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்களின் வழியில் செயல்படும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
தலைமையிலான அரசின் மூன்றாண்டு சாதனைகள்
சிறப்பு வெளியீடு எண். 40 – பிப்ரவரி 2020

ஆசிரியர் - வெளியிடுபவர் :
முனைவர் **பொ. சங்கர்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
பா.செல்வாம்பாள்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
மாய குமரேசன்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள் :
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு :
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர் :
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர் :
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com

"ஆரவாரமின்றி அமைதியாகவும், திடமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுவதால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி**

இந்த இதழில்....

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.......1
- வேளாண்மைத்துறை.......4
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை.......23
- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.......41
- வணிகவரி மற்றும் பதிவுத்துறை.......46
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.......50
- எரிசக்தித்துறை.......59
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை.......64
- நிதித்துறை.......77
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை.......85
- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.......95
- உயர்கல்வித்துறை.......102
- நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை.......109
- உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை.......119
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை.......127
- தொழில்துறை.......131
- தகவல் தொழில்நுட்பவியல்துறை.......135
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.......143
- சட்டத்துறை.......154
- சட்டமன்றப் பேரவைச் செயலகம்.......159
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை.......162
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.......166
- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை.......187
- திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.......196
- பொதுத்துறை.......198
- பொதுப்பணித்துறை.......201
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.......211
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை.......225
- பள்ளிக்கல்வித்துறை.......230
- சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை.......235
- சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை.......241
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை.......242
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை.......251
- போக்குவரத்துத்துறை.......262
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறை.......264
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை.......267

- முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பு பயில ஆண்டு ஒன்றுக்கு ஊக்கத்தொகை ரூ.50,000/– வீதம் 700 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எண்ணிக்கையினை 1,200 ஆக உயர்வு.

- ஆதிதிராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 5 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 2017–2018இல் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2018–2019இல் 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 875 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 755 ரூபாயிலிருந்து 900 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- ரூ.27.34 கோடி செலவில் 1,297 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் மாணாக்கர்கள் அவர்தம் உடைமைகளை பாதுகாக்க RCC அலமாரிகளுக்கு இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- பழுதடைந்த நிலையில் இருக்கும் இராயபுரம் தொழிற்பயிற்சி மகளிர் விடுதிக் கட்டடத்தை இடித்துவிட்டு, அவ்விடத்தில் 3 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பில் இரண்டு மாணவியர் விடுதிகள் கட்டப்படுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு கட்டுமானப் பணி முன்னேற்றத்தில் உள்ளது .

- பழங்குடியின மக்கள் அவர்களின் திறனுக்கேற்ற வருமானம் ஈட்டக் கூடிய தொழில் புரிய ஏதுவாக, சுய உதவிக்குழுவிற்கு நிதி உதவி, தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், நிலம் வாங்கும் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞருக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.10 கோடி செலவில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டப்படி, 7,146 தனி நபர் உரிமைகள் மற்றும் 417 சமுதாய உரிமைகள் ஏற்கெனவே பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

- பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதல் தொடர்பாக ஏற்கெனவே செயல்பட்டு வரும் மாநில கூர்நோக்குக் குழுவுடன் கூடுதலாக இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்கள் புதிதாக தோற்றுவித்து செயல்பட்டு வருகின்றன.

* பழங்குடியினர் சாதிச்சான்றுகளின் மெய் தன்மையினை அறிய, கள ஆய்வு செய்து மாநில கூர்நோக்கு குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏற்கெனவே சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மண்டலங்களில் பழங்குடியினர் கண்காணிப்பு விசாரணை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் இப்பணியை விரைந்து முடிக்க கூடுதல் காவல்துறை இயக்குநரின் தலைமையின் கீழ், இயங்கும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவைச் சார்ந்த 38 காவல்துறை துணை கண்காணிப்பாளர்களுடன் 10 மானுடவியல் நிபுணர்கள் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அறிக்கைகள் மாநில கூர்நோக்கு குழுவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

* ரூ.1.35 கோடி செலவில் வேலூர் மாவட்டம், ஏலகிரி வட்டம், அத்தனாவூரில் புதிய பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள்.

* ரூ.43.20 இலட்சம் செலவில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கர்களுக்கிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.

* ரூ.22.10 இலட்சம் செலவில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கர்களுக்கிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் கட்டுரை, பேச்சு, ஒப்புவித்தல், வினாடி–வினா, பகுப்பாய்வுத் திறன் போட்டிகள் நடத்தப்பட்டது.

* ரூ.8.50 இலட்சம் செலவில் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டப் பயன்களைப்பெற விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பத்தின் நிலையை அவர்கள் அறிய இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் தோடா, கோத்தா, இருளர், காட்டுநாயகன், குரும்பாஸ் மற்றும் பணியன் ஆகிய பழங்குடியினரின் பழுதடைந்துள்ள 500 குடியிருப்புகளை ரூ.5 கோடி செலவில் பழுது பார்க்கும் பணிகள்.

* தமிழ்நாட்டில் இயங்கி வரும் 6 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம், பட்டிபுலம் மற்றும் சேலம் மாவட்டம், ஏற்காடு என இரு இடங்களில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் புதிதாக துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

* பழங்குடியின மக்களின் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தர அரசாணை.

* 2019–2020ஆம் நிதியாண்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ‘‘எழுத்தூர்’’ அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ‘‘பாச்சேரி’’, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ‘‘அரசவெளி’’ மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ‘‘பொக்காப்புரம்’’ ஆகிய 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ‘‘இன்னாடு’’ அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ரூ.6.43 கோடி மதிப்பீட்டில் நிலை உயர்த்த அரசாணை.

* ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் மகிழ்ச்சியாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாடும் வகையில், மதுரை மாவட்டம்– கே.புளியங்குளம், கரூர் மாவட்டம்– வாங்கல் குச்சிபாளையம், தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம், நாமக்கல் மாவட்டம்– 82.கவுண்டம்பாளையம், திருநெல்வேலி மாவட்டம்– ரெங்கசமுத்திரம் ஆகிய 5 இடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய 5 சமுதாயக் கூடங்கள் தலா ரூ.1 கோடி வீதம் ரூ.5 கோடி மதிப்பில் கட்ட அரசாணை.

* ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 20 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்கள் மருத்துவம், பொறியியல் போன்ற மேற்படிப்புகளை பயில ஏதுவாக 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடங்களை மாணாக்கர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், கணினி வாயிலாக கற்பித்தல் முறையினை செயல்படுத்திட அறிவுத்திறன் வகுப்பறைகள் (Smart Class Room) ரூ.1.12 கோடி செலவில் ஏற்படுத்த அரசாணை.

* 158 ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு வாரந்தோறும் ஆளுமைத் திறன், மொழி மற்றும் தகவல் தொடர்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் வழங்க அரசாணை.

* ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் உடல் நலனை பேணிக்காத்திடவும்

அவர்களை சுகாதாரமற்ற குடிநீர் பருகுவதால் உண்டாகும் தொற்றுநோய் ஆபத்திலிருந்து காத்திடவும் 100 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கும், 13 மாவட்டங்களில் உள்ள 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், தலா ரூ.70,000 வீதம் மொத்தம் ரூ.1.05 கோடி செலவில் குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (Water Filters) 2019–2020ஆம் நிதியாண்டில் அமைக்க அரசாணை.

- ✶ அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய ஏதுவாக சுய உதவிக்குழு, பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், தொழில் முனைவோர் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி மானியத்தில் அரசாணை.

- ✶ பழங்குடியின மாணவ / மாணவியரை 2 ஆண்டுகள் கல்வியியல் பட்டயப் படிப்பு பயில வைத்து பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராக பணி வழங்க அரசாணை.

- ✶ பத்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்ட அரசாணை.

- ✶ 4 மாவட்டங்களில் உள்ள 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் இருக்கை வசதிகளுடன் நூலகங்கள் அமைக்க அரசாணை.

- ✶ 5 மாவட்டங்களில் உள்ள 10 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்ட அரசாணை.

- ✶ அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு, 20 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய கழிவறைக் கூடங்கள் கட்ட அரசாணை.

- ✶ 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு பெஞ்சு, டெஸ்க், கரும்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ரூ.1 கோடி செலவில் வழங்க அரசாணை.

- ✶ பழங்குடியின மாணவர்களுக்கு அதிகப் பயனளிக்கும் வகையில், பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளைத் தொடங்குகின்ற, அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் புதியதொரு திட்டத்தை இந்த அரசு துவக்கியுள்ளது.

- ✶ சிறப்புத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2018–2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு, 2019–2020ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

மாநிலத்தில் நெல் உற்பத்தியை பெருக்குதல்

அ) டெல்டா மாவட்டங்களுக்கான தொகுப்புத் திட்டம்

✶ 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் போதிய மழையின்மையின் காரணமாக, குறுவை தொகுப்புத் திட்டத்தினை 2017ஆம் ஆண்டில் ரூ.56.92 கோடி மற்றும் 2018ஆம் ஆண்டில் ரூ.115.67 கோடி நிதி ஒதுக்கீட்டில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முழுமையாகவும், கடலூர், திருச்சி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் டெல்டா பகுதிகளிலும் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முறையே 12.06.2017 மற்றும் 08.06.2018இல் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம், டெல்டா பகுதிகளில் 2017ஆம் குறுவைப் பருவத்தில் 2.73 இலட்சம் ஏக்கரில் நெல் மற்றும் 0.683 இலட்சம் ஏக்கரில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. 2018ஆம் குறுவைப் பருவத்தில் 3.191 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் மற்றும் 0.26 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,58,482 விவசாயிகள் மற்றும் 2,83,529 வேளாண் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

✶ டெல்டா மாவட்டங்களில் பரவலாகப் பெய்த மழையினைக்கொண்டு சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பினை ஊக்குவிக்கின்ற வகையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.09.2017 அன்று “சம்பா தொகுப்பு திட்டம் 2017”, ரூ.41.15 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினால், 2017–2018ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் 10.70 இலட்சம் ஏக்கர் பரப்பிலும், தாளடி பருவத்தில் 2.143 இலட்சம் ஏக்கர் பரப்பிலும் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 2,52,407 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். 2019–2020ஆம் ஆண்டில் நேரடி நெல் விதைப்பு சாகுபடி மேற்கொள்ளும் வேளாண் பெருமக்களை ஊக்குவிக்க, ஏக்கருக்கு 600 ரூபாய் வீதம் உழவு மானியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 23.08.2019 அன்று அறிவிக்கப்பட்டு, அதன்படி, 3 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு உழவு மானியமாக 18 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1,89,007 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பயறு உற்பத்தி

✶ விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம், விவசாய இயந்திரங்கள் விநியோகம், முக்கிய இடுபொருட்களான நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

✶ கடந்த மூன்றாண்டுகளில், மொத்தம் ரூ.199.95 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக, 2016–2017ஆம் ஆண்டில் 19.40 இலட்சம் ஏக்கர்,

2017–2018ஆம் ஆண்டில் 20.48 இலட்சம் ஏக்கர் மற்றும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.20.41 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைப் பயிர்கள் பயிரிடப்பட்டது. இதன்மூலம், 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டில் பயறு உற்பத்தி 5.5 இலட்சம் டன் என்ற நிலையை தாண்டியது. விலை ஆதரவு திட்டத்தின் கீழ் 2018–2019ஆம் ஆண்டின் கரீப் பருவம் வரை விவசாயிகளிடமிருந்து ரூ.59.60 கோடி மதிப்பிலான 9,242.45 மெட்ரிக் டன் பயறு வகைகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் பயறு உற்பத்தி செய்ய நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவான 23.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில், இதுகாணும் 17 இலட்சம் பரப்பளவில் பயறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பயறு உற்பத்தியினை பெருக்குவதற்காக ரூ.47.13 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, உயர்மகசூல் தரும் பல்வேறு தொழில்நுட்பங்கள் விவசாயிகளிடையே பரவலாக்கப்பட்டுள்ளது.

உணவு தானிய உற்பத்தி

✶ தமிழகத்தில், 100 இலட்சம் மெ.டன்னுக்கும் மேலாக ஆறு முறை உணவு தானிய உற்பத்தி எட்டப்பட்டது.

கிருஷி கர்மான் விருது

✶ தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடமிருந்து, உணவு தானியங்கள், பயறு வகைகள், சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்காக ஐந்து முறை கிருஷி கர்மான் விருதினையும், 2017–2018ஆம் ஆண்டிற்கான எண்ணெய் வித்து உற்பத்திக்கான கிருஷி கர்மான் விருதும் பெற்றுள்ளது.

மானாவாரி பகுதிகளுக்கான சிறப்பு இயக்கத் திட்டம்

✶ இத்திட்டத்தின்கீழ் 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் 1,000 மானாவாரித் தொகுப்புகளில், 4,154 விவசாயிகள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் பருத்தி உற்பத்தி செய்ய, 3,814 பண்ணைக்குட்டைகள், 977 தடுப்பணைகள், 83 சமுதாயக் குளங்கள் போன்ற மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதோடு, 308 ஊரணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 59,134 ஏக்கர் பரப்பளவிற்கு வயல்வரப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 24.995 இலட்சம் ஏக்கர் பரப்பில் உழவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரமான விதைகள் மானாவாரி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 829 பண்ணை இயந்திர வாடகை மையங்கள் மற்றும் 173 மதிப்புக் கூட்டு இயந்திர மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தொகுப்புகளில் உள்ள கால்நடைகளின் நலன் காக்க ஊட்டச்சத்தும், மருந்துகளும் வழங்கப்பட்டன. இத்தொகுப்புகளில் 2 பனைமர விதைகள் நடவுசெய்யப்பட்டுள்ளதோடு, மா, நெல்லி, மாதுளை, நாவல், எலுமிச்சை போன்ற தோட்டக்கலைக் கன்றுகளும் நடவுசெய்யப்பட்டுள்ளன. ஆக மொத்தம் கடந்த நான்கு ஆண்டுகளில் 579 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சேவைகளின் மூலம், மானாவாரி விவசாயிகளின் வருவாய் உயர வழிவகை ஏற்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீடுத் திட்டம்.

✶ 2016–2017ஆம் ஆண்டில் 18.73 இலட்சம் விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தனர். காப்பீட்டு மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.566 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, இதுவரை, 13.01 இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,610 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 12.12 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மொத்தம் ரூ.3,595 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில், பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஒப்பிடுகையில், 2016–2017ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியதில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது.

✶ 2017–2018ஆம் ஆண்டில், 31.71 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் காப்பீடு செய்யப்பட்டு 15.18 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டனர். மாநில அரசின் பங்காக ரூ.651 கோடி தொகை காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, இதுவரை 10.34 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,971 கோடி இழப்பீட்டுத் தொகையாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 9.45 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் ரூ.1,929 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டில், 24.04 இலட்சம் விவசாயிகள் சாகுபடி செய்த 35.37 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்து மத்திய அரசு நிர்ணயித்த இலக்கைவிட கூடுதலாக 75 சதவீத

பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டது. 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக காப்பீட்டு கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.737 கோடி வழங்கப்பட்டது. 11.99 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,944 கோடி இழப்பீட்டுத் தொகையாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இதுவரை 10.37 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் ரூ.1,731 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது.

- நடப்பாண்டில், 31.12 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் காப்பீடு செய்யப்பட்டு 20.11 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்து இதுவரை 9,699 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3.76 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, முழுவதும் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக காப்பீட்டு கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.635 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆக மொத்தம், பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரை 35.437 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில், 7,528 கோடி ரூபாய்க்கும் மேல் இழப்பீட்டுத்தொகை ஒப்பளிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மண் வள அட்டை இயக்கம்

- பயிரின் தேவைக்கேற்ப விவசாயிகள் உரமிடும் வகையில், "மண் வள அட்டை இயக்கத்தின்" கீழ் 2017–2018ஆம் ஆண்டில் 6.55 இலட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 34.82 இலட்சம் மண் வள அட்டைகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- 2018–2019ஆம் ஆண்டில் 6.47 இலட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 35.34 இலட்சம் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

- 2019–2020ஆம் ஆண்டில் 58,317 மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 13,965 எக்டேரில் செயல்விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நீடித்த வேளாண்மைக்கான
தேசிய இயக்கம்–மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்

- இத்திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் 10,402 எக்டரில் இருபோக பயிர் சாகுபடி செய்யப்பட்டு, 8,541 கறவை மாடுகளும், 18,350 ஆடுகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், 518 நிரந்தர மண்புழு உரக்கூடங்களும், 522 அடர்திறன் பாலித்தீன் மண்புழு உரப் படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய இனங்களை செயல்படுத்த ரூ.29.91 கோடி செலவினம் செய்யப்பட்டு 20,776 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2018–2019ஆம் ஆண்டில் இருபோக பயிர் சாகுபடி 31,888 எக்டர் பரப்பிலும், மரப்பயிர் சார்ந்த தீவனப் பயிர் சாகுபடி 137 எக்டரிலும் செயல்படுத்தப்பட்டது. மேலும் மதிப்பு கூட்டுதல் மற்றும் பண்ணை மேம்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் 590 நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, 4,736 தேனீ வளர்ப்பு பெட்டிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ரூ.31.93 கோடி நிதி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 36,338 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம்

- 2018–2019ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள், ஐந்து மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு வட்டாரம் வீதம் பத்து கிராமங்களில் ரூ.22.07 கோடி செலவில் 2,490 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 2,490 பண்ணைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

- 2019–2020ஆம் ஆண்டில் அரியலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற 27 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், வேளாண் காடுகள், தீவன பயிர், மண்புழு உரக்கூடம், தேனீ வளர்ப்பு மற்றும் பழமரக் கன்றுகள் ஆகிய வேளாண் சார்ந்த இதரப்பணிகளுக்காக, 50 சதவீத மானியமாக ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், 4,300 பண்ணைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மண் வளத்தை மேம்படுத்திட பசுந்தாள் உர பயிர்களின் விதைகள்

- ✶ 50 சதவிகித மானியத்தில் 46,191 எக்டர் பரப்பில் ரூ.4.97 கோடி நிதி செலவில், 2017–2018ஆம் ஆண்டில் 23,651 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2018–2019ஆம் ஆண்டில் 13,743 எக்டர் பரப்பளவில் ரூ.1.91 கோடி செலவில் விநியோகிக்கப்பட்டு 11,695 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

- ✶ இத்திட்டத்தில் முதற்கட்டமாக 50 தொகுப்புகளில், 11 மாவட்டங்களில் தொகுப்பு அணுகுமுறையில் 2,496 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு ரூ.5.66 கோடி செலவு செய்யப்பட்டு 2,272 பயனாளிகள் பயனடைந்தனர். 2018–2019ஆம் ஆண்டு 150 தொகுப்புகளில், 8 மாவட்டங்களில் முதலாமாண்டு நடவடிக்கைகள் ரூ.4.95 கோடி நிதி செலவில் 7,500 ஏக்கர் அங்கக பண்ணையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இரண்டாமாண்டு செயல்பாடுகள் ரூ.5.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 4,943 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம்

- ✶ 2017–2018ஆம் ஆண்டில், 4.58 இலட்சம் ஏக்கரில், பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் ரூ.5.35 கோடி செலவில், பருத்தியில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், விதைகள், நுண்ணூட்ட கலவைகள், களைக்கொல்லிகள், உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள், பருத்தி பஞ்சு அறுவடை செய்யும் கருவிகள், சுழற்கலப்பை போன்ற கருவிகள் மானியத்தில் விநியோகிக்கப்பட்டன. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் நீள இழை பருத்தி, 30,000 மெ.டன் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 16,609 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்தி

- ✶ கரும்பு உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில் ரூ.30 கோடி செலவில் 16,000 எக்டர் பரப்பளவில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, ஆண்டு இலக்கான 1,600 உற்பத்தி செய்யும் நிழல் வலைக் கூடங்களில் 1,597 நிழல் வலைக்கூடங்கள் அமைக்கப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 10 கோடி எண்ணிக்கையில் ஒரு பருகரணை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டம் 42,205 ஏக்கர் பரப்பில் ரூ.11.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் 9,398 ஏக்கர் பரப்பளவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.10 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்

- ✶ 100 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.150 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டு, அதில் 99 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் துவக்கி வைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மீதமுள்ள ஒரு ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

அட்மா திட்டம்

- ✶ பண்ணைசார்ந்த புதிய தொழில்நுட்பங்களில் விவசாயிகளை ஈடுபடுத்தி, அவர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு ரூ.35.18 கோடி செலவில் 360 தேசிய அளவிலான பயிற்சிகள், 748 மாநில அளவிலான பயிற்சிகள் மற்றும் 20,598 மாவட்ட அளவிலான பயிற்சிகள் நடத்தப்பட்டு 8,61,040 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- ✶ இதுதவிர, ரூ.16.19 கோடி செலவில் 401 தேசிய அளவிலான கற்றறிவு பயணங்கள், 1,763 மாநில அளவிலான கற்றறிவு பயணங்கள் மற்றும் 3,027 மாவட்ட அளவிலான கற்றறிவு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, 2,47,520 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். ரூ.475.91 இலட்சம் செலவில் 1,618 பண்ணைப்பள்ளிகள் மேற்கொள்ளப்பட்டு, 40,450 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- ✶ ரூ.2,274.65 இலட்சம் செலவில் 1,03,127 செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு 1,03,127 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கூட்டுப்பண்ணையம்

- ✶ 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில், கூட்டுப்பண்ணையம் என்னும் புதுமையான இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், 4,00,000 சிறு குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து

20,000 உழவர் ஆர்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் 4,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு, ரூ.231 கோடி மதிப்பிலான 1,386 டிராக்டர்கள், 3,583 பவர் டில்லர்கள், 3,866 பவர் வீடர்கள், 2,079 சுழற்கலப்பை, 3 அறுவடை இயந்திரம் உள்ளிட்ட 16,683 பண்ணை இயந்திரங்களை கொள்முதல் செய்து விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். 2019–2020ஆம் ஆண்டிலும் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து ரூ.100.58 கோடி நிதி ஒதுக்கீட்டில், 10,000 உழவர் ஆர்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயன்பெறும் வகையில், திட்டக் கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு மாவட்டஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உழவன் கைபேசி செயலி

- தகவல் தொழில்நுட்பம் மூலம் விவசாய பெருமக்களுக்கு வேளாண் தகவல்களை கொண்டுசேர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 15 முக்கிய சேவைகளை உள்ளடக்கிய "உழவன்" என்ற கைபேசி செயலியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் 05.04.2018 அன்று அறிமுகப்படுத்தினார்கள். வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இச்செயலியின் வாயிலாக வழங்கப்படுகிறது. இதுவரை, 5.61 இலட்சம் பயனாளிகள் இந்த கைபேசி செயலியினை முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 1,10,257 விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உயர் மதிப்புள்ள இடுபொருட்களை மானியத்தில் முன்னுரிமை அடிப்படையில் பெறும் பொருட்டு இந்த செயலியின் மூலம் முன்பதிவு செய்துள்ளனர்.

- "என் பண்ணை வழிகாட்டி" என்ற சேவை மூலம் விவசாயிகள் தங்கள் நிலத்தில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கு, விதைப்பு முதல் அறுவடை வரை மேற்கொள்ளவேண்டிய சாகுபடி முறைகளை நாள் வாரியாக அறிந்துகொண்டு, அதனை கடைபிடித்து உயர் மகசூல் பெறலாம். பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏதும் தெரிந்தால், இச்செயலியின் மூலம் புகைப்படம் எடுத்து அனுப்பினால் 24 மணி நேரத்திற்குள் அதை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த விபரங்கள் விவசாயிக்கு தெரிவிக்கப்படும்.

* பயிர்க் காப்பீட்டுச் சேவை மூலம் தங்கள் கிராமத்தில் எந்தெந்த பயிர்களை காப்பீடு செய்யலாம், விவசாயிகள் கட்ட வேண்டிய பிரிமியக் கட்டண தொகை, பயிர் காப்பீடு செய்ய அணுக வேண்டிய இடங்கள் மற்றும் பயிர் காப்பீடு செய்த விவசாயிகள் தங்களுடைய விண்ணப்பத்தின் நிலைப்பாட்டினையும் அறிந்து கொள்ளலாம்.

* இச்செயலியின் மூலம் அரசு மற்றும் தனியார் விற்பனையாளர்களிடம் உள்ள உரம் மற்றும் விதை இருப்புநிலை, முக்கிய அணைகளின் அன்றாட நீர் இருப்புநிலை, அடுத்த நான்கு நாட்களுக்கான வானிலை அடிப்படையிலான வேளாண் அறிவுரைகள், தங்கள் பகுதியில் உள்ள வேளாண் இயந்திர வாடகை மையம் குறித்த விவரங்கள் மற்றும் விவசாயிகள் தங்களுக்குள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் சேவை, வேளாண் விளைபொருட்கள் மற்றும் காய்கறி பயிர்கள் சந்தை நிலவரம், உதவி வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் வருகை தேதி மற்றும் சந்திக்கும் இடம் குறித்த விவரம், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்த விளைபொருட்கள் விவரம், இயற்கை விவசாயிகள் மற்றும் விற்பனையாளர்கள் விவரம், இயற்கை விவசாயம் அங்கீகரிக்கும் முகமைகள் பற்றிய விவரம் மற்றும் வேளாண்மைத் துறையினால் விவசாயிகளுக்குத் தெரிவிக்கக்கூடிய வேளாண் செய்திகள் போன்றவற்றை அறிந்து பயன்பெறலாம்.

* இந்திய வணிக கூட்டமைப்பும், தகவல் தொழில்நுட்ப துறையும் வேளாண் துறையின் உழவன் செயலி சிறப்பு குறித்து பாராட்டியுள்ளது. மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள உழவன் செயலியை தேசிய அளவில் பிரதிபலிக்கும் முயற்சியில் ஈடுப்பட்டுள்ளது.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள்

* பாதிக்கப்பட்ட 53.29 இலட்சம் தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.1,100/– வீதம் மாநில பேரிடர் நிவாரண நிதியில் 1,17,225 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.586.24 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

* நெல், கரும்பு, பருத்தி, பயறு வகைகள், மக்காச்சோளம் போன்ற இறவைப் பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ. 13,500/– வீதமும் மானாவாரி சோளத்திற்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.7,410/– வீதமும் எண்ணெய்ப்பனைக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.18,000/– வீதமும் மாநில பேரிடர் நிவாரண நிதியில் 20,550 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.14.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இதுவரை 26.73 இலட்சம் குழிகள் எடுக்கப்பட்டு 24.44 இலட்சம் தென்னங்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கான வாழ்வாதாரத் தொகுப்புத் திட்டம்:

* இதுவரை 26.74 இலட்சம் தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

* பாதிக்கப்பட்ட தென்னந்தோப்பில் சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஊடுபயிராக சாகுபடி செய்ய 50,240 எக்டர் பரப்பிற்கு விதைகள் உட்பட அத்தியாவசிய இடுபொருட்கள் ரூ.19.90 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

* பாதிக்கப்பட்ட தென்னந்தோப்பில், இதுவரை 6,800 ஹெக்டர் பரப்பில் நுண்ணீர் பாசன கருவிகள் மொத்தம் ரூ.13.08 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலுக்கு நிவாரணம்

* மக்காச்சோளப் பயிர்களில் அமெரிக்கன் படைப்புழு என்னும் பூச்சியால் 2.21 இலட்சம் எக்டேரில் 2,93,424 விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்கின்ற வகையில் தமிழ்நாடு அரசு பேரிடர் துயர்துடைப்பு நிதியிலிருந்து ரூ.186.25 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

* நடப்பு ஆண்டில் இப்படைப்புழு தாக்குதல் ஏற்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 1.12 இலட்சம் எக்டரில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை துறை மூலம் தெளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. இதற்காக, அரசு ரூ.47.66 கோடி நிதியினை ஒப்பளித்தது. அரசு மேற்கொண்ட இத்தகைய நடவடிக்கையினால், மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதல் வெகுவாக குறைந்து, விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைத்துள்ளது.

எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விருது

- ✶ பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்து பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்குவிப்பதற்காக, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும் ரொக்கத் தொகையாக முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, 2018–2019ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆத்தூர் கிச்சடி சம்பா நெல் பயிரிட்ட திருமதி எஸ்.கிருஷ்ணம்பாள், அரியலூர் மாவட்டத்தில் மாப்பிள்ளை சம்பா பயிரிட்ட திரு.ஜ.நாகராஜன், விருதுநகர் மாவட்டத்தில், சீரக சம்பா பயிரிட்ட திரு.ப.பிச்சை முருகன் ஆகியோருக்கு விருதும் ரொக்கப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

- ✶ 2016–2017ஆம் ஆண்டில் 13.15 இலட்சம் எக்டராக இருந்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பானது 2018–2019ஆம் ஆண்டில் மூன்றாவது முன்மதிப்பீட்டின்படி 13.77 இலட்சம் எக்டராக உயர்ந்துள்ளது. 2019–2020 நவம்பர் முடிய 13.85 இலட்சம் எக்டர் பரப்பில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- ✶ 2016–2017ஆம் ஆண்டில் 136 இலட்சம் டன்னாக இருந்த தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி 2018–2019ஆம் ஆண்டு மூன்றாவது முன்மதிப்பீட்டின்படி 179.16 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டம்

- ✶ 2016–2017ஆம் ஆண்டில், நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் தோட்டக்கலைப் பயிர்களில், ரூ.207.33 கோடி செலவில், 32,177 எக்டர் பரப்பளவிலும், வேளாண் பயிர்களில், ரூ.90.54 கோடி செலவில் 20,137 எக்டர் பரப்பளவிலும், ஆக மொத்தம் ரூ.297.87 கோடி செலவில் 52,314 எக்டர் பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது.

- ✶ 2017–2018ஆம் ஆண்டில் தோட்டக்கலை பயிர்களில், ரூ.21.39 கோடி செலவில் 3,127 எக்டர் பரப்பளவிலும், வேளாண் பயிர்களில், ரூ.10.20 கோடி செலவில் 1,317 எக்டர் பரப்பளவிலும், ஆக மொத்தம் ரூ.31.59 கோடி செலவில் 4,444 எக்டர் பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது.

- ✶ 2018–19ஆம் ஆண்டில் தோட்டக்கலை பயிர்களில், ரூ.376.42 கோடி செலவில் 59,699 எக்டர் பரப்பளவிலும், வேளாண் பயிர்களில் ரூ.324.27 கோடி செலவில் 81,958 எக்டர் பரப்பளவிலும், ஆக மொத்தம் ரூ.700.69 கோடி செலவில் 1.41 இலட்சம் எக்டர் பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில், இதுவரை தோட்டக்கலை பயிர்களில், ரூ.383.24 கோடி செலவில் 74,962 எக்டர் பரப்பளவிலும், வேளாண் பயிர்களில் ரூ.364.73 கோடி செலவில் 94,382 எக்டர் பரப்பளவிலும், ஆக மொத்தம் ரூ.747.97 கோடி செலவில் 1,69,344 எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம்

- ✶ 2016–2017ஆம் ஆண்டு முதல் 2019–2020ஆம் ஆண்டு வரை புதிய பரப்பு விரிவாக்கத்திட்டத்தின் கீழ் ரூபாய் 92 கோடியே 52 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 48,257 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பசுமைக் குடில், நிழல்வலை குடில், பறவை தடுப்பு வலை மற்றும் நிலப் போர்வை ஆகிய பாதுகாப்பு முறை சாகுபடி அமைப்புகள் 5,949.47 எக்டர் பரப்பளவில் ரூபாய் 94 கோடியே 65 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த அறுவடைக்கு பின்செய் நேர்த்தி உட்கட்டமைப்பிற்கு ரூபாய் 60 கோடியே 98 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் சிப்பம் கட்டும் அறைகள், வெங்காய சேமிப்பு கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த சிப்பம் கட்டும் அறைகள் மற்றும் முன் குளிர்விப்பு அறைகள் ஆகியன அமைக்கப்பட்டு வருகின்றன.

- ✶ 2016–2017ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.78 கோடியே 55 இலட்சம் செலவிலும், 2017–2018ஆம் ஆண்டு ரூ.108 கோடியே 10 இலட்சம் செலவிலும், 2018–2019ஆம் ஆண்டில் ரூபாய் 91 கோடியே 75 இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் ரூ.163 கோடியே 33 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ✶ புதிய பரப்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ரூ.18 கோடியே 36 இலட்சம் செலவில் 10,076

எக்டர் பரப்பளவு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பசுமைக் குடில், நிழல்வலை குடில், பறவை தடுப்பு வலை மற்றும் நிலப் போர்வை ஆகிய பாதுகாப்பு முறை சாகுபடி அமைப்புகள் 844.25 எக்டர் பரப்பளவில் ரூபாய் 21 கோடியே 29 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த, அறுவடைக்கு பின்செய் நேர்த்தி இனத்தின்கீழ் ரூபாய் 10 கோடியே 12 இலட்சம் செலவில் 305 சிப்பம் கட்டும் அறைகள், 450 குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் மற்றும் ஒரு முன் குளிர்விப்பு அறை ஆகியன அமைக்கப்பட்டு வருகின்றன.

தேசிய ஆயுஷ் இயக்கம்–மருத்துவப் பயிர்கள்

- 2017–2018ஆம் ஆண்டுகளில் 748.05 எக்டர் பரப்பில் ரூபாய் 2 கோடியே 28 இலட்சம் நிதியில் பயிர்களுக்கு ஏற்றவாறு 30 சதவீதம் அல்லது 50 சதவீதம் சாகுபடி உதவித் தொகையில் மருந்துக் கூர்க்கன், கண்வலிக்கிழங்கு, நெல்லி, திப்பிலி, கோக்கம், மணத்தக்காளி போன்ற மருத்துவக்குண பயிர்களின் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

- 2018–2019ஆம் ஆண்டில் 765 எக்டர் பரப்பில் ரூபாய் 1 கோடியே 73 இலட்சம் செலவில் பயிர்களுக்கு ஏற்றவாறு மொத்த சாகுபடி செலவில் 30 சதவீதம், 50 சதவீதம் அல்லது 75 சதவீதம் சாகுபடி உதவித் தொகையில் மருத்துவக்குண பயிர்களின் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

- 2018–2019ஆம் ஆண்டு முதல் 2023–2024ஆம் ஆண்டு வரை ரூபாய் 210 கோடி நிதியில் 30 மாவட்டங்களில் 66 உபவடிநீர் பகுதிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- 2018–2019ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர், இராமநாதபுரம், சிவகங்கை, நாகப்பட்டினம், மதுரை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 22 மாவட்டங்களில் 18 உபவடிநீர் பகுதிகளில் ரூபாய் 17 கோடி 62 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

- 2019–2020ஆம் ஆண்டில் ரூபாய் 14.10 கோடி நிதியில் தோட்டக்கலைப் பயிர்களின் செயல் விளக்கங்களும், ரூ.20.23 கோடி செலவில் நுண்ணீர் பாசனம் அமைப்பும், ரூ.5.28 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மேலாண்மையும், ரூ.90.52 இலட்சம் நிதியில் நிழல் வலைக் குடிலும், ரூ.21.76 இலட்சம் நிதியில் நிலப்போர்வை அமைத்தல் கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மற்றும் திருப்பூர் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.38.95 கோடி நிதியில் 34 உபவடிநீர் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம்

- இத்திட்டம் 2016–2017ஆம் ஆண்டில் ரூ.36.89 கோடி செலவிலும், 2017–2018ஆம் ஆண்டில் ரூ.29 கோடி செலவிலும், 2018–2019ஆம் ஆண்டில் ரூ.27.87 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.22.54 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பந்தல் சாகுபடி 2016–2017ஆம் ஆண்டில் 500 எக்டர் பரப்பில் ரூ.10 கோடி செலவிலும், 2018–2019ஆம் ஆண்டில் 300 எக்டர் பரப்பில் ரூ.6 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் 150 எக்டர் பரப்பில் ரூ.3 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி 2016–2017ஆம் ஆண்டில் 23,000 சதுரமீட்டர் பரப்பில் ரூ.87.87 இலட்சம் செலவிலும், 2017–2018ஆம் ஆண்டில் 1,04,637 சதுரமீட்டர் பரப்பில் ரூ.4 கோடி செலவிலும், 2018–2019ஆம் ஆண்டில் 96,000 சதுரமீட்டர் பரப்பில் ரூ.3.68 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் 1,06,331 சதுரமீட்டர் பரப்பில் ரூ.4.24 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் 2016–2017ஆம் ஆண்டில் 6,342 ஹெக்டர் பரப்பில் ரூ.11.66 கோடி நிதியிலும், 2017–2018ஆம் ஆண்டில் 6,942 ஹெக்டர் பரப்பில் ரூ.14.23 கோடி நிதியிலும், 2018–2019ஆம் ஆண்டில் 2,718 ஹெக்டர் பரப்பில் ரூ.4.81 கோடி நிதியிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020 20ஆம் ஆண்டில் 6,558 ஹெக்டர் பரப்பில் ரூ.11.68 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மானாவாரி பகுதியில் தோட்டக்கலை மேம்பாடு

- ✶ 2016–2017ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.11.16 கோடி செலவிலும் 2017–2018ஆம் ஆண்டு ரூ.22.39 கோடி செலவிலும் 2018–2019ஆம் ஆண்டு ரூ.20.56 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.19.25 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது வருகிறது.

2016–2017ஆம் ஆண்டில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம்

- ✶ 3,217 ஹெக்டர் பரப்பில் ரூ.8.04 கோடி செலவிலும் 2017–2018ஆம் ஆண்டு 6,052 ஹெக்டர் பரப்பில் ரூ.15.13 கோடி செலவிலும் 2018–2019ஆம் ஆண்டு 4,141 ஹெக்டர் பரப்பில் ரூ.10.35 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது.
- ✶ 2016–2017ஆம் ஆண்டில் பசுமைக்குடில்கள் 26,000 சதுர மீட்டர் பரப்பில் ரூ.1.22 கோடி செலவிலும், 2017–2018ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட சூழலில் 1,21,000 சதுர மீட்டர் பரப்பில் ரூ.4.8 கோடி செலவிலும், 2018–2019ஆம் ஆண்டில் 1,78,705 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.7 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டது. 2019–2020ஆம் ஆண்டில் 1,40,077 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.5.26 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ 2016–2017ஆம் ஆண்டில், 520 நிரந்தர மண்புழு உற்பத்தி கூடங்கள் ரூ.1.3 கோடி செலவிலும், 2017–2018ஆம் ஆண்டில் 206 நிரந்தர மண்புழு உற்பத்தி கூடங்கள் ரூ.51.5 இலட்சம் செலவிலும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.106.75 இலட்சம் செலவிலும் 427 நிரந்தர மண்புழு உற்பத்தி கூடங்களும் அமைக்கப்பட்டன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் சாகுபடி 13 மாவட்டங்களில் ரூ.13 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், நிரந்தர மண்புழு உரக்கூடங்கள், தேனீ வளர்ப்பு, மாடு, ஆடு, கோழி வளர்ப்பு போன்றவற்றிற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

- ✶ இத்திட்டம் பங்கேற்பு உத்திரவாத சான்றிதழ் முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2015–2016ஆம் ஆண்டில் 27 மாவட்டங்களில் 51 குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.3.60 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.
- ✶ 2016–2017ஆம் ஆண்டில் ரூ.2.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1.48 கோடி செயல்படுத்தப்பட்டது.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில் 11 குழுக்களுக்கு முதலாம் ஆண்டு திட்டமாக ரூ.0.78 கோடி செலவில் நடைபெற்றது. இரண்டாம் ஆண்டு திட்டத்திற்காக ரூ.0.35 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் ரூ.2.21 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

- ✶ இத்திட்டம் 2016–2017ஆம் ஆண்டில் 6,090 ஹெக்டர் பரப்பில் ரூ.4.12 கோடி நிதியிலும்,

2017–2018ஆம் ஆண்டில் 4,581 எக்டர் பரப்பில் ரூ.4.12 கோடி நிதியிலும், 2018–2019ஆம் ஆண்டில் 4,906 எக்டர் பரப்பில் ரூ.4.12 கோடி நிதியிலும் செயல்படுத்தப்பட்டது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் 24,771 எக்டர் பரப்பில் 31.36 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

✶ 2016–2017ஆம் ஆண்டில் காரீப் மற்றும் ராபி பருவத்தில் 25,176 எக்டர் பரப்பில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி காப்பீடு செய்த 39,723 விவசாயிகளில் 30,684 விவசாயிகளுக்கு ரூ.73.355 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

✶ 2017–2018ஆம் ஆண்டில் காரீப் மற்றும் ராபி பருவத்தில் 39,887 எக்டர் பரப்பில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி காப்பீடு செய்த 69,527 விவசாயிகளில் 40,609 விவசாயிகளுக்கு ரூ.52.406 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டில் காரீப் மற்றும் ராபி பருவத்தில் 47,625.88 எக்டர் பரப்பில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி காப்பீடு செய்த 1,06,342 விவசாயிகளில் வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு பயிர்களுக்கு காப்பீடு செய்த 433 விவசாயிகளுக்கு ரூ.0.39 கோடி நிதி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாழை, மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை கணக்கீடும் பணி காப்பீட்டு நிறுவனங்களால் செய்யப்பட்டு வருகிறது. இழப்பீட்டுத் தொகை விரைவில் விவசாயிகளுக்கு வழங்க, துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் இதுவரை 55,668 விவசாயிகள் 21,900 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

✶ 2016–2017ஆம் ஆண்டில் 6.36 கோடி நடவு பொருட்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

✶ 2017–2018ஆம் ஆண்டில் 9.26 கோடி நடவு பொருட்கள் தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

✶ 10 மாவட்டங்களில் உள்ள 19 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் ரூபாய் 20.76 கோடி நிதியில் சேமிப்பு கிடங்குகள், ஆழ்துளை கிணறுகள், பசுமை குடில்கள், நிழல்வலை கூடங்கள், சுற்றுப்பாதை போன்ற உட்கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ 2018–2019ஆம் ஆண்டு 14.36 கோடி நடவு பொருட்கள் தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.04.2018 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 15 ஏக்கர் பரப்பளவில், ரூபாய் 4 கோடி செலவினத்தில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ள சுற்றுச்சூழல் பூங்கா பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

✶ கொடைக்கானலில் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் செயல்விளக்க பூங்கா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.05.2018 அன்று மக்களின் பார்வைக்கு துவங்கி வைக்கப்பட்டது.

✶ 2018–2019ஆம் ஆண்டு மாதவரத்தில் 8.50 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை பூங்கா அமைக்கப்பட்டு 18.10.2018 அன்று பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் 22.39 கோடி நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 13.87 கோடி நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

பண்ணை சுற்றுலா :

✶ தோட்டக்கலைத் தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் மட்டுமல்லாது மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 2018–2019ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் பண்ணை சுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2018–2019ஆம் ஆண்டு 12,326 நபர்களும் 32,257 நபர்கள் பண்ணை சுற்றுலாவிற்கு வருகை புரிந்து பயனடைந்துள்ளனர்.

தோட்டக்கலை நடவுச் செடிகள் / பழச் செடிகள் சுப நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் விநியோகம் செய்தல் :

- ✶ சுமார் 3,06,209 தோட்டக்கலை நடவுச்செடிகள் / பழச்செடிகள் சுப நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் 10 இலட்சம் நடவுசெடிகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 3,75,637 செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

டான்ஹோடா விற்பனை மையங்களின் மூலம் தோட்டக்கலை விளை பொருட்களுக்கு சந்தைப்படுத்தும் வசதிகளை உருவாக்குதல்

- ✶ அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பல்வேறு பழங்கள், காய்கறிகள், பூக்கள், நறுமணப் பொருட்கள், மலைப் பயிர்கள் மற்றும் ஜாம், ஜெல்லி, பழச்சாறு, ஊறுகாய் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு பண்ணை வாயில்களிலே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தோட்டக்கலை இணை இயக்குநர்/துணை இயக்குநர் அலுவலகம் அல்லது பொது மக்கள் கூடும் இடங்களில் பழங்கள், காய்கறிகள் மற்றும் பண்ணை உபகரணங்கள், மாடித் தோட்ட தழைகள், காய்கறி விதைகள், நறுமணப் பயிர் பெட்டிகள், உலர் பழ பெட்டிகள், வேளாண் உற்பத்தி மையப் பொருட்கள் போன்றவை நேரடியாக பொது மக்களுக்கு விநியோகிக்க புதிதாக டான்ஹோடா விற்பனை மையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

- ✶ இவ்விற்பனை மையங்கள் மூலம் தரமான விளை பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை இடைத்தரகர்களின் தலையீடு இன்றி நேரடியாக நியாயமான விலையில் விற்பனை செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. ரூபாய் 2 கோடி நிதியில் 8 நிரந்தர டான்ஹோடா விற்பனை மையங்களும் 1.2 கோடி நிதியில் 24 தற்காலிக டான்ஹோடா விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நில எழில் மேம்பாட்டு பிரிவு (Landscape Wing) :

- ✶ தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது, மாநிலம் முழுவதும் தமது தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு, அழகான நில எழில் அமைப்புடன் கூடிய 19 பூங்காக்களை உருவாக்கி பராமரித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற மாநகராட்சிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் பசுமையை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுவதால், நில எழிலூட்டுதல் மிகவும் பிரசித்தி பெற்று வருகிறது. அதனால் மாநகரங்களில் வசிக்கும் மக்களின் நில எழிலூட்டும் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, திட்ட வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்திற்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப அலுவலர்களை கொண்டு நில எழிலூட்டும் பிரிவை உருவாக்கியுள்ளது.

- ✶ இப்பிரிவானது பொதுமக்கள், அரசு துறை அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் புதிய நில எழில் வடிவமைப்பை உருவாக்குவதிலும், ஏற்கெனவே உள்ள எழில் வடிவமைப்பை மேலும் அழகுபடுத்துவதிலும், மாடித்தோட்டம் போன்ற திட்டங்களை எடுத்து நியாயமான விலையில் அவர்களின் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுக்கின்றது.

தோட்டக்கலை பயிர்களில் கூட்டுப் பண்ணையம்

- ✶ கூட்டுப் பண்ணைய முறையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு புதிய முன் முயற்சியாக சிறு மற்றும் குறு விவசாயிகளை உள்ளடக்கிய உழவர் உற்பத்தியாளர் குழுக்களை அமைக்கவும் இக்குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை அமைக்கவும் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2017–2018ஆம் ஆண்டில் திட்டத்தை அறிவித்தது. தோட்டக்கலைத் துறையின் மூலம் 505 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூ.25.25 கோடி நிதி செலவில் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் 2,226 இயந்திரங்கள் இக்குழுக்களுக்கு வாங்கப்பட்டுள்ளன.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில் 505 உழவர்

உற்பத்தியாளர் குழுக்கள் தோட்டக்கலை துறையின்கீழ் அமைக்கப்பட்டு, ரூ.25.25 கோடி நிதி செலவில் சாகுபடிக்குத் தேவையான 2,221 இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை பயிற்சி மையங்கள்

- கடந்த 4 ஆண்டுகளில் உயர் தொழில்நுட்ப பயிர் சாகுபடி குறித்த பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் 3,000 விவசாயிகளுக்கு ரூ.7.5 இலட்சத்தில் வழங்கப்பட்டன. ஆக மொத்தம் 12,000 விவசாயிகளுக்கு ரூ.30 இலட்சத்தில் உயர் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

- விவசாயிகளுக்கான பயிற்சி தவிர, தோட்டக்கலை ஈராண்டு பட்டயப் படிப்பு சென்னை மாவட்டம், மாதவரம் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, தோட்டக்கலை ஆராய்சி மற்றும் பயிற்சி மையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம், காய்கறி மகத்துவ மையங்களில் ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் தலா 50 மாணவ மாணவியருக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் ஒவ்வொரு ஆண்டும் 150 மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படுகின்றது.

- இதுதவிர, குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சி ரூ.6.21 கோடியில் 5,340 இளைஞர்களுக்கு தோட்டத் தொழில் நுட்பவியலாளர், நுண்ணீர் பாசன தொழில் நுட்பவியலாளர் மற்றும் பூந்தோட்ட தொழில் நுட்பவியலாளர் என்ற தலைப்பிலும், தோட்டக்கலை தொழில் நுட்ப பயிற்சி 66 நாட்களில் ரூ.1.14 கோடியில் 500 இளைஞர்களுக்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறை

- வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ், டிராக்டர், பவர் டில்லர், சுழற்கலப்பை உள்ளிட்ட 22,796 பல்வேறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.221.35 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

- அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் ரூ.99.87 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

- பண்ணை இயந்திரமயமாக்கலில் 1,353 வேளாண் இயந்திரங்கள் வட்டார அளவிலான வாடகை மையங்கள் ரூ.130.485 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

- கரும்பு சாகுபடிக்கு ஏற்ற 11 உயர்தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் ரூ.5.76 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

- கிராம அளவிலான 738 பண்ணை இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.59.02 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

- உழுவை இயந்திரம் கொண்டு வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவியின் செயல் விளக்கம் 2,500 விவசாயிகளின் நிலங்களில் ரூ.8.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.14.10 கோடி செலவில் 50 குதிரை திறனுக்கும் அதிக சக்தி கொண்ட டிராக்டர்கள், டிராக்டர்களுக்கு ஏற்ற பண்ணைக் கருவிகளான ரோட்டவேட்டர்கள், ஐந்து கொத்துக் கலப்பைகள், சட்டிக் கலப்பைகள் மற்றும் வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கப்பட்டுள்ளது.

- டெல்டா மாவட்ட விவசாயிகள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி குறுவை சாகுபடியை பெருமளவில் மேற்கொள்ளுவதற்கு, 90 மில்லிமீட்டர் விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளம் கொண்ட பாசன நீர் கொண்டு செல்லும் குழாய்கள் 30 எண்கள் கொண்ட 1,000 அலகுகள் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் வாங்கி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சம்பா சாகுபடிக்கான சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு இயந்திர முறையில் நேரடி நெல் விதைப்பு 50,000 ஏக்கரில் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கஜா புயல் நிவாரணப் பணிகளில் விவசாயிகளின் நிலங்களில் வேரோடு சாய்ந்து முறிந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்த ரூ.6.60 கோடி நிதியில் அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள் 805 எண்களும், டிராக்டருடன் இயங்கக்கூடிய துகளாக்கும் கருவிகள் 107 எண்களும் வாங்கப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்பட்டுள்ளன.

- கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க, நுண்ணீர் பாசன அமைப்புகளை

கையாளுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான 825 தொழில்நுட்பப் பயிற்சிகள் ஆத்மா திட்டத்தின் கீழ் ரூ.1.39 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.

* 547 கட்டுமானப் பணிகளும், 80 எக்டர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் நில மேம்பாட்டுப் பணிகளும், நதி பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ், ரூ.10.79 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* 617 கட்டுமானப்பணிகளும், 19,896 எக்டர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகளும், அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.12.09 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* 1,113 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ரூ.30.46 கோடி செலவில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

* 10,000 பண்ணைக் குட்டைகள் அமைத்தல் திட்டத்தின் கீழ், 6,452 பண்ணைக்குட்டைகள் ரூ.50.62 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

* ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் என்ற உபதிட்டத்தின் கீழ், 13,229 எக்டர் நிலப்பரப்பில் பண்ணை மேம்பாட்டு பணிகள் பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டத்தின்கீழ் ரூ.43.81 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* 846 நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டத்தின் கீழ் ரூ.17.81 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

* உபவடி நிலப்பகுதிகளில் 521 பண்ணைக்குட்டைகள் ரூ.2.98 கோடி செலவில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மையமாக்கும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

* ரூ.48.79 கோடி செலவில் 975 தடுப்பணைகள், 82 சமுதாய குளங்கள், 20 கிராம குட்டைகள் மற்றும் 218 ஊரணிகளை ஆழப்படுத்தும் பணிகள் நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

* ரூ.50.95 கோடி செலவில் 716 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

* 163 மதிப்பு கூட்டும் இயந்திர மையங்கள் ரூ.14.6 கோடி செலவிலும், 9.99 இலட்சம் எக்டர் கோடை உழவு பணிகளுக்காக ரூ.111.98 கோடி மானியமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 61,582 எக்டரில் வயல் வரப்புகள், 3,777 பண்ணைக் குட்டைகள் மற்றும் 89 ஊரணிகள் ஆழப்படுத்தும் பணிகள் ரூ.48.63 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* நபார்டு நிதியுதவியுடன் நீர்பாசன கட்டமைப்புகளை புனரமைத்தல் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் சித்தாறு உபவடி நிலப் பகுதிகளில் கடந்த 2017–2018ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூ.18.62 கோடி செலவில் 413 நீர்சேகரிப்பு கட்டுமானங்கள் மற்றும் 4,850 எக்டர் பரப்பில் பண்ணை மேம்பாடு மற்றும் புனரமைப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* வளம் குன்றிய நிலங்களை சீர்திருத்துதல் திட்டத்தின் கீழ் நிலச் சீர்திருத்தப் பணிகள் 1,779 எக்டர் பரப்பில் 157 கட்டமைப்புகள், 96,471 மீட்டர் வரப்பு அமைத்தல், ஆழ உழுதல் மற்றும் இடுபொருட்கள் வழங்குதல் போன்ற பணிகள் ரூ.8.75 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

* நபார்டு நிதி உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 2,192 பண்ணைக் குட்டைகளை ரூ.10.84 கோடி செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

* 345 நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் மொத்தம் ரூ.17.83 கோடி செலவில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

* சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ், ரூ.112.82 கோடி மானியத்தில் 2,733 சூரியசக்தி பம்பு செட்டுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

* 243 சூரிய கூடார உலர்த்திகள், ரூ.4.41 கோடி மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

* 29 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் ரூ.21.75 கோடி செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலக பணிக்காக கட்டப்பட்டுள்ளன.

- திருச்சி, வேளாண்மைப் பொறியியல் துறை பயிற்சி மையம் நவீனபடுத்தும் பணி ரூ.2 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

- தென்னை மரத்தில் இருந்து "நீரா"வினை இறக்குவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு தற்போது, 13 தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற அனைத்து தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் நீரா மற்றும் நீரா பானம் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சாதனை

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 70.20 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ.332.02 கோடி சந்தைக்கட்டணம் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

- பொருளீட்டுக் கடனாக 5,289 விவசாயிகளுக்கு ரூ.96.21 கோடியும், 964 வியாபாரிகளுக்கு ரூ.14.02 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

- திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கும், திருவாரூர் மாவட்டம் குடவாசல் மற்றும் பூந்தோட்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சேலம் மாவட்டம் எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு மற்றும் ஸ்ரீமுஷ்ணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு மொத்தம் ரூ.14.84 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், புள்ளம்பாடி ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

- விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, அதிக வசதி வாய்ப்பினை ஏற்படுத்தி தரும் நோக்கில், மொத்த வியாபாரிகள், பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உள்ளூர் சந்தைகளில் நேரடியாக பங்குக் கொள்ளும் வகையில் ரூ.123.63 கோடி மதிப்பில் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் "தேசிய மின்னணு வேளாண் சந்தை" திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும், 40 மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்க திட்ட மதிப்பீட்டுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

- ரூ.30 கோடி மதிப்பீட்டில் செஞ்சி மற்றும் விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 7,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட அடுக்குமாடி சேமிப்பு கிடங்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் வகையில் 90 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 217.92 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்பு கிடங்குகளை அதிகப்படுத்தும் நோக்கில் ரூ.99.51 கோடி மதிப்பீட்டில் 46 சேமிப்பு கிடங்குகள் கட்டும்பணிகள் நடைபெற்று வருகின்றன.

- விவசாயிகளின் முழுமையான வேளாண் வளர்ச்சினை உறுதி செய்யும் பொருட்டு, ரூ.20.61 கோடி மதிப்பில் 88 உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நீர்பாசன நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் 2019–2020இல் 18 உபவடி நிலப்பகுதிகளில் 22 மாவட்டங்களில் 26 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. துறை அலுவலர்களுக்கு திட்டத்தினை செயல்படுத்த இதுவரை 7 திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- தருமபுரி, கோவை, சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தக்காளி பயிரிடும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 5 தக்காளி பதப்படுத்தும் வாகனங்கள் ரூ.2 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்தி வணிக ரீதியாக வளரும் வகையில், இடைநிலை

(Mezzanine) மூலதன உதவி, வங்கியில் கடன் பெறுவதற்கு தமிழ்நாடு அரசே வழங்கும் கடன் உத்தரவாதம் (Credit Guarantee) & சலுகையுடன் கூடிய சுழல் நிதி (Revolving fund) ஆகிய மூன்று திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத்திட்டங்களின் மூலம் சுமார் 1,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு 10 இலட்சம் வேளாண் பெருமக்கள் 4 ஆண்டுகளில் பயன்பெறுவர். 2019–2020 ஆண்டில் ரூ.266.70 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✶ கடலூர் மாவட்டம் மங்களூர் வட்டாரத்தில் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் மக்காச்சோள மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

✶ தரமான விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கிட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் 19 மாவட்டங்களில் 30 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.18 கோடி மதிப்பீட்டில் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ விவசாயிகளுக்கு அறுவடை பின்செய் மேலாண்மை மற்றும் சந்தை தகவல்களை வழங்கிடவும், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர் தொழில்நுட்ப நிறுவனங்களின் தகவல்களை நேரிடையாக பெற்றிடவும் 10 மாவட்டங்களில் மின்னணு கற்றல் மையங்கள் (e-learning centers) ரூ.7.34 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சிமையத்தின் மூலமாக 14,438 விவசாயிகளுக்கு 742 அறுவடை பின்செய் மேலாண்மை பயிற்சிகளும், 2,157 துறை அலுவலர்களுக்கு 117 திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் நடத்தப்பட்டன.

✶ நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே கொண்டு சேர்த்திடவும், துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திடவும் வாழை, மிளகாய், காய்கறி, பழப்பயிர்கள் மற்றும் தென்னை நீரா தொடர்பான தொழில்நுட்பக் கருத்தரங்குகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு நீர்பாசன நவீனமயமாத்தல் திட்டத்தின் மூலம் உபவடி நிலப் பகுதி விவசாயிகளின் நலனுக்காக ரூ.10.45 கோடி திட்ட மதிப்பீட்டில் 18 உபவடி நிலப்பகுதிகளில் சந்தை அணுகு வசதியினை மேம்படுத்தவும், வேளாண் தொழில் முனைப்பினை ஊக்குவித்திடவும், தொழில்நுட்ப நிறுவனங்களை வலுப்படுத்திடவும், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கிடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✶ கள்ளிக்குடியில் பழங்கள், காய்கறி, மற்றும் மலர்களுக்கான மத்திய சந்தை, மிளகாய்களுக்கான ஒருங்கிணைந்த வணிக வளாகம், சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடங்கள் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.128.37 கோடி செலவில் கட்டப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

✶ ஒசூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.3.36 கோடி மதிப்பில் மலர் வணிக வளாகத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் நோக்கில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் மேலும் ஐந்து மாவட்டங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2019–2020ஆம் ஆண்டில் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, மேலும், 3 மாவட்டங்களைச் சேர்த்து மொத்தம் 8 மாவட்டங்களில் ரூ.102.4695 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியின் கீழ் விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் சர்வதேச மலர் ஏல மையம் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ தென்னை அதிகம் சாகுபடி செய்யும் மாவட்டமான கன்னியாகுமரியில் தென்னை மதிப்புக் கூட்டும் மையம் ஒன்று 16 கோடி ரூபாய் செலவில் அமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ சென்னை, கிண்டியில் 6.88 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.30.7456 கோடி மதிப்பில் அம்மா பசுமைப்பூங்கா ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

* விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுவதன் மூலமாக இழப்பினைக் குறைக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.12.2018 அன்று தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை 2018 வெளியிடப்பட்டது. இக்கொள்கையில் நிலம், நீர், மின்சார வசதி, மூலதன மானியம், வட்டி மானியம், மகளிர் மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு கூடுதல் வட்டி மானியம், வரிச்சலுகை, முத்திரை கட்டண விலக்கு, சந்தைக் கட்டண விலக்கு, சந்தைப்படுத்துவதற்கான உதவி, தரச்சான்று, போக்குவரத்து வசதி, ஏற்றுமதிக்கான சலுகை, தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் பரிசோதனை ஆய்வகங்கள் அமைத்தல், ஒற்றை சாளர அனுமதி, தொழிலாளர் சலுகை போன்ற அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கொள்கை தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைத்திட ஊக்கம் அளித்து உதவுகிறது.

* விவசாயிகளின் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை உறுதிப்படுத்துகின்ற வகையில் முன்னோடி நடவடிக்கையாக உளுந்து, பச்சைப்பயறு மற்றும் கொப்பரை ஆகியவற்றை விவசாயிகளிடமிருந்து விலை உத்திரவாதத் திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்துள்ளது.

* விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல ஆதாய விலை கிடைத்திடவும், மதிப்புக்கூட்டுவதன் மூலமாக விளைபொருட்கள் வீணாவதை தடுத்திட 9 மாவட்டங்களில் மெகா உணவுப்பூங்கா அமைத்திட அரசு முயற்சிகள் எடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, தேனி, மதுரை, கடலூர், விழுப்புரம் ஆகிய 8 மாவட்டங்களில் உணவுப்பூங்கா அமைக்க மத்திய அரசின் (வேளாண் பதப்படுத்துதல் தொகுப்பு) திட்டத்தின் கீழ் நிதி உதவி தலா ரூ.10 கோடி பெற விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

* மாநில அரசு விவசாயிகளின் நலன் கருதி தேசிய மின்னணு வேளாண் சந்தைத் திட்டத்தினை செயல்படுத்திட மின்னணு வர்த்தகம், ஒருமுனை வரி விதிப்பு மற்றும் மாநில அளவிலான ஒற்றை உரிமம் ஆகியவற்றை உள்ளடக்கி தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை முறைப்படுத்துதல் சட்டம் 1987இல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

* விவசாயிகள் ஒப்பந்த சாகுபடி முறையில் பயனடைவதை உறுதி செய்யும் விதமாக, தமிழ்நாடு அரசு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்ட முன்வடிவை தயாரித்து கடந்த 14.02.2019 அன்று சட்டசபையில் ஒப்புதல் பெற்று மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் சட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு, தமிழக சட்டம் 37/2019 இயற்றப்பட்டது. இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடிக்கென்றே பிரத்தியேகமாக சட்டத்தை முதன்முதலாக அறிவித்தது தமிழ்நாடு அரசு தான் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சட்டத்தின் மூலம் ஒப்பந்த சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் விளைபொருட்களை கொள்முதலாளர் வாங்குவது உறுதி செய்யப்படுகின்றது. மேலும், அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சியால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பு தடுக்கப்படுகின்றது.

* கலப்பட உணவுப்பொருட்களை உண்பதால் ஏற்படும் தீங்கிலிருந்து நுகர்வோரை காத்திடவும், கலப்படமற்ற, தரமான உணவு பொருட்கள் நுகர்வோருக்கு கிடைத்திடவும் அக்மார்க் தரநிர்ணயம் உதவுகிறது. அக்மார்க் ஆய்வகங்கள் மூலம் 60.54 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளன.

* விருதுநகரில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அக்மார்க் ஆய்வகத்திற்கு கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

* மாணவர்களின் நலனுக்காக ரூபாய் 18.75 கோடி மதிப்பீட்டில் மாணவ/மாணவியர் விடுதி, சமையல் அறை, உணவுக் கூடம் மற்றும் உபகரணங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 18.03.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

* பொதுமக்கள் மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பூச்சி அருங்காட்சியம் ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

* ரூ.108.04 கோடியில் 7 வேளாண் கல்லூரிகள் மற்றும் 3 ஆராய்ச்சி நிலையங்களில் பல்நோக்கு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* ஆராய்ச்சியின் ஒரு சிறப்பு இயக்கமாக ரூ.430 கோடி மதிப்பீட்டில் உயிர்தொழில்நுட்பவியல் மகத்துவ மையத்தை உருவாக்கிட பத்து ஆண்டு திட்டமாக முதல் கட்ட நிதி ரூ.14.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* மாணவர்களின் கூடுதல் வசதிக்காக மாணவியர் விடுதி, சமையல் கூடம், கூடுதல் விரிவுரை அரங்கம், ஆய்வகம், தேர்வு கூடம் பயிலகம் உட்பட ரூ.58.678 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

* ரூ.9.50 கோடி செலவில் சங்கரன்கோவில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதி, கிருஷ்ணகிரி மா ஆராய்ச்சி மையம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் பல்நோக்கு பண்ணைய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* ரூ.2.57 கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் உழவர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் (TNIAMP-TNAU) திட்டத்திற்கு உலகவங்கி மூலம் ரூபாய் 87.46 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

* ரூ.27.07 கோடி செலவில் புது முயற்சியாக இயற்கை தாவரமான அனட்டோவை தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துதல், ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கு புத்துயிர் அளிக்கும் சிறுதானிய உற்பத்தி, பண்ணையில் பணிபுரியும் மகளிரின் வேலைப்பளுவை எளிதாக்குதல், அங்கக மாதிரி மேய்ச்சல் நிலக்காடுகளை உருவாக்குதல், வறட்சி தாங்கும் முதல் தரமான நெல் வகைகளை உருவாக்குதல், புத்தாக்க அணுகுமுறை மூலம் காய்கறி நாற்றுக்களை உற்பத்தி செய்தல், திசு வளர்ப்பு மூலம் தென்னை இரகங்களை உருவாக்குதல் மற்றும் பனை சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் தொழில் திறன் மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

* ரூ.12.458 கோடி செலவில் சிறுதானிய உற்பத்திப் பெருக்கம், நீரில் கரையும் உரங்கள் உற்பத்தித் திட்டம், பயிர்பாதுகாப்பு மதிப்பீடு திட்டம், எம்.ஜி.ஆர் 100 இரக அரிசியை விவசாய பங்களிப்புடன் செயலாக்கம் செய்தல், கன்னியாகுமரியில் மலர் பதன்செய் மையம், நிலக்கடலை விதை உற்பத்தி திட்டம், இராமநாதபுரத்தில் சீமைக் கருவேல் அகற்றிய நிலங்களில் மாற்றுப்பயிர் சாகுபடி போன்ற தொழில்நுட்ப செயல் விளக்கங்கள் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* தென்னிந்திய மலைப்பிரதேச பருவநிலைக்கு ஏற்ற பழங்களைப் (பேரிக்காய், பிளம், பீச் மற்றும் கிவி) பிரபலப்படுத்தும் திட்டத்திற்கும் குறைந்த அளவே பிரபலமான அவகோட்டா மற்றும் லிச்சி பழங்கள் தமிழ்நாட்டின் பழனி மலைப்பகுதியில் உற்பத்திக்கான தொழில்நுட்பத் திறன் செயல்விளக்கம், வறண்ட நிலப்பகுதியில் விளையும் நாவல் மற்றும் கொடுக்கா புளியின் திறன் குறித்த ஆய்வுத் திட்டத்திற்கும் 2019–2020ஆம் ஆண்டில் ரூ.306.30 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

* உணவு மற்றும் மருத்துவ தொழில்களுக்கான மூலிகைப் பயிர்களின் உயிர் சக்தி மூலக்கூறுகள் குறித்த ஆய்வு, மண்புழு உரத்தயாரிப்பில் தானியங்கி இயந்திரமயமாக்க செயல்பாடுகள் மற்றும் கால்நடை உற்பத்தி மேம்பாட்டுக்கான தீவனப் பயிர்களை கட்டியாக்குதல் ஆகிய மூன்று திட்டங்களுக்கு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.4.93 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த மூன்று ஆண்டுகளில் 34 புதிய பயிர் இரகங்களையும் 5 பண்ணை இயந்திரங்களையும் வெளியிட்டுள்ளது.

* கடந்த 2018–2019ஆம் ஆண்டில் நெல் விஜிடி 1, நெல் ஏடிடீ 53, சாமை ஏடிஎல் 1, பாசிப்பயறு விபிஎன் 4, நிலக்கடலை பிஎஸ்ஆர் 2, ஆமணக்கு ஒய்.டி.பி.1, கடம்பு எம் டி பி 1, சுரைக்காய் பி எல் ஆர் 2, பூண்டு ஊட்டி–2, நட்சத்திர மல்லி கோ 1, உருளைக்கிழங்கு குஃப்ரி சஹ்யாத்ரி, வாழை காவிரி சபா, வாழை காவிரி கல்கி, வாழை காவிரி சுகந்தம் ஆகிய 14 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது.

* கடந்த 2017–2018ஆம் ஆண்டில் நெல் ஏடிடீ 51, தட்டைப்பயறு வம்பன் 3, நிலக்கடலை டீஎம்வி 14, சூரியகாந்தி கோஎச் 3, கரும்பு கோஜி 6, கரும்பு கோ 06022, பீர்க்கங்காய் கோஎச் 1, மலை வேம்பு எம்டிபி 2 ஆகிய 8 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது.

* 2016–2017ஆம் ஆண்டு நெல் கோ 52, குதிரைவாலி எம்டியு 1, துவரை கோ 8, உளுந்து ஏடீடீ 6, உளுந்து கேகேஎம் 1, எள் விஆர்ஐ 3, ஆமணக்கு ஒய்ஆர்சிஎச் 2, பருத்தி கே 12, கரும்பு கோக(க) 25, புடலை கோ எச் 1, சுரைக்காய் பிஎல்ஆர் 1 , பிரஞ்சு பீன்ஸ் ஊட்டி 3 ஆகிய 12 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் வெளியிடப்பட்ட புதிய பண்ணைக் கருவிகள்

- ✶ கடந்த 2018–2019ஆம் ஆண்டில் மஞ்சள் வெளுப்பான், மஞ்சள் கொதிகலன், மஞ்சள் உலர்த்தி மற்றும் மாசு இல்லா மஞ்சள் களிம்பு ஆகிய நான்கு மஞ்சள் பதனிடும் இயந்திரங்கள் உழவர்கள் பயன்பாட்டிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. 2016–2017ஆம் ஆண்டு நெல்லிக்காய் விதை நீக்கும் பண்ணை இயந்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

- ✶ மகேந்திர சம்ருதி இந்திய வேளாண் விருது: 2019, பெரியகுளம் தோட்டகலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 08.03.2019 அன்று அளிக்கப்பட்டது.

- ✶ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த அனைத்து தகவல்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) உழவர்களுக்கும் மற்றும் பிற தரப்பினருக்கும் பயன் தரும் வண்ணம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செயல்படுகிறது.

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை

- ✶ உழவர்களுக்கு சான்று அளிக்கப்பட்ட விதைகள் கிடைப்பதை உறுதி செய்யப்பட்டு விதைப்பண்ணைகள் 1,53,233 ஹெக்டேர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவு செய்யப்பட்டு, 2,58,677 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ✶ விதை விற்பனை மையங்களில் 1,94,098 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 1,48,232 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுகளின்போது, விதை விதிகளை மீறிய செயல்களுக்காக 3,798 மெட்ரிக் டன் விதைகள் தரக்குறைவு எனக் கண்டறியப்பட்டு வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

- ✶ தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்காக மாநிலத்தில் செயல்பட்டு வரும் 29 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில், 2,52,001 விதை மாதிரிகளின் தரங்கள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✶ இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலம் விதை உற்பத்தி, விதைச்சான்று மற்றும் விதைச்சட்ட அமுலாக்கத்தில் உள்ள நவீன உத்திகள் குறித்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை சாகுபடியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி, 42,031 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ நமது நாட்டில் செயல்பாட்டில் உள்ள 28 அங்ககச்சான்று நிறுவனங்களில், தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவம் பெற்றுள்ளது. அங்ககச் சான்றளிப்பிற்காக 92,348 ஏக்கர் பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

- ✶ விதைச்சான்று பிரிவினை மேம்படுத்த 2016–2017ஆம் ஆண்டில் ரூ.155.42 இலட்சம் மதிப்பில் கருத்தரங்குக் கூடம் கட்டுதல் / கூட்ட அரங்கத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ அரசு மற்றும் தனியார் மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்ய, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களின் தரத்தினை மேம்படுத்தவும், விதைப் பரிசோதனை முடிவுகளை துல்லியமாகவும், விரைவாகவும் வழங்கிடும் பொருட்டும், 2017–2018ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடி நிதி செலவில், நவீன விதை பரிசோதனை ஆய்வு கருவிகளும், உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- ✶ இவ்வியக்ககத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்ப துறையானது, இணையதளத்தில் விதை சான்றளிப்பு மேற்கொள்வதற்காக பிரத்யேகமான SPECS மென்பொருள் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்மையாக இங்கு தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய மென்பொருள் திட்டமானது, விதை சான்றளிப்பு இணையதளத்தில் நடைமுறைப்படுத்த ஏதுவாக

இருப்பதுடன், சான்றளிப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்கவும், சான்றளிப்பு துறையின் அனைத்து பிரிவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், முறையான கண்காணிப்பிற்கும் உதவுகிறது. இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகள் / விதை உற்பத்தியாளர்கள், இணையதளத்தில் பதிவு செய்வதற்கும், சான்றளிப்பு செயல்முறையின் முன்னேற்ற நிலை மற்றும் விதை இருப்பு போன்றவற்றை உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ 2017–2018ஆம் ஆண்டில் மேசை கணினிகள் கொள்முதல் செய்வதற்காகவும், விதைப் பரிசோதனை நிலையங்களை புதுப்பிப்பதற்காகவும், விதை கிரயத்தொகை நேர்செய்திடவும் இனத்தூய்மை பண்ணை மேம்படுத்துவதற்காகவும் ரூ.84.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ✶ இத்துறையின் விதைப் பரிசோதனை நிலையங்களை மேம்படுத்துவதற்காகவும், டிஎன்ஏ மரபணு ஆய்வகம், விதை கிரயத்தொகை நேர்செய்திடவும் மற்றும் இனத்தூய்மை பண்ணை மேம்படுத்துவதற்காகவும், ISTA கட்டணத்திற்காகவும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.85.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ✶ விதைச்சான்றளிப்பு நடைமுறைகள் இணையதளம் மூலம் செயல்முறைப்படுத்தவும் அதற்குரிய (SPECS) மென்பொருள் திட்டத்தை மேற்கொள்ளவும், களப்பணியாளர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் பொருட்டு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ✶ விதைச்சான்றளிப்பு நடைமுறைகள் இணையதளம் மூலம் செயல்முறைப்படுத்தவும் அதற்குரிய (SPECS) மென்பொருள் திட்டத்தை மேற்கொள்ளவும், களப்பணியாளர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் பொருட்டு 2019–2020ஆம் ஆண்டில் ரூ.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டின் திட்டத்தில் மதுரை மற்றும் காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையங்களை புதுப்பிப்பதற்காக ரூ.30.9 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்ட முகமை

- ✶ தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத் திட்டம்–நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் (ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) கீழ் ரூ.378.88 கோடிக்கு இயற்கைவள மேம்பாடு, பண்ணை உற்பத்தித் திட்டம், சுயஉதவிக்குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப் பணிகள், திறன் மேம்பாட்டு பயிற்சி பணிகள் மேற்கொள்ள, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- ✶ 3,481 பண்ணைக்குட்டைகள்.
- ✶ 11,372 தடுப்பணைகள்.
- ✶ 2,522 கசிவுநீர்குட்டைகள்.
- ✶ 20,077 இதர பணிகள் (புதிய ஊருணி, மேம்படுத்தப்பட்ட ஊருணி).
- ✶ 1,49,427 பயனாளிகள் நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.
- ✶ பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத்திட்டம் துளி நீரில் அதிக பயிர்–இதர உள்ளீடுகள் (PMKSY-Other Interventions-Per Drop More Crop) என்ற திட்டத்தின் மூலம் 3,684 ஆழமற்ற குழாய் கிணறு / துளைக்கிணறு ரூ.9.18 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.
- ✶ ரூ.14.71 கோடி நிதி உதவியில் 10,001 டீசல் பம்பு செட் / மின் மோட்டார் பம்பு செட் வழங்கப்பட்டுள்ளன.
- ✶ ரூ.6.59 கோடி செலவில் 7,445 நீர் பாசனக்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ✶ ரூ.8.08 கோடி செலவில் 2,323 தரைநிலை நீர்தேக்கத் தொட்டிகள் (கான்கிரீட் அல்லது செங்கல் கட்டுமானம்) அமைக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப்பணிகள்

* ரூ.199.33 கோடி செலவில் 32,605 கறவைப்பசுக்கள் 32,605 பயனாளிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளது.

* 2018–2019ஆம் ஆண்டிலிருந்து பயனாளிகளின் விருப்பத்திற்கேற்ப ஆந்திரா மற்றும் கருநாடக மாநிலங்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலும் கறவைப்பசுக்கள் வாங்கப்படுகின்றன.

* ரூ.728.75 கோடி செலவில் 3,99,296 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் மொத்தம் 15,97,184 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

* கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.18.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 25 மாவட்டங்களில் 199 கறிக்கோழிப் பண்ணைகள் மற்றும் 2,861 நாட்டுக் கோழிப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன.

* தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மாவட்ட கால்நடை பண்ணை ஒசூரில் ரூ.674.875 இலட்ச செலவில் நாட்டுக்கோழி பெருக்க வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

* 2018–2019ஆம் ஆண்டில் ரூ.50 கோடி செலவில் 77,000 பயனாளிகளுக்கு 38.5 இலட்சம் அசில் இன கோழிகள் 50 எண்ணம் ஒரு மாத கோழிக்குஞ்சுகள் மற்றும் கொட்டகைகள் வழங்கப்பட்டன. 2019–2020ஆம் ஆண்டிற்கு 2.4 இலட்சம் பயனாளிகளுக்கு தலா 25 அசில் இன கோழிகள் வீதம் 60 இலட்சம் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

* கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் 14,245 கால்நடை சிறப்பு திட்ட முகாம்கள் நடைபெற்றுள்ளது.

* நடமாடும் கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டம் (AMMA – AMBULANCE) தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2016–2017இன் கீழ், ரூ.18.93 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. நோயுற்ற கால்நடைகளை பாதுகாக்க 22 நவீன வாகனங்கள் குளிர்சாதன வசதியுடன் அவசர சிகிச்சை ஊர்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

* விவசாயிகள் நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை சேவையினை “1962” என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பெறலாம்.

* நபார்டு RIDF XXII 2016–2017 திட்டத்தின் கீழ், 117 புதிய கால்நடை மருத்துவ நிலையக்

கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.68.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 112 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 5 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ நபார்டு RIDF XXII 2016–2017 திட்டத்தின் கீழ், கூடுதலாக ரூ 6.88 கோடி செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 12 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

✶ காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.151.42 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த உதவி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அலுவலக கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

✶ நபார்டு RIDF XXIII 2017–2018 திட்டத்தின் கீழ், 150 கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.49.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 கட்டடம் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 50 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ நபார்டு RIDF XXIV 2018–2019 திட்டத்தின் கீழ், 142 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.57.29 கோடிக்கு நிதி ஒப்புதல் பெறப்பட்டு கட்டடப்பணிகள் துவங்கப்பட உள்ளது.

✶ 13 புள்ளியல் ஆய்வாளர் காலியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்து பணி நியமனம்.

✶ 16.02.2017 முதல் 12.02.2019 வரை, கருணை அடிப்படையில் 3 இரவு காவலர், 1 தண்ணீர் வைப்பவர் மற்றும் 4 அலுவலக உதவியாளர் பதவிகளில் பணி நியமனம்.

✶ 125 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

✶ 25 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

✶ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

✶ 5 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

✶ 100 சிறு கால்நடை பண்ணைகள் அமைக்க 25 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்திற்கு, ரூ.1.25 கோடி நிதியில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

✶ ரூ.6.24 கோடி செலவில் 6 கால்நடை நிலையங்கள் கால்நடை பன்முக மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

✶ ஜல்லிக்கட்டு / எருதுவிடும் விழா / மஞ்சுவிரட்டு / வடமாடு போன்ற நிகழ்ச்சிகள் 2017ஆம் ஆண்டில் 14 மாவட்டங்களில் 203 கிராமங்களிலும், 2018ஆம் ஆண்டில் 17 மாவட்டங்களில் 401 கிராமங்களிலும் நடைபெற்றுள்ளது.

✶ தமிழ்நாடு முதலமைச்சரை தலைவராகக் கொண்டு பிராணிகள் நலவாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

✶ கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ், ரூ.46 கோடி செலவில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நான்கு கால் மற்றும் வாய் நோய் (கோமாரி) தடுப்பூசி சுற்றில் சுமார் 93.89 இலட்சம் மாட்டினங்களுக்கு ஆறு மாத இடைவெளியில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

✶ தமிழகத்தில் அஸ்காட் திட்டத்தின் கீழ், சுமார் 111.75 இலட்சம் கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோயினை தடுப்பதற்காக தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

✶ மாநில தீவன அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், ரூ.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,73,570 ஏக்கர் நிலப்பரப்பில் தோராயமாக 28.276 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு 2,63,567 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். மேலும், 10 இலட்சம் தீவன மரக்கன்றுகள் 1,32,242 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவற்றோடு 3,600 நீர்ம தாவர வளர்ப்பு அலகுகள், 10,000 எண்ணிக்கையிலான அசோலா வளர்ப்பு அலகுகளும் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. 1,500 புல் நறுக்கும் கருவிகள் 75 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

✶ காலியாக உள்ள 784 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை 784 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 38 தற்காலிக கால்நடை உதவி மருத்துவராக நியமனம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

- ✶ தமிழ்நாட்டின் உள்ளூர் வேளாண் பருவ நிலைக்கு ஏற்றதும் அதிக நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்ட "தானுவாஸ் KPM தங்கம்" எனும் புதிய கலப்பினப் பன்றியை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உருவாக்கம்.

- ✶ சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டுச்சாலைப் பகுதியில் அமையவுள்ள "கால்நடை மருத்துவ அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயராய்வு நிலைய" வளாகத்தில் மாநிலத்தின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து மேற்கண்ட கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ரூ.82.13 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளது.

- ✶ நாமக்கலிலுள்ள கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணய ஆய்வுக் கூடம், சென்னையில் உள்ள கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம் மற்றும் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தள ஆய்வகம் ISO/IEC 17025:2005 எனும் NABL தரச்சான்றிதழ்களை, இந்திய அரசின் சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) வழங்கியுள்ளது.

- ✶ தமிழகத்தின் உள்நாட்டின மாடுகளை பாதுகாப்பதற்கென, ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் ஆராய்ச்சி நிலையமும் நிறுவப்பட்டுள்ளது.

- ✶ புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி மையம் 21.11.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- ✶ காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி மையம் 25.11.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- ✶ இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையினரால் நாட்டு மாட்டினங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கும் நிறுவனத்திற்கு வழங்கப்படும் 2017–2018ஆம் ஆண்டின் தென் மண்டலத்திற்கான தேசிய காமதேனு விருது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்திற்கு 01.06.2018 அன்று வழங்கப்பட்டது. இவ்விருதானது, ரூ.5 இலட்சம் பணமுடிப்பு மற்றும் தகுதிச்சான்றிதழையும் உள்ளடக்கியதாகும்.

* சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியல் துறையின் வெறிநோய்ப் பரிசோதனை ஆய்வுக் கூடத்திற்கு உயிரியல் சோதனைகளை மேற்கொள்ள உலகளாவிய மற்றும் தேசிய அங்கீகாரச் சோதனை மற்றும் அளவுத் திருத்தத்திற்கான நிறுவனமானது அங்கீகாரச் சான்றிதழ் வழங்கியுள்ளது. இந்த சான்றிதழானது ISO/IEC 17025:2005 தரநிலை மதிப்பீட்டின் அடிப்படையில் 11.09.2018 முதல் 10.09.2020 வரையிலான காலகட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

* இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய அனைத்திந்திய நுழைவுத்தேர்வில் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் மீன் வள அறிவியல் பிரிவில் அதிக எண்ணிக்கையில் முது நிலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு 16 இடங்களைப் பெற்றமைக்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் முதுநிலை விருதினைப் பெற்றது.

* சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள பயிற்றுவிக்கும் கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவ சிகிச்சை வளாகத்தில் வரியோட்ட வழிக்கணினி (Computer Tomography – CT scan unit) பிரிவினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 19.02.2019 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.03.2019 அன்று காணொலி காட்சி மூலம் தமிழக அரசின் தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் (TANII) கீழ் நிதியுதவி பெற்று ரூ.12.75 கோடி செலவில் மாதவரம் பால்பண்ணையில் நிறுவப்பட்ட உயிர் பாதுகாப்பு நிலை – III ஆய்வகத்தினைத் திறந்து வைத்தார்கள்.

உயிர் பாதுகாப்பு நிலை – III ஆய்வகம் – திறப்பு விழா

* ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு பி.வி.எஸ்சி மற்றும் ஏஎச். பாடப்பிரிவினை நடத்துவதற்குரிய அங்கீகாரம், அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழுவால் அளிக்கப்பட்டுள்ளது.

* ஆலம்பாடி மாட்டினத்தைப் பாதுகாப்பதற்கென “தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்” எனும் திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.400 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* “வறட்சி மாவட்டங்களில் உள்ள ஏழை கிராமப்புற கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்கென குறைந்த செலவில் எளிதில் பயன்படுத்தக்கூடிய நீர்க்கட்டுத் தீவன உற்பத்திப் பிரிவினை நிறுவுதல்” எனும் திட்டம் ரூ.74.48 இலட்சத்தில் செயல்படுத்தப்படும்.

* ரூ.306 இலட்சம் செலவில் “கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் நோய்களை கண்காணித்தல், கணக்கெடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான மையத்தை மாதவரத்தில் நிறுவுதல்” எனும் திட்டம் செயல்படுத்தப்படும்.

* தமிழகத்தின் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென, “கால்நடை மற்றும் கோழித் தீவனத் தொழில்நுட்ப மையம் நிறுவுதல்” மற்றும் “கிராமப்புற கோழி இடுபொருட்கள் மற்றும் திறன் மேம்பாட்டு நிலையம் நிறுவுதல்” எனும் இரண்டு திட்டங்களை ரூபாய் 301.10 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் (NADP) கீழ் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

* இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டம் எனும் முன்னுரிமைத் திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகத்தின் வளாகவசதி மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கென, ‘தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிறுவன அபிவிருத்தித் திட்டம்’ எனும் திட்டத்தினை செயல்படுத்த, இப்பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டு 28 கோடி ரூபாய் நிதியை பெற்றுள்ளது.

* திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாட்டில் நிறுவப்பட்டுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் தலா ரூ.14 கோடி செலவில் (மொத்தம் ரூ.28 கோடி) கூடுதல் கட்டட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மீன்வளத்துறை

கடல் மீன்வளம்

- ✶ மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்பட்டு வரும் ரூ.2,000 நிவாரணத் தொகையினை ரூ.5,000ஆக உயர்த்தி மூன்றாண்டுகளில் 13 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 4,79,674 மீனவ குடும்பங்களுக்கு ரூ.239.84 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

- ✶ மீன் பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகையாக ஈராண்டில் 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 3,26,874 மீனவ குடும்பங்களுக்கு ரூ.163.43 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டிற்கு 1,76,716 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை மொத்தம் ரூ.88.41 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மாவட்டம் வரையிலான 1,03,689 மீனவ குடும்பங்களுக்கு ரூ.51.84 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ✶ 2017–2018, 2018–2019, 2019–2020ஆம் ஆண்டுகளில், கடல் மீனவர் / மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், மீனவர்களால் மாதந்தோறும் செலுத்தப்படும் சேமிப்புத் தொகை ரூ.900ஐ ரூ.1,500ஆக உயர்த்தி பெற்றிடவும், இத்தொகைக்கு ஈடாக அரசால் வழங்கப் பெறும் பங்குத்தொகை, ரூ.1,800ஐ ரூ.3,000ஆக உயர்த்தி, 13 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 10,95,363 மீனவர் / மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.328.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் 80 குழுக்கள் கொண்ட மீனவர்களுக்கு தொலை தொடர்பு சாதனங்கள் வழங்கிட ரூ.3.10 கோடி செலவில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகள் கரையுடன் தொடர்பு ஏற்படுத்திடும் வகையில் படகிற்கு நூறு சதவீத மானியத்தில் செயற்கைகோள் தொலைபேசி (Satellite phone) ஒரு குழுவிற்கு 2 எண்ணம், NavIC தகவல் பெறும் கருவி ஒரு குழுவிற்கு 3 எண்ணம், Navtex கருவி ஒரு குழுவிற்கு 2 எண்ணம் தொலை தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ “வர்தா” புயல் காரணமாக திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் இருந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இழந்த 16,768 மீனவர்களுக்கு ரூ.19.13 கோடி நிவாரணமாக அரசு வழங்கியுள்ளது.

- ✶ வர்தா புயல் காரணமாக, காணாமல் போன/ இறந்த 10 மீனவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம், ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது,

- காமராஜர் துறைமுக கடற்பகுதியில் எம்.டி.பி.டபிள்யூ. மேப்பிள் மற்றும் டான் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு சரக்கு கப்பல்கள் 28.01.2017 அன்று எதிர்பாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானதால், கப்பலிலிருந்த எண்ணெய் கசிந்து திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கடற்பகுதிகளில் பரவியதால், பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒரு மீனவ குடும்பத்திற்கு ரூ.5,000/– வீதம் 30,000 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கப்பல் நிறுவனத்திடமிருந்து பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி தொகுப்பிலிருந்து வழங்கப்படவுள்ள ரூ.75 இலட்சம் நிதியினை எதிர்நோக்கி திருவள்ளூர் மாவட்டம் எர்ணாவூர் மற்றும் சென்னை மாவட்டம் நொச்சிக்குப்பத்தில் இரண்டு மீன்சந்தைகள் அமைப்பதற்கும் ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறன.

- எண்ணெய் கசிவிற்கு காரணமான கப்பல் நிறுவனங்கள் தங்களின் காப்பீடு நிறுவனங்களில் இருந்து பெற்ற இழப்பீடு தொகை ரூ.131 கோடியில் இருந்து பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

- ஒகி புயலின் தாக்கத்திற்கு முன் ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த படகுகள் புயல் காற்றின் வேகம் மற்றும் நீரோட்டம் காரணமாக திசைமாறி அண்டை கடலோர மாநில மீன்பிடித்துறைமுகங்களில் தஞ்சம் அடைந்த மீனவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்ப ஏதுவாக படகுகளுக்கு தேவைப்படும் டீசல் எரியெண்ணெய் மற்றும் மீனவர்களுக்கு உணவுப்படி வழங்கிடும் பொருட்டு ரூபாய் 2.20 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு அண்டை மாநிலங்களில் இருந்த 217 மீன்பிடி படகுகள் மற்றும் 1,574 தமிழ்நாடு மீனவர்கள் பத்திரமாக சொந்த ஊர்களுக்கு அழைத்து வரப்பட்டனர்.

- ஒகி புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தலா ரூ.5,000 வீதம் 30,756 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.15.378 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி புயல் காரணமாக காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு சிறப்பினமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 274 மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/– வீதம் உடனடி வாழ்வாதார நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி புயலினால் காணாமல் போன மீனவர்கள் இறந்தவர்களாக முடிவு செய்து தலா ரூ.20 இலட்சம் நிவாரணமாக 177 மீனவர்களுக்கும், ரூ.35.40 கோடி நிவாரணமாக 14.03.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

- "ஒகி" புயலில் சிக்கி மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு காப்பீட்டு உதவி ரூ.2 இலட்சம் உட்பட தலா ரூ.10 இலட்சம் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீனவ மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் இறந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண தொகையினை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி இறந்துபோன 27 மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.5.40 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- "ஒகி" புயலினால் சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு நிவாரணமாக ரூ.7.08 கோடியும், உயிரிழந்த மீனவர்களின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர ரூ.15 இலட்சமும், உணவு மற்றும் சில்லறை செலவினங்களுக்கு ரூ.15 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி" புயலில் சிக்கி ஊனமடைந்து, தொடர்ந்து மீன்பிடி தொழில் மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கும் மீனவர்களுக்கு, மாற்று வாழ்வாதாரம் வழங்கிட ஏதுவாக மறுவாழ்வு நிதியுதவியாக ரூபாய் 5 இலட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களுக்கு நிவாரணமாக தலா ரூ.50,000 வீதம் 96 மீனவர்களுக்கு ரூ.48 இலட்சம் நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி புயலில் உயிரிழந்த / காணாமல் போன மீனவர்களின் வாரிசுதாரர்களில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு என 136 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

- கஜா புயலால் கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச்

சேர்ந்த 195 விசைப்படகுகள் முழுவதுமாகவும், 1,429 விசைப்படகுகள் பகுதியாகவும், 1,051 கண்ணாடி நாரிழை வள்ளங்கள் முழுவதுமாகவும், 2,942 கண்ணாடி நாரிழை வள்ளங்கள் பகுதியாகவும் மற்றும் 55 கட்டுமரங்கள் முழுவதுமாகவும், 164 கட்டுமரங்கள் பகுதியாகவும், 6,157 இயந்திரங்கள் மற்றும் 10,648 வலைகளும் சேதமடைந்தன. சேதமடைந்த படகுகள், வலைகள் மற்றும் இயந்திரங்களுக்கு ரூ.53.714 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

* முழுவதும் சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கான நிவாரணம் ரூ.85,000 லிருந்து ரூ.1,50,000/–ஆக உயர்த்தப்பட்டு அதற்கான கூடுதல் நிவாரணம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது.

* இப்புயலின் போது கடற்கரையிலிருந்து தொலைதூரமாக தூக்கி வீசப்பட்டு மண் மற்றும் சகதியில் சிக்கிய மீன்பிடிப் படகுகளை மீட்கும் பணிக்கும் ரூ.36.02 இலட்சம் செலவிடப்பட்டது.

* கஜா புயலினால் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களை சார்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தினை புனரமைத்திடும் பொருட்டு சூரிய ஒளியில் செயல்படும் மீன் உலர் கூடங்கள் அமைத்தல், மீன்வளர் சூழலை ஏற்படுத்த செயற்கை உறைவிடங்கள் அமைத்தல், கடல் / உவர் நீர் மீன் குஞ்சு வங்கி அமைக்கவும், ஒருங்கிணைந்த கடல் மீன்வளர்ப்பு அலகுகள் அமைத்தல், மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக கடற்பாசி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தல், நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல் போன்ற திட்டப் பணிகளுக்கு ரூ.31.15 கோடி செலவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கும் போது பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 76 மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.109.50 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

* மத்திய மாநில அரசு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 993 மீனவர்களுக்கு ரூ.1,204.01 இலட்சம் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து நிவாரணமாக பெற்று வழங்கப்பட்டுள்ளது.

* மோசமான வானிலை காரணமாகவும், எஞ்சின் பழுதடைந்தமை காரணமாகவும் இலங்கை கடற்பகுதியில் மூழ்கிய மற்றும் பழுதடைந்த படகுகளுக்காக இராமநாதபுரத்தைச் சேர்ந்த 18 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.90 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

* மேலும், இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 36 மீன்பிடி படகுகளில் 26 படகுகள் அக்டோபர் 2017இல் தமிழகம் கொண்டு வரப்பட்டன. மேலும் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட 167 தமிழக மீனவர்களின் படகுகளில் பழுது நீக்கம் செய்து மீட்க தகுதியுள்ளதாக கண்டறியப்பட்ட 47 படகுகளில் தற்சமயம் 36 மீன்விசை படகுகள் மீட்கப்பட்டு தமிழகம் கொண்டு வரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 11 படகுகளை தற்போது புதிதாக விடுவிக்கப்பட்ட படகுகளுடன் இணைத்து தமிழகம் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* தமிழகத்தைச் சேர்ந்த 744 மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்தும், 93 மீனவர்கள் ஈரான் சிறையிலிருந்தும், 11 மீனவர்கள் அபுதாபி சிறையிலிருந்தும், 10 மீனவர்கள் ஓமன் சிறையிலிருந்தும், 28 மீனவர்கள் கத்தார் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு தமிழகம் கொண்டு வரப்பட்டனர்.

* 2017–2018ஆம் ஆண்டு முதல் விசைப்படகு ஒன்றிற்கு வழங்கப்படும் எரியெண்ணெயின் அளவு, ஆண்டு ஒன்றிற்கு 15,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகிற்கு 3,600 லிட்டரிலிருந்து 4,000 லிட்டராகவும் அரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு லிட்டருக்கு ரூ.25/– என்ற மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவையும், ஆண்டு ஒன்றிற்கு 3,000 லிட்டரிலிருந்து 3,400 லிட்டராக அரசு உயர்த்தி வழங்கி வருகிறது.

* 2017–2018ஆம் ஆண்டு, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கணவாய் மீன்பிடிப்பிற்கு தேவைப்படும் உபகரணங்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியத் தொகையாக 100 மீனவர்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* 2017–2018ஆம் ஆண்டு, நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீனவர்களின் மரத்திலான நாட்டுப்படகிற்கு பதிலாக,

10 மீட்டர் வரை ஒட்டு மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், வலை மற்றும் ஐஸ்பெட்டிகள் ரூ.2.125 இலட்சம் மானியத்தில் 100 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டு, மீனவர்களின் மரத்திலான நாட்டுப்படகிற்கு பதிலாக, 10 மீட்டர் வரை ஒட்டு மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், வலை மற்றும் ஐஸ்பெட்டிகள் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் 100 மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாரம்பரிய நாட்டுப்படகு உரிமையாளர்கள் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட அதன் விலையில் 40 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.48,000/– வழங்கப்படும். வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.2 கோடி மானியத்தில் 423 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டு நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் 2,300 வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கிட ரூ.11.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டில் ரூ.35.35 இலட்சம் மானியத்தில் குளிர்பதன பெட்டிகள் 923 பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் குளிர்பதன பெட்டிகள் மானிய விலையில் வழங்கிட ரூ.31.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், அண்மைக் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள மீன்பிடி அழுத்தத்தைக் குறைத்திடவும், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆழ்கடல் சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கான செலவினத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

✶ இத்திட்டத்தின் கீழ், ரூ.16.50 கோடி 50 மீனவ பயனாளிகள் / குழுக்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 51 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதர படகு கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய பகுதிகளில் மீன்பிடிக்கும் போது இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படும் நிகழ்வுகளை தவிர்த்திடும் பொருட்டு, மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் பாக் வளைகுடா மாவட்டங்களில் உள்ள 2,000 இழுவை படகுகளுக்கு பதிலாக ஆழ்கடல் மீன்பிடிப்பு படகுகளை புதிதாக கட்டமைத்து இப்பகுதி மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுத்திட ஏதுவாக ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகளை கட்டட அதன் விலையில் 70 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.56 இலட்சம் மானியம் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

✶ 2017–2018ஆம் ஆண்டில் 500 இழுவலை படகுகளுக்கு பதிலாக ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டமைத்து அதன் மூலம் மானியத் தொகையை பயனாளிகளுக்கு விடுவித்திடும் பொருட்டு ரூ.286 கோடி (மத்தியஅரசு – ரூ.200 கோடி + மாநில அரசு – ரூ.86 கோடி) அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இழுவை படகுகளை மாற்றுவதற்கானஆணைகள் (Decision to enroll for replacement (DER)) 426 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 82 பயனாளிகள் படகு கட்டும் நிறுவனம், பயனாளி மற்றும் மீன்துறை ஆகியோரிடையே முத்தரப்பு ஒப்பந்தம் இயற்றியுள்ளதை தொடர்ந்து 10 படகுகள் கட்டும் பணி முடிந்து பயனாளிகளிடம் வழங்கப்பட்டது. 41 படகுகள் கட்டும் பணி பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது.

✶ மீனவ இளைஞர்களுக்கு கடல்சார் கல்வி பயில 62 மீனவ இளைஞர்களுக்கு ரூ.22 இலட்சம் உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

✶ மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளித்து அவர்கள் இந்திய கடலோர காவல்படை மற்றும் கப்பற்படை ஆகியவற்றில் பணியில்சேர உதவிடும் வகையில் பயிற்சி திட்டத்தினை செயல்படுத்திட அரசு ரூ.1.04 கோடியினை விடுவித்துள்ளது. இதுவரை 5 கட்ட பயிற்சிகள் சென்னை, தூத்துக்குடி, நாகர்கோவில், கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தை சார்ந்த 145 இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

✶ ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு இந்திய குடிமைப் பணியில் சேர்வதற்கான 6 மாத கால சிறப்பு பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தில் (அகில இந்திய குடிமை பணிகளுக்கான பயிற்சி நிலையம்) வழங்கி வருகிறது. இதனைத்தொடர்ந்து 2017–2018, 2018–2019ஆம் ஆண்டில் 20 மீனவ இளைஞர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

2019–2020ஆம் ஆண்டிற்கு 20 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் 11 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- அரசு மீன் விதைப் பண்ணைகளில் 2017–2018ஆம் ஆண்டில் 3,685.75 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 576.115 இலட்சம் மீன்விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- அரசு மீன் விதைப் பண்ணைகளில் 2018–2019ஆம் ஆண்டில் 5,207.62 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 705.16 இலட்சம் மீன்விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- 2019–2020ஆம் ஆண்டில் 4,881.75 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 572.58 இலட்சம் மீன்விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- 50 விழுக்காடு மானியத்தில் 50 ஹெக்டேர் பரப்பளவில் 200 புதிய பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதில் 200 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன மற்றும் உள்ளீட்டு மானியம் விடுவிக்கப்பட்டு வருகிறது.
- 1,200 உள்நாட்டு மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் மீன்பிடி வலைகள். மேலும், 500 உள்நாட்டு மீனவர்களுக்கு கண்ணாடி நாரிழையிலான பரிசல்கள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்

- 2016–2017ஆம் ஆண்டு, 5,648.06 ஹெக்டேர் நன்னீர் நீர் நிலைகளிலுள்ள தாவரங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, 28.30 இலட்சம் புல்கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.
- 2016–2017ஆம் ஆண்டு, மீன்வளர்ப்போரை ஊக்குவித்து மீன்வளர்ப்பு பரப்புகளை அதிகரிக்கும் திட்டத்தில், 24.76 ஹெக்டேர் மீன்வளர்ப்பு பண்ணைகள் 58 பயனாளிகளால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.
- 2016–2017ஆம் ஆண்டு, தூத்துக்குடி மாவட்டத்தில், கடலில் 10 மிதவைக்கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால்கள் வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.53.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மிதவைக்கூடுகள் நிறுவப்பட்டு மீன்குஞ்சுகள் மற்றும் சிங்கி இறால்கள் இருப்பு செய்யப்பட்டு மீனவர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன.
- 2016–2017ஆம் ஆண்டு, கடலூர் மாவட்டம், லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் காற்று புகுத்தி மற்றும் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை பயன்படுத்தி மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட ஏதுவாக ரூ.5.48 இலட்சம் மதிப்பிலான உபகரணங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. இதன் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி வெற்றிகரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டு, கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அரசு மீன்பண்ணைகளை மேம்படுத்திட ரூ.368.50 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மீன் பண்ணைகளை மேம்படுத்தும் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளது.
- அரசால் பவானிசாகர் மற்றும் ஆத்தூர் அரசு மீன் பண்ணைகளை புனரமைப்பதற்காக 2018–2019ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2019–2020ஆம் ஆண்டில் பவானிசாகர் மேட்டூர் மற்றும் கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணைகளில் தீவிர முறையில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்திடும் வசதிகளை ஏற்படுத்திட ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2019–2020ஆம் ஆண்டில் உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட ஒரு கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 2019–2020ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டம், தட்டாமனைபட்டி மற்றும் சின்னாறு அரசு மீன்குஞ்சு பண்ணை, தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் நீராதார வசதிகள் மற்றும் தீவிர முறையில் மீன்குஞ்சு உற்பத்தி வசதிகளை ஏற்படுத்திட அரசு ரூ.55 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- கடலோர மற்றும் உவர்நீர் நிலப்பகுதிகளில் மீன்/இறால் வளர்ப்பு மேற்கொள்ள உகந்த நிலங்களை தேர்வு செய்யும் நோக்கத்துடன் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் NADP நிதியுதவியுடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய ஆறு கடலோர மாவட்டங்களில்

நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த தரிசு நிலங்களின் ஆதார வளங்களை வரைபடம் மூலம் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசின் நீலப்புரட்சி திட்டம்

- ✶ 2016–2017ஆம் ஆண்டு மத்திய அரசின் 'நீலப்புரட்சி' திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் ரூ.9.925 கோடி விடுவிக்கப்பட்டு நன்னீர் மற்றும் உவர்நீரில் புதிய குளம்/குளம் சீரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ✶ நீலப்புரட்சி திட்டத்தின் கீழ், மத்திய, மாநில அரசு பங்களிப்புடன் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்காக 73 பயனாளிகளுக்கு மொத்தம் 61.480 ஹெக்டேர் பரப்பளவில் புதிய குளம் அமைத்தல் பணிக்காகவும், 10 பயனாளிகளுக்கு மொத்தம் 11.75 ஹெக்டேர் பரப்பளவில் மீன்வளர்ப்பு குளங்கள் புனரமைத்தல் பணிக்காகவும் மற்றும் மொத்தம் 73.23 ஹெக்டேர் பரப்பளவில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியினால் இயங்கும் மின்சாதனங்கள் மூலம் மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக 4 அலகுகள் இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு மீன்வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ தமிழ்நாட்டில் உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட 2016–2017ஆம் ஆண்டில் மத்திய அரசு பங்களிப்புடன்கூடிய நீலப்புரட்சித் திட்டத்தின் கீழ், ரூ.1.40 கோடி செலவில் 32.36 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவிலான புதிய இறால் / மீன்பண்ணைகள் அமைக்கப்பட்டும், ரூ.1.05 கோடி செலவில் 53.10 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவிலான ஏற்கனவே உள்ள இறால் / மீன்பண்ணைகளை புனரமைக்கப்பட்டும் இடுபொருள் மானியமாக ரூ.1.21 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ✶ இதே திட்டம் 2017–2018ஆம் ஆண்டில் 58.99 ஹெக்டேர் ஏற்கனவே உள்ள இறால் / மீன்பண்ணைகளை புனரமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத் தவணைத்தொகையான ரூ.40 இலட்சத்தில் ரூ.25.10 இலட்சம் செலவில் 17.90 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவிலான ஏற்கனவே உள்ள இறால் / மீன் பண்ணைகளை புனரமைப்பதற்கும் 12.40 ஹெக்டேர் நீர்ப்பரப்பிற்கு இடுபொருள் மானியமாக ரூ.14.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ மத்திய அரசின் நீலப்புரட்சித் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டில் தனியார் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட ரூ.1.25 கோடி நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு 5 தனியார் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட ரூ.31.25 இலட்சம் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகள்

- ✶ நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.33.42 கோடி மதிப்பீட்டில் 6 அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்திடும் பணி, 7 மீன்பிடி இறங்கு தளங்கள் அமைத்திடும் பணி முடிவடைந்தது.
- ✶ இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில், மீன்பிடித் துறைமுகம் ரூ.99.66 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 04.03.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ✶ நபார்டு (RIDF XXIII) வங்கி கடன் உதவியுடன் ரூ.29.50 கோடி மதிப்பில் 9 மீன்பிடி இறங்கு தளங்கள் அமைத்திடும் பணி முடிவடைந்தது.
- ✶ தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம், ஆரியநாட்டுத் தெருவில் ரூபாய் 1.62 கோடி மதிப்பில் கரையோர வசதிகளான மீன் ஏலக்கூடம் மற்றும் மீன் வலைப்பின்னும் கூடம் பணி முடிவுற்றுள்ளது.
- ✶ நபார்டு (RIDF XXIII) திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், குந்துகல்லில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் குரும்பனையில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைத்தல், கடியப்பட்டினம் கிராமத்தில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு நிலைப்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது.
- ✶ கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலில் சேதமடைந்த மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் மறுசீரமைப்பு பணிக்காக தமிழக அரசு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. கீழக்கடியப்பட்டினத்தில் மணல் நிரப்பும் பணியை தவிர ஏனைய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம்–II

- ✶ உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம்–II–இன் கீழ் 2018–2019ஆம் ஆண்டில் முதல் கட்ட 18 உபவடி நிலப்பகுதிகளில் மீன்வளத் திட்டங்களை செயல்படுத்திட அரசால் ரூ.15.52 கோடி நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.10.06 கோடிக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டு, முதல் மற்றும் இரண்டாம் கட்ட உபவடிநிலப்பகுதிகளில் மீன்வளத் திட்டங்களை செயல்படுத்த அரசால் ரூ.14.25 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (FIMSUL-II)

- ✶ 8 HP குதிரைத் திறனுக்கு குறைவான வெளிப் பொருத்தும் இயந்திரம், 50 சதவீத மானியத்தில் (அதிகபட்சமாக ரூ.30,000) 528 சிறிய மீன்பிடி கலன்களுக்கு திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ தமிழக கடல் மீனவர்களின் கடலில் மீன்பிடிக்கும் போது உரிய பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பினை உறுதிப்படுத்திட ஏதுவாக கம்பியில்லா தகவல் தொடர்பு திட்டத்தின் கீழ், 17,539 எண்ணம் VHF கருவிகளில் 15,004 எண்ணம் 5 வாட் VHF கையடக்கக் கருவிகள் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும் மற்றும் 2,535 எண்ணம் 25 வாட் படகில் பொருத்தக்கூடிய VHF கருவிகள் விசைப் படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 7 புதிய தொலை தொடர்பு கோபுரங்கள் BSNL மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 8 கோபுரங்கள் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. மொத்தம் 15 கோபுரங்கள் மற்றும் 14 கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் சாதனங்களுடன் பயன்பாட்டில் உள்ளது. இவை தவிர, சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு மைய கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.60.40 கோடி செலவிடப்பட்டு VHF கருவிகள் மீனவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்

- ✶ ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள 412 மீனவர்களுக்கு ரூ.10.23 இலட்சம் செலவில் கடல்சார் மேலாண்மை தொலை தொடர்பு மின்னணுச் சாதனங்கள் மற்றும் இயந்திரப் பராமரிப்பு தொடர்புடைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ✶ 10 கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 2,227 மீனவ மகளிருக்கு ரூ.26 இலட்சம் செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உபபொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ✶ தமிழகத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் செலவில் 5 நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பரமக்குடி, மதுரை, நெய்வேலி மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலியில் மீன் விற்பனை நிலையம் விரைவில் அமைக்கப்படும்.
- ✶ கடலூர் மாவட்டம், கடலூர் துறைமுகத்தில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட எரியெண்ணெய் விநியோகம் செய்ய ஏதுவாக புதிய எரியெண்ணெய் விற்பனை நிலையம் ஒன்று நிறுவப்பட்டு 27.03.2017 முதல் செயல்பட்டு வருகிறது.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 14,586 கிலோலிட்டர் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட உயர்வேக எரியெண்ணெய் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 3,744 கிலோலிட்டர் மானியத்துடன் கூடிய விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்ட வணிக ரீதியிலான தொழிலக மண்ணெண்ணெய் நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 500 உள்நாட்டு மீனவர்களுக்கு 50% மானியத்தில் கண்ணாடி நாரிழை பரிசல்கள் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2017–2018ஆம் ஆண்டு வாணியஞ்சாவடியில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் டீசல் மற்றும் பெட்ரோல் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ✶ 2017–2018ஆம் ஆண்டு, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவி மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் நிதிமூலம் காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி, பழைய மாமல்லபுரம் சாலையில்

ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் நவீன மீன் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் டேங்கர் வாரி வாங்கப்பட்டு மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மீன் கொள்முதல் நிலையம் அமைக்க தொகை ரூ.10.80 இலட்சம் பெறப்பட்டு பணி முடிவடைந்துள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாரம்பரிய மீனவர்களுக்கு 50% மானிய விலையில் குளிர்காப்பு பெட்டிகள் ரூ.70.50 இலட்சம் மதிப்பில் இணையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாரம்பரிய மீனவர்களுக்கு 50% மானிய விலையில் 419 இயந்திரங்கள் ரூ.337.63 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தில் மீனவ மகளிருக்கு சிறு மற்றும் குறு கடன் வழங்கிட டாப்கோபெட் மூலம் புன்னக்காயல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற மேற்படி சங்கத்திலிருந்து 5 மீனவ மகளிர் அடங்கிய 13 குழுக்கள் உருவாக்கப்பட்டது. 13 கூட்டு பொறுப்புக்குழுக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிடும் பொருட்டு மீன் சார்ந்த தொழிலில் ஈடுபட குழுவின் நபர் ஒன்றிக்கு ரூ.15,000/– வீதம் ஒரு குழுவிற்கு தொகை ரூ.75,000/– நிதி வழங்கப்பட்டதுடன் 13 குழுக்களுக்கு ரூ.9.75 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பழவேற்காடு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தின் 5 குழுக்களுக்கு ரூ.3.50 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நீர்த்தேக்கங்களிலிருந்து 1,142.16 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.856.85 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு பண்ணைகளிலிருந்து 94.92 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு 73.65 இலட்சம் வளர்ந்த விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு உள்ளது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தால் 1,224.690 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.3,268.46 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டு உள்ளது.
- இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் விசைப்படகு மீனவர்களுக்கு விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட உயர்வேக எரியெண்ணெய் 1,33,882.660 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு ரூ.2,164.99 இலட்சம் லாபம் ஈட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாரம்பரிய மீன்பிடி நாட்டுப்படகுகளுக்கு விற்பனைவரிவிலக்கு அளிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய் 15,177.330 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் பெட்ரோலிய விற்பனை நிலையம் மூலம் 578.99 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு உள்ளது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பல்வேறு நலத்திட்டங்களுக்காக நவம்பர் 2019 வரை ரூ.21.90 இலட்சம் பெருநிறுவன சமுதாய பொறுப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, மீன்வளத் துறையின் மூலம் 27.02.2016 முதல் சேத்துப்பட்டு பசுமை பூங்காவின் "இயக்கம் மற்றும் பராமரிப்பு" பணிகளை மேற்கொண்டு வருகிறது. பொழுதுபோக்கு மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்காவிற்கு நவம்பர் 2019 வரை 7.52 இலட்சம் எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வருகை புரிந்துள்ளனர். மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவினில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் மெய்நிகர் காட்சியகம் ஒன்று ரூ.6.82 கோடி செலவில் அமைக்கப்பட்டு மார்ச் 2019 முதல் பயன்பாட்டிலுள்ளது.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சென்னை மீன் விற்பனை பிரிவில் இணையதளம் மற்றும் கைப்பேசி வாயிலாக மீன் விற்பனை 25.05.2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- சென்னை விருகம்பாக்கம் மற்றும் மதுரையில் நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டு ஜூலை 2019 முதல் செயல்பட்டு வருகிறது.

- ✶ தேனாம்பேட்டையில் உள்ள கடல் மீன் உணவகம் ரூ.30 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ ரூ.45.92 இலட்சம் செலவில் 6 நடமாடும் மீன் விற்பனை ஊர்திகள் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட மீன்வளர்ச்சி கழக பணிகள்

- ✶ இரண்டு நடமாடும் கடல் மீன் விற்பனை உணவகங்கள் ரூ.57.50 இலட்சம் செலவில் 21.11.2017 அன்று துவங்கப்பட்டு சென்னை மெரினா கடற்கரை மற்றும் நீலாங்கரையில் அமைத்து செயல்பட்டு வருகின்றன.
- ✶ ஆழியார், அமராவதி மற்றும் திருமூர்த்தி மீன் பண்ணைகளில் ரூ.77.25 இலட்சம் செலவில் பறவை தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.
- ✶ சென்னை, இராயபுரத்தில் பயிற்சி நிலைய வசதிகளுடன் கூடிய மைய சமையல் கூடம் ஒன்றினை ரூ.3.04 கோடி செலவில் அமைத்து அம்மையத்தில் உடனடி சமையல் மற்றும் உண்பதற்கு உரிய கடல் மீன் உணவுகளை தயாரிக்கும் பணிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மைய சமையல் கூட கட்டடப் பணிகள் மற்றும் தளவாட பொருட்கள், உபகரணங்கள் உட்பட அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு 04.03.2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ சாத்தனூர் மீன்பண்ணையில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ரூ.2.40 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

- ✶ 2017–2018ஆம் நிதியாண்டில் 4,274 விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.2,80,60,900/– வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2018–2019ஆம் நிதியாண்டில் 4,316 விண்ணப்பங்களுக்கு உதவித்தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.3,08,73,050/– வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2018–2019ஆம் நிதியாண்டில் 1,945 விண்ணப்பங்களுக்கு உதவித்தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.2,23,40,400/– வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

முதலாம் ஆண்டு (2017–2018)

- ✶ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்ட இந்தியாவிலுள்ள மீன்வளப் பல்கலைக்கழகங்களின் தரவரிசை அடிப்படையில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே முதலிடத்தினைப் பெற்றுள்ளது (2016–2017).
- ✶ தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளானது புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஐந்தாண்டு கால அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது (2016–2017 முதல் 2020–2021 வரை).
- ✶ தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது புதுடெல்லியில் உள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் 12B அந்தஸ்தை பெற்றுள்ளது.
- ✶ புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு பேரூராட்சியில் ரூ.68.1678 கோடியில் தொடங்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.10.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.
- ✶ மீன்வள முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையம் சென்னையில் ரூ.1.06 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது.
- ✶ "மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்" மற்றும் "மீன் உயிர்தொழில்நுட்பம்" என்ற இரண்டு புதிய முனைவர் பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- ✶ வானவில் தொழில்நுட்ப பூங்கா ரூ.10.30 கோடியில் மாதவரம் பால்பண்ணையில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.11.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- ✶ தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா 01.07.2017 அன்று சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களின் மாளிகையில் நடைபெற்றது.
- ✶ நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்றும் பொன்னேரியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்றும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

✶ 2017–2018ஆம் கல்வியாண்டில் இளநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பிற்கு 146 மாணவர்களும், இளநிலை மீன்வளப் பொறியியல் பட்டிப்படிப்பிற்கு 23 மாணவர்களும், முதுநிலை மீன்வள அறிவியியல் பட்டப்படிப்பிற்கு 37 மாணவர்களும், மீன்வள அறிவியல் முனைவர் பட்டப்படிப்பிற்கு 13 மாணவர்களும், பி.டெக் உயிரியல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பிற்கு 22 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

✶ இளநிலை பட்டப்படிப்பில் 5 சதவீத இருக்கைகள் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு இக்கல்வியாண்டு முதல் சிறப்பு பிரிவின் கீழ் இப்பல்கலைக்கழகத்தில் ஒதுக்கப்பட்டன.

✶ இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.17.58 கோடியானது உயிர் தொழில்நுட்பவியல் துறை, புதுடெல்லி, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், புதுடெல்லி, தமிழ்நாடு புத்தாக்கத் திட்டம் மற்றும் சுற்றுசூழல் துறை, தமிழ்நாடு போன்ற மத்திய மற்றும் மாநில அரசு நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

✶ தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.7.30 கோடியில் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட கல்வி வளாகம், நிருவாக அலுவலகம் மற்றும் இளநிலை மாணவிகளுக்கான தங்கும் விடுதி மற்றும் ரூ.1 கோடியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம், புதுடெல்லி நிதியுதவியுடன் முதுநிலை மாணவர்களுக்கான தங்கும் விடுதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.11.2017 அன்று தொடங்கப்பட்டது.

✶ விவசாயிகளுக்கு தொழில்நுட்பரீதியாக உதவி செய்வதற்கு புதியதாக இரண்டு இயக்குனரகங்கள் மீன்வளர்ப்பு மற்றும் மீன்வளம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் ஆண்டு; (2018–2019)

✶ சென்னையில் உள்ள மாதவரத்தில் ஒரு புதிய மீன் உணவியல் மற்றும் மீன் தொழில்நுட்பவியல் கல்லூரி (சுயநிதி) ஆரம்பிக்கப்பட்டு மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களால் 17.09.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு உள்ளது.

✶ தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக நிருவாகக் கட்டடம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்திலும், தஞ்சாவூரில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நீர்த்தர சோதனை ஆய்வகக் கட்டடமும், சென்னையில் உள்ள மாதவரத்தில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மீன்வளர்ப்போருக்கான பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

✶ புதிய படிப்புகளாக தமிழகத்தில் முதன் முறையாக காஞ்சிபுரம் மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள தொழில்சார் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப மையத்தில் (சுயநிதி) புதிய ஒரு வருட பட்டயப்படிப்பும், சென்னையில் உள்ள ராயபுரத்தில் பல்கலைக்கழக மானிய குழுவின் நிதியுதவியுடன் மூன்று வருட இளங்கலை தொழில்முறை பட்டப்படிப்பும், ஒரு முதுகலை மீன்வள அறிவியல் (மீன் ஊட்டச்சத்து மற்றும் மீன் உணவு தொழில்நுட்பவியல்) பட்டப்படிப்பும் 2018–2019ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் 4ஆவது பட்டமளிப்பு விழா சென்னையில் உள்ள வாணியஞ்சாவடியில் முதுகலை மீன்வள அறிவியல் படிப்பு மையத்தில் 01.03.2018 அன்று நடைபெற்றது.

✶ தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் மையம் ஆனது தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்துடன் 01.04.2018 முதல் இணைக்கப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாட்டில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் “கயலகம்” என்ற மீன் விற்பனை மையம் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது.

✶ மாநில அளவில் ரூ.250 இலட்சங்கள் மதிப்பிட்டில் ஒரு மீன் உணவு மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் சென்னையில் உள்ள வாணியஞ்சாவடியில் உள்ள முதுகலை பட்டப்படிப்பு மையத்தில் துவங்கப்பட்டுள்ளது.

* ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு ஆணையத்தின் நிதியுதவியுடன் "தமிழகத்தில் இராமநாதபுரத்தில் திறந்தவெளி கடற்கரையில் கூண்டுகளில் மீன்வளர்ப்பு" என்ற ஒரு ஆராய்ச்சி திட்டம் ரூ.267.23 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
* தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.350 இலட்சம் நிதியுதவியுடன் "குறைந்த நீர்சுழற்சி முறையில் கொடுவா மீன்வளர்ப்பு மூலம் பண்ணையாளர்களின் வருமானத்தை இரட்டிப்பு செய்தல்" என்ற ஆராய்ச்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் 10 உலகளாவிய மற்றும் நாடாளாவிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மையங்களிடையே மேற்கொண்டு மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் ஆண்டு (2019–2020)

* தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது மீன்வளக் கல்வியில் தேசிய அளவிலும் உலக அளவிலும் நன்மதிப்பை பெற்றுள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் 2019 தரவரிசைப் பட்டியலில் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் 25ஆவது இடத்தையும் தமிழ்நாடு மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் முதலிடத்தையும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.
* இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தரவரிசை அங்கீகாரத்தையும் பல்கலைக்கழக மானியக்குழுவின் 12B அங்கீகாரத்தையும் மீன்வளப் பொறியியல் கல்லூரியானது அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழகத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.
* ஆற்றல் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பொறியியல் கல்லூரி நாகப்பட்டினத்தில் 4 ஆண்டு இளநிலை தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பொறியியல்) பாடப்பிரிவு துவங்கப்பட்டுள்ளது.
* மீன்வளக் கடல்சார் தொழில்நுட்பக் கல்லூரி, தூத்துக்குடியில் 4 ஆண்டு இளநிலை தொழில்நுட்பம் (மீன்வள கடல்சார் தொழில்நுட்பம்) பாடப்பிரிவு துவங்கப்பட்டுள்ளது.
* நான்காண்டு இளநிலை மீன்வள வணிக மேலாண்மை கல்வியினை மீன்வள வணிகக் கல்லூரி, வாணியஞ்சாவடியில் துவங்கப்பட்டுள்ளது.
* மூன்றாண்டு இளநிலை தொழில்கல்வி (மீன்வளர்ப்பியல்) மீன்வளர்ப்பு தொழில்சார் தொழில்நுட்ப நிலையம், முட்டுக்காட்டில் துவங்கப்பட்டுள்ளது.
* மூன்றாண்டு இளநிலை தொழில்கல்வி (மீன்பிடி தொழில்நுட்பம்) படிப்பானது மீன்பிடி தொழில்சார் தொழில்நுட்ப நிலையம், மண்டபம், இராமநாதபுரத்தில் துவங்கப்பட்டுள்ளது.
* மூன்றாண்டு இளநிலை தொழில்கல்வி (நீர்வாழ் உயிரின நல மேலாண்மை) படிப்பானது நீர்வாழ் உயிரின நல மாநில தர பரிந்துரை ஆய்வகம், மாதவரம், சென்னையில் துவங்கப்பட்டுள்ளது.
* மீன்வள பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினத்தில் இரண்டு புதிய முதுநிலை தொழில்நுட்ப படிப்புகள் மீன்வளர்ப்பு பொறியியல் மற்றும் மீன் பதன பொறியியல் பிரிவில் படிப்புகள் துவங்கப்பட்டுள்ளது.
* புதிய முனைவர் பட்டப்படிப்பு (மீன் மருந்தியல் மற்றும் நச்சியல்) மீன்வள பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி, சென்னையில் துவங்கப்பட்டுள்ளது.
* இப்பல்கலைக்கழகத்தின் மூலம் மீன்வள பட்டதாரிகள் உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதும் வேலைவாய்ப்பை பெற்று வருவதால் தமிழ்நாட்டில் இப்பல்கலைக்கழகம் மிகவும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. நம் நாட்டின் பிற மாநிலங்களிலிருந்தும், ஈரான், பூடான், டான்சானியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருவது மிகப்பெரிய சாதனையாக கருதப்படுகிறது.
* இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் நடத்தும் அகில இந்திய முதுநிலை நுழைவுத்தேர்வு தரவரிசையில் இப்பல்கலைக்கழகத்தை சேர்ந்த 14 மாணவர்கள் முக்கிய இடம்பெற்றுள்ளனர். மேலும், தொழில்முறை மீன்வள பட்டதாரிகள் மன்றத்தின் சிறந்த மீன்வள பட்டதாரி விருதினையும் பெற்றுள்ளனர்.
* ஒவ்வொரு ஆண்டும் இளநிலை கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள் வெளிநாட்டு பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். அதன்படி கடந்த ஆண்டு இப்பல்கலைக்கழகத் தேர்வில் முதல்

ஆறு மாணவர்கள் மலேசியாவிலுள்ள மீன்வள நிலையங்கள், மீன்பண்ணைகள், மீன் குஞ்சு பொறிப்பகங்கள், மீன்பதன தொழிற்சாலைகள், மீன் சந்தைகள் மற்றும் மீன்வளக் கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற்றனர்.

- ✶ ஆசிய–பசிபிக் மீன்வளர்ப்பு – 2019 உலகளாவிய மாநாடு மற்றும் வர்த்தக கண்காட்சியானது இப்பல்கலைக்கழகம் மற்றும் உலக மீன்வளர்ப்பு அமைப்பு – ஆசிய – பசிபிக் அத்தியாயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு தலை சிறந்த முறையில் நடத்தப்பட்டது. 70 நாடுகளை சேர்ந்த 3,500 கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

பால்வளத்துறை

- ✶ உலகிலேயே அதிக கறவை மாடுகள் உள்ள நாடு இந்தியா. பால் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

- ✶ தமிழகத்தில் பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றடுக்கு அமைப்பு முறையில் கிராம அளவில் 12,585 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் செயல்படும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமும், மாநில அளவில் ஒரு இணையமும் (தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் – ஆவின்) செயல்பட்டு வரும் நிலையில் தற்போது கூடுதலாக திருப்பூர், நாமக்கல், தூத்துக்குடி, திருவண்ணாமலை, தேனி, கரூர், தருமபுரி மற்றும் கடலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் புதியதாக மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் துவங்கியுள்ளன.

- ✶ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமான இரண்டாவது “வெண்மை புரட்சியை” தமிழகத்தில் உருவாக்குவதன் மூலம் பால் உற்பத்தியை பன் மடங்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்கள், பால் உற்பத்தி தொழிலின் முதுகெலும்பாக உள்ளனர். பால் உற்பத்தியாளர்களுக்கு இடுபொருள் வழங்குதல், கால்நடைத் தீவனம் வழங்குதல், கொள்முதல் செய்யும் பாலுக்கு உரிய விலை வழங்குதல் ஆகியவற்றிற்கு அரசு உதவி அளிப்பதுடன், பால் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவி வருகிறது.

பால் கொள்முதல் சாதனை

- ✶ 2018–2019 ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 33.23 இலட்சம் லிட்டர் பால் என்ற பால் கொள்முதல் அளவு நடப்பு நிதியாண்டில் 2019–2020 நவம்பர் முடிய 33.98 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. 29.10.2018 அன்று ஆவின் வரலாற்றில் அதிகபட்சமாக பால் கொள்முதல் 37.03 இலட்சம் லிட்டர் அளவை எட்டியது. இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு வருமானம் உயர்வதற்கும், நுகர்வோர்களுக்கு தரமான பால் மற்றும் பால்பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிசெய்யவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

பால் விற்பனை சாதனை

- ✶ பால் விற்பனை, பிப்ரவரி 2017இல் நாளொன்றுக்கு 21.02 இலட்சம் லிட்டராக இருந்த நிலையிலிருந்து நவம்பர் 2019இல் நாளொன்றுக்கு 22.62 இலட்சம் லிட்டராக பால் விற்பனை அதிகரித்துள்ளது.
- ✶ ஆவின் நிறுவனம், 08.03.2018 அன்று அதிகபட்சமாக சென்னை மாநகரில், 12.63 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து புதிய இலக்கு அடைந்துள்ளது. அதே போல், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், 2019 ஜூலைத் திங்களில் அதிகபட்ச அளவாக 11.09 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்துள்ளது. 2017–2018இல் சட்டமன்றப் பேரவையில் பால்வளம் (ம) பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி 08.09.2017 அன்று 225 மிலி. ஆவின் பால் பாக்கெட் ரூ.10/–க்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 24.10.2019 அன்று ஆவின் குக்கிஸ் 6 வகைகள், பிரிமியம் தயிர் ரூ.5/–க்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பால் பொருட்கள் விற்பனை

- ✶ ஆவின் பால் பொருட்கள் பிப்ரவரி 2017இல் ரூ.20.43 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. அது, தற்போது நவம்பர் 2017இல் 20 சதவீதம் அதிகரித்து ரூ.24.44 கோடியாக விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டு நவம்பர் 2019 முடிய ரூ.186 கோடிக்கு விற்பனை செய்யபட்டுள்ளது. வருவாய் மற்றும் மதிப்பு கூட்டு பொருட்டு 500 மி.லி. தயிர் பாக்கெட், 1 கிலோ தயிர் பாக்கெட், ரசகுல்லா மற்றும் 4 வகை ஐஸ்கீரிம் ஆகிய புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- ✶ கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை காலங்களில், முட்டை சேர்க்காத பிளம்கேக் விற்பனை போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ✶ கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கிராமப்புறங்களில் 431 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், கல்லூரிகளில் 181 விற்பனை நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

வெளி மாநிலங்களில் பால்பொருட்கள் விற்பனை

- ✶ வெளி மாநிலங்களிலும் ஆவின் பால் பொருட்கள் விற்பனை துவங்கும் அடிப்படையில் ஹரியானா, தெலுங்கானா, மேற்கு வங்காளம், குஜராத், உத்தரகாண்ட், பீஹார் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் மொத்த விற்பனையாளர்கள் (WSD) நியமிக்கப்பட்டு இம்மாநிலங்களில் பால்பவுடர், வெண்ணெய், நெய் மற்றும் டெட்ரா பேக் பால்பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் பிற மாநிலங்களிலும் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்வதற்காக மொத்த விற்பனையாளர்கள் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில் பால்பொருட்கள் விற்பனை

- ✶ வெளிநாடுகளிலும் ஆவின் பால் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளும் நடவடிக்கையாக, சிங்கப்பூரில் 25.11.2017 அன்றும் மற்றும் ஹாங்காங்கில் 17.08.2018 அன்றும் ஆவின் டெட்ரா பேக் பால் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ பால் பொருட்கள் ஏற்றுமதி, ஆவின் வரவாற்றிலே முதன் முறையாக, கடந்த நவம்பர் 2017இல் சிங்கப்பூருக்கு, மூடியுடன் கூடிய ஆவின் டெட்ரா பேக் பால்பாக்கெட்டுகள் ஏற்றுமதி தொடங்கப்பட்டு இதுவரை 3,36,312 லிட்டர் பால் சிங்கப்பூருக்கும் 18,720 லிட்டர் பால் ஹாங்காங்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், கத்தார் நாட்டில் 15,600 லிட்டர் ஆவின் டெட்ரா பேக் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகள்

- ✶ காஞ்சிபுரம், திருச்சி, தருமபுரி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், விழுப்புரம் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் ரூ.3,357 இலட்சம் செலவில் பால்பண்ணைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒன்றியங்களின் கொள்திறன் மற்றும் விற்பனை விரிவாக்க செயல்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய ஐஸ்கிரீம் மற்றும் உயர் வெப்பநிலை நறுமணப்பால் ஆலை

- ✶ மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய வளாகத்தில், ரூ.55 கோடி செலவில் இணைய கட்டுபாட்டில் நாளொன்றுக்கு 20,000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை, ஆணையூரில் ரூ.45 கோடி செலவில், பாலை 25,000 லிட்டர் உயர்வெப்பநிலையில் பதப்படுத்திடும் (UHT) நறுமண பால் உற்பத்தி ஆலைகள் ஆகஸ்டு 2020இல் பயன்பாட்டிற்கு வரும்.

- ஆணையூரில் நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பாலை உயர் வெப்பநிலையில் பதப்படுத்திடும் (UHT) நறுமண பால் உற்பத்தி ஆலைகள் ரூ.45 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.
- மதுரையில் துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் ரூ.63 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு 13.03.2018 அன்று காணொலி காட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- திருவள்ளூர் துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் ரூ.68 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு 12.12.2018 அன்று காணொலி காட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தூத்துக்குடி துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் ரூ.68 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு 01.11.2019 அன்று காணொலி காட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மாநிலம் முழுவதும் ஐஸ்கிரீமை சீராக விநியோகம் செய்ய, ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று புதிய குளிரூட்டப்பட்ட வாகனங்கள் 19.05.2017 அன்று மாண்புமிகு பால் (ம) பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

புதிய அதி நவீன பாலகங்கள்

- மாவட்ட ஒன்றியங்களில் 7 அதிநவீன பாலகங்கள் சென்னையில் 6 அதிநவீன பாலகங்களும் ரூ.778 இலட்சத்தில் அமைக்கப்பட்டு, நுகர்வோர்களுக்கு ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- சென்னை அம்பத்தூரில், பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கின்ற வகையில் ரூ.88 இலட்சம் மதிப்பிலான 3 புதிய குளிரூட்டப்பட்ட வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.
- சிவகங்கை மாவட்டம் மதுரை இராமேஸ்வரம் தேசீய நெடுஞ்சாலை, கோயம்புத்தூர் மாவட்டம் பால்பண்ணை வளாகம் மற்றும் ஈரோடு மாவட்டம் சூரம்பட்டிவலசு ஆகிய மூன்று இடங்களில் ரூ.2.70 கோடி செலவில் மூன்று அதிநவீன பாலகங்கள் காணொலி காட்சி மூலம் 13.03.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

கால்நடைத் தீவன சேமிப்புக் கிடங்கு

- திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.25 இலட்சம் செலவில் 100 மெ.டன் கால்நடைத் தீவன சேமிப்புக் கிடங்கு, 100 மெ.டன் வெண்ணெய் சேமிப்புக் கிடங்கு மற்றும் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்வு அறை ஆகியன ரூ.168 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 29.04.2017 அன்று மாண்புமிகு பால் (ம) பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கால்நடைத் தீவன உற்பத்தி

- ஈரோட்டில் ரூ.20 கோடியே 36 இலட்சம் செலவில் அதி நவீன தானியங்கி தொழில் நுட்ப வசதியுடன் நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன் கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- கால்நடைத் தீவன தொழிற்சாலையில் கடந்த 2016–2017ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 1,891 மெட்ரிக் டன் ஆக இருந்த சராசரி கால்நடைத் தீவன உற்பத்தி, 2018–2019ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 3,365 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.
- இதனால் பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு போதுமான கால்நடைதீவனம் நியாமான விலையில் வழங்கப்பட்டு பயன் பெறுகின்றனர்.

கால்நடைத் தீவன விற்பனை

- 2017–2018இல் கால்நடைத் தீவன விற்பனை மாதம் ஒன்றுக்கு 81,531 மெட்ரிக் டன்னாக இருந்த கால்நடைத் தீவன விற்பனை 2018–2019இல் 91,691 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

நுகர்வோர் நலன்

- ஆவின் நுகர்வோர் சேவையில், மேலும் ஒரு மணிமகுடமாக, தொலைபேசி தகவலின் அடிப்படையில், பால்பொருட்களை இலவசமாக நுகர்வோர்களுக்கு வீட்டிற்கே சென்று விநியோகம் (Door Delivery) செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக, தெற்காசிய விளையாட்டு குடியிருப்பு வளாகத்தில் இந்த "இல்லம் தேடி வரும் ஆவின்" சேவை 04.05.2017 முதல் செயல்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

- பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினருக்கு நேரடி நியமன முறையில் நிரம்பாத பணியிடங்களுக்கு முன்கொணர்வு முறை நீட்டிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2018ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனித பயணத்தை தொடர்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.6 கோடி மானியம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டில் 3,769 ஹஜ் புனித பயணிகளுக்கும், 2019ஆம் ஆண்டில் இதுவரை 4,397 ஹஜ் புனித பயணிகளுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

- 86 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் ரூ.97.85 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளன.

- கிறிஸ்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் ரூ.1 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019ஆம் ஆண்டு முதல் ஜெருசேலம் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கை 500லிருந்து 600ஆக ரூ.20 இலட்சம் கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது. இதில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4,128 கிறிஸ்துவர்கள் இப்புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

- கிறிஸ்துவ தேவாலயங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கும் திட்டம் 2016–2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கென ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 கிறிஸ்துவ தேவலாயங்களுக்கு மானியமாக ரூ.44.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குவதற்கான ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000மும், நகர்ப்புறங்களில் ரூ.60,000மும் என்று இருந்ததை இத்திட்டத்தின் கீழ் அதிக பயனாளிகள் பயனடையும் வகையில் ஆண்டு வருமான உச்சவரம்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளுக்கு ரூ.72,000ஆக உயர்வு.

- 2017–2018ஆம் ஆண்டில், கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.25,000லிருந்து ரூ.72,000ஆக உயர்வு. கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத்

திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.15.28 கோடி செலவில் 2,49,784 கிராமப்புற மாணவியர்களும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.15.88 கோடி செலவில் 2,46,302 கிராமப்புற மாணவியரும் பயனடைந்துள்ளனர்.

* 2017–2018ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.13.07 கோடி செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2019–2020ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.25.07 கோடி மதிப்பீட்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

* 2017–2018ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 7,11,568 மாணவ, மாணவிகளுக்கு ரூ.202.32 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகைகளும். 2018–2019ஆம் ஆண்டில் 9,40,802 மாணவ, மாணவிகளுக்கு ரூ.200.75 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

* 2018–2019ஆம் ஆண்டில் 11ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த 7,39,636 மாணவ / மாணவியருக்கு ரூ.266.83 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

* 2017–2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 17,468 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பயனாளிகளுக்கு ரூ.79.24 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 6,847 சிறுபான்மையினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.34.65 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 14,908 பயனாளிகளுக்கு ரூ.78.70 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 7,708 பயனாளிகளுக்கு ரூ.40.20 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.100 கோடி அளவிற்கு தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமும், ரூ.47 கோடி அளவிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

* வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு, “தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018” இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் “தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம்” அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

* தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு நிருவாக மானியம் ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக 2017–2018ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டது. இந்நிருவாக மானியம் 2019–2020ஆம் ஆண்டில் ரூ.2 கோடியிலிருந்து ரூ.2.5 கோடியாக மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

* பள்ளி வாசல்கள் மற்றும் தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தொகுப்பு நிதி (Corpus Fund) ரூ.3 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது.

* ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட, வயது முதிர்ந்த முஸ்லீம் மகளிர் பயனடையும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.126.78 இலட்சம் அரசால் இணை மானியமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

* வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69% இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தி சமூக நீதி நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

- உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,500 ஆக உயர்வு. 2,600 நபர்கள் பயன்.

- 2017–2018ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த கல்லூரிகளில் பயிலும் 500 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் நகர்ப்புறங்களில் 5 கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்பட்டன. அதேபோன்று, 2018–2019ஆம் ஆண்டில் 5 புதிய கல்லூரி விடுதிகள் 500 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் புதிதாக துவங்கப்பட்டன. 2019–2020ஆம் ஆண்டில் 6 கல்லூரி விடுதிகள் புதிதாக திறக்க நடவடிக்கை. மேலும் 6 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக 2018–2019ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டன. 2019–2020ஆம் ஆண்டில் 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

- 2017–2018ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக உள்ள 226 கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் அவர்களது தனித்திறனை வளர்க்கும் பொருட்டு 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கி 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.251.37 இலட்சம் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்க 2018–2019ஆம் ஆண்டில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தனித் திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி ரூ.170.78 இலட்சம் செலவில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ரூ.755லிருந்து ரூ.900 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.875லிருந்து ரூ.1,000 ஆகவும் 01.06.2017 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

- 2018–2019ஆம் ஆண்டிலிருந்து அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.650லிருந்து ரூ.900ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கான மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.2,000லிருந்து ரூ.3,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் இல்லாத 28 விடுதிகளில் புதிதாக 28 பகுதி நேர துப்புரவு பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 தொகுப்பூதியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் 1,338 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் உள்ளரங்கு விளையாட்டு பொருட்களும், மேலும் போதுமான இடவசதி உள்ள 300 விடுதிகளில் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் ரூ.49.84 இலட்சம் செலவில் 2017–2018ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

- 502 பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் ரூ.5.02 கோடி செலவில் CCTV கேமிராக்கள் பொருத்துவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 2018–2019ஆம் ஆண்டில் விடுதிகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 81 விடுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டிலும் இப்பணிகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 231 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகள் குறித்தும், அவற்றில் கலந்துகொண்டு வெற்றி பெறும் வகையிலும் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டும் ரூ.57.75 கோடி செலவில் புத்தகங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- 2018–2019ஆம் ஆண்டில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள 99 கல்லூரி விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள மாதந்தோறும் வழங்கப்படும் தொகை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- 2018–2019ஆம் ஆண்டில் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் (4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாவும்) தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- 2018–2019ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மனத்திறன் மற்றும் உடல்திறன் வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு 292 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.38.63 இலட்சம் செலவில் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2018–2019ஆம் ஆண்டில் மின்மோட்டார் பொருத்தப்பட்ட 3,000 தையல் இயந்திரங்கள் ரூ.58.40 இலட்சம் கூடுதல் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- மாவட்ட முஸ்லீம் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் உருவாக்கப்பட்டு, ஆரம்பத் தொகையாக ஒரு மாவட்டத்திற்கு 1 இலட்சம் ரூபாய் என நிதி ஒப்பளிப்பு.

- 2018–2019ஆம் ஆண்டில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் இயங்கப் பெறும் சிறுபான்மையினர் பிரிவிற்கு தலா ஒரு உதவியாளர் பணியிடம் தோற்றுவித்து, கணினி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்படும் நிருவாக மானியம் 2018–2019ஆம் ஆண்டிலிருந்து ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- 2018–2019ஆம் ஆண்டில் 21 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.235.28 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளன.

- 2018–2019ஆம் ஆண்டில் 209 விடுதிகளுக்கு தலா ஒரு கூடுதல் பணியிடம் ரூ.415.48 இலட்சம் செலவில் சமையலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் 262 விடுதிகளுக்கு வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் ரூ.41.92 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியரின் வருகையை உறுதி செய்ய ரூ.2.98 கோடி செலவில் பயோமெட்ரிக் கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில், அவசரப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு தற்போது வழங்கப்படுகின்ற முன்பணத்தொகை 15,000 / 20,000 ரூபாயினை 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட மத்திய கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும், மாணவர்களின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாணவர் ஒருவருக்கு 2 இலட்சம் ரூபாய் வரை முதற்கட்டமாக 100 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் 14 விடுதிகளுக்கு ரூ.38 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகளில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேஜையுடன் கூடிய பெஞ்ச்கள் 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் ஆங்கில வழி கல்வி 2019–2020ஆம் ஆண்டில் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 23 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு திறன்மிகு வகுப்பறைகள் 1 கோடியே 5 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 10 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வக உபகரணங்கள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000லிருந்து ரூ.1,00,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 1,074 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும், 1,258 விடுதிகளுக்கு சமையல் பாத்திரங்கள் மற்றும் மரச்சாமான்களும் (Furniture) 6 கோடியே 64 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 230 கல்லூரி விடுதிகள், 60 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் / உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அகன்ற அலைவரிசை வசதியுடன் தொலைபேசி இணைப்பு 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 83 கல்லூரி விடுதிகளுக்கு கட்டில்கள், ரூ.514 இலட்சம் செலவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் 18 மாணவியர் விடுதிகளுக்கும் மற்றும் 46 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் வீதம் மொத்தம் 64 பணியிடங்கள் ரூ.145.92 இலட்சம் செலவில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

வணிகவரித் துறை

- அரசுக்கு மாநில நிதி வருவாய் ஈட்டித்தரும் துறைகளில் வணிகவரித்துறை முக்கியமான ஒன்றாகும். வணிகவரித்துறை 2018–2019ஆம் நிதியாண்டில் ரூ.88,143.81 கோடி மொத்த வரிவசூல் செய்துள்ளது. (இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் பெறப்படும் இழப்பீடு, ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறையான தீர்வு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இடைக்கால தீர்வு ஆகிய வருவாய் உள்ளடக்கியது). இது சென்ற ஆண்டில் (2017–2018) ஈட்டப்பட்ட வருவாயான ரூ.73,825.76 கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ.14,318.02 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டு 19.39 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் (2019–2020) நவம்பர் 2019 வரை ரூ.61,775.24 கோடி மொத்த வருவாய் வசூலிக்கப்பட்டது (இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் பெறப்படும் இழப்பீடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முன்பணம் உள்ளடக்கியது). இது கடந்த ஆண்டில் (2018–2019) நவம்பர் 2018 வரை வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.55,920.33 கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ.5,854.91 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டு, 10.47 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சி விகிதம் நிலையில்லாத பொருளாதார சூழ்நிலையிலும் கூட எட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- சரக்குகள் மற்றும் சேவைவரிச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப் பெறாத பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் மதுபானப் பொருட்கள் விற்பனை மூலம் நடப்பு ஆண்டு 2019–2020இல் நவம்பர் 2019 வரை ரூ.28,135.75 கோடி வரி வசூல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் (2018–2019) ரூ.27,360.75 கோடி வசூலை விட 2.83 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது.
- தமிழகத்திலுள்ள தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட வரி செலுத்துவோரின் கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழகத்தைச் சார்ந்த சில முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான வரிவிலக்கு/ வரிக்குறைப்பு மேற்கொள்வது தொடர்பான கருத்துருக்கள், சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்தில் முன்வைக்கப்பட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக்கூட்டங்களின் போது தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட சீரிய முயற்சிகளின் விளைவாக, 37 சரக்குகள் மற்றும் 10 சேவைகளின் மீதான வரிவிலக்கு / வரிக்குறைப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்ட அமலாக்கத்திற்கு முன்னோடியாக, 30.06.2017 அன்றுள்ள அனைத்து வணிகர்களும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறைக்கு புலம்பெயர வேண்டியிருந்தது. நாட்டிலேயே வணிகர்கள் அனைவரும் எவ்வித சிரமமின்றி சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தகவிற்கு மாறுவதற்கு ஏதுவாக கைபேசி அடிப்படையிலான வசதி அளித்த ஒரே மாநிலம் தமிழகம் தான்.
- தமிழ்நாடு மாதிரி–1 மாநிலமாக இருப்பதால், பின்புல இணையதளங்கள் துறையால் உருவாக்கப்பட்டு வருகிறது. துறை அலுவலர்களுக்கான பின்புலத் தொகுதி உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பின்புலத் தொகுதிக்கான பயிற்சிகள், துறையின் அனைத்து அலுவலர்களுக்கும்

வழங்கப்பட்டு, துறையின் ஏறக்குறைய அனைத்து நடவடிக்கைகளும் இணையதளம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பின்புலத் தொகுதி தொடர்பாக GSTN–ஆல் வெளியிடப்பட்ட அனைத்து பயன்பாட்டு நிரல் இடைமுகங்களும் இத்தொகுதியில் ஒருங்கிணைக்கப்பட்டது. வரிஏய்ப்பு செய்பவர்களை இனம் கண்டுகொள்ள, புள்ளிவிவர பகுப்பாய்வு மூலம் உருவாக்கப்பட்ட வணிக நுண்ணறிவு திறன் கொண்ட நிரலாக்க மென்பொருள் துறையில் தற்போது பயன்படுத்தப்படுகிறது.

* இதுவரை சுமார் 4,95,514 வரிசெலுத்துவோர் வெற்றிகரமாக GSTN தளத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

* சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமுல்படுத்தப்பட்ட பிறகு சுமார் 2,16,269 வரி செலுத்துவோர் GST தளம் மூலம் புதிதாக பதிவு பெற்றுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை மற்றும் ஒப்புதல் ஆகியவை துறையால் பராமரிக்கப்படும் பின்புலதளம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

* ஏறத்தாழ 10,31,850 வரிசெலுத்துவோர் தற்போது GST மின்னணு சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நடைமுறையில் உள்ளனர். இவர்களில் 6,08,725 வரி செலுத்துவோர் மாநில அமைப்புக்கும் 4,23,125 வரி செலுத்துவோர் மத்திய அமைப்புக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

* பிரதிமாதம் சுமார் 5,49,000 வரி செலுத்துவோர் தங்களது மாதாந்திர GSTR-3B நமூனாவை சமர்பித்து உகந்த வரி செலுத்தி வருகின்றனர்.

* மாதம் தோறும் சுமார் ரூ.2,250 கோடி மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST), GST இணையதளம் மூலம் வசூலிக்கப்படுகிறது.

* சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றச் செயலகத்தின் வழிகாட்டுதலின்படி மொத்த வரி செலுத்துவோர்கள் மாநில மற்றும் மத்திய அரசின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனர்.

* சரக்கு மற்றும் சேவை வரிக்குட்பட்ட சரக்குகளின் போக்குவரத்திற்காக மின்னணு வழி ரசீது உருவாக்கிக் கொள்வதற்காக தனியாக வலைதளம் ஒன்று மார்ச் 2018 முதல் உருவாக்கப்பட்டுள்ளது.

* இடைமாநில போக்குவரத்திற்காக மின்னணு வழி ரசீது அமைப்பு 01.04.2018 முதல், மற்றும் உள் மாநில போக்குவரத்திற்காக 02.06.2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

* இதுவரை இந்த தளத்தில் சுமார் 2,95,484 வரி செலுத்துவோர் மற்றும் 2,176 சரக்கு உந்து சேவையாளர்கள் பதிவு பெற்றுள்ளனர்.

* மேலும், சுமார் 3,54,84,345 மின்னணு வழி ரசீதுகள் இடைமாநில போக்குவரத்திற்காகவும் 5,81,52,663 மின்னணு வழி ரசீதுகள் உள் மாநில போக்குவரத்திற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது, இந்த மின்னணு வழி ரசீதுகள் அதிகப்படியாக உருவாக்குவதில், நாட்டில் நான்காவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

* சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கம் மற்றும் பிற மாற்றங்களின் அடிப்படையில் துறையின் தரத்தை மேம்படுத்தி சீரிய முறையில் இயங்குவதற்கு ஏதுவாக, 01.06.2019 முதல் வணிகவரித் துறை மறு சீரமைக்கப்பட்டது.

* சென்னை மற்றும் கோவையில் வாரநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இயங்கும் விவர அறிக்கைகள் மின்னணு தாக்கல் செய்வதற்கு உதவிடும் வழிகாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வரி செலுத்துவோருக்கு எழும் அடிப்படை சிக்கல்கள் மற்றும் விவர அறிக்கை தாக்கல் செய்தல் தொடர்பாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உதவிடும் பொருட்டு வாரம் 7 நாட்களும் 24 மணிநேரமும் இயங்கும் ஒருதொலைபேசி சேவைமையம் சென்னையில் இயங்கி வருகிறது.

* சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவோரால் தாக்கல் செய்யப்பட வேண்டிய விவர அறிக்கைகள் எளிமைப்படுத்தப்பட்டு புதிய வடிவில் 01.04.2020 முதல் அறிமுகப்படுத்தப்படும்.

* தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்திற்கு சிரமமின்றி மாறியது மற்றும் வணிகவரி வருவாயில் இதுவரை அடைந்துள்ள வளர்ச்சி விகிதம் ஆகியவை தமிழ்நாட்டில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

* இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தான் வணிகப்பெருமக்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நலவாரியம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு 15.12.2019 வரை 46,971 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வாரியத்தின் திரட்டு நிதியான ரூ.10 கோடியிலிருந்து வழங்கப்படுகிறது.

* 2018 மற்றும் 2019ஆம் ஆண்டில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் தலைமையிலான குழுவின் பரிந்துரையின் பேரில் தகுதிவாய்ந்த 17 மனுதாரர்களுக்கு

ரூ.15.65 இலட்சத்திற்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 04.03.2017 அன்று சிதம்பரம் மற்றும் வேலூர் ஆகிய 2 இடங்களில் கட்டப்பட்டுள்ள வணிகவரிக் கட்டடங்கள், 08.03.2017 அன்று சிவகங்கை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் மற்றும் வணிகவரி அலுவலர், தேவகோட்டை அலுவலகக் கட்டடம் ஆகிய 2 வணிகவரி கட்டடங்கள், 25.07.2018 அன்று உதவி ஆணையர் (மாவ), கிருஷ்ணகிரி அலுவலக கட்டடம், 14.08.2019 அன்று திருக்கோவிலூர் வணிகவரி அலுவலர் அலுவலக கட்டடம், 19.11.2019 அன்று வடசென்னையில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், திருவள்ளூர் நசரத்பேட்டையில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகக் கட்டடம் மற்றும் நாமக்கல் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் என மொத்தம் 10 வணிகவரிக் கட்டடங்கள் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- ✶ மேலும், ரூ.72,95,568/– செலவில் 12 பழைய கழித்துக் கட்டப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக, புதிதாக வாங்கப்பட்ட 12 புதிய ஈப்பு வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வணிகவரித் துறையின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

- ✶ மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் 12.07.2017 அன்று வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின்போது, 2017–2018ஆம் நிதியாண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, ரூ.29.94 இலட்சம் மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), வாணியம்பாடி அலுவலகத்திற்கு சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், ரூ.23.80 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டடத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மின் தூக்கி வசதி செய்து கொடுத்தல், ரூ.59.89 இலட்சம் மதிப்பீட்டில் வணிகவரித் துறையின் பயன்பாட்டிற்கு பழைய வாகனங்களுக்குப் பதில் புதியதாக 10 பொலிரோ ஈப்புகள் வாங்குதல் மற்றும் ரூ.129.07 இலட்சம் மதிப்பீட்டில் 10 வணிகவரி அலுவலகக்கட்டடங்களில் CCTV கேமராக்கள் பொறுத்துதல் ஆகிய அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு, தற்பொழுது திருநெல்வேலியில் மின்தூக்கி நிறுவும் பணி முடிவடைந்துள்ளது. வாணியம்பாடி அலுவலக சிறப்பு பராமரிப்பு பணியும் முடிவடைந்துள்ளது. பழைய வாகனங்களுக்குப் பதில் புதியதாக 10 பொலிரோ ஈப்புகள் வாகனங்கள் வாங்கப்பட்டு 25.07.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வணிவரித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தும் பணி தொடர்பாக 9 கோட்டங்களில் பணி முடிவு பெற்றுள்ளது.

- ✶ உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் வரி வழக்குகள் ஆகியவற்றில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 2 ஆயிரம் வழக்குகள் முடிக்கப்பட்டன.

- ✶ மேலும், வரித் தொடர்பான வழக்குகள் விரைந்து முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் வரி வழக்குக் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- ✶ குறிப்பாக உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்குகள் முடிவு பெற்றதையொட்டி அது போன்ற வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் முடிவுற்று அரசுக்கு வருவாய் ஈட்டித் தந்துள்ளது.

பதிவுத் துறை

வருவாய்

- ✶ பத்திரப்பதிவுத் துறையில் 2017–2018ஆம் நிதியாண்டில் 22,10,595 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.9121.53 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் நிதி ஆண்டில் 25,73,478 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.11,071.02 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பு 2019–2020 நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரை 17,18,833 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.7,267.71 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

- ✶ வழிகாட்டி மதிப்பு சீரமைக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் ஒருமித்த கருத்தினை பிரதிபலிக்கும் வண்ணமாக 2016 தேர்தல் அறிக்கையில் வழிகாட்டி மதிப்பு சீரமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அதன்படி, 31.05.2017 அன்று நடைபெற்ற மதிப்பீட்டுக்குழு கூட்டத்தில் வழிகாட்டி மதிப்பினை ஒரே சீராக மூன்றில் ஒரு பங்கு (33%) அளவுக்கு குறைப்பதென முடிவு செய்யப்பட்டு 09.06.2017 முதல் அவ்வாறே அமல்படுத்தப்பட்டது. அதே சமயம் வருவாய் சமநிலையினை பேணும் வகையில் சிலவகை ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணம் 4% ஆக அரசால் திருத்தியமைக்கப்பட்டது. அரசின் இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பினை பெற்றுள்ளது.

ஒருங்கிணைந்த இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கம் (Web based Software)

- ✶ ஸ்டார் 2.0 (Star–Simplified and Transparent Administration of Registration) (Go live) எனும் இத்திட்டம் இரண்டு கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முறையே 12.02.2018 அன்றும், 10.12.2018 அன்றும் துவக்கி வைக்கப்பட்டது. நாள் ஒன்றுக்கு 10,000 ஆவணங்கள் வரை பதிவு செய்யப்பட்டு வருகிறது.

பட்டா மாறுதல் படிவம் கணினிவழி வருவாய்த்துறைக்கு அனுப்பும் வசதி (Integration with Revenue Department)

- ✶ பட்டா மாறுதல் படிவம் 6 ஆவணப்பதிவுக்குப்பின் சொத்தின் உரிமையாளரின் புகைப்படத்துடன் பட்டாமாறுதல் படிவம் இணையவழி, வருவாய்த் துறைக்கு உடனுக்குடன் அனுப்பும் வசதி, கிராம புல எண்களைப் பொறுத்து 12.02.2018 அன்றும், சென்னை நகர்ப்புறப் புல எண்களைப் பொறுத்து 14.08.2019 அன்றும் துவக்கி வைக்கப்பட்டது.

மின்னணு பணம் செலுத்தும் முறை (e-Payment)

- ✶ ஒற்றைச்சாளர முறையில் பாரத ஸ்டேட் வங்கி ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு அனைத்து வங்கிகளிலும் (58 வங்கிகள்) மின்னணு பணம் செலுத்தும் முறை 10.12.2018 முதல் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மின்னணு பதிப்பு (e-Stamping)

- ✶ மின்னணு பதிப்பு முறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள 56 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் இதர மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தவும் அதனைத் தொடர்ந்து 5 ஆண்டுகள் பராமரிக்கவும் SHCIL நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டது.

மின் நீதிமன்ற கட்டணம் (e-Court fee)

- ✶ மின் நீதிமன்ற கட்டண முறை குறித்து திருவாளர்கள் SHCIL (Stock Holding Corporation of India Limited) நிறுவனத்தாருடன் பதிவுத்துறைத்தலைவர் அவர்களால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, 20.04.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

சார்பதிவகங்களில் பராமரிக்கப்படும் ஆவண நகல்கள் மற்றும் அட்டவணைகளை இலக்கமயமாக்கல் (Digitization of Documents in Sub Registrar offices)

- ✶ தமிழகத்தில் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் நிரந்தரமாக பராமரிக்கப்பட்டு வரும் ஆவண நகல்களுக்கான தொகுதிகள் மற்றும் அது தொடர்பான அட்டவணை தொகுதிகள் அனைத்தையும் (1865 முதல் 05.07.2009 வரை) இலக்கமயமாக்க அரசால் முடிவு செய்யப்பட்டு அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களால் இலக்கமயமாக்கல் பணி ஆரம்பிக்கப்பட்டு 13.12.2019 வரை சுமார் 39.38 கோடி பக்கங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டுள்ளது.

எளிய முறையில் தொழில் செய்திட

- ✶ தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவனங்கள் இணைப்பு மற்றும் பிரித்தல் காரணமாக உரிமை மாற்றம் செய்யப்படும் அசையா சொத்துக்களுக்கு முத்திரைத் தீர்வை 2 சதவீதமாகவும், பதிவுக் கட்டணம் ரூ.30,000/– ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் பகுதி 1 –2 கையேடுகள் புதுப்பித்து வெளியிடப்பட ஆணையிடப்படுள்ளது.

சங்க பதிவுச் சட்டம் 1975 மற்றும் சீட்டு நிதிச் சட்டம் 1982

- ✶ சங்க பதிவுச்சட்டம் 1975இன் கீழ் கோர்வை செய்யவும், பதிவு செய்யவும் மேலும் சீட்டு நிதிச்சட்டம் 1982இன் கீழ் பதிவு செய்திடவும் STAR 2.0 திட்டத்தின் மூலம் 10.12.2018 முதல் மாநிலம் முழுமைக்கும் கணினிமயமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திருமணப்பதிவுகள்

- ✶ இந்து திருமணம் பதிவுச்சட்டம், 1955, தமிழ்நாடு திருமணப்பதிவுச்சட்டம், 2009, சிறப்பு திருமண பதிவுச் சட்டம் 1954 மற்றும் இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் 1872இன் கீழ் இந்திய கிறிஸ்துவ திருமண வடிப்பின் சான்றிட்ட உண்மை நகல் வழங்குவதற்கும், அதற்கான பதிவு கட்டணங்களை செலுத்துவதற்கும், STAR 2.0 திட்டத்தின் மூலம் 10.12.2018 முதல் கணினிமயமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டடங்கள்

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பதிவுத்துறை தொடர்பான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் பதிவுத்துறையில் வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி 04.03.2017 முதல் இதுவரை 6 சார்பதிவகங்கள், 5 மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளடக்கிய 5 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்களும், தனித்தனியாக 50 சார்பதிவாளர் அலுவலக புதிய கட்டடங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன

❖ ❖ ❖

- மாநிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் 7 சதவீத வட்டி விகிதத்தில் பயிர்க்கடன் வழங்கி வருகின்றன. தமிழக அரசு, பயிர்க்கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி ஊக்கதொகையாக முழு வட்டித் தொகையையும் வழங்குகிறது. இதனால், உரிய காலத்தில் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாய உறுப்பினர்களுக்கு வட்டி எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது.

- கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 16.02.2017 முதல் 07.01.2020 முடிய 34,07,954 விவசாயிகளுக்கு ரூ.22,031.69 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

- உரிய காலத்தில் திருப்பி செலுத்திய விவசாயிகளுக்கு, வட்டி ஊக்கத் தொகையாக ரூ.303.71 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு வருவாய் ஈட்டும் தொழில்கள் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் கடன் வசதி அளித்து வருகின்றன. 2011–2012ஆம் ஆண்டிலிருந்து உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கடன்தாரரிடமிருந்து வட்டி வசூலிக்கப்படுவதில்லை. 16.02.2017 முதல் 30.11.2019 முடிய 23,634 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.109.30 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

- மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 54 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் நிறுவப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

- தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு நீண்ட காலமாக வசூலாகாமல் உள்ள பண்ணை சாராக் கடன் தொகையை வசூல் செய்ய அரசினால் அறிவிக்கப்பட்ட ஒருமுறை கடன் தீர்வு திட்டத்தின் கீழ், 3,265 உறுப்பினர்கள் ரூ.71.49 கோடி கடன் தொகையினை முழுவதுமாக திரும்பச் செலுத்தி ரூ.70.44 கோடிக்கு வட்டி சலுகை பெற்று பயனடைந்துள்ளனர்.

- வேளாண் பெருமக்கள் அவர்களின் விளை பொருட்களை உலர வைத்து தரம் பிரித்து ஆதாய விலையில் விற்க ஏதுவாக தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருச்செங்கோடு (கொங்கணாபுரம் கிளை) ஆகிய 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.77.90 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- வேளாண் பெருமக்கள் மற்றும் வியாபாரிகள் விளைபொருட்களை துல்லியமாக எடைபோட ஏதுவாக கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கணினி எடைமேடை நிறுவப்பட்டுள்ளது.

- சங்க உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு உத்தமப்பாளையம், தேனி (பெரியகுளம் கிளை) காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருச்செங்கோடு, சிதம்பரம் (காட்டுமன்னார்கோவில் கிளை), கெலமங்கலம் (தலைமையகம்), பவானி, நீலகிரி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம், கன்னியாகுமரி, திண்டுக்கல், தாராபுரம், பல்லடம், திருப்பூர், பழனி, ஆகிய 18 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் சின்னகல்ராயன் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில்

ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

- கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, சத்தியமங்கலம் மற்றும் பெருந்துறை ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.58.47 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

- மின்கட்டணத்தை குறைத்திடவும், இயற்கை சூழல் பாதுகாப்போடு போதிய மின்சாரம் பெறவும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம், சுயசேவைப் பிரிவு கட்டடம் மற்றும் பட்டுக்கோட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஆகியவற்றில் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

- மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் 2016–2017ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து விவசாய பெருமக்கள் இலாபம் பெற ஏதுவாக பரமக்குடி, ஊத்தங்கரை, திருமங்கலம், இலால்குடி சிவஞானம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய 5 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மிளகாய் அரவை ஆலை, மஞ்சள் தூள் அரவை ஆலை, பேக்கிங் இயந்திரம், விதை சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் வேங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விதை சுத்திகரிப்பு இயந்திரம் ஆகியவை ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (NADP) 2016–2017இன் கீழ், விவசாயிகள் பயன்பெற கோவில்பட்டி, திருச்செங்கோடு, சிதம்பரம் மற்றும் இலால்குடி சிவஞானம் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், ரூ.156.40 இலட்சம் மதிப்பில் நவீன பருப்பு பதனிடும் அலகுகள் நிறுவிட 100% மானியத்துடன் கூடிய நிதியுதவி அளிக்கப்பட்டு, மேற்கண்ட பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் 2017–2018 இன் கீழ், விவசாய பெருமக்கள் பயன்பெற பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.32.17 இலட்சம் மதிப்பில் தேங்காய் எண்ணெய் பிழியும் இயந்திரம், டியூகாஸ் நிறுவனத்தில் ரூ.24.50 இலட்சம் மதிப்பில் விதை சுத்திகரிக்கும் நிலையம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.49.51 இலட்சம் மதிப்பில், 2 தானியங்கி பேக்கிங் இயந்திரம், எள் தரம் பிரிக்கும் இயந்திரம், மஞ்சள் அரவை இயந்திரம் மற்றும் 5 மின்னணு எடையிடும் இயந்திரங்கள் ஆகியவை நிறுவிட, 100% மானியத்துடன் கூடிய நிதியுதவி அளிக்கப்பட்டு, மேற்கண்ட பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

- மாநில அளவில் வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு உரங்களை ரொக்கத்திற்கு விற்பனை செய்வதுடன், யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் போன்ற உரங்களை பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன.

- 2016–2017ஆம் ஆண்டு முதல் 2019–2020 (நவம்பர் 2019) வரை 14,46,748 மெட்ரிக்டன் இரசாயன உரங்கள் ரூ.2,012.25 கோடி மதிப்பீட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

- வேளாண்மையில் அதிக மகசூல் பெற்றிட தரமான வேளாண் உற்பத்திக்கு தரமான விதைகள் மிகவும் இன்றியமையாததாகும். நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமானசான்று வழங்கப்பட்ட விதைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன.

- 2016–2017ஆம் ஆண்டு முதல் 2019–2020 (நவம்பர் 2019) வரை ரூ.2,250.77 இலட்சம் மதிப்பீட்டில் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த நாமக்கல் மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்குப் புதிதாக

தொழில் கூடத்துடன் கூடிய சொந்த அலுவலகக் கட்டடம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.08.2018 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

- கூட்டுறவு அச்சகங்களின் திறனையும் செயல்பாட்டினையும் மேம்படுத்திட தஞ்சாவூர், இராமநாதபுரம் (இருப்பு காரைக்குடி திருவண்ணாமலை, கடலூர், சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட கூட்டுறவு அச்சகங்கள் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் நவீனபடுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

- உரச் சேமிப்பு வசதியினை மேம்படுத்திடவும், விவசாயிகளின் உரத் தேவையினை பூர்த்தி செய்யும் வகையிலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தலா ரூ.65 இலட்சம் மதிப்பிலான 1,000 மெ.டன் கொள்ளளவிலான இரு உரக் கிடங்குகள் (மொத்த மதிப்பு ரூ.1.30 கோடியில்) முறையே திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்காலிலும், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.12.2018 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016இன் கீழ், 16.02.2017 முதல் 10.12.2019 வரை 4,718 பணியாளர்கள் ரூ.16.49 கோடி செலவில் மருத்துவ உதவி பெற்றுள்ளனர்.

பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு

- கூட்டுறவுகளால் 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (3 நகரும் கடைகள் உட்பட) செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 32 வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- 16.02.2017 முதல் 10.01.2020 வரை 29,642 மெட்ரிக் டன் காய்கறிகள், ரூ.90 கோடியே 84 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அம்மா மருந்தகம்

- 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நான்கு புதிய மருந்தகங்கள் திறக்கப்பட்டன. தமிழகத்தில் மொத்தம் 116 அம்மா மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- இம்மருந்தகங்கள் மூலம் 20% வரை தள்ளுபடி விலையில் 16.02.2017 முதல் 30.11.2019 வரை ரூ.217.97 கோடி மதிப்பிற்கு மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு மருந்தகம்

- தற்போது 172 கூட்டுறவு மருந்தகங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

- இம்மருந்தகங்கள் மூலம் 20% வரை தள்ளுபடி விலையில் 16.02.2017 முதல் 30.11.2019 வரை ரூ.227.34 கோடி மதிப்பிற்கு மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை

- அத்தியாவசியப் பொருட்களின் விலையினை கட்டுப்படுத்துவதில் நுகர்வோர் கூட்டுறவுகள் பெரும்பங்காற்றி வருகின்றன.

- 2016–2017ஆம் ஆண்டில் ரூ.1,495.38 கோடி மதிப்பிற்கும், 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1,507.51

கோடி மதிப்பிற்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் ரூ.1,791.50 கோடி மதிப்பிற்கு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் நவம்பர் 2019 வரை ரூ.1,225.18 கோடி மதிப்பிற்கு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

- ✶ 2016–2017ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் ரூ.3,111.78 கோடி மதிப்பிற்கும், 2017–2018ஆம் ஆண்டில் ரூ.2,905.14 கோடி மதிப்பிற்கும் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களின் சில்லரை விற்பனை செய்துள்ளன.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் ரூ.3,395.71 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் நவம்பர் 2019 வரை அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் ரூ.2,228.99 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

நியாயவிலைக் கடைகள்

- ✶ 32,959 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இவற்றுடன் மண்ணெண்ணெய் விநியோகத்திற்காக 253 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் 1,87,53,323 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன.

புதிய நியாயவிலைக் கடைகள் அமைத்தல்

- ✶ குடும்ப அட்டைதாரர்களின் நலனுக்காக 47 புதிய முழு நேர மற்றும் 210 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்

- ✶ பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அரிசி பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் வழங்கல் அளவில், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக 80,80,531 மெ.டன் விலையில்லா அரிசி, 9,30,167 மெ.டன் சர்க்கரை, 4,10,520 மெ.டன் கோதுமை மற்றும் 4,97,337 கி.லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- ✶ சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களான பாமாயில் 4,46,208 கி.லிட்டர் மற்றும் துவரம் பருப்பு 4,46,521 மெ.டன் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஊட்டி தேயிலை விற்பனையில் கூட்டுறவின் பங்கு

- ✶ 2001ஆம் ஆண்டில் உலக சந்தையில் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், இதனால் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கவும், அவர்கள் விளைவிக்கும் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் “ஊட்டி டீ” தேயிலைத் தூளை விற்பனை செய்யும் திட்டத்தினை 28.08.2001 அன்று துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளை நடத்தும் அனைத்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், கூட்டுறவு சிறப்பங்காடிகள் மற்றும் 32,959 நியாய விலைக் கடைகளில் “ஊட்டி டீ” 6,674 மெ. டன். விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அயோடின் கலந்த உப்பு விற்பனை

- ✶ அயோடின் குறைவு காரணமாக ஏற்படும் முன்கழுத்துக்கழலை நோயை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அயோடின் கலந்த உப்பு கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு 69,314 மெ. டன். விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நியாயவிலைக் கடை கட்டடங்கள்

- ✶ நியாயவிலைக் கடைகளுக்கு புதியதாக 161 முழு நேரம் மற்றும் 91 பகுதி நேர கடைகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அரசு மானியம்

- ✶ பொது விநியோகத்திட்டம் இலாப நோக்குடன் செயல்படுத்தப்படுவது இல்லையென்பதால் பொது

விநியோகத்தை மேற்கொள்ளும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் நட்டத்தை அரசு ஈடு செய்து வருகிறது. இவ்வகையில் நட்டத்தில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு, கடந்த மூன்றாண்டுகளில் ரூ.1,374.36 கோடி அரசு மானியமாக தொடர்புடைய சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டினை முழு கணினிமயமாக்குதல்

- ✶ பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில், உரிய பயனாளிகளுக்கு, முழுமையாக சென்றடைவதனை கண்காணிக்கும் வகையில் நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தொய்வின்றி நகர்வு செய்ய அனைத்து விவரங்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் விற்பனை முனைய கருவிகள் (POS Devices) இணைக்கப்பட்டு அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை கண்காணிக்கப்படுகிறது. அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள், கைபேசி எண்கள் மற்றும் ஆதார் எண்கள் விற்பனை முனைய கருவிகளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பொது விநியோகத் திட்ட களப் பணியாளர்கள் மற்றும் நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு விற்பனை முனைய கருவிகளின் பயன்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.டி.சி (MSTC) மூலம் மின்னணு ஏலம் (e-auction) முறையில் காலிக்கோணிகள் விற்பனை:

- ✶ நியாய விலைக் கடைகளில் சேகரிக்கப்படும் காலிக் கோணிகளை மத்திய அரசின் பொது நிறுவனம் எம்.எஸ்.டி.சி (MSTC) மூலம் மின்னணு ஏலம் (e-auction) முறையில் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டு செப்டம்பர் 2017 முதல் 15,52,47,637 காலிக்கோணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடி
(AMMA MINI COOPERATIVE SUPER MARKET)

- ✶ தனியார் சிறப்பங்காடிகளைக் காட்டிலும், குறைவான விலையில் தரமான பொருட்களை பொதுமக்கள் பெற்று பயனடையும் வகையில், ஆகஸ்டு 2018 முதல் மாநிலம் முழுவதும் 527 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மூலம் சுமார் 300 வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இச்சிறப்பங்காடிகளில் விற்கப்படும் பொருட்கள் அதிகபட்ச சில்லறை

விலையிலிருந்து குறைந்தபட்சம் 5 சதவிகிதம் தள்ளுபடியில் விற்கப்படுகின்றன. 30.11.2019 வரை 10.67 கோடி மதிப்புக்கான பொருட்கள் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல்

பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கல்

- தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்பட்டு, புழக்கத்திலிருந்த காகித குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் (Smart Card) வழங்கப்பட்டுள்ளன. 6,62,89,061 நபர்களின் ஆதார் எண்கள் மின்னணு குடும்ப அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

- பொதுமக்கள் தங்களுடைய நியாய விலைக் கடைகளில் உள்ள அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரத்தை அறிந்து கொள்ள TNePDS செயலி மற்றும் www.tnpds.gov.in இணையதளம் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் வலுவான குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக கட்டணமில்லா தொலைபேசி எண். 1967 மற்றும் 1800 425 5901 தற்போது பயன்பாட்டில் உள்ளன. மேலும், PDS 101 இருப்பு குறித்து அறிந்து கொள்ளவும், PDS 102 நியாய விலைக் கடை வேலை நேரம் பற்றி தெரிந்து கொள்ளவும் மற்றும் PDS 107 பொருட்கள் வழங்காமல் குறுஞ்செய்தி பெறப்படுவது குறித்து 9980904040 என்ற தொலைபேசி எண்ணிற்கு புகார் அளிப்பதற்கான வசதிகள் பயன்பாட்டில் உள்ளன.

- முழு கணினிமயமாக்கியதன் மூலமாக, பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணைய வழி மேற்கொள்ளுதல், அதன் நகர்வினை நிகழ் நேரத்தில் கண்காணித்தல், கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு இருப்பதை உறுதி செய்தல் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களின் உரிம அளவு சரியான முறையில் விநியோகிக்கப்படுவதை கண்காணித்தல் போன்றவற்றோடு தகுதியற்ற குடும்ப அட்டைகள்/ அலகுகள் மற்றும் போலிப் பட்டியலிடுதல் ஆகியவற்றைக் களைய உதவி புரிகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக பகுதிநேர நியாய விலைக் கடைகள் உட்பட அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013இன்படி அத்தியாவசியப் பொருட்கள் உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதால் அனைத்து நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரத்துடன் விரல் ரேகை படிப்பி மற்றும் அச்சு இயந்திரத்தினை (Bio-metric Finger Print Reader and Printer) இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இயற்கை இடர்பாட்டிற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

- வடகிழக்கு பருவ மழையினால் பாதிப்படையும் குடும்பங்களுக்கு அரசின் புயல் / வெள்ள நிவாரண உதவியாக மண்ணெண்ணெய் வழங்கிட ஏதுவாக 2017–2018, 2018–2019, 2019–2020 ஆண்டுகளில் முறையே 840 கி.லி, 504 கி.லி, 336 கி.லி மண்ணெண்ணெய் தமிழக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- மத்திய அரசின் பொது விநியோகத்திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குடும்ப அட்டைதாரர்களின் 100% தேவைக்கு குறைவாக இருப்பினும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று வடகிழக்கு பருவமழைக் காலத்தில் சில தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை இயக்குவதற்கு மண்ணெண்ணெய் அவசியத் தேவை என்பதால், இதனை சிறப்பினமாகக் கருதி தமிழ்நாடு தீயணைப்புத் துறையினருக்கு 2017–2018, 2018–2019, 2019–2020 ஆகிய ஆண்டுகளில் அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான காலத்திற்கு மாதமொன்றிற்கு 1,800 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் 2018இல் ஏற்பட்ட 'கஜா' புயல் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர்,

நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை கடலோர மாவட்டங்கள் பாதிப்படைந்ததால், பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படிருந்த குடும்பங்களுக்கு விலையில்லாமல் 3 லிட்டர் வீதம் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. 3,48,000 லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 1,48,201 குடும்பங்களுக்கு 3,42,603 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது.

கோதுமை

- ✶ தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013–ன்படி மாதம்தோறும் 13,485 மெ.டன் கோதுமையினை மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்கிறது. கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ.7.50 விலையில் வழங்கப்பட்டு வந்தது. அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பப்படி அரிசிக்கு பதிலாக கோதுமையினை கீழ்கண்டவாறு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.
- ✶ சென்னை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி – 10 கிலோ ஒரு குடும்ப அட்டைக்கு, ஒரு மாதத்திற்கு
- ✶ மாவட்ட தலைமையிடங்கள் – 10 கிலோ ஒரு குடும்ப அட்டைக்கு, ஒரு மாதத்திற்கு
- ✶ தலைமையிடங்கள் தவிர பிற இடங்கள் – 5 கிலோ ஒரு குடும்ப அட்டைக்கு, ஒரு மாதத்திற்கு
- ✶ அதன்படி அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது.
- ✶ பிப்ரவரி 2017 முதல் நவம்பர் 2019 வரை 4,53,694 மெ.டன் கோதுமை விலையில்லாமல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னையில் 29 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டன. இதில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 20.06.2013 முதல் 6 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளும், இதர அங்காடிகள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்பட்டு வருகிறது. மேலும் கழகத்தால் 3 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் 26.10.2013 முதல் இயங்கி வருகிறது.
- ✶ தற்பொழுது 7 தற்காலிக கடைகள் சென்னை (வடக்கு) மண்டலத்திலும், 7 நிரந்திர கடைகள் சென்னை (தெற்கு) மண்டலத்திலும் இயங்கி வருகிறது. மேற்கண்ட கடைகளுக்கு தேவைப்படும் காய்கறிகள் TUCS நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளின் மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. பிப்ரவரி 2017 முதல் டிசம்பர் 2019 வரை, ரூ. 63,23,234/– க்கு கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி

- ✶ ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடியினை துவக்க ஆணை பெறப்பட்டது. அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.01.2016 அன்று 54 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளும், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களால் 10.05.2018 அன்று 18 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளும் துவங்கப்பட்டது. தற்பொழுது 30 மாவட்டங்களில் 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி 2017 முதல் நவம்பர் 2019 வரை மளிகை பொருட்கள், பானவகை பொருட்கள் மற்றும் அழகு சாதனப்பொருட்கள் ஆகியவை பொதுமக்களுக்கு ரூ.14.69 கோடிக்கு MRP விலைக்கும் குறைவாக விற்கப்பட்டுள்ளது.

அம்மா உணவகம் – மானிய விலையில் மாநகராட்சிக்கு அரிசி மற்றும் கோதுமை வழங்கல்

- ✶ மாண்புமிகு தமிழக முதல்வரின் மலிவு விலை சிற்றுண்டி திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி மூலம் ஏழை, எளிய மக்களுக்காக சிற்றுண்டி உணவகங்கள் 19.02.2013 அன்று திறக்கப்பட்டது.
- ✶ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் அனைத்து மண்டலங்களுக்கும் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அரிசி மற்றும் கோதுமை சென்னை

மாவட்டத்திலுள்ள அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2017 முதல் நவம்பர் 2019 வரை 24,514.906 மெ.டன் அரிசியும், 4,050.665 மெ.டன் கோதுமையும் மானிய விலையில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல்

- ✶ மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 01.10.2002 முதல் நெல் கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், கே.எம்.எஸ் 2019–2020 கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதலுக்காக மத்திய அரசு வழங்கும் குறைந்த பட்ச ஆதார விலை சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,835/–ம் மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகை ரூ.70/–ம் சேர்த்து ஆக மொத்தம் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,905/– மற்றும் பொதுரகத்திற்கு மத்திய அரசு வழங்கும் குறைந்த பட்ச ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1815/–ம் மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகை ரூ.50/–ம் சேர்த்து ஆக மொத்தம் பொதுரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,865/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ✶ 2016 முதல் 2019 வரை ஆகிய மூன்று கொள்முதல் பருவங்களில் 36.14 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.
- ✶ நடப்பு கொள்முதல் பருவம் 2019–2020இல், 1,700 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டு, 20 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✶ 10.01.2020 வரையில் 469 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 64,275 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- ✶ நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான கிரையத் தொகை வழங்கும் போது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் நோக்கத்தில் ரொக்கத்திற்கு பதிலாக விவசாயிகளின் வங்கி கணக்கில் மின்னணு பரிவர்த்தனை முறை மூலம் வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு கொள்முதல் பருவம் 2015–2016 ஆண்டிலிருந்துநடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ இதன்படி நடப்பு கொள்முதல் பருவம் 2019–2020இல் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்த நெல்லுக்குண்டான கிரையத் தொகையை விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக பெற்று 10.01.2020 முடிய 13,633 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை கண்காணித்தல்

- ✶ அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அரசு விலை கண்காணிப்புக் குழு (Price Monitoring Committee) ஒன்றை அமைத்து அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இக்குழு அவ்வப்பொழுது தேவைப்படும் சமயங்களில் கூடி முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளை கண்காணித்து, அதன் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்திலிருந்து ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதுகாக்கும் பொருட்டு, ஏற்கெனவே செயல்பட்டு வரும் விலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளான அம்மா அமுதம் சிறப்பங்காடிகள், பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள் மற்றும் சிறப்பு பொது விநியோகம் போன்ற திட்டங்கள் அரசினால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- ✶ அனைத்து குடும்ப அட்டைதாரருக்கும் அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் அரிசி மற்றும் கோதுமை இலவசமாக பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலவசமாக வழங்கப்படும் கோதுமை, சென்னை அதன் புறநகர் பகுதிகளில் மற்றும் மாவட்ட தலைமையிடங்களில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 10 கிலோவாகவும், மாவட்டத் தலைமையிடம் அல்லாத மற்ற இடங்களில் 5 கிலோவாகவும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசு

- ✶ தமிழக மக்கள் அனைவரும் 2019ஆம் ஆண்டு, தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்பு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை, 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1,000/– ரொக்கத் தொகை வழங்கிட தமிழக அரசினால் உத்தரவிடப்பட்டது. அதன்படி, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1,000/– ரொக்கத் தொகை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

ரம்ஜான் நோன்பு பச்சரிசி 2019

- ✶ ஜுன் 2019ஆம் மாதத்தில் ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கும் இஸ்லாமிய மக்களுக்கு கஞ்சி தயாரிக்க 5,518.111 மெ.டன் பச்சரிசி 1 கிலோ ரூ.1/– என்ற விலையில் இஸ்லாமிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.

சிறப்பு பொது விநியோகத் திட்டம்

- ✶ துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க மார்ச் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை நீட்டித்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

விருப்ப விண்ணப்பத்தின் அடிப்படையில் சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப அட்டையாக மாற்றம்

- ✶ மாநில பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 31.10.2019 அன்றைய நிலவரப்படி 10,19,491 சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருந்தன. பெரும்பாலான சர்க்கரை குடும்ப அட்டைதாரர்கள் அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்து தர விடுத்த கோரிக்கையினை ஏற்று, சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்ய அனுமதி வழங்கி அரசு உத்தரவிட்டது. இதன்மூலம் 19.11.2019 முதல் 29.11.2019 வரையிலான காலத்தில் 4,51,614 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்யப்பட்டன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு பயனாளிகளுக்கு அரிசி வழங்க மாதமொன்றிற்கு 20,389.820 மெட்ரிக் டன் அரிசி கூடுதலாக தேவைப்படும் என்றும், இதற்கு மாதமொன்றிற்கு ரூ.50,41,38,299/– செலவாகும் என்றும், ஓர் ஆண்டிற்கு ரூ.604,96,59,588/– செலவாகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் அரிசியினை கூடுதலாக பெற்று வழங்கவும், அதற்கான கூடுதல் மானிய செலவினத்தை மேற்கொள்ளவும், நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

❖ ❖ ❖

தமிழக மின் நிலைமை

மின் நிறுவு திறன்

✶ மாநிலத்தின் மொத்த மின் நிறுவு திறன் 31,416 மெகாவாட் ஆகும்.

கூடுதல் மின்நிறுவுதிறன்

✶ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தி திட்டங்களின் பங்கு, மின் கொள்முதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் கடந்த மூன்று வருடங்களில் 2,594 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

காற்றாலை மின் சக்தி

✶ கடந்த மூன்று வருடங்களில் 825 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டு தற்போதைய காற்றாலை மின் உற்பத்தி திறன் 8,503 மெகாவாட் ஆகும். காற்றாலை மின் உற்பத்தி மூலம் இதுவரை இல்லாத அதிகபட்ச அளவிலான 107.317 மில்லியன் யூனிட் மின்சாரம் 19.07.2018 அன்று பெறப்பட்டுள்ளது.

சூரிய மின் சக்தி

✶ கடந்த மூன்று வருடங்களில் 2,339 மெகாவாட் அளவிற்கு சூரிய மின் சக்தி நிறுவு திறன் தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு தற்போதைய சூரிய மின் சக்தி நிறுவு திறன் 3,827 மெகாவாட் ஆகும்.

✶ சூரிய சக்தி மின்சாரம், பகல் பொழுதில் 1,000 முதல் 1,800 மெகாவாட்டளவிற்கு பெறப்படுகிறது. இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக சூரிய சக்தி மின்சாரம் 2,474.5 மெகாவாட் 04.10.2019 அன்றும் மற்றும் 16.623 மில்லியன் யூனிட் 01.10.2019 அன்றும் பெறப்பட்டுள்ளது.

மின்பயனீடு

✶ 03.04.2019 அன்று தமிழ்நாடு உச்சகட்ட மின் தேவையான 16,151 மெகாவாட் அளவையும் மற்றும் 12.04.2019 அன்று உச்ச மின் பயனீட்டளவான 369.94 மில்லியன் யூனிட்டையும் பூர்த்தி செய்துள்ளது.

✶ சென்னை மட்டும் உச்சகட்ட மின் தேவையான 3,738 மெகாவாட் அளவை 18.06.2019 அன்றும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 64.83 மில்லியன் யூனிட்டை 02.06.2017 அன்றும் பூர்த்தி செய்துள்ளது.

மின் தொடரமைப்பு

✶ அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட இருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும்

மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மற்றும் சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும் கடந்த மூன்று வருடங்களில் 257 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 4,333 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதைகள் (EHT) இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

மின் பகிர்மானம்

- ✶ மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மற்றும் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு கடந்த மூன்று வருடங்களில் 9,875 கி.மீ உயரழுத்த மின் பாதைகளும் (HT), 21,211 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகளும் (LT), மற்றும் 40,575 மின்மாற்றிகளும் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 23.35 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு நாள் மின் இணைப்பு திட்டம்

- ✶ இத்திட்டம் 12.06.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தாழ்வழுத்த வீடு மற்றும் வணிக உபயோகத்திற்கான மின் இணைப்பு விண்ணப்பம் பெறப்பட்ட ஒரே நாளில் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், இதுவரையில் 6,85,404 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு புதிய மின் இணைப்பு 7 நாட்களுக்குள் வழங்கும் திட்டம்

- ✶ 112 கிலோவாட் வரையிலான மின் தேவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு புதிய மின் இணைப்பு மற்றும் கூடுதல் மின்பளு அனுமதி 7 நாட்களுக்குள் வழங்கும் திட்டமானது தொழிற்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 15.07.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இது வரையில், 84,559 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- ✶ இதுதவிர, எளிய முறையில் வணிகம் என்ற இலட்சியத்தின் மூலம் தொழிற்துறையை மேலும் விரிவுபடுத்திட 10 மெகாவோல்ட் ஆம்பியர் (MVA) மின் தேவையும் அதற்கு மேலும் அல்லது ரூபாய் 100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்யும் தொழிற்சாலை மற்றும் தொழில் முனைவோருக்கு 24x7 மின்சாரம் பெறுவதற்கான புதிய கொள்கை 05.09.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும் தொழிற்சாலை மற்றும் தொழில் முனைவோருக்கு பிரத்யேக மின்பாதை இலவசமாக அமைத்துத் தரப்படும். தொழில் முனைவோர் நிலம் அளிக்கும் பட்சத்தில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் தகுந்த மின் அழுத்தம் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்படும். இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 05.09.2017 அன்று மஹிந்திரா தொழில் பூங்கா நிறுவனத்துடனும் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முன்னிலையில் 31.10.2017 அன்று ஜி.எம்.ஆர், கிருஷ்ணகிரி சிறப்பு பொருளாதார மண்டல நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

விவசாய மின் இணைப்பு

- ✶ விவசாயத்தின் வளர்ச்சிக்காக, மின்கட்டமைப்பை மேம்படுத்தத் தேவையான தொகையை மட்டும் ஒருமுறை கட்டணமாக பெற்று இலவச விவசாய மின் இணைப்பை ஆறு மாத காலத்திற்குள் விருப்பமுள்ள விவசாயிகளுக்கு வழங்க தட்கல் விரைவுத் திட்டம் 24.06.2017 முதல் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 22,583 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- ✶ விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு 2018–2019 ஆண்டில் 21,302 விவசாய மின் இணைப்புகள் மற்றும் 2019–2020ஆம் ஆண்டில் இதுவரை 14,757 மின் இணைப்புகள் தட்கல் முறையையும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

உஜாலா திட்டம் (UJALA Scheme)

- ✶ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது 9 வாட் எல்.இ.டி. பல்புகள், 20 வாட் எல்.இ.டி. டியூப்லைட்டுகள் மற்றும் 50 வாட் ஐந்து நட்சத்திர குறியீட்டுடன் கூடிய ஆற்றல் மிக்க மின் விசிறிகள் ஆகியவற்றை குறைந்த விலையில் விரும்பும் வீட்டு மின் நுகர்வோருக்கு மின் கட்டண வசூல் மையங்களில் அமைக்கப்பட்ட தனிப்பட்ட வெளிப்புற கடைகள் (Kiosks) மூலம் தமிழகம் முழுவதும் விற்பதற்கு எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்திற்கு (EESL) அனுமதி வழங்கியுள்ளது.

* முதற்கட்டமாக 22.03.2017 அன்று சென்னை மண்டலத்தில் விநியோக முகவர்கள் மூலம் விற்பனை தொடங்கப்பட்டது. தற்போது, இந்த விற்பனை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 26 மின்பகிர்மான வட்டங்களில் நடைபெற்று வருகிறது. இதுவரை, 25.63 இலட்சம் எல்.இ.டி. பல்புகளும், 4.69 இலட்சம் எல்.இ.டி. டியூப் லைட்டுகளும் மற்றும் 1.21 இலட்சம் ஐந்து நட்சத்திர குறியீட்டுடன் கூடிய ஆற்றல்மிக்க மின் விசிறிகளும் விற்கப்பட்டுள்ளன.

* இதுதவிர, கிராம சுயாட்சி இயக்கத்தின் (Grama Swaraj Abhiyan Programme) கீழ் உஜாலா திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,477 கிராமங்களில் எல்.இ.டி. பல்புகள் மானிய விலையில் விற்பனை செய்ய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களால் 14.04.2018 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 5.96 இலட்சம் எல்.இ.டி. பல்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நிதி

* உதய் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ரூ.22,815 கோடி கடனை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.2,882 கோடி வட்டி சேமிப்பும், கடன் திருப்பி செலுத்துதலை தவிர்ப்பதன் மூலம் ரூ.2,282 கோடி பணப் புழக்கத்தில் சேமிப்பும் ஏற்படும். தமிழக அரசு ஏற்றுக்கொண்ட ரூ.22,815 கோடி முழுவதும் மின்வாரியத்திற்கு வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு, கடன் தொகையை திருப்பிச் செலுத்த பயன்படுத்தப்பட்டது.

* தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் ஆண்டிற்கு மொத்த கடனில் 20% மானியமாக மாற்றப்பட்டு, 5 ஆண்டுகளில் சரிசெய்யப்பட வேண்டும். இதுவரையில், ரூ.13,689 கோடி கடன்தொகையை மானியமாக மாற்றப்பட்டுள்ளது.

* நிதி ஆண்டு 2016–2017இன் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வருவாய் இழப்பு ரூ.4,348.76 கோடி ஆகும். உதய் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, நிதி ஆண்டு 2016–2017இன் ஐந்து சதவீத வருவாய் இழப்பு ரூ.217.43 கோடியை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது.

* மேலும், நிதி ஆண்டு 2017–2018இன் ரூ.7,760.78 கோடி வருவாயில் பத்து சதவீத வருவாய் இழப்பு ரூ.776.08 கோடியை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது.

* மேலும், உதய் திட்டத்தின் கீழ், ரூ.7,605 கோடி கடனை மின்வாரியம் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டி திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு ரூ.7,605 கோடிக்கானக் காப்புறுதியை அரசு வழங்கியுள்ளது. இதன்மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.200/– கோடி வட்டி சேமிப்பு ஏற்படும். நிதி திரட்டுவதற்கான கடன் பத்திர மதிப்பீட்டிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கடன் பத்திர மதிப்பீடு முடிந்தபின் கடன் பத்திரங்கள் வெளியிடப்படும்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

இணைப்பு – அ

முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்

* தமிழக அரசு, நாட்டிலேயே மிகப்பெரிய சூரிய மேற்கூரைத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் மாநிலம் முழுவதும் 2011–2012 முதல் 2015–2016 வரையான ஐந்து ஆண்டுகளில் 3,00,000 சூரியசக்தி வீட்டு விளக்குகளுடனான பசுமை வீடுகள் கட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 5 ஆண்டுகளில் 20–30 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் பலகைகள் ரூ.900 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையில் பொருத்தப்படும். இதுதவிர, ரூ.30 கோடி செலவில் 10,000 நெசவாளர்களுக்கான குடியிருப்பில் சூரிய சக்தி வீட்டு விளக்குகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* 67,291 பசுமை வீடுகளிலும், 4,638 நெசவாளர் குடியிருப்புகளிலும் ஆக மொத்தம் 71,929 எண்ணிக்கை கொண்ட சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையிலும், மொத்தம் 2,97,288 எண்ணிக்கை கொண்ட வீடுகளில் சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள்

* அரசு அலுவலகங்களான தமிழ்நாடு சிறு, குறு, தொழில் வளர்ச்சிக் கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர், மத்திய கூட்றவு வங்கி கும்பகோணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் 4 மாவட்ட நீதிமன்ற வளாகங்களில், 781 கி.வாட் கூட்டு திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை மற்றும் சிறிய சூரிய அமைப்புகளை நிறுவும் திட்டம்

* புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை மற்றும் சிறிய சூரிய அமைப்புகளை நிறுவும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, 25 மெகாவாட் திறனுள்ள சூரிய மேற்கூரை அமைப்புகளை நிறுவியுள்ளது.

மின் ஆய்வுத்துறை

2017–2018

* மின் தூக்கிகள் நிறுவுதல், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான முறையில் இயக்குதல் ஆகியவற்றினை முறைப்படுத்த தமிழக அரசால் தமிழ்நாடு மின் தூக்கிகள் சட்டம் 1997ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. தமிழ்நாடு மின் தூக்கிகள் சட்டம் 1997இன் கீழ் நகரும் படிக்கட்டுகள் நிறுவுதல், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான முறையில் உபயோகப்படுத்துதல் குறித்த வரன்முறைகள் ஏதுமில்லை. எனவே, 2017 ஆம் ஆண்டில் இதன் தொடர்பான திருத்தப்பட்ட சட்டம் வெளியிடப்பட்டு அதில் நகரும் மின் படிக்கட்டுகளை ஆய்வு செய்து உரிமம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2018–2019

* 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஆணையம் ஒழுங்குமுறை விதிகளின் கீழ் உயர் மின்னழுத்தம், அதி உயர் மின்னழுத்த மின்னமைப்புகள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்கள் ஆகியவற்றிற்கான மின் வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்து அனுமதி வழங்குதல் ஆகியவற்றிற்கான மென்பொருள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்டது. மேலும், இதன் முன்னோடித் திட்டம் (Pilot Project) தற்போது மின் ஆய்வாளர்/ விருதுநகர் கோட்ட அலுவலகத்தில் 14.08.2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* அரசு பள்ளிகளில் எரிசக்தி சேமிப்பினை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்ட செயல்திட்டமாக நான்கு பள்ளிகளில் பழைய மின்சக்தி சேமிப்பு திறனற்ற 431 மின் விசிறிகள் மற்றும் 599 குழல் விளக்குகளை மாற்றி நட்சத்திரக் குறியீடு உள்ள மின் விசிறிகள் மற்றும் எல்.ஈ.டி (LED) குழல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

* குளிர்சாதனப் பெட்டியினை (AC) 24°C–யில் உபயோகப்படுத்தும்போது 20 சதவிகிதம் மின்சேமிப்பு ஏற்படுகிறது. இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, சுவர் ஒட்டிகள் அச்சிடப்பட்டு தனியார் மற்றும் அரசு கட்டடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* 2010ஆம் ஆண்டு மத்திய மின்சார ஆணையம் ஒழுங்கு முறை விதிகளின் கீழ் உயர் மின்னழுத்தம் மற்றும் அதி உயர் மின்னழுத்த மின்னமைப்புகள் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கான மின் வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்து அனுமதி வழங்குதல் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு வணிக வசதி விதிகள், 2018 (Tamil Nadu Business Facilitation Rules, 2018)–இன் கீழ் தமிழ்நாடு தொழிற் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் (Tamil Nadu Industrial Guidance and Exports Promotion Bureau) வழியாக, மென்பொருள் உருவாக்கப்பட்டது. ஒற்றைச்சாளரம் மூலம் (Single Window) மேற்கண்ட சேவைகளை இணையதளம் வழியாக 5 நாட்கள் மற்றும் 7 நாட்களில் மின் ஆய்வுத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2019–2020ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு அறிவிப்புகள்

* அரசு தர நிர்ணய ஆய்வுக்கூடத்திலுள்ள சோதனைக் கருவிகளின் தரத்தினை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதற்காக நவீன தொழிற்நுட்ப சோதனைக்கருவிகள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய தற்போது அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

வனத்துறை

திட்டப் பணிகள்

✶ மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின்கீழ், 31 மாவட்டங்களில் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. வனத்துறையின் மூலம் 5 இலட்சம் மரக்கன்றுகளும், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை மூலம் 64 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டில் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதனை இலக்காக கொண்டு இத்திட்டம் தொடரப்பட்டுள்ளது. வனத்துறையின் மூலம் 7 இலட்சம் மரக்கன்றுகளும், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை மூலம் 63 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

✶ சென்னை மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் வார்தா புயலினால் ஏற்பட்ட சேதங்களை ஈடுகட்டவும் பசுமைப் போர்வையினை அதிகப்படுத்தவும் ஒப்புதல் பெறப்பட்டு ரூ.15.14 கோடி மதிப்பீட்டில் 2.70 இலட்சம் மரக் கன்றுகள் நடவு செய்யபட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தில், தனியார் நிலங்களில் மரம் நடும் தொகுப்பின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.34.61 கோடி செலவில் 93.62 இலட்சம் மரக்கன்றுகள் மற்றும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.43.79 கோடி செலவில் 112.85 இலட்சம் மரக்கன்றுகளும் விவசாய நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளது.

✶ நகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு 4 இலட்சம் மரக்கன்றுகள் மானிய விலையில் வழங்குவதற்கு ரூ.36 இலட்சம் ஒப்புதல்.

✶ தமிழ்நாட்டில் மரம் சாரா காடு படுபொருட்கள் செறிவூட்டும் திட்டம் 2017–2018 முதல் 2023–2024 வரையிலான ஏழு வருடத்திற்கு ரூ.314.71 இலட்சம் செலவில் செயல்படுத்த ஒப்புதல்.

✶ தடிமரம் வளங்களை அதிகரிக்கும் விதமாக தமிழ்நாட்டின் படுகை நிலங்களில் தேக்குமரத் தோட்டங்கள் அமைக்கின்ற திட்டத்தினை 8 ஆண்டுகளுக்கு 6,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.52.64 கோடி செலவில் செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.8.38 கோடி மதிப்பீட்டில் 2,314 ஹெக்டேர் பரப்பளவில் 4,62,800 தேக்குமரக் கன்றுகள் நடவு செய்யபட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

✶ இயற்கையாகவே வளரும் காப்புக்காடு பகுதிகளில் சந்தனமரம் வளர்க்கும் திட்டத்தில் 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் ரூ.8.9452 கோடி

மதிப்பீட்டில் 7.10 இலட்சம் சந்தன மரக்கன்றுகள் நடவு செய்து செயல்படுத்தப் பட்டுள்ளது.

✶ காடு வளர்ப்பு நடவடிக்கைகளில் மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் காரணமாக, பாரம்பரிய வனப் பகுதிகளின் உள் மற்றும் வெளிப்புறங்களில் உள்ள, பதிவு செய்யப்பட்ட வனம் மற்றும் மரப்போர்வை பரப்பளவு 2017ஆம் ஆண்டில் 26,281 சதுர கிலோ மீட்டரிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 26,364 சதுர கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது.

✶ வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் அளித்தல் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.24.58 கோடி மதிப்பீட்டில், செயல்படுத்தப்படுகிறது. 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில், 29 கசிவுநீர்க் குட்டைகள், 57 தடுப்பணைகள் மற்றும் 2,350 கி.மீ. வெட்டுக்கல் தடுப்பணைகள் போன்ற நீர்சேகர கட்டமைப்புகள் ரூ.14.06 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

✶ சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மூலிகைச் செடிகள் வளர்ப்பதன் மூலம் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2017–2018, 2018–2019ஆம் ஆண்டில் ரூ.44.13 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டில் வனத்தீ தடுப்பு மற்றும் மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த ரூ.291 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு ரூ.166.27 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டில் தொலைத் தொடர் முறை அமைப்பிலிருந்து மின்னனு முறை கம்பியில்லாத் தொலைத்தொடர்பு வசதிகளை ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ வேளச்சேரியில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் வனத்துறை தலைமையிடக் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா 2018–2019ஆம் ஆண்டு நடைபெற்று கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

✶ உயிர்ப்பன்மையினை மேம்படுத்துதல், நெருக்கமாக செடிகள் நடுதல் மற்றும் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பசுமைப்படலம் உருவாக்குதல் போன்ற பணிகள் மூலம் நன்மங்கலம் காப்புக்காடு பகுதியில் 18 ஹெக்டேர் பரப்பில் சூழலியல் மீட்புப் பணிகள் ரூ.250 இலட்சம் செலவில் 2018–2019 முதல் 2022–2023 முடிய மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்து. 2018–2019ஆம் ஆண்டு ரூ.80.74 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ வன விரிவாக்க மையங்களை நவீனப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் விவசாயிகள், வனப்பணியாளர்கள், தொழிலதிபர்களுடன் கலந்துரையாடல்கள் ரூ.2.40 கோடி செலவில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ நீர்ப்பாதுகாப்பு மற்றும் நீர்ப்பிடிப்பு முகடுகளில் நீர்வள மேம்பாடு ஆகியவற்றினை உறுதி செய்யும் நோக்கத்தில், தமிழ்நாட்டிலுள்ள பாலாறு ஆற்றிற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.1,302.07 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்து.

✶ காஞ்சிபுரம் மாவட்டம் தண்டரை மற்றும் புல்லேரியில் அமைந்துள்ள மருத்துவ குணமுள்ள தோட்டங்களில் உள்கட்டமைப்பு வசதி ரூ.3.34 கோடி செலவில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ திண்டுக்கல் சிறுமலையில் ரூ.5 கோடி செலவில் பல்லுயிர் பூங்கா அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ தேசியப் பருவநிலை மாற்றத் தழுவல் நிதியின் (National Adaptation Fund for Climate Change) கீழ், மத்திய அரசின் நிதியுதவியுடன், பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களை மீட்டெடுக்க, 695 ஹெக்டேர் சதுப்புநிலத்தில் 'பள்ளிக்கரணை சுற்றுச்சூழல் மீட்புத் திட்டத்தினை' 165.68 கோடி ரூபாய் செலவில் 2018–2019ஆம் ஆண்டு முதல் 2022–2023ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நிருவாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

வனப்பாதுகாப்பு

✶ நீலகிரியிலுள்ள கூடலூர் ஜென்மம் நிலங்களில் வனம் மற்றும் உயிர்ப்பன்மையினை பாதுகாப்பதற்கு அரசு முன்னுரிமை வழங்கி வருகிறது. கூடலூர் ஜென்மம்

எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டம், 1969, பிரிவு 53ன் கீழ் 12,117.27 ஹெக்டேர் (29942.43 ஏக்கர்) நிலம் அறிவிக்கை செய்யப்பட்டு, வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டம், 1969, பிரிவு 53ன் கீழ் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட 12,117.27 ஹெக்டேர் (29,942.43 ஏக்கர்) நிலங்களின் பாதுகாப்பினை அதிகரிக்க தமிழ்நாடு வனச்சட்டம், 1882இன் கீழ் (தமிழ்நாடு வனச்சட்டம் – ஏ 1882), பிரிவு 16 ஏ–வினை ஏற்படுத்தி காப்பு காடுகளாக அறிவிக்கை செய்து 2019ஆம் ஆண்டில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள காப்புகாடுகளை ஆக்கிரமிப்பு மற்றும் குப்பைகள் கொட்டுவதிலிருந்து பாதுகாக்க கான்கீரிட் சுவர் மற்றும் உயிர் வேலி 2019–2020ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ரூ.25 கோடி செலவில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ களத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காட்டுத் தீயினை கட்டுப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக அத்தீயில் சிக்கிக் கொள்ளும் மக்களை மீட்க சிறப்புப் பயிற்சி மற்றும் அடிப்படை உபகரணங்கள் வழங்கவும் 164.84 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ வனத்துறையின் பராமரிப்பின் கீழ், வரும் மரக்கிடங்குகள், சோதனைச் சாவடிகள், அலுவலகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் ரூ.1.03 கோடி செலவில் பொருத்தப்பட்டு வனப்பாதுகாப்பினை பலப்படுத்துத ஆணை வழங்கப்பட்டுள்ளது.

✶ முன்நிலை வனத்துறை களப்பணியாளர்களின் குடியிருப்புகளுக்கு சிறப்பு பராமரிப்புப் பணிகள் ரூ.30 கோடி செலவில் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது.

✶ 2019–2020ஆம் ஆண்டில், தொலைவான பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த 576.972 கி.மீ. நீளமுள்ள 107 வனச்சாலைகளில் ரூ.57.53 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வன நிர்வாகம்

✶ பழங்குடியின மக்களின் பாரம்பரிய அறிவு மற்றும் யானைகளை மேலாண்மை செய்யும் நுணுக்கம் மற்றும் திறமைகளை அங்கீகரிக்கும் விதமாக 29 காவடி தினக்கூலி பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் துறையில் பணியமர்த்த அரசு ஆணை.

✶ வேட்டைத் தடுப்புக் காவலர்களின் மாதாந்திர தொகுப்பூதியத்தினை ரூ.10,000/–லிருந்து ரூ.12,500/– ஆக உயர்த்தி ஆணை.

✶ வனப்பாதுகாப்பினை மேம்படுத்த வனச் சரகங்களுக்கு 125 ஈப்புகள் ரூ.9.24 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

* ஒட்டுமொத்த மாநிலத்தின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழக வனத்துறையில் இரண்டு இடங்களில் (வைகை அணை தேனி மற்றும் கோயம்புத்தூர்) ரூ.50 இலட்சம் செலவில் பணியிட மறுபகிர்வு மூலம் உயர் அடுக்கு குழு ஏற்படுத்த ஆணை.

* திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் உள்ள வனப் பள்ளிகளில் நவீன வசதியுடன் கூடிய வகுப்பறைகள் ரூ.15.24 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு வனத்துறையில் 30 வயதுக்கு மேற்பட்ட வனப்பணியாளர்களுக்கு ஆண்டு இலவச உடல் பரிசோதனை செய்து கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

* களப்பணியாளர்கள் நிலையில் ஆட்கள் பற்றாக்குறையினை போக்குவதற்கு 2018ஆம் ஆண்டில் 300 வனவர்கள் மற்றும் 726 வனக் காப்பாளர்கள் மற்றும் 61 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும், 2019ஆம் ஆண்டில் 564 வனக்காவலர்கள் பணியிடங்களை இணைய வழி தேர்வு வாயிலாக நிரப்ப அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதில் 99 பணியிடங்கள் குறிப்பிட்ட 18 மாவட்ட வாழ் பழங்குடியின வகுப்பு இளைஞர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது.

வன உயிரின மேலாண்மை

* வண்டலூரில் மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

* மாநில வனக் கொள்கை 2018 மற்றும் தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை 2017 ஆகியன மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

* வனஉயிரின மற்றும் மனித மோதல்களை தடுக்கவும் வனங்களில் தீவனம் உற்பத்தி செய்வதற்காக ரூ.32.60 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* வனங்களின் பாதுகாப்பு மற்றும் மனித–யானை மோதல்களினால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க கோயம்புத்தூர் மற்றும் கூடலூர் ஆகிய கோட்டங்களில் அதிவிரைவு குழுக்கள் ரூ.162.48 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

* வன உயிரின மோதல்களினால் உயிரிழக்க நேரிடும் வனப்பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கடந்த மூன்று வருடங்களில் வன உயிரினங்களினால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டு தொகையான ரூ.1,337.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* வன விலங்குகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், 2017–2018ஆம் ஆண்டில் காப்புக்காடுகளிலும், புலிகள் காப்பகங்களிலும் 60 இடங்களில் ரூ.3 கோடி செலவில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் இப்பணிகளை ரூ.3 கோடி செலவில் 60 இடங்களில் தொடர்ந்து மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* மாவட்ட அளவிலான ஈரநில மேலாண்மைக்குழு ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது.

* பல்லுயிர்ப் பரவல் சட்டம் 2007, உட்பிரிவு 22இன்படியும் (மத்திய சட்டம் 2003 உட்பிரிவு 18இன்படியும்) தமிழ்நாடு பல்லுயிர் பரவல் விதிகள் 2017 உருவாக்கப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

* ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லை பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியின மக்களின் கலாச்சார கிராமம் அமைக்க ரூ.7 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டு 2018–2019ஆம் ஆண்டில் முன்னோடிப்பணிகள் ரூ.3.87 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வண்ண மலர் அரங்கம் (Orchidarium) ரூ.44 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ வனவிலங்குகள் வெளியே வருவதை தடுக்கும் பொருட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி எல்லைகளில் கம்பிக்கயிறு வேலி அமைக்கும் திட்டம் ரூ.2.21 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ காட்டு யானைகளால் ஏற்படும் பயிர் சேதங்களை தடுப்பதற்கும், மனித–யானை மோதல்களினை தணிக்கவும், புதிய முறையாக, தேன் கூடுகள் மூலம் வேலி அமைக்க ரூ.1.15 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் சூழல் சுற்றுலாவிற்கு சூரிய மின்சக்தி மூலம் இயங்கும் படகுகளை அமைத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பரப்புதலுக்காக ரூ.75.89 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் நீர் மேலாண்மை மேம்படுத்துவதற்கு ரூ.27.46 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள மலைப்பாங்கான புல்வெளி நிலங்களின் மீது நீண்ட கால கூர்ந்தாய்வு ரூ.10.78 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ அமிர்தி சிறு உயிரியல் பூங்காவில் சுற்றுச்சூழல் அமைப்புடன் கூடிய உணவகம் ரூ.10 இலட்சம் மற்றும் முதலைகளுக்கான புதிய விலங்குக்கூடம் ரூ.15 இலட்சம் செலவில் அமைக்க ஒப்புதல்.

✶ கிண்டி சிறுவர் பூங்காவில் தற்போதுள்ள 4 விலங்குக் கூடங்களை ரூ.40 இலட்சம் செலவில் புதுப்பிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட (RO Water) குடிநீர் வழங்கும் வசதி ரூ.25 இலட்சம் மற்றும் இறக்கும் வன உயிரினங்களை எரியூட்டுவதற்கு "நவீன மின் எரியூட்டு வசதி" ரூ.20 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஒப்புதல்.

✶ தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினப்பகுதிகளில் (மலையேற்றத்திற்கான ஒழுங்குமுறை) விதிகள், 2018 உருவாக்கப்பட்டது.

✶ கலைநயம் மிக்க கருத்து விளக்கக்கூடத்துடன் கூடிய சிறு கூட்ட அரங்கம் மூன்று புலிகள் காப்பகங்களில் (களக்காடு முண்டந்துறை, ஆனைமலை மற்றும் சத்தியமங்கலம்) ரூ.9 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம் ரூ.2 கோடி செலவில் அமைக்க ஒப்புதல்.

* கோயம்புத்தூரில் மனித வாழிடங்களைச் சுற்றிலும் யானைகளின் நடமாட்டத்தை நிகழ் நேரமாக கண்காணிக்க தொலை உணர்வு கருவிகள் மூலம் மனித–யானை மோதல்களுக்கான முன்னெச்சரிக்கை அமைப்பு ரூ.7.24 கோடி செலவில் ஏற்படுத்த ஒப்புதல்.

* புலிகள் பாதுகாப்பில் ''சிறந்த மேலாண்மைக்கான'' விருது சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு வழங்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு புலிகள் எண்ணிக்கை கணக்கெடுப்பு விவரத்தை வெளியிடும்போது இதற்கான விருதினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடமிருந்து சத்தியமங்கலம் புலிகள் காப்பக தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் பெற்றுக்கொண்டார்.

* வண்டலூரில் அமைந்துள்ள உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவனத்தில் உலகத்தரம் வாய்ந்த வன உயிரினக்கல்வி மற்றும் விடுதி வசதி ரூ.8.35 கோடி செலவில் ஏற்படுத்த ஒப்புதல்.

வன ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

* திசு வளர்ப்பு தொழில்நுட்பம் மூலம் தேவைப்படும் சந்தனமர ஒட்டுச் செடிகளை பெருமளவில் உற்பத்தி செய்யும் முறையினை வனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவு தரப்படுத்தியுள்ளது.

* மரம் வளர்ந்துள்ள இடம் வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படும் நிலையில், மரத்தினை வெட்டுவதற்குப் பதில், இடம் மாற்றி நடுவதற்கான இயந்திரங்கள் மற்றும் திறனை ஆராய்ச்சிப் பிரிவு பெற்றுள்ளது.

* மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வளர்ந்து வரும் 300 வகையான மரத்தாவர வகைகள் ஓரிடத்தில் வளர்க்கப்பட்டு மரபியல் வளங்கள் கொண்ட மரப்பூங்கா 16.08.2018 அன்று பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது .

* வனப்பணியாளர்களிடையே விளையாட்டினை ஊக்குவிக்கும் விதத்தில், கோயம்புத்தூர் தமிழ்நாடு வன உயர் பயிற்சிக் கழகத்தில் ரூ.85 லட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* நாவல் பழக்கொட்டையிலிருந்து நீரிழிவு எதிர்ப்பு மருந்து தாவர ஆராய்ச்சி திட்டம் ரூ.18 இலட்சம் செலவில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* மரபியலுக்காக கடுக்காயிலிருந்து மூலக்கூறு குறிப்பான்களை உருவாக்குதல் மற்றும் தாவர வேதிப்பொருள்சார் குறிப்பான்களின் உதவியுடன் உயர்தர உருவங்களை தேர்வு செய்யும் திட்டம் ரூ.39 இலட்சம் செலவில் செயல்படுத்த ஒப்புதல்.

* கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர் பயிற்சியகம் மற்றும் வைகை அணையிலுள்ள வனவியல் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை ரூ.15.74 கோடி செலவில் மேம்படுத்தி நவீனப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* 339 காடுகள் மற்றும் மரங்களையும், மாநிலத்தின் வளமான பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கும் தமிழ்நாடு வனத்துறை ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

* தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 4,50,099 மெட்ரிக் டன் கூழ்மரம் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு இதன் மூலம் ரூ.18,844 இலட்சங்கள் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

* 7,208 ஹெக்டரில் தைல கூழ்மரத் தோட்டங்கள், குளோனல் கன்றுகள் மற்றும் விதைகள் மூலம் நடப்பட்டும், மேலும், 2,063 ஹெக்டேர் பரப்பில் உயர்ரக ஒட்டு முந்திரி கன்றுகள் மூலம் முந்திரி தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

* கடந்த 01.04.2017 முதல் 30.11.2019 வரை இக்கழகத்தின் மொத்த வருவாய் ரூ.24,967.89 இலட்சங்கள் மற்றும் செலவீனம் ரூ.20,558.57 இலட்சங்கள் செய்து நிகர இலாபமாக ரூ.4,409.32 இலட்சங்கள் கிடைக்கப் பெற்றது.

* தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முந்திரித் தோட்டங்கள் பொது ஏலம் மற்றும் டெண்டர் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாயாக ரூ.2,718.55 இலட்சங்கள் 01.04.2017 முதல் 30.11.2019 வரை கிடைக்கப் பெற்றுள்ளது.

* தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், அதனுடைய பங்குதாரர்களுக்கு (அரசிற்கு) ஆதாய பங்களிப்பை 2017–2018 முதல் 2018–2019ஆம் ஆண்டு வரை பங்களிப்பாக ரூ.1,172.15 இலட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் ஆதாய பங்களிப்பாக ரூ.761.13 இலட்சம் அரசுக்கு செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

* டேன்டீ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது தென்னிந்தியாவில் மிகப்பெரிய தேயிலை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் தயாரிக்கப்படும் டேன்டீ தேயிலைத் தூள் தூய்மைக்கும், கலப்படமற்ற தன்மைக்கும் உத்தரவாதமாக கருதப்படுகிறது. இக்கழகத்தின் மொத்த உற்பத்தியில் 98 சதவிகிதம் தேயிலைத்தூள் கோச்சி, கோவை மற்றும் குன்னூரிலுள்ள பொது ஏல விற்பனை மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 2 சதவிகிதம் சில்லறை விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தேயிலைத்தூள் சில்லறை விற்பனையின் செயல்பாடுகள்.

* சுற்றுலா மையங்களான உதகை தாவரவியல் பூங்கா மற்றும் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் இக்கழகத்தின் தேயிலைத்தூள் விற்பனை மையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கூட்டுறவு அங்காடிகளில் டேன்டீ தேயிலைத்தூள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

* வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை பட்டாம்பூச்சி பூங்கா, வண்டலூர் கிண்டி சிறுவர் பூங்கா, சிட்கோ, கிண்டி, தலைமை செயலகம், மயிலாப்பூர் கோவில், ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, மகாத்மா காந்தி அரசு மருத்துவமனை, ஆட்சியாளர் அலுவலகம், மதுரை மற்றும் கோவை, பேருந்து நிலையம், மதுரை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கோவை ஆகிய இடங்களில் டேன்டீ விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* இராணுவத்துறை, குன்னூர், தமிழ்நாடு போக்குவரத்துக்கழகம், சேலம், மதுரை, நெய்வெலி நிலக்கரி, தொழிற்சாலை, சேலம் எஃகு ஆலை ஆகிய நிறுவனங்களுக்கு டேன்டீ தேயிலைத்தூள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

* மத்திய சிறைச்சாலை, பெண்களுக்கான சிறப்பு சிறைச்சாலை மற்றும் புதுக்கோட்டை போர்ஸ்டல் பள்ளிகளுக்கு டேன்டீ தேயிலைத்தூள் கொள்முதல் செய்வதற்கு ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

✶ அரசு துறைகளான தபால்துறை, காவல்துறை, இராணுவத்துறை, மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு டேன்டீ தேயிலைதூளை வாங்குவதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு வனத்துறை பயிற்சி கலைக்கூடம் மற்றும் தங்கும் விடுதிகளுக்கும் டேன்டீ தேயிலைதூளை வாங்குவதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

✶ கூடலூரில் நறுமணப் பொருள் கண்காட்சி (Spices show) கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி உதகையில் மலர்கண்காட்சி, குன்னூரில் பழக்கண்காட்சி, மற்றும் இதர கண்காட்சிகளில் டேன்டீ கலந்துகொண்டு டேன்டீ தேயிலைத்தூளை விற்பனை செய்து வருகிறது.

✶ 2016ஆம் ஆண்டு இக்கழகம் (Poverty reduction and Gender equality) ஆகிய பிரிவுகளில் ஸ்காட்ச் விருது பெற்றுள்ளது.

✶ இக்கழகம் 168 சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் 24 மாவட்ட மொத்த விற்பனையாளர்கள் 2 மண்டல விற்பனை முகமையாளர்களை நியமித்து சில்லறை விற்பனை மேற்கோள்ளப்படுகிறது.

✶ இக்கழகத்தின் சில்லறை விற்பனையை அதிகரிப்பதற்கான வழிவகைகள் சீரிய முறையில் மேற்கோள்ளப்படும்.

அரசு இரப்பர் கழகம்

✶ இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 240 குடும்பங்களுடன் சுமார் 1,500 ஏழை குடும்பங்களுக்கு ரப்பர் தொழிலில் பயனுள்ள வகையில் வேலைவாய்ப்பு தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

✶ அரசு ரப்பர் கழகம் தொழிலாளர்களுக்கு அதிகபட்ச கூலியை வழங்கி வருகிறது. தினக்கூலியாக பால்வெட்டு தொழிலாளர்களுக்கு ரூ.481.56 வழங்கி வருகிறது.

✶ தொழிலாளர்களின் தினசரி சம்பளமானது நாள் ஒன்றுக்கு ரூ.23/– உயர்த்தப்பட்டு அதற்குரிய நிலுவைத் தொகைகள் ரூ.1.11 கோடி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

✶ அரசு ரப்பர் கழகம் புதிய ஐ.எஸ்.ஓ. 9001 : 2015 தரச்சான்றினை பெற்றுள்ளது.

✶ பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு அரசு ரப்பர் கழகம் ரூ.783.87 இலட்சம் போனஸ் வழங்கியுள்ளது.

✶ 422.521 ஹெக்டேரில் வீரிய ரக ரப்பர் கன்றுகள் மறு நடவு செய்யப்பட்டு புதிய தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

✶ முதிர்ந்த ரப்பர் மரங்கள் விற்பனை செய்யப்பட்டதின் மூலம் ரூ.28.88 கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

✶ ஒக்கி புயலினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டு வர கழகத்தினால் போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

✶ முதிர்ந்த ரப்பர் மரங்கள் வெட்டி அப்புறப்படுத்தப் பட்டதால் ஏற்பட்ட ரப்பர் உற்பத்தி குறைவினால் இரண்டு தொழிற்கூடங்களுக்கு பதிலாக தற்போது ஒரு தொழிற்கூடத்தில் (கீரிப்பாறை தொழிற்கூடம்) அனைத்து விளைபொருட்களும் கொண்டு வரப்பட்டு பதப்படுத்ததப்பட்டு வருவதால் செலவினை குறைப்பதுடன் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

✶ களத்தில் மேற்கொண்ட மறு சீரமைப்பின்படி 5 கோட்டங்களாக இருந்தது தற்போது 4 கோட்டங்களாக சமபரப்பளவில் மறு சீரமைக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக செலவினை குறைத்து உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல்

தமிழ்நாடு நீர்நிலைகளை சூழல் மறுசீரமைத்தல்

✶ 2017–2018ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் அமைந்துள்ள பருத்திப்பட்டு ஏரி ரூ.2,816 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டது. மேலும், சென்னையில் உள்ள மாதவரம் கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரிகளின் சூழல் மீட்பு இரண்டாம் கட்ட பணிகள் ரூ.1,318 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ 2018–2019ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியை சேர்ந்த திருத்தணி நல்ல தண்ணீர்குளம், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த

வெண்ணத்தூர் ஏரி, ஈரோடு மாவட்டம் பவானி ஒன்றியம் கடையம்பட்டி கிராமம் ஆண்டிகுளம், கோபி ஒன்றியம் இந்திரா நகர் செங்குட்டை ஏரி மற்றும் அம்மாபேட்டை ஒன்றியம் கரடிப்பட்டி கிராமம் கரப்பட்டி குளம் ஆகியவை சூழல் மறுசீரமைப்பு பணிகள் ரூ.1,284 இலட்சம் செலவில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

✶ 2019–2020ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுக்காவில் உள்ள சிட்லபாக்கம் ஏரி சூழல் மறு சீரமைப்பு பணிகள் ரூ.2,500 இலட்சம் ஒதுக்கீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்காவில் உள்ள ஒடத்துரை ஏரியானது ரூ.320 இலட்சம் ஒதுக்கீட்டிலும் சுற்றச்சூழல் மேம்பாட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு

✶ 2018–2019ஆம் ஆண்டு கடலோர மண்டலத்தில் உள்ள இயற்கை, சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் குறித்த விபரங்கள் மற்றும் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை குறித்த தகவல் பலகைகள் ரூ.100 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

✶ 2018–2019ஆம் ஆண்டு 13 கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோர, குடியிருப்புப் பகுதிகளில் தெரு நாடகங்கள், பிரச்சாரம் ரூ.32.50 இலட்சம் செலவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது

✶ மாணவ, மாணவியருக்கு சுற்றுசூழலின் முக்கியத்துவத்தை உணர்த்த பேச்சுப்போட்டி, வினாடி வினா மற்றும் ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல ஏதுவாக 2018–2019 ஆகிய ஆண்டுகளில் (மாவட்டத்திற்கு ரூ.1 இலட்சம் வீதம்) ரூ.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது

✶ சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், மாணவர்கள் மூலமாகவே பள்ளிகளில் மரக்கன்றுகள் நடுவதற்கு வசதியாக மாவட்டத்திற்கு 30 பள்ளிகளில் 50 மரக்கன்றுகள் நடுவதற்கு ரூ.2.88 கோடி 2017–2018, 2018–2019ஆம் ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மரச்செடிகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த முதல் மூன்று விளம்பர குறும்படங்களுக்கு விருதுகள் ரூ.20 இலட்சம் வழங்கப்படும்

✶ 2019–2020ஆம் ஆண்டில் தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல்

போட்டிகள் நடத்தி, சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் செலவில் 32 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் மாவட்டம் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். தன்னார்வ நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில பருவகால மாற்ற தகவல் பரப்பும் சேவைகள் ரூ.8 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்களின் தாக்கம் குறித்து மதிப்பீடு 25.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

காலநிலை ஸ்டூடியோ அண்ணா பல்கலைக் கழகம்

- ✶ காலநிலை தகவமைப்பு மற்றும் பேரழிவு தணிப்பு ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக் கழகத்தில் கால நிலை ஸ்டுடியோவானது உருவாக்கப்படுகிறது. இந்த ஸ்டுடியோவின் பிரதான நோக்கமானது, கால நிலை அறிவியல், ஆராய்ச்சிக்கான திறனை வளர்த்தல், அறிவாற்றல் மேலாண்மை ஏற்படுத்துவதே ஆகும். மேலும் தேசிய, மாநில மற்றும் உள்ளூர் அளவில் பாதிப்புகளை ஆய்ந்தறிந்து அவற்றை தகவமைத்து மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்தல் மற்றும் தகவல்களை பகிர்ந்து கொள்வதே ஆகும். அரசு ஊழியர்கள், திட்டம் வகுப்புவர்கள், விஞ்ஞானிகள், இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கிராம பங்குதாரர்களுக்கு காலநிலை மாற்றம் சார்ந்த பயிற்ச்சியினை அளிப்பதே இதன் குறிக்கோளாகும்

ஒருங்கிணைந்த கடற்கரை பகுதி மேலாண்மை திட்டம் (இரண்டாம் கட்டம்)

- ✶ இயற்கை வளம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழலை எதிர்காலச் சந்ததியினர் உகந்த முறையில் பெறுவதற்கும், மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், தமிழக கடற்கரையோர மக்களின் முன்னேற்றத்தினை கவனத்தில் கொண்டும் ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம், செயலாக்க முகமைகளின் ஒருங்கிணைப்புடன் நிறைவேற்றும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழக கடலோர பகுதிகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த ரூ.306.08 கோடி மதிப்பீடு செய்ய. பட்டுளளது. ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்டம் நிலை 2இன் கீழ் உள்ள திட்டங்களை செயல்படுத்த நிதி உதவி மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைபடுத்தபடும்

- ✶ ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தை ரூ.2,604.52 இலட்சம் செலவில் தயாரித்தல்

- ✶ நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடல் ஆமை பாதுகாப்பு மையத்தை ரூ.471.26 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுதல்

- ✶ கடலோர 4 மாவட்டங்களில் கடலோர நிலத்தடி நீர் மேலாண்மைக்கான தீர்வு காணும் ஆதரவு முறையை ரூ.692 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்குதல்

- ✶ தமிழ்நாடு கடல் வன பயற்சி நிறுவனம் ரூ.2,568 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்

- ✶ மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய தொழிற்சாலை வகைப்பாட்டு அட்டவணையில் ஆரஞ்சு வகையின் கீழ், வகைப்படுத்தப்பட்ட அரிசி ஆலைகள் அவை வெளியேற்றும் மாசு அளவினை கணக்கிட்டு ஒற்றை வேக்காடு அரிசி ஆலைகளை பச்சை வகையாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாற்றியுள்ளது.

- ✶ அதிக மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரம் மற்றும் புகைபோக்கி வழியே வெளியேற்றப்படும் புகையின் தரத்தினை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் அதன் அளவீடுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடும் அமைப்பினை நிறுவி செயல்படுத்தி வருகிறது.

- ✶ தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும், மற்றும் தொழில்முனைவோரும், பொதுமக்களும் பயன்பெறும் வகையிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போதுள்ள நாமக்கல் அலுவலகத்தின் கீழ் வரும் கண்காணிப்பு பகுதிகளை பிரித்து குமாரபாளையத்தில் ஒரு புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தையும் மற்றும் திருவள்ளூர் கீழ் வரும் கண்காணிப்புப் பகுதிகளை பிரித்து கும்மிடிப்பூண்டியில் ஒரு புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தையும், ஆக இரண்டு இடங்களில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும், மற்றும் தொழில்முனைவோரும், பொதுமக்களும் பயன்பெறும் வகையிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது இயங்கி வரும் மதுரை மண்டல அலுவலகத்தை பிரித்து திருநெல்வேலியில் ஒரு மண்டல அலுவலகத்தையும் மற்றும் கோவை மண்டல அலுவலகத்தை பிரித்து சேலத்தில் ஒரு மண்டல அலுவலகத்தையும், ஆக இரண்டு இடங்களில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் புதிய இரண்டு மண்டல அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பாக செயலாற்றும் வகையில் பிற மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களிலும் மற்றும் மாநில அரசு பொறியியல் துறைகளில் உள்ளது போன்றும் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video conferencing) நடத்தும் வசதியை ரூ.35 இலட்சம் செலவில் ஏற்படுத்தி உள்ளது.

- ✶ பெருந்துறை சிப்காட் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்க வசதியாக பெருந்துறை சிப்காட் வளாகத்தில் ரூ.215 இலட்சம் செலவில் ஒரு புதிய மாவட்ட சுற்றுச் சூழல் ஆய்வகம் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு ரூ.150 இலட்சம் செலவில் நீர் மற்றும் காற்று பரிசோதனை செய்வதற்கான நவீன கருவிகள் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), வாணியம்பாடி, பெருந்துறை, ஈரோடு மற்றும் ஒரகடம் ஆகிய ஆறு இடங்களிலுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் ஆகியவை சொந்த கட்டிடத்தில் இயங்குமாறு புதிய கட்டிடம் ரூ.14.41 கோடி செலவில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.4 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

- ✶ சுற்றுசூழலைப் பாதுகாக்கும் வகையில் சிறப்பாக செயலாற்றிய ஒன்பது மாவட்ட ஆட்சியர்களுக்கு 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுக்கான (ஆண்டு ஒன்றுன்டு மூன்று விருதுகள்) பசுமை விருதுகள் மற்றும் ஏழு தொழிற்சாலைகளுக்கு 2015, 2016 (நான்கு விருதுகள்) மற்றும் 2017 (மூன்று விருதுகள்) ஆண்டுக்கான பசுமை விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை குழந்தைகள், பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் ஏற்படுத்தும் வகையில் தண்டையார்பேட்டையில் கோக்ரேன் பேசின் ரோடு, கொருக்குப்பேட்டையில் 50,110 சதுர அடி அளவுள்ள நிலத்தினை மேம்படுத்தி புல்வெளி, நடைபாதை, சிறுவர் பூங்கா, விளையாட்டுத் திடல், மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பதாகைகள் போன்ற வசதிகள் உள்ளடக்கிய ‘அம்மா சுற்றுச்சூழல் பூங்கா’ ஒன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து ரூ.2 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

- ✶ பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியில் ரூ.80 இலட்சம் செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்கப்பட்டு செயல்முறையில் உள்ளது.

- ✶ மரம் வளர்ப்பினை பொதுமக்களிடையே ஊக்குவிக்கும் வகையில் நகர்ப்புற வனவியல் திட்டத்தின் கீழ், சென்னை புறநகர் பகுதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியில் ரூ.175 இலட்சம் செலவில் மரக்கன்றுகள் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியில் ரூ.25 இலட்சம் செலவில் 25,000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- ✶ சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்போர்நலசங்கங்களுக்கு பசுமை விருதுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்பட உள்ளது.

- ✶ காற்றின் தரத்தை, தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் 25 இடங்களில் சுமார் வாரிய நிதியிலிருந்து ரூ.40 கோடி செலவில் கண்காணிப்பு நிலையங்களை அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து அது முடியும் தருவாயில் உள்ளது.

- ✶ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையிலும் மற்றும் வெளிப்படையான செயல்பாட்டினை நிகழ்த்தும் பொருட்டும், தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குதல், தீங்கு விளைவிக்கும் கழிவு மற்றும் உயிரி மருத்துவக்கழிவு ஆகியவைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் பொதுமக்கள் புகார் மனுக்கு தீர்வு காணுதல் ஆகியவற்றை இணையவழி மூலமாக செயல்படுத்தி வருகிறது.

- ✶ கும்மிடிப்பூண்டி மற்றும் திருப்பூர் (தெற்கு) ஆகிய இடங்களில் இரண்டு புதிய மாவட்ட அலுவலகக் கட்டடம் சுமார் ரூ.4 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

- ✶ 2018ஆம் ஆண்டில் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியில் ரூ.3.25 கோடி செலவில் ஏற்படுத்தி செயல்பாட்டில் உள்ளது.

- ✶ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வாரிய நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.15 இலட்சம் செலவில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ **தமிழக அரசு ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேனீர் கப்புகள்/டம்ளர்கள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் குடிநீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் கைப்பைகள் (தடிமன் வரைமுறை இல்லாமல்) போன்றவற்றை தயாரிப்பதையும், சேமிப்பதையும், விநியோகிப்பதையும், போக்குவரத்து செய்வதையும், விற்பனை செய்வதையும் 01.01.2019 முதல் தடை செய்யப்படுவதாக அறிவிக்கை செய்துள்ளது. இதனை சிறப்பாக அமல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மற்றும் கலந்தாய்வு கூட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி வருகிறது.**

- ✶ சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. மேலும் திருவண்ணாமலை மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர் அலுவலகம் கட்டுமான பணிகள் முடிவடைந்து திறக்கும் தருவாயில் உள்ளது.

- ✶ தொழிற்சாலை மாசு குறித்தான புகார்களை பொதுமக்கள் இணையதளம் மூலம் பதிவு செய்யலாம். இப்புகார்கள் மீது விசாரணை செய்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விபரம் மின் அஞ்சல் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படும்.

- ✶ ஒவ்வொரு வருடமும் சுற்றுப்புறத்தை தூய்மையாகவும் பசுமையாகவும் பாதுகாக்கும் சிறந்த மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை தேர்ந்தெடுத்து பசுமை விருதுகளை

வாரியம் அளித்து வருகிறது. மேலும் 2018ஆம் ஆண்டு முதல் சிறப்பாக சுற்றுப்புறத்தை பாதுகாக்கும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு நலச் சங்கங்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

- ஒவ்வொரு வருடமும் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வினாயகர் சதுர்த்தி, தீபாவளி, போகி மற்றும் கார்த்திகை தீபம் ஆகிய பண்டிகைகளின் போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தி வருகிறது.

- தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையவழி மூலமாக இசைவாணை வழங்கும் நடைமுறையை செயல்படுத்தி வருகிறது. இது வெளிப்படையான நிர்வாகத்திற்கும் விரைவாக அங்கீகாரம் வழங்குவதற்கும் உதவியாக இருக்கிறது.

- காற்றின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் சுமார் 9 தொடர்க் காற்று தர கண்காணிப்பு நிலையங்களை சென்னையில், பெருங்குடி, கொடுங்கையூர், கோயம்பேடு, ராயபுரம், மணலி மற்றும் கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, பெருந்துறை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும் மற்றும் ஒரு நடமாடும் காற்று தர கண்காணிப்பு நிலையம் நிறுவி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகின்றது.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் காற்றுதர கண்காணிப்பு மையமும் நீர் தர கண்காணிப்பு மையமும், அமைக்கப்பட்டு 24 மணிநேரமும் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதுவரை 615 தொழிற்சாலைகள் இக்கண்காணிப்பு மையத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

- நீர் தரத்தை தொடர்ந்து இணைய வழி மூலம் கண்காணிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது, காவேரி மற்றும் பவானி ஆற்றில் கண்காணிப்பு மையங்களை நிறுவி கண்காணித்து வருகிறது.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரியலூரில் புதிய மாவட்ட அலுவலகக் கட்டடம் வாரிய நிதியில் சுமார் ரூ.3 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

- வாரிய நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தை பயன்படுத்தி நீர், காற்று, நில சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் மாசு காரணமான பாதிப்புகள் / சுகாதார அபாயங்கள் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறும்படங்களை தயாரிக்கவுள்ளது.

- வாரிய நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தை பயன்படுத்தி இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தின கருப்பொருளை (காற்று மாசுபாட்டை வெல்லுங்கள்) கொண்டு பங்குதாரர்களுக்கு காற்று மாசுபாடு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து சுற்றுச்சூழல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

- வாரிய நிதியிலிருந்து ரூ.1.5 கோடியை பயன்படுத்தி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு தேவையான மேம்படுத்தப்பட்ட ஆய்வக கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986இன் கீழ் சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

- தமிழ்நாட்டில் அமைந்துள்ள வார்ப்பட தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கப்பட்டு, விலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், இந்த அறிவிப்பு முழுமையடைந்தது.

- 2019–2020 ஆண்டு வாரிய நிதியிலிருந்து ரூ.1.4 கோடியை பயன்படுத்தி புதிதாக தமிழ்நாட்டில் எட்டு மாவட்டங்களில் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை நிறுவப்பட உள்ளது.

- வாரிய நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் நீர் தர மேலாண்மை பிரிவு அமைக்கவுள்ளது.

- ரூ.1.5 கோடியை பயன்படுத்தி மேலும் 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு திரவ படிக காட்சிபடுத்தும் கருவி வழங்க உள்ளது.

❖ ❖ ❖

முதலமைச்சர் பொது நிவாரண நிதியுதவி

- 55 ஏழை குடும்பத்தை சார்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்கு ரூ.40,29,830 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- கிணறு, குளம், குட்டை மற்றும் கடல் ஆகியவைகளில் விழுந்து காயமடைந்த / உயிரிழந்த மற்றும் பாம்பு / விஷப்பூச்சி கடித்து உயிரிழந்த 1,254 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.14,52,15,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- சாலை மற்றும் தீ விபத்துகளில் காயமடைந்த / உயிரிழந்த 649 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.5,62,55,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- காவல்துறை / மின்துறை / போக்குவரத்துத்துறை போன்றவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் பணியின்போது காயமடைந்த / உயிரிழந்த 672 பணியாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.20,74,78,525 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- மீன்பிடிக்க செல்லும்போது காணாமல் போன மீனவர்கள் / படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி காயமடைந்தவர்கள் / உயிரிழந்தவர்கள் 39 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.1,06,65,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி புயலால் உயிரிழந்த மீனவர்கள் மற்றும் மீனவர்கள் அல்லாத 42 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.1,44,00,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- கஜா புயலால் உயிரிழந்த 69 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.4,92,10,510.72 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- பானி புயலால் ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்காக ஒடிசா மாநில அரசுக்கு ரூ.10 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- கேரளாவில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்க்காக கேரளா அரசுக்கு ரூ.16,01,90,850 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர ஆலை மக்கள் போராட்டத்தில் உயிரிழந்த / காயமடைந்த 122 குடும்பங்களுக்கு ரூ.5.71 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ தற்கொலை செய்து கொண்ட 93 விவசாயிகளின் குடும்பங்களுக்கு ரூ.2.77 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ உடல்நலக் குறைவால் உயிரிழந்த 16 பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.29.90 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருடாந்திர நன்கொடையாக (ரூ.7,50,000/–) ரூ.22,50,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ இலங்கைத் தமிழர் அகதிகளின் 1,520 குடும்பங்களுக்கு ரூ.45,12,040/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ மின் விபத்துகளில் காயமடைந்த / உயிரிழந்த 378 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.9,47,25,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ கட்டடம் இடிந்து விழுந்த விபத்து மற்றும் பிற காரணங்களால் காயமடைந்த / உயிரிழந்த 146 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.2,38,52,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016

- ✶ புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2012ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, அரசால் 30.06.2016க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்குச் சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் 01.07.2016 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்ட வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதிபெற்ற குடும்ப உறுப்பினர்கள் நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் வரை இம்மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கும், சிகிச்சைகளுக்கும் மருத்துவ சிகிச்சை பெற ஏற்கெனவே இருந்த உச்சவரம்பு ரூ.7.50 இலட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது

  - ● புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள், உள்நோயாளிகளுக்கு நோய் கண்டறியும் நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது

  - ● கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

  - ● சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

  - ● விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்

  - ● இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty)

  - ● தீக்காயங்களுக்கான சிகிச்சை

- ✶ கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்ச வரம்பு ஒரு கண்ணிற்கு ரூ.25,000/– வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்ச வரம்பு ரூ.45,000/– ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்து மற்றும் அவசர சிகிச்சை காரணமாக மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொண்டு செலவினத் தொகையை மீளப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ இத்திட்டத்தின் கீழ், 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 989 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01.07.2016 முதல் 30.06.2020 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு

ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு பணியாளருக்கு ரூ.2,100/– (மற்றும் சேவை வரி) வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு செலுத்தும். இதற்கென பணியாளரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் ரூ.180/–வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து ஜூலை 2016 முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலுத்தப்படும் காப்பீட்டு கட்டணத் தொகையை, அரசு / அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும். 01.07.2012 முதல் 30.06.2016 வரையிலான நான்காண்டுகளில் 1,85,920 பயனாளிகள் ரூ.738.06 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். தொடர்ந்து இத்திட்டத்தின் கீழ், 01.07.2016 முதல் 08.11.2019 வரை 1,65,538 பயனாளிகள் ரூ.639.10 கோடி செலவில் மருத்துவ சிகிச்சைப் பெற்றுள்ளனர்.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2018

- ✶ ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் 2018, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலமாக 01.07.2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உள்பட) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வசதியினை பெறும்பொருட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நான்காண்டுகளுக்கு (2018–2022) ரூ.4 இலட்சம் வரை மருத்துவ காப்பீட்டு உதவியினைப் பெறலாம். இதற்காக ரூ.350/– சந்தா தொகையாக ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களிடமிருந்து அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.
  - ✶ அரசு இப்புதிய திட்டத்தில், சில நோய்களையும், சில சிகிச்சைகளையும் சிறப்பினமாக கருதி அதற்கு ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பை உயர்த்தியுள்ளது.
  - ✶ உயிர் காக்கும் அவசர தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
  - ✶ இத்திட்டத்தில் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் பொருட்டு 114 சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 60 சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் 54 மருத்துவ நடைமுறைகளும் அடங்கும்.
  - ✶ தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் 988 மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ், மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ✶ இத்திட்டத்தின் கீழ், இதுவரை, ரூ.331.36 கோடி செலவில் 94,981 பயனாளிகள் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.

கருவூலக் கணக்குத் துறை

- ✶ பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது இந்திய அரசின் செலவினத் துறை, பொது கணக்கு கட்டுப்பாட்டாளரால் நிர்வகிக்கப்படும் ஒரு செயலி. இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் பொது நிதி மேலாண்மை அமைப்பினை செயலாக்க, சீரிய முறையில் கருவூலக் கணக்குத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த செயலி வாயிலாக, நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும்.
- ✶ இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைப்பாளராக உள்ளது. கருவூலம், பொது நிதி மேலாண்மை அமைப்புடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இதுவரை இத்திட்டத்தின் கீழ், 51 அரசுத் துறைகள் 148 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் மூலம் ரூ.8,178 கோடி பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

அரசு மின்னணு சந்தை

- ✶ அரசுத்துறைகளின் ‘பொருள் மற்றும் சேவை’ கொள்முதலுக்காக நேரடி (on line) மின்னணு சந்தைத் திட்டத்தை மத்திய அரசு துவங்கியுள்ளது. இது காகிதமற்ற மற்றும் நேரடி பணபரிவர்த்தனை

இல்லாத கொள்முதலாகும். இதன்மூலம் தனி நபர் குறுக்கீடு தவிர்க்கப்படுகிறது.

- ✶ அரசு மின்னணு சந்தையினால் குறைந்த விலை, எளிய நடைமுறை, உயர்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்ற நன்மைகள் கிடைக்கும்.

- ✶ பொருள் மற்றும் சேவைகளை GeM Portal மூலமாக பெறுவதற்க்கு தேவைப்பட்டால் முன்பணம் பெற்றுக் கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பணி நியமனங்கள்

- ✶ தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 158 இளநிலை உதவியாளர்கள், 83 கணக்கர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- ✶ கருணை அடிப்படையில் 24 நபர்களுக்கு இளநிலை உதவியாளராகவும், ஒரு நபருக்கு அலுவலக உதவியாளராகவும் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்துறை வங்கித் திட்டத்திலிருந்து கருவூல முன்னோடி திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறும் முறை மாற்றம்

- ✶ பொதுத்துறை வங்கித் திட்டத்தில் ஓய்வூதியம் பெறும் 79,000 தமிழக அரசு ஓய்வூதியர்களை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை / மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் மூலமாக ஓய்வூதியம் பெறும் திட்டத்திற்கு மாற்றம் செய்வது தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டு ஜனவரி 2018 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் அனைவருக்கும் கருவூலங்கள் வழியாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்

- ✶ அனைத்து ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டையினை அரசு இ–சேவை மையத்தினை அணுகி ரூ.30/– கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 47,350 ஓய்வூதியர்கள் தங்களது அடையாள அட்டையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஓய்வூதியர் தரவு தளம்

- ✶ ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் பெற்ற விவரம், தொகுத்துப் பெற்றதை மீளப்பெறுவது, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்பட்ட ஓய்வூதியம், அகவிலைப்படி வீதம், பண்டிகைக்கால முன்பணம் முதலியன ஓய்வூதியர்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் தரவு தளமானது உருவாக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம்

- ✶ ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் செயல்படுத்த திருவாளர்கள் அக்சென்சர் சர்வீஸ் பி.லிட்., இத்திட்டத்தின் ஆலோசனை முகமையாகவும், திருவாளர்கள் விப்ரோ லிட்., திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும், திருவாளர்கள் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம் மூன்றாம் நபர் தணிக்கை முகமையாகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- ✶ இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 19,000க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் மின் வரவுகள் (e- receipts) பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்துவதால் அரசு நிகழ்நேர வருவாயை உடனுக்குடன் பெற இயலும். இதன்மூலம் பொதுமக்கள் தடைகளின்றி உடனடி சேவையை பெற இயலும்.

- ✶ இத்திட்டத்தின் மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்ற விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம் டிஜிட்டல் ஒப்பம் (Digital Signature) மற்றும் பயோமெட்ரிக் (Bio - Matric) முறை மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்கு கிடைப்பதுடன் துரித நிதி மற்றும் மனிதவள மேலாண்மை நிர்வாகம் நடைபெற உறுதி செய்கிறது.

- ✶ இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக, ரூ.288.91 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது.



- ✶ முதற்கட்டமாக மென்பொருள் தீர்வினை தயார் செய்வதற்காக, பல்வேறு துறைகளுடன் பலகட்ட கலந்தாய்வுக்கு பின், விவரக் குறிப்பீடுகள் மற்றும் செயல்திட்ட ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ மேலும் இத்துறையின் பங்கேற்பாளர்களான (Stakeholders) மாநில கணக்காயர், பாரத ரிசர்வ் வங்கி மற்றும் முகமை வங்கிகளுடன் இந்தத் திட்டத்தினை ஒருங்கிணைத்து பொது வழிதடத்தில் செயல்படுத்திட கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ திட்ட ஒருங்கிணைப்பாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மென்பொருள் தீர்வுகள் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாக அதன் மீதான முதற்கட்ட சோதனை முடிக்கப்பட்டுள்ளது.

- ✶ இத்திட்டத்தினை செயல்படுத்தக்கூடிய அனைத்து அலுவலகங்களிலும் திட்ட ஒருங்கிணைப்பாளரால் வன்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ✶ இத்திட்டத்திற்கு தேவையான கணிணி கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ தற்போது இத்திட்டம் இணையோட்டமாக கரூர், சேலம், தேனி, அரியலூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் சம்பள கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சம்பள கணக்கு அலுவலகம் (மதுரை) அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ✶ இத்திட்டத்தினை நடப்பு நிதி ஆண்டிலேயே மாநிலம் முழுவதும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுதல்

- ✶ நிதித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு), மாவட்ட கருவூலம், சென்னை, ஒய்வூதியம் வழங்கும் அலுவலகம், உதவி முத்திரைத்தாள் அலுவலகம், ஒய்வூதிய இயக்ககம், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககம், மாநில அரசுத் தணிக்கைத்துறை இயக்ககம், கூட்டுறவு தணிக்கை இயக்குநரகம் மற்றும் கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், சென்னை மண்டல அலுவலகம் ஆகிய 10 அலுவலகங்களுக்கு ரூ.36.33 கோடி செலவில் புதிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

- ✶ சென்னை, நந்தனத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை கட்டடத்தில் ரூ.10.98 கோடி மதிப்பீட்டில் சுமார் 50,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு கூடுதல் தளங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ✶ ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம் "அம்மா வளாகம்" என பெயர் சூட்டி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* திருநெல்வேலி மாவட்ட கருவூலத்திற்கு ரூ.3.52 கோடி மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

* செய்யூர், திருத்தணி, திருவள்ளூர், அரவக்குறிச்சி, கடவூர், கிருஷ்ணராயபுரம், மணப்பாறை, கெங்கவல்லி, திருவையாறு, இராமேஸ்வரம், வி.கே.புதூர், வேப்பந்தட்டை, செந்துறை, திருவெறும்பூர், திருவரங்கம், இலுப்பூர், சேலம், ஆவடி, பொன்னமராவதி, பள்ளிப்பட்டு, கிணத்துகடவு, செங்கல்பட்டு ஆகிய 22 சார் கருவூலங்களுக்கு ரூ.13,68,65,000/– செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

* ரூ.80.52 இலட்சம் வீதம் 11 சார் கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட ரூ.8,85,72,000/–க்கான ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நிறைவடைந்த எடப்பாடி சேரன்மாதேவி, சோளிங்கர் மற்றும் ஆம்பூர் ஆகிய 4 சார் கருவூலகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது.

* அன்னூர், கன்னியாகுமரி, கொல்லிமலை, கொடுமுடி, கடலாடி, கலசப்பாக்கம் மற்றும் திருக்குவளை ஆகிய 7 சார் கருவூலங்களுக்கான சொந்த கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்புகள் 2019 – 2020

* திண்டுக்கல் மாவட்ட கருவூலத்திற்கு ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

* காஞ்சிபுரம் மாவட்ட கருவூலத்திற்கு ரூ.4.96 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

சம்பள கணக்கு அலுவலர் மற்றும் கருவூல அலுவலர்களுக்கு ஈப்பு வாங்குதல்

* கருவூலக் கணக்குத் துறையின்கீழ், இயங்கிவரும் அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு 38 ஈப்புகள் வாங்குவற்கும் ஒப்பந்த அடிப்படையில் 38 ஓட்டுநர்களை பணியமர்த்துவதற்கும் ரூ.3.90 கோடி, நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 38 ஈப்புகள் அரசு இ – சந்தை (GeM Portal) மூலமாக வாங்கப்பட்டு, ஓட்டுநர்கள் Texco மூலமாக நியமனம் செய்யப்பட்டனர்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் தமிழ்நாடு சட்டசபை விதிகள் 110–ன் கீழ் 19.02.2016 அன்று அறிவித்ததின்படி, பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு செய்தவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், பணியில் இருக்கும்போது இறந்தவர்கள் ஆகியோர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய இறுதித் தொகை வழங்குவது குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை (CPS Final Authorization) 30.11.2019 அன்று வரை 16,010 நபர்களுக்கு ரூ.786.97 கோடி இவ்வாணையரகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

* உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014இன்படி உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இத்துறையால் முதன்முறையாக 2015–2016ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கை தமிழக சட்டமன்றத்தில் 09.07.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டது.

* உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு இத்துறையின் தணிக்கையாளர்களுக்கு ரூ.69.70 இலட்சம் செலவில் 165 புதிய மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

* உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு முறையில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால பயன்கள் வழங்க ஏதுவாக கணினி சர்வர் வழங்க அரசால் முடிவெடுக்கப்பட்டு ரூ.24.57 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் மூலம் ஓய்வூதியம் பெறும் உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தனி இணையதளம் உருவாக்க ரூ.5.38 இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு இணையதளம் உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

✶ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இருந்து 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டுகளுக்கான காலியிட மதிப்பீட்டின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 212 உதவி ஆய்வர்களில் 208 நபர்கள் பணி சேர்ந்துள்ளனர்.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில், தணிக்கை தடைகள் தொடர்பாக ரூ.6,738.48 இலட்சம் மதிப்பிலான தொகை தணிக்கைத் தடை கூட்டமர்வில் தணிக்கை பிடித்தம் மூலம் வரவாக்கப்பட்டுள்ளது.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தணிக்கை கட்டணமாக ரூ.2,243.85 இலட்சம் அரசு கணக்குத் தலைப்பில் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களால் செலுத்தப்பட்டுள்ளன.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் 29,701 எண்ணிக்கையிலான உள்ளாட்சி அமைப்பு ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.69,076.86 இலட்சம் மதிப்பிலான ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் 738 உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.244.92 இலட்சம் மதிப்பிலான மருத்துவ நலநிதி பயன்களும் 511 உள்ளாட்சி அமைப்பு ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.197.21 இலட்சம் மதிப்பிலான குடும்ப பாதுகாப்பு நிதி பயன்களும் வழங்கப்பட்டுள்ளன.

✶ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை தரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு 11 அணிகளாக 395 தணிக்கையாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு தணிக்கைத் துறை

✶ சட்டமன்றப் பேரவையில் 2017–2018ஆம் ஆண்டிற்கான நிதித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மாநில அரசுத் தணிக்கைத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் இத்துறைக்கென தனியே புதிய வலைதளம் ஒன்று உருவாக்க ரூ.6 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள இத்துறைக்கு சொந்தமான அலுவலகத்தில் கணினி மற்றும் இதர மின்னணு சாதனங்கள் தங்குதடையின்றி இயங்குவதற்காக 20 KVA கொண்ட ஓர் UPS, ELCOT மூலம் வாங்குவதற்கு ரூ.6,58,580/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ மாநில அரசுத் தணிக்கைத் துறை, இயக்குநர் அலுவலகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்திட இயந்திரங்கள் வாங்குவதற்கு மொத்தம் ரூ.3,70,280/– (படிபெருக்கி இயந்திரம் – ரூ.1,80,162/– நகல் இயந்திரம் ரூ. 83,119/– முன் கட்டண அஞ்சல் முத்திரைப் பொறி ரூ. 1,07,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலகத்தின் நுழைவு மற்றும் வெளியில் செல்லும் வாயில்களில் கண்காணிப்பு காமிராக்கள் பொருத்த ரூ.1,52,334/– மற்றும் ஒரு தொலைபேசி இணைப்புக்காக ரூ.20,820/– (ரூ.19,320/– தொடரும் செலவினம் ரூ.1,500/– தொடராச் செலவினம்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ 2019–2020ஆம் ஆண்டு சட்டசபை அறிவிப்பின்படி அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் ‘மாநில அரசுத் தணிக்கைத் துறை’ எனவும் தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையரின் பெயர் ‘இயக்குநர்’ எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

✶ மாநில அரசு தணிக்கைத் துறை கையேடு (IIIA மற்றும் IIIB) மே 2019 முதல் பதிப்பு இத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

* இவ்வருட தணிக்கை அறிக்கையில் அரசுக்கு வருவாய் இழப்புகளாக சுட்டிக்காட்டப்பட்ட இனங்களில் பல்வேறு துறைகளில் 4,957 தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டு தொகை ரூ.595.13 இலட்சங்கள் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு தணிக்கைத் துறை

* கூட்டுறவு தணிக்கை இயக்ககத்திற்கு ரூ.90,942/– செலவில் குறும்பரப்பு இணையம் (Local Area Network) வசதி உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

* 2019–2020ஆம் நிதியாண்டின் நிதித்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பின்படி தணிக்கை தகவல் மேலாண்மை முறைமை திட்டத்திற்கு இணையவலை வசதி பெறுவதற்கு ரூ.5 இலட்சம் செலவில் தகவல் அட்டைகள் (Data cards) தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் தணிக்கையாளர்கள் தங்களது அன்றாட வேலைகளை மென்பொருளில் பதிய வசதி செய்யப்பட்டுள்ளது.

* 2019–2020ஆம் நிதியாண்டிற்காக நிதித்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பின்படி கூட்டுறவு தணிக்கைத் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிபுரியும் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களுக்கு தணிக்கை மற்றும் துறை தொடர்பான சிறப்பு பயிற்சி வழங்க ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. இதன் மூலம் தணிக்கையாளர்கள் தணிக்கையில் தங்களது தகுதி மற்றும் திறமையினை பெருக்கி கொண்டு தரமான தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் துறை

சிறுசேமிப்பு வசூல் விவரம்

* சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக திரட்டப்பட்ட நிதி வசூல் 16.02.2017 முதல் 10.12.2019 வரை மொத்த வசூல் ரூ.22,742.73 கோடி, நிகர வசூல் ரூ.9,985,45 கோடி.

* சிறுசேமிப்பு வசூல் 01.04.2017 முதல் 31.03.2019 வரை கணிசமாக உயர்ந்துள்ளது. அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு திட்டம், அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம், அஞ்சலக தொடர் வைப்புத்திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் 8ஆவது வெளியீடு, செல்வமகள் சேமிப்பு திட்டம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் ஆகிய திட்டங்களில் மொத்த மற்றும் நிகர வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது

நடைமுறையில் உள்ள திட்டங்கள்

முகவர்களுக்கு வெகுமதி வழங்குவது

* சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் முகவர்களுக்கு வெகுமதிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

உலக சிக்கன நாள் கொண்டாட்டங்கள்

* உலக சிக்கன நாள் 30 அக்டோபர் ஒவ்வொரு ஆண்டும் சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் விதமாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இத்துறை மூலமாக உலக சிக்கன நாள் விழாவில் மாணவர் / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை, ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டும், மாவட்ட அளவில் கட்டுரை, நாடகம், நடனம் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டும், மாவட்ட அளவில் நடத்தப்படும் ஒவ்வொரு போட்டிக்கும் மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டிகளிலும் சிறந்து விளங்கும் முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

* பொதுமக்களிடையே சிறுசேமிப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பாக கிராமப்புற மக்களை அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ஈர்க்கும்பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சிகளில் சிறுசேமிப்பு குறித்து நாடகங்கள் நடத்தப்பட்டுவருகிறது.

அரசு பொருட்காட்சிகள்

* மேலும், சென்னை மற்றும் மாவட்டங்களில் அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் சிறுசேமிப்புத் துறை பங்கேற்று, அரங்குகளில், பொது மக்களுக்கு சிறுசேமிப்புத் திட்டங்கள் குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கி வருகிறது.

❖ ❖ ❖

இயக்குநரகம்

- மாநிலத்தில் உள்ள 14,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 54,000 விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் அளித்தல் ஆகிய இரு நோக்கங்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.484.25 கோடி மதிப்பில் 155.36 இலட்சம் சேலைகள் மற்றும் 155.24 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு பொங்கல் 2019 பண்டிகையின்போது வழங்கப்பட்டது. இத்திட்டத்தினை பொங்கல் 2020க்கு செயல்படுத்திட அரசு 2019–2020ஆம் நிதியாண்டில் ஆண்டில் ரூ.484.25 கோடியினை ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 167.39 இலட்சம் சேலைகள் மற்றும் 167.29 இலட்சம் வேட்டிகளும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, 2020ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

- டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், பயன்பெறும் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை 1985–1986ஆம் கல்வியாண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. 2012–2013ஆம் கல்வியாண்டிலிருந்து புதிய வண்ணத்துடன் நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019, 2019–2020ஆம் கல்வியாண்டில் புதிய நிறம் மற்றும் வடிவமைப்புடன் 606.44 கோடி மதிப்பில் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளது.

- கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 அலகுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 அலகுகள் வரையிலும் விலையில்லா மின்சாரம் 01.08.2006 முதல் அரசால் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2016 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரத்தினை 200 அலகுகளாக உயர்த்தியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரத்தினை 750 அலகுகளாக உயர்த்தியும் 23.05.2016 முதல் விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 78,783 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 1,45,116 விசைத்தறி நெசவாளர்கள் தற்போது பயன்பெற்று வருகின்றனர். 2017–2018ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.2.88 கோடி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.387.09 கோடி மற்றும் 2018–2019ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.6.41 கோடி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.343.13 கோடி தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது. இத்திட்டம் 2019–2020ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட வரவு செலவு திட்ட மதிப்பீட்டில்

கைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.6.73 கோடி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்காக ரூ.360.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் விதமாக, தள்ளுபடி மானியத் திட்டத்தின் கீழ், உதவித் தொகை 2018–2019ஆம் ஆண்டில் ரூ.100 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கோருகின்ற 60s கோம்டு நூல் உற்பத்தி செய்யும்பொருட்டு இயங்கும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நூலின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் இயந்திரங்களின் திறனை மேம்படுத்தவும் card wires, cots, Aprons மற்றும் Spindles ஆகிய உதிரி பாகங்களை மாற்றம் செய்யும் பொருட்டு ரூ.2.076 கோடி (ரூபாய் இரண்டு கோடி ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வழங்கியுள்ளது.

✶ பாரதி கூட்டுறவு நூற்பாலையின் அனைத்து மின் விளக்குகளுக்குத் தேவையான மின்சாரத்தினை சூரிய மின் தகடு மூலம் பெற ஏதுவாக ரூ.0.87 கோடியினை மாநில புதுமை முயற்சி ஊக்குவிப்பு நிதியிலிருந்து அரசு அனுமதித்து விடுவித்துள்ளது. இத்திட்டம் 2018ஆம் ஆண்டில் நிறைவு பெற்றுள்ளது.

✶ தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் நூல் விநியோகம் மற்றும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் முறையே அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் என 6 ஆலைகள் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சு கொள்முதல், தொழிலாளர்கள் ஊதியம், மின்கட்டணம் போன்ற செலவினங்களை எதிர்கொண்டு தொழிலாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பும், அரசு திட்டங்கள் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்வதை உறுதி செய்யவும் நடைமுறை மூலதனமாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு வழிவகை கடனாக ரூ.33 கோடி ஜூலை 2019இல் வழங்கியுள்ளது.

✶ மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 29.06.2017 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் பகுதி–பெறுகை கடன் தொகையானது, உறுப்பினர் திட்டத்தில் சேர்ந்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பெற இயலும் என்ற விதிமுறையை தளர்த்தி, உறுப்பினர் திட்டத்தில் சேர்ந்த நாளிலிருந்து 5 ஆண்டுகளில் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 59,955 நெசவாளர்கள் உறுப்பினராக சேர்க்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

✶ 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட “கைத்தறி ஆதரவுத் திட்டம்” என்னும் புதிய திட்டத்தினை அரசு செயல்படுத்தும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.40 கோடியை அத்திட்டத்தை செயல்படுத்த அரசு ஒப்பளிப்பு செய்தது. “கைத்தறி ஆதரவுத் திட்டம்” 2019–2020 ஆண்டிலும் தொடரும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.40 கோடி நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்யப்பட்டு தற்பொழுது சிறப்பாக செயலாக்கப்பட்டு வருகிறது.

✶ 2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 முதல் 29 முடிய கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில், ஜவுளித் தொழிலின் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள தொழில்முனைவோர்களால் பஞ்சு, நூல் முதல் ஆயத்த ஆடை வரையிலான ஜவுளித் தொழில் தொடரில் உள்ள அனைத்து பொருட்களும் காட்சிப்படுத்தப் பட்டன. இக்கண்காட்சியினை அகில இந்திய அளவிலும், அயல்நாடுகளிலிருந்தும் சுமார் 25,000 பார்வையாளர்கள் பார்வையிட்டனர். இதில் குறிப்பாக 150க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் கலந்து கொண்டனர்.

கோ–ஆப்டெக்ஸ்

✶ கோ–ஆப்டெக்ஸ் இணையதளம் மின் வணிகம் மூலமாக 15.12.2019 வரை ரூ.371.25 இலட்சம் விற்பனை செய்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ், தனியார் விற்பனை நிலையங்களின் தரத்திற்கு இணையாக (நாமக்கல், தென்காசி, தூத்துக்குடி, மைசூர், புனே, திருவண்ணாமலை, வேலூர், கோயம்புத்தூர்,

நாகப்பட்டினம், திருச்சி, பொதிகை, தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பழனி, பட்டுக்கோட்டை, விருத்தாச்சலம், விழுப்புரம், பெரியகுளம் மற்றும் கோவா) என 17 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியுள்ளது.

- ✶ கோ–ஆப்டெக்ஸ் தனது வாடிக்கையாளர்களை கவரும் விதத்தில் புதிய ரகங்களான அகிம்சா பட்டுசேலைகள், இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி சேலைகள், லினன் காட்டன் சேலைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி உள்ளது. பட்டு / பருத்தி ஸ்டோல் / துப்பட்டா பெண்களுக்கான பருத்தி ஆடைகள், ஆயிரம் புட்டா பருத்தி சேலைகள், கை அச்சிடப்பட்ட தூய பருத்தி சேலைகள், நவநாகரீக மகளிர் பைகள், மாணவர்களுக்கான இலகு படுக்கைகள், பயணத்திற்கு உகந்த இலகு படுக்கைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி உள்ளது கோ–ஆப்டெக்ஸ் 15.12.2019 வரை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 3,154 புதிய இரக வடிவமைப்புகளை வடிவமைத்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ் 16.02.2017 முதல் 15.12.2019 வரையிலான காலக்கட்டத்தில் ரூ.792/– கோடிக்கு விற்பனை செய்துள்ளது.
- ✶ கோ–ஆப்டெக்ஸின் மொத்த நடைமுறை பணிகளும் நெசவாளர்கள் முதல் நுகர்வோர் வரையிலான அனைத்து வகையான நடவடிக்கைகளும் தேவையான கணினி உபகரணங்களில் பணியாற்ற ஊழியர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டு ஆன்–லைன் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.
- ✶ இன்ஃபோடெக்ஸ் செயல்பாட்டு நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- ✶ கோ–ஆடெக்ஸில் உள்ள அனைத்து விற்பனை நிலையங்கள், சேமிப்புக் கிடங்குகள், ஒப்பந்த விற்பனை நிலையங்களின் அனைத்துச் செயல்பாடுகளும் 01.04.2019 முதல் கணினிமயமாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதர செயல்பாடுகள் அனைத்தும் 31.01.2020க்குள் முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- ✶ பசுமை ஆற்றலை உருவாக்கும் விதமாக, கோ–ஆப்டெக்ஸ் 10 கிலோவாட்ஸ் சூரிய சக்தி அலகு, தலைமை அலுவலக வளாகத்தில் நிறுவியுள்ளது. இதன்மூலம், கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக பயன்பாட்டு மின் கட்டணத்தை பெருமளவில் குறைக்க முடிந்துள்ளது.

பட்டு வளர்ச்சித்துறை

- ✶ உயர்விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை 11,175.99 ஏக்கரில் நடவு செய்த 7,631 விவசாயிகளுக்கு ரூ.1,214.65 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 4,605.66 ஏக்கர் மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்த 2,713 விவசாயிகளுக்கு ரூ.1,356.69 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2,523 தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில்கள் நிறுவிய விவசாயிகளுக்கு ரூ.2,073.49 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் 3,017 பட்டு விவசாயிகளுக்கு ரூ.1,585.67 இலட்சம் மதிப்பிற்கு பட்டுப் புழுவளர்ப்புத் தளவாடங்களும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ மாநிலத்தில் பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய பிரிவினை வலுப்படுத்தும் நோக்கில், 400 முனைகள் கொண்ட 3 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள், 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகு, ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு, 25 பல்முனை பட்டு நூற்பு அலகுகள் மற்றும் 3 பட்டு முறுக்கேற்றும் அலகுகள் ரூ.764.72 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டு வருகிறது.
- ✶ 2017–2018ஆம் ஆண்டில், ஒரு கிலோ கிராமிற்கு ரூ.100/– வீதம் 19,973 கிலோ கிராம் வெண்பட்டு நூல் உற்பத்திக்கான ரூ.19.973 இலட்சம் ஊக்கத்தொகையாக பட்டு நூற்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ பட்டு வளர்ச்சித்துறையில் காலியாக இருந்த பணியிடங்களில் 12 உதவி ஆய்வாளர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டனர். மேலும், 395 இளநிலை ஆய்வாளர்கள் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளன.
- ✶ 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்த சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரூ.41.70 இலட்சம் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. மாநில அளவில் மிகச்சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.75,000, ரூ.50,000மும்,

மாவட்ட அளவில் மிகச்சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ.25,000, ரூ.20,000, ரூ.15,000மும் வழங்கப்படுகிறது.

* 2018–2019ஆம் ஆண்டில் ஐந்து ஆதார பட்டு விதைப் பண்ணைகளை வலுப்படுத்திட ரூ.25 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாட்டில் பட்டு முட்டைகளை பாதுகாப்பாகப் பேணுவதற்கு மேலும் ஒரு பல்நிலை குளிர்பதன அலகு ரூ.150 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டு வருகிறது.

* மாநிலத்தில் 'அஹிம்சா' பட்டினை உற்பத்தி செய்யவும், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பூர்வ குடிமக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி தரவும் ரூ.176.816 இலட்சம் மதிப்பீட்டில் ஈரி பட்டுப்புழு வளர்ப்பு ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

* சேலம் மாவட்டம் ஏற்காடு சுற்றுலா தலத்தில் ரூ.250 இலட்சம் மதிப்பில் "பட்டு உலகம்" எனும் நிரந்தர அரசு கண்காட்சி அரங்கு கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

* இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் மத்திய பட்டு வாரியம், புதுதில்லியில் 09.02.2019இல் நடத்திய "சா்ஜிங் சில்க்" விழாவில் மத்திய பகுதி திட்டமான "சில்க் சமக்ரா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய மாநிலம் (Best Silk Samagra Scheme Implementing State)" என்ற விருது பட்டுவளர்ச்சித் துறைக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

* திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் இயங்கி வரும் சோப்பு உற்பத்தி அலகு வளாகத்தில் ரூ.250 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டது.

* கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் உள்ள பீங்கான் கலைக்கூடத்தில் ரூ.25 இலட்சம் செலவில் புதிய சூளை நிறுவப்பட்டது.

* திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டியில் இயங்கி வரும் ஜவ்வாது உற்பத்தி அலகில் ரூ.40 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டது.

* 2016–2017ஆம் ஆண்டிற்கு சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 413 நூற்பாளர்களுக்கு இராட்டைகளும், 50 நெய்வோர்களுக்கு தறிகளும் ரூ.174 இலட்சம் செலவில் வழங்கி அதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டது.

* 2016–2017ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் இயங்கி வரும் தச்சு மற்றும் கொல்லு அலகில் ரூ.65 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது.

* 2016–2017ஆம் ஆண்டிற்கு சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 587 நூற்பாளர்களுக்கு இராட்டைகளும், 50 நெய்வோர்களுக்கு தறிகளும் மொத்தம் ரூ.245 இலட்சம் செலவில் வழங்கி அதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளது.

* 8,175 மண்பாண்ட கைவினைஞர்களுக்கு நவீன மின் சைலாவீல்களை வழங்கிட அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து முதல் கட்டமாக 2016–2017ஆம் ஆண்டிற்கான 2,000 சைலாவீல்களை (ஒவ்வொன்றும் ரூ.20,400/– மதிப்பிலானது) மண்பாண்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

* 2017–2018ஆம் ஆண்டில் மண்பாண்ட கூட்டுறவு சங்கங்களில் மண்பாண்டங்கள் செய்வதற்காக ஐந்து புதிய தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு தொகை ரூ.100 இலட்சமும், வேறு ஐந்து மண்பாண்ட கூட்டுறவு சங்கக் கட்டடங்களை பழுது பார்த்திட ரூ.100 இலட்சம் மானியமாகவும் வழங்கிட அரசு ஆணையிட்டதை தொடர்ந்து இப்பணிகள் முடிக்கப்பட்டது.

* மண்பாண்ட தொழிலாளர்களுக்கு வருடந்தோறும் ரூ.4,000/– என வழங்கப்பட்டு வந்த மழைக்கால பராமரிப்பு உதவித் தொகையை 2017–2018ஆம் ஆண்டு முதல் ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிட்டதை தொடர்ந்து 2017–2018, 2018–2019ஆம் ஆண்டில் 24,288 மண்பாண்ட பயனாளி குடும்பத்திற்கு ரூ.5,000/– வீதம் ரூ.12,14,40,500 அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

* சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் ரூ.30 இலட்சம் செலவில் திரவ சோப்பு மற்றும் ஷாம்பு தயாரிக்கும் அலகு நிறுவப்பட்டுள்ளது.

- ✶ திண்டுக்கல் மாவட்டம், வேடப்பட்டியில் ரூ.6 இலட்சம் செலவில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் அலகு நிறுவப்பட்டுள்ளது.
- ✶ புதிய நறுமணங்களில் இரண்டு சோப்புகள் (லேவண்டர் மற்றும் சிவப்பு சந்தனம்) அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை.
- ✶ திருச்சி மாவட்டம், சமயபுரம் குளியல் சோப்பு உற்பத்தி அலகின் உற்பத்தி தடைபெறாமல் இருக்க ரூ.10 இலட்சம் செலவில் ஜெனரேட்டர்.
- ✶ திருநெல்வேலி மாவட்டம், காருக்குறிச்சியில் செயல்பட்டு வரும் மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் உள்ள 4 கட்டடங்கள் ரூ.60.83 இலட்சம் செலவில் புனரமைப்பு.
- ✶ வேலூர் மாவட்டம் உதவி இயக்குநர் கதர் கிராமத் தொழில்கள் அலுவலகம் மற்றும் கதர் கிடங்கு கட்டடம் ரூ.17.90 இலட்சம் செலவில் புனரமைப்பு.
- ✶ கரூர் மாவட்டம், உதவி இயக்குநர் கதர் கிராமத் தொழில்கள் அலுவலகம் மற்றும் கதர் கிடங்கு கட்டடம் ரூ.18 இலட்சம் செலவில் புனரமைப்பு.
- ✶ பள்ளிகொண்டா தச்சு கொல்லு அலகிற்கு நவீன கம்ப்ரைசர் இயந்திரம், அரக்கோணம் தச்சுக் கருமார அலகிற்கு நவீன மரம் இழைக்கும் இயந்திரம் மற்றும் திண்டுக்கல் வேடப்பட்டி அலகுக்கு கப் சாம்பிராணியை உலர வைக்கும் இயந்திரம் ஆகியவை ரூ.4 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன.
- ✶ அம்பத்தூர் காலணி அலகின் உற்பத்தியினை அதிகரிக்கும் வகையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தோல் மடிக்கும் இயந்திரம் மற்றும் ஒரு காலணி அடிப்பாகம் தைக்கும் இயந்திரம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளது.
- ✶ சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் ரூ.30 இலட்சம் செலவில் திரவ சோப்பு மற்றும் ஷாம்பு தயாரிக்கும் அலகு நிறுவப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்ட “சாரல்” கூந்தல் ஷாம்பு, “எழில்” குளியல் சோப்பு, “வைகை” கை கழுவும் திரவம் ஆகியன அறிமுகம்.
- ✶ செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் குளியல் சோப்பு அலகில் உற்பத்தி செய்யப்படும் சோப்புகளின் அமைப்பு சீராக இருக்க ஏதுவாக

முத்திரை பதிக்கும் இயந்திரம் ரூ.3 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

* மதுரை மாவட்டம், மேலமாசி வீதியில் உள்ள கதரங்காடி கட்டடத்தினை ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய "காதி மார்ட்" என்ற பெயரில் புனரமைப்பு.

* ரூ.41.15 இலட்சம் செலவில் உதகை கதரங்காடி புனரமைப்பு.

* திருநெல்வேலி மாவட்டம், தேன் பொத்தை மற்றும் இலஞ்சி மண்பாண்ட தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு முறையே ரூ.66 இலட்சம் மற்றும் ரூ.50 இலட்சம் செலவில் தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* மாநிலம் முழுவதும் செயல்படும் 10 காலணி அலகுகளுக்கு தேவையான தோல் தைக்கும் இயந்திரங்கள் ரூ.3 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

* மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டை மற்றும் திருப்பூர் மாவட்டம் திருப்பூர் தச்சுக் கொல்லு அலகு ஆகியவற்றிற்கு ரூ.6 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளன.

* ஆறு தளங்களை கொண்ட சென்னை குறளக பிரதான கட்டடத்தில் தீ தடுப்பு சாதனங்களான Fire Hydrant System மற்றும் Fire alarms ஆகியவை தொகை ரூ.22.56 இலட்சம் செலவில் பொருத்தம்.

* சென்னை குறளக கட்டடத்தில் இயங்கும் பிரதான கதரங்காடியில் பட்டு விற்பனைக்கென தனியே நவீன குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையம் தொகை ரூ.9.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

* கதராணைக்குழு நிதியுதவியின் கீழ், ரூ.88.77 இலட்சம் செலவில் கடலூர், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய கதரங்காடிகள் புனரமைக்கப்பட்டுள்ளது.

* ரூ.7 இலட்சம் செலவில் மதுரை மாவட்டம் கோடாங்கிபட்டி மெத்தை உறைகள் தைக்கும் அலகில் மராமத்து பணிகள் செய்து நவீன தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

* நடப்பாண்டில், திண்டுக்கல் மாவட்டம், வேடப்பட்டி ஜவ்வாது அலகில் மூலிகை பல்பொடிகள் தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களை அரவை செய்வதற்கு ரூ.2 இலட்சம் செலவில் அரவை இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

* நடப்பாண்டில் நாகர்கோவில் மாவட்டத்தில் அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்திற்கு கொள்முதல் செய்யப்படும் தேனை சேமித்து வைக்க எவர்சில்வர் டிரம்கள் 50 எண்கள் ரூ.6 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

* தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.35.19 கோடி விற்பனையும், 2018–2019ஆம் ஆண்டில் ரூ.42 கோடி விற்பனையும் அடைந்துள்ளது. இந்நிறுவனத்தின் வளர்ச்சி செயல்பாடுகள் மூலம் மாநிலத்தின் கைவினைஞர்கள் நேரடியாகப் பயன் பெறும் வகையில் அவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த உதவி வருகிறது. 2019–2020ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.45 கோடி விற்பனை எய்தும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

* இக்கழகம் 2018–2019ஆம் ஆண்டில் உற்பத்தி ரூ.312.91 இலட்சம் அடைந்துள்ளது. 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.550 இலட்சம் உற்பத்தி எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும், கைவினைஞர்களின் பயன்பாட்டிற்காக 5 உற்பத்தி நிலையங்களில் பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொது பயன்பாட்டு மையங்களில் நவீன வடிவமைப்புகளை உருவாக்குவதற்கான இயந்திரங்கள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

* கைவினைஞர்கள் தங்களுடைய பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்நிறுவனம் மூன்றாண்டுகளில் இதுவரை 301 கண்காட்சிகளை நடத்தியுள்ளது.

பூம்புகார் விருதுகள்:

* **"வாழும் கைவினைப்பொக்கிஷம் விருது":** அரசு அறிவித்தப்படி தமது வாழ்நாளில் கலையை வாழ்விக்கவும், அதன் மேம்பாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன்

முதலாக "வாழும் கைவினைப் பொக்கிஷம்" எனும் புதிய விருதினை அறிமுகப்படுத்தி 2013–2014ஆம் ஆண்டிற்காக 10 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசும், 8 கிராம் தங்கப் பதக்கமும், தாமிரப் பத்திரமும், சான்றிதழும் 28.08.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்த விருது ஆண்டுதோறும் 10 கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாண்டும் 7 கைவினைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.02.2019 அன்று விருதுகள் வழங்கப்பட்டது.

✶ **"பூம்புகார் மாநில விருது"**: தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த சிறந்த 10 கைவினைஞர்களை தேர்வு செய்து இந்நிறுவனம் வருடந்தோறும் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது பெற்ற கைவினைஞர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3,000/– பெற தகுதி உடையவராகிறார்கள். இவ்வாண்டும் 10 கைவினைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.02.2019 அன்று விருதுகள் வழங்கப்பட்டது.

✶ **"பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது"**: 2011–2012ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, இவ்விருதுடன் ரூ.10,000/– ரொக்கப் பரிசும், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவ்விருது ஆண்டுதோறும் 85 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

✶ **அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான விருதுகள்:** தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்துதல் அவசியமாகிறது. இதனை செயல்படுத்தும் வகையில் 2013–2014ஆம் ஆண்டு முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்களுக்கு "கைத்திறன் போட்டி", அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டியில் சுமார் 150 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2,000/– ரொக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

✶ **கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது:** தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு "கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது" 2014–2015 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, இவ்விருது ரூ.2.50 இலட்சம் செலவில் ஒவ்வோர் ஆண்டும் இரு நபர்களுக்கு வழங்கப்படும். இவ்விருது ரூ.40,000/– ரொக்கப்

பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

- **குழு உற்பத்தி விருது:** கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருதுக்காக இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் "குழு உற்பத்தி விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் 3 குழுக்களுக்கு ரூ. 3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.40,000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

- **பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது:** கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல கலைப்படைப்புகளும் பெரும்பாலும், அலங்காரம் சார்ந்தோ அல்லது மதம் சார்ந்தோ அமைகின்றன. எனவே பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், "பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஆண்டுதோறும் 3 கைவினைஞர்களுக்கு ரூ.3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.40,000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

- **குருகுலம்:** இந்நிறுவனம் பாரம்பரிய முறைப்படி பஞ்சலோக சிற்பம் தயாரிக்கும் முறைக்கு புத்துயிர் கொடுக்கும் வகையில் பஞ்சலோக சிற்ப கைத்திறத் தொழிலில் 3 ஆண்டு "குருகுலம்" பயிற்சித் திட்டம் ஒன்றினை தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.30 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டத்தில் நடத்தி 29.03.2018 அன்றுடன் நிறைவடைந்தது.

- **திருநங்கைகளுக்கு கைத்திறத் தொழில்களில் பயிற்சி வழங்குதல்:** 2015ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கால் பெரும் சேதம் அடைந்த கடலூர் மாவட்டத்தில் திருநங்கைகளின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக, தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூ.7 இலட்சம் செலவில் 50 திருநங்கைகளுக்கு வாழை நார் கைத்திறத் தொழிலில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் 3 மாத காலம் பயிற்சியளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ்,

- தஞ்சாவூரில், தஞ்சாவூர் கலைத்தட்டு 3 மாத கால பயிற்சி 40 கைவினைஞர்களுக்கும், நாச்சியார்கோவிலில், பித்தளை விளக்கு மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் 3 மாதகால பயிற்சி 40 கைவினைஞர்களுக்கும், மதுரையில், பித்தளை விளக்கு மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் 3 மாதகால பயிற்சி 40 கைவினைஞர்களுக்கும், சுவாமிமலை உற்பத்தி நிலையத்தில் பஞ்சலோக சிற்பத்தில் 3 மாதகால பயிற்சி 40 கைவினைஞர்களுக்கும் வழங்கப்பட்டது.

- தம்மம்பட்டியில் மரச்சிற்ப கைத்திறத் தொழிலில் 3 மாத கால பயிற்சி 40 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், 200 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

- ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டத்தின் மூலம் பல்வேறு கைத்திறத் தொழில்களில், 1 மாதகால பயிற்சி. 30 கைவினைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இந்நிறுவனத்தால் இதுவரை 24 கைத்திறத்தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 3 கைத்திறத் தொழிலில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 810 கைவினைஞர்கள் பயன்.

கன்னியாகுமரி நகர்ப்புற குடில்

- இந்நிறுவனம் கன்னியாகுமரியில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் ஒரு நிரந்தர கண்காட்சி திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசு பங்கு ரூ.140 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.60 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.40 இலட்சம் ஆகும். இந்த கண்காட்சித்திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டு இயங்குகிறது. மேலும், இவ்வாண்டு கைவினைஞர்களின் பயன்பாட்டிற்கு கூடுதலாக 14 விற்பனை கடைகள் கட்டப்பட்டு வருகிறது.

- **மாமல்லபுரம் நகர்ப்புற குடில்:** தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.5 கோடி மதிப்பில் ஒரு

நகர்ப்புற குடில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்துள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.2.10 கோடியும், மாநில அரசு ரூ.1.90 கோடியும் நிதி வழங்கியுள்ளது. இக்கட்டுமானப்பணி நிறைவடைந்து 08.03.2018 அன்று துவக்கப்பட்டது.

மின் தொகுப்பு களஞ்சியம்:

* கைவினைஞர்களுக்கான மின் தொகுப்பு ஏற்படுத்த தமிழ்நாடு அரசு ரூ.1 கோடி நிதி வழங்கியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு கைவினைஞர்களுக்கும் தனித்தனியாக இணையதள பக்கங்கள் (webpage) உருவாக்கப்பட்டு, அவற்றில் கைவினைஞர்கள் மற்றும் அவர்களது படைப்புகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்த மின் தொகுப்பு களஞ்சியம் 12.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

கைவினைஞர்கள் தினம்

* அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.35 இலட்சம் செலவில் “கைவினைஞர்கள் தினம்” மார்ச் 5ஆம் நாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும்.

* இவ்வாண்டு கைவினைஞர் தின விழாவின் ஒரு பகுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைசிறந்தகைவினைஞர்களுக்கு 19.02.2019 அன்று 7 வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதினையும், 10 பூம்புகார் மாநில விருதினையும் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து 01.03.2019 அன்று மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள் 85 சிறந்த கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாவட்ட விருதினையும், 3 பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருதினையும், 3 குழுவினருக்கு குழு உற்பத்தி விருதினையும், 150 கைவினைஞர்களுக்கு அடுத்த தலைமுறை விருதினையும் வழங்கி விழாவினை சிறப்பித்தார்கள்.

நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல்

* தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத் தொழில்களான களிமண் தொழில் குனியூரிலும், சுடுமண் தொழில் விக்கிரவாண்டியிலும், கோரைப்புல் பத்தமடையிலும் மற்றும் பனை ஒலைப் பொருட்கள் இராமநாதபுரத்திலும், தமிழக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வொரு கைத்திறத் தொழிலுக்கும் ரூ.47 இலட்சம் செலவில் பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

* ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சியின் கீழ், மத்திய மற்றும் மாநில நிதி உதவி ஒவ்வொரு கைத்திறத்தொழிலுக்கும் ரூ.60 இலட்சம் செலவில் 11 பொது பயன்பாட்டு மையங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 2,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

- ✶ சிறந்த பணிக்கான சூழ்நிலை, திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்கான அறிமுகப்படுத்துதல் போன்ற வசதிகளை கைவினைஞர்களுக்கு மூன்று ஆண்டுகளில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்திய அரசு இத்திட்டத்தின் கீழ், இந்திய அரசின் பங்கு ரூ.17.14 கோடி மற்றும் தமிழக அரசின் பங்கு ரூ.3.24 கோடி மொத்தம் ரூ.20.38 கோடி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 10,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

இலவச உபகரணங்கள் வழங்குதல்

- ✶ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைவினைஞர்களுக்கு ரூ.5,000 மதிப்பிலான இலவச உபகரண பொருட்களை வழங்கும். இதுவரை 4,000 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

- ✶ பனை தொழிலை மேம்படுத்திடவும் குறிப்பாக பனை வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட உடனடி சுக்கு காபி பவுடர் (Palm Jaggery Mixed Instant Sukku Coffee Powder) 100 கிராம் அளவு கொண்ட பைகளில் அடைக்கும் தானியங்கி இயந்திரம் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

- ✶ ரூ.3.50 இலட்சம் செலவில் பனை வெல்லம் உலர வைக்கும் (Palm Jaggery Drier) நவீன தானியங்கி இயந்திரம் ஒன்றினை தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்து பயன்படுத்திட அரசு அனுமதி அளிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ பனை மரம் தமிழ்நாட்டின் மாநில மரமாகும். பனை மரத்தில் இருந்து கிடைக்கும் மூல பொருட்களை பயன்படுத்தி அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பலவகைப்பட்ட உண் மற்றும் உண்ணா பொருட்களையும், கதர் கிராமத் தொழில் பொருட்களையும் சென்னை நகரை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளிலும் விற்பனை செய்திட ஏதுவாக ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு நடமாடும் வேன்களை தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்து பயன்படுத்திக் கொள்ள தமிழக அரசு அனுமதி அளிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ இயற்கை சுவைநீரான பதநீரைக் கொண்டு தயாரிக்கப்படும் பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனைவெல்லம் கலந்த சுக்குகாபி தூள், பனங்கற்கண்டு, சுக்கு மிட்டாய், இஞ்சி மிட்டாய் மற்றும் சாக்லேட் போன்ற உண்ணும் பொருட்களும், உண்ணா பொருட்களான பனந்தூரிகைகள், அழகிய பனைஓலை பொருட்கள், பனை நார் பொருட்கள் இவைகளுடன் கதர் கிராம தொழில் பொருட்களையும் நடமாடும் வேன்கள் மூலமாக சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகம், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை டி.எம்.எஸ். வளாகம் மற்றும் சென்னை டி.பி.ஐ. வளாகம் போன்ற இடங்களில் அனைத்து பனை பொருட்கள் மற்றும் கதர் கிராம பொருட்கள் விற்பனை செய்திட முடிவெடுக்கப்பட்டு, முதற்கட்டமாக சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகம், குறளகம், மெட்ரோ இரயில் நிலையம், கோயம்பேடு பேருந்து முனையம் ஆகிய இடங்களிலும், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அனைத்து வகையான பனைப்பொருட்களை இளையோர் முதல் முதியோர் வரை வாங்கி பயன்படுத்தி நன்மை அடைந்திட வேண்டி மதுரை உயர்நீதிமன்ற வளாகத்திலும், முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர். அப்துல் கலாம் நினைவிடம் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டம் பேய் கரும்பு என்ற இடத்திலும், சேலம் மாவட்டத்தின் சுற்றுலா தலமான ஏற்காட்டிலும் பனை பொருள் விற்பனை நிலையம் அமைத்து, அனைத்து வகையான பனைப்பொருட்களும், கதர் கிராமத்தொழில் பொருட்களும் ஏழை பனை தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட அரசு தொடர்ந்து உதவி நல்கி வருகிறது.

❖ ❖ ❖

* முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் சிறப்பு அம்சங்களுடன் 11.01.2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 2 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை டிசம்பர் 2018 முதல் 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1,027 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்கு மேலாக இம்மாநிலத்தில் வசிக்கும் கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும், மாநில அரசால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்களுக்கும் காப்பீடு அட்டை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 16.02.2017 முதல் 10.12.2019 வரை 21.50 இலட்சம் நபர்களுக்கு (நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொண்ட பயனாளிகள் உள்பட) 2,873 கோடியே 39 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொகுப்பு நிதியிலிருந்து 4,146 நோயாளிகளுக்கு சிறப்பு அறுவை சிகிச்சைகள் 340 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளது.

* மத்திய அரசின் முக்கிய திட்டமான பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம், தமிழ்நாட்டின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தோடு செப்டம்பர் 2018 முதல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

* டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் 21.46 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 2,009 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி 01.04.2018 முதல் 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டம், 2018 ஏப்ரல் மாதம் முதல் இத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

* சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டத்தில், 32,249 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

* இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்ட மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம், 5,282 மருத்துவர்கள் 3,240 செவிலியர்கள் உட்பட 13,437 பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

* நடமாடும் மருத்துவமனை திட்டத்தில் 6.04 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு, 5.09 கோடி நபர்கள் பயனடைந்துள்ளனர்.

* 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில், 9.31 இலட்சம் கர்ப்பிணித்தாய்மார்கள் உட்பட 37.95 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்காக, அவசரம்

108 என்ற ஆண்ட்ராய்டு கைப்பேசிக்கான செயலியையும், 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநருக்கான செயலியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மேலும், 11 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் GPS பொருத்தப்பட்ட 72 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்கள் தொடங்கி வைக்கப்பட்டது.

- “104” மருத்துவ தகவல் சேவை மையம் மூலம் 6.95 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் 13.13 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.177.81 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.
- அம்மா ஆரோக்கிய திட்டம், 501 மேம்படுத்தப்பட்ட / வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. 41.05 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியில், உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் ரூ.91 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவு மற்றும் ரூ.16.11 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் கேத் லேப் கருவி ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.03.2017 அன்று திறந்து வைத்தார்கள். மேலும், ரூ.35.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன இருதய சிகிச்சை அறுவை அரங்கம், தோரண நுழைவு வாயில், தீவிர சிகிச்சைப் பிரிவு, நவீன ஒலி – ஒளி அரங்கம் ஆகியவற்றை 14.11.2018 அன்று திறந்து வைத்தார்கள்.
- சென்னை மண்டலத்தைச் சார்ந்த சென்னை அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் முதல்வர் குடியிருப்பு, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவு, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 4 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 3 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் ஆறு செவிலியர் குடியிருப்புகள் என ரூ.9.40 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்.
- சேலம் மண்டலத்தில், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.18.81 கோடி செலவில் முதுநிலை / இளநிலை இருப்பு / கட்டாய உள்தங்கு பயிற்சி மாணவர் தங்கும் விடுதிகள், குடியிருப்பு கட்டடம், வாழப்பாடி அரசு மருத்துவமனையில் பல்வேறு பிரிவுகளுக்கான கட்டடம், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் மற்றும் செவிலியர் தங்கும் விடுதிகள், காத்திருப்போர் அறை மற்றும் வெளி நோயாளிகள் அறை என ரூ.29.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்கள் திறப்பு.
- திருச்சிராப்பள்ளி மண்டலத்தில், திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர்மாவட்டங்களில்நான்குமேம்படுத்தப்பட்ட

ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என ரூ.28.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்கள் 07.03.2017 அன்று திறப்பு.

✶ திருநெல்வேலி மண்டலத்தில், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.28.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம் மற்றும் செவிலியர் பள்ளி கட்டடம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.8.71 கோடி செலவில் பயிற்சி மாணவி மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதி, தேர்வுக்கூடம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு செவிலியர் தங்கும் விடுதி, ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என ரூ.41.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 19 கட்டடங்கள் 08.03.2017 அன்று திறப்பு.

✶ மதுரை மண்டலத்தில், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.7 கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி, இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செவிலியர் பள்ளி கட்டடம், திண்டுக்கல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம், விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.3.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளி, தீக்காய மற்றும் தலைக்காய சிகிச்சை மைய கட்டடம் மற்றும் மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், ஆறு செவிலியர் தங்கும் விடுதிகள், ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என ரூ.30.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய கட்டடங்கள் மற்றும் ஒரு எம்.ஆர்.ஐ. கருவி திறப்பு.

✶ கோயம்புத்தூர் மண்டலத்தில், வால்பாறை அரசு மருத்துவமனையில் ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கம், மருத்துவம் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டடங்கள், திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.3.33 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட கட்டடம் மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ கட்டடம், கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் தங்கும் விடுதி மற்றும் இரண்டு துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 புதிய கட்டடங்கள் திறப்பு.

✶ சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அரசு மருத்துவமனையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய கவனிப்பு பிரிவு, குழந்தைகள் பிரிவு கட்டடங்கள், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு புறநோயாளிகள் பிரிவு, கதிர்வீச்சு பிரிவு போன்ற கட்டடங்கள், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் இரத்த வங்கி; வேலூர் மாவட்டம் – வள்ளிப்பட்டு, தாமலேரிமுத்தூர், நாகவேடு, விழுப்புரம் மாவட்டம் – செங்குறிச்சி மற்றும் சீர்ப்பனந்தல், திருவள்ளூர் மாவட்டம் – வெள்ளியகரம், விருதுநகர் மாவட்டம் – விஸ்வநத்தம், கிருஷ்ணகிரி மாவட்டம் – தானம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – கரும்பனூர், தஞ்சாவூர் மாவட்டம் – ஒக்கநாடுகீழையூர் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்; திருவள்ளூர் மாவட்டம் – கொள்ளுமேடு, திருவாரூர் மாவட்டம் – ஆலங்குடி, வேலூர் மாவட்டம் – லாலாபேட்டை ஆகிய இடங்களில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் திறப்பு.

✶ புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 09.06.2017 அன்று தொடங்கப்பட்டது.

✶ சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில், ரூ.28.85 கோடி மதிப்பீட்டில் இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு மாணவர்களுக்காக கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம் திறப்பு.

- ✶ கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இளஞ்சிசு தீவிர பராமரிப்பு மையத்துடன் கூடிய மகப்பேறு பிரிவு கட்டடம், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு ரூ.80 இலட்சம் செலவில் கட்டப்பட்ட உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் பொது சுகாதாரத் துறையில் ரூ.5.5 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் திறப்பு.
- ✶ 11 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.3,000 மதிப்புள்ள ரோட்டா வைரஸ் தடுப்பூசி போடும் திட்டம் தொடக்கம்.
- ✶ 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.38.25 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.
- ✶ ரூ.45.40 கோடி செலவில் 36 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- ✶ திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடம் 27.10.2017 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.
- ✶ மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தை நல ஒப்புயர்வு மைய கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.
- ✶ ‘102’ இலவச தாய்சேய் ஊர்தி சேவை திட்டத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.3.13 கோடி மதிப்பீட்டில் 36 புதிய ஊர்திகள் 18.05.2017 அன்றும், ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் 15 புதிய வாகனங்கள் 04.02.2019 அன்றும் வழங்கப்பட்டது. அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த 5.21 இலட்சம் தாய்மார்கள் மற்றும் சேய்கள் பயனடைந்துள்ளனர்.
- ✶ காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.1.20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் திறப்பு.
- ✶ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள்.
- ✶ ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் அரசு மருத்துவமனையில், ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் ரூ.10.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்வேறு மருத்துவமனைக் கட்டடங்கள் மற்றும் ரூ.6.74 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கருவிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.02.2018 அன்று துவக்கி வைத்தார்கள்.
- ✶ சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமுறை மருத்துவமனை வளாகத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் ரூ.6.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பட்ட மேற்படிப்பு வளாகம் மற்றும் ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.02.2018 அன்று திறந்து வைத்தார்கள்.
- ✶ பயிற்சி மருத்துவ மாணவர்கள் மற்றும் அரசுப் பணியில் இல்லாத முதுநிலை பட்டம் / பட்டயம் மற்றும் உயர் சிறப்பு மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஊக்கத் தொகை, ஆண்டொன்றுக்கு ரூ.44.17 கோடி செலவில் 01.04.2018 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- ✶ சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.06.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 18,197 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.
- ✶ செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.96.31 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையக் கட்டடங்கள் கட்ட 06.11.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.
- ✶ தமிழ்நாட்டில், தாய்மார்கள் இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்ததற்காக மத்திய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து 29.06.2018 அன்று விருது பெறப்பட்டுள்ளது.

- கடந்த மூன்று ஆண்டுகளில் 500 மருத்துவ பட்டப்படிப்பு இடங்களும், 586 மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்களும், 141 உயர் சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்களும் அதிகரிக்கப்பு.
- தேசிய நெடுஞ்சாலையில் உள்ள செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கள்ளக்குறிச்சி, கும்பகோணம் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ரூ.28.30 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் தலைக்காய பிரிவுகள் வலுப்படுத்தல்.
- ஐ.ஆர்.டி. பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் செவிலியர் பயிற்சிப் பள்ளி, 2019–2020ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றம்.
- அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி. ஸ்கேன் மற்றும் கேத் லேப் கருவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.07.2018 அன்று திறப்பு.
- கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மருத்துவக் கல்லூரிகளில் ரூ.14.64 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள சி.டி. ஸ்கேன், கேத்லேப் கருவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.02.2018 மற்றும் 16.07.2018 அன்று திறப்பு.
- திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ.28.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் மருத்துவமனை, பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கான விடுதி, தேர்வுக்கூடம் போன்ற கட்டடங்கள் மற்றும் ரூ.10.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.07.2018 அன்று திறந்து வைத்தார்கள்.
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் ரூ.1,634 கோடி செலவில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.07.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடம், சீமாங்க் அறுவை அரங்கம் மற்றும் ரூ.10.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு மருத்துவக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.10.2018 அன்று திறந்து வைத்தார்கள்.

- தமிழக அரசின் தாய்சேய் நல சாதனைகளை பாராட்டி 05.10.2018 அன்று புதுடெல்லியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சிறப்பு விருது பெறப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உடல் உறுப்பு தானத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக தொடர்ந்து ஐந்தாவது முறையாக சிறந்த மாநிலம் என்ற விருதினை 30.11.2019 அன்று தமிழ்நாடு பெற்றுள்ளது. இதில் சிறப்பாக செயல்பட்டதற்காக சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை விருதினை பெற்றுள்ளது.

- திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 54 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கட்டடம் மற்றும் மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 57 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.12.2018 அன்று திறந்து வைத்தார்கள்.

- மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிகளில், தலா ரூ.150 கோடி மதிப்பீட்டில் விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகள் பாரதப் பிரதமர் அவர்களால் 27.1.2019 அன்று திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

- கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ.3.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள்ளிருப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் ரூ.47.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.03.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும், ரூ.4,000 மதிப்புள்ள இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தை 04.03.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

- கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 18 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு சிகிச்சை மையக் கட்டடம் மற்றம் ரூ.12.03 கோடி மதிப்பீட்டிலான மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24.06.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

- ✶ பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் கோயம்புத்தூர், தூத்துக்குடி, நாமக்கல், நீலகிரி, திருவள்ளூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய 8 மாவட்டங்களில் ரூ.9.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31.07.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

- ✶ புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கரூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு ரூ.115.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31.07.2019 அன்று திறந்து வைத்து, 150 மருத்துவ பட்டப்படிப்பு மாணவர்கள் சேர்க்கையுடன் முதலாம் ஆண்டு மருத்துவப் பட்டப்படிப்பு வகுப்பை தொடங்கி வைத்தார்கள்.

- ✶ மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பெட்–சிடி ஸ்கேன் கருவி சேவையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.11.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

- ✶ திருப்பூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மையம் கட்டடம் மற்றும் ரூ.12.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு மருத்துவ நிலைய கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.11.2019 அன்று திறக்கப்பட்டது.

- ✶ உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய விருதினை தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து 07.06.2019 அன்று பெற்றுள்ளது. ஸ்வஸ்தி பாரத் யாத்ரா நடத்திய மிதிவண்டி தொடர் பேரணியில் பங்கேற்ற அனைத்து மாநிலங்களில், தமிழ்நாடு சிறந்த மாநிலம் என்ற விருதும், இந்த பேரணியில் உணவு பகுப்பாய்வு செய்ததற்காக மதுரை மற்றும் சிவகாசிக்கும் சிறப்பாக செயல்பட்ட சிறந்த நகரங்கள் என்ற விருதும் வழங்கப்பட்டது.

- ✶ கிராமப்புற மக்கள் அனைத்து கண் நோய்களுக்கும் உயர் சிகிச்சை பெறும் வகையில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 32 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.5.67 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 32 நவீன இணைய வழி கண் பரிசோதனை மையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 02.12.2019 அன்று துவக்கி வைத்தார்கள்.

- ✶ தமிழ்நாட்டில் 40,533 தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 16 புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் ரூ.14.03 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தவும், 25 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் ஆய்வக வசதிகள் ஏற்படுத்தவும் அரசாணை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ✶ எழும்பூர் அரசு கண் மருத்துவமனையின் இருநூறாம் ஆண்டு விழாவை முன்னிட்டு, இம்மருத்துவமனையில் ரூ.65.60 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 9 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க, மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்தவக் கல்லூரியிலும் 150 எம்.பி.பி.எஸ். இடங்கள் என 1,350 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் அதிகரிக்கும். கட்டடப் பணிக்காக ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் தலா ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.

- ✶ அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம், ரூ.277.49 கோடி மதிப்பீட்டில் 1,970 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 2,028 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- ✶ கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 15 மாவட்டம் மற்றும் துணை மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள தாய்சேய்நலப் பிரிவுகள் 307 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புயர்வு மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- ✶ 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் சிமாங்க் மையங்கள் 130.50 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

- ✶ கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு 24 சிடி ஸ்கேன், 17 எம்.ஆர்.ஐ ஸ்கேன், 18 கேத் லேப் மற்றும் 681 டயாலிசிஸ் கருவிகள் 221.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

- ✶ உயர் கல்வித் துறையின் 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முறையே ரூ.3,680 கோடி, ரூ.4,620.20 கோடி மற்றும் ரூ.4,584.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✶ 2017–2018ஆம் ஆண்டு முதல் 2019–2020ஆம் கல்வியாண்டில் (i) தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, (ii) கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில், (iii) திருவாரூர் மாவட்டம் குடவாசல், (iv) விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் (மகளிர்), (v) நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி, (vi) ஈரோடு மாவட்டம் திட்டமலை, (vii) வேலூர் மாவட்டம் மாதனூர், (viii) திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் (ix) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் ஆகிய ஒன்பது இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் தொண்டாமுத்தூர் ஆகிய 3 இடங்களில் தலா ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. 411 கூடுதல் உதவி பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.
- ✶ 2018–2019ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டம், வனவாசி, கடலூர் மாவட்டம், கூடுவெளி, திருவள்ளூர் மாவட்டம், செவ்வாய்பேட்டை ஆகிய இடங்களில் 3 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஆகிய இடங்களில் உள்ள சுயநிதி பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் 2018–2019ஆம் கல்வியாண்டு முதல் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.
- ✶ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக 616 புதிய பாடப்பிரிவுகள் (207 இளங்கலை, 140 முதுகலை, 269 ஆராய்ச்சி) 2017–2018ஆம் ஆண்டு முதல் 2019–2020ஆம் ஆண்டு வரையில் துவங்கப்பட்டுள்ளன. சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருவள்ளூர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகங்களில் உள்ள உறுப்புக் கல்லூரிகளில் 89 புதிய பாடப்பிரிவுகள் 2017–2018ஆம் ஆண்டு முதல் 2018–2019 வரை துவங்கப்பட்டுள்ளன.
- ✶ 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டில், 862 வகுப்பறைகள் மற்றும் 172 ஆய்வகங்கள் 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டுவதற்கு அரசு ரூ.210 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 53 கல்லூரிகளில் கட்டுமான பணிகள் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளது. 15 கல்லூரிகளில் கட்டுமான பணிகள் விரைவில் முடிவடையும்.
- ✶ மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டை குறிக்கும் வகையில், காட்டுமன்னார்கோவில், கடலூர் மாவட்டம், விழுப்புரம் (மகளிர்), விழுப்புரம் மாவட்டம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம், குடவாசல், திருவாரூர் மாவட்டம், மாதனூர், வேலூர் மாவட்டம், சீர்காழி நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் ஆகிய இடங்களில்

2017–2018ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு டாக்டர் புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

- அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் மாணாக்கர்களுக்கு 720 மின்கற்றல் ஒளித்தொகுதிகள் (e-Learning Video Modules) தயாரிப்பதற்காக 2017–18 மற்றும் 2018–19ஆம் ஆண்டில் அரசு ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாணவர்களின் நலனுக்காக இந்த மின்கற்றல் ஒளித்தொகுதிகள் (e-Learning Video Modules) YouTubeலும் காணும் வசதி செய்யப்பட்டுள்ளன.

- அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் 100 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ், 62 அரசு கலை மற்றும் அறியியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வாங்கும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில், ரூ.48,79,650/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. குப்பைத் தொட்டிகள் வாங்கப்பட்டு அவை கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் 100 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டில் 62 அரசு கலை மற்றும் அறியியல் கல்லூரிகளில் ஆய்வக உபகரணங்கள் வாங்க ரூ.5,20,00,000/– நிதியும் மற்றும் ஆய்வகங்களை மேம்படுத்த ரூ.1,50,00,000/– நிதியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் கல்லூரிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்கும் பணி நடைபெற்று வருகிறது.

- 100 கோடி திட்டத்தின் கீழ், 6 மண்டல கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் 26 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் நூலகங்களை கணினிமயமாக்க ரூ.1,01,08,000 நிதி அரசு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 100 கோடி திட்டத்தின் கீழ், புதியதாக தொடங்கப்பட்ட 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தளவாடங்கள் வாங்க அரசு ரூ.1,86,61,855 நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 100 கோடி திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தளவாடங்கள் வழங்குவதற்காக அரசு ரூ.3,65,000நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட 10 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு, கூடுதல் வகுப்பறைகள் மற்றும் விடுதிகள் கட்டுவதற்கு ரூ.106.90 கோடி (ஒரு கல்லூரிக்கு ரூ.10.69 கோடி வீதம்) 2017–2018இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 9 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

- மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் பொருள் சேதமில்லா தரச்சோதனை பயிற்சி மையம் (NON DESTRUCTIVE TESTING TRAINING CENTRE) நிறுவுவதற்கு தொடராச் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 70% பணிகள் நிறைவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் முடிக்கப்படும்.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 2017–2018ஆம் ஆண்டில் 9,841 விலையில்லா மடிக்கணினிகளும், 2018–2019ஆம் ஆண்டில் 11,332 விலையில்லா மடிக்கணினிகளும் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் 11,553 விலையில்லா மடிக்கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன.

- முதல் தலைமுறை பட்டதாரி திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டில், ஒற்றைசாளர முறையில் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை முறையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற 2,17,396 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.434.56 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் கல்வியாண்டில் 1,91,268 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.402.69 கோடியும் மற்றும் 30.11.2019 வரையில் 1,22,685 மாணவர்களுக்கு ரூ.274.53 கோடியும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி, அரசினர் பொறியியற் கல்லூரியில் முதுநிலை கட்டமைப்பு பொறியியல் (M.E. STRUCTURAL ENGINEERING) மற்றும் முதுநிலை தொடர்பியல் (M.E. COMMUNICATION SYSTEM) ஆகிய இரண்டு புதிய முதுநிலை பட்டவகுப்புகள், ஒவ்வொரு பாடப்பிரிவுகளில் 18 மாணவர்கள் சேர்க்கை வீதம் 2017–2018ஆம்

கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது.

* 2017–2018ஆம் கல்வியாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில், பயன்பாட்டு மின்னணுவியல் (Applied Electronics), கணினி அறிவியல் மற்றும் பொறியியல் (Computer Science and Engineering) மற்றும் திறன் மின்னணுவியல் மற்றும் இயக்கிகள் (Power Electronics and Drives) ஆகிய பாடப்பிரிவுகளில் 18 மாணாக்கர்கள் சேர்க்கை வீதம் 3 முதுநிலை பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன.

* வேலூர் தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில், மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் (Electrical and Electronics Engineering) மற்றும் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் (Computer Science and Engineering) ஆகிய பாடப்பிரிவுகளில் 60 மாணாக்கர்கள் சேர்க்கை வீதம் 2 புதிய இளநிலை பாடப்பிரிவுகள் 2017–2018ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டுள்ளன.

* அரசு பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 188 உதவிப் பேராசிரியர்கள் 2017–2018ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் 1,060 விரிவுரையாளர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 27.11.2019 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம், 52 உதவியாளர்கள், 25 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், 55 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 105 தட்டச்சர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் தொழில்நுட்பக் கல்வித் துறையில் நிரப்பப்பட்டுள்ளன.

* அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 2,331 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியர்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தேர்வு தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 04.10.2019 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

* அணுக்கருவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக, மாணவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், ரஷ்யாவின் தேசிய அணு ஆற்றல் நிறுவனமான ‘‘ரொசோட்டம்’’ உடன் இணைந்து, ரூ.40 இலட்சம் மதிப்புள்ள அணுமின் உலைகள் குறித்த பகுதியை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திறன் கூட்டிய நிஜக் காட்சிப் படக்கருவி, எண்ணிலக்க நிஜநிலை தொழில்நுட்பம், வருகை தரும் பார்வையாளர்களின் கதிர் வீச்சு அளவுகளை அளிக்கும் கதிர் வீச்சு அளவி உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்மையம் 26.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது

* சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்காக 2017–2018ஆம் ஆண்டில், புதிய விடுதி ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது. இப்புதிய விடுதி கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.06.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

* சென்னை, மாநிலக் கல்லூரியில் ஏற்கெனவே உள்ள மகளிர் விடுதியினை புதுப்பித்தல், பராமரித்தல் மற்றும் கூடுதலாக புதிய மகளிர் விடுதி கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு 2019–2020ஆம் ஆண்டில் ரூ. 8,21,52,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் நடைபெற்றுவருகிறது.

* தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக அரசால் ரூ.1,69,60,429/–க்கு நிருவாக ஒப்பளிப்பும் மற்றும் ரூ.50,00,000/– 2017–2018ஆம் ஆண்டு நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டு இக்கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இக்கட்டடம் 19.02.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

* தஞ்சாவூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1,86,14,993/– செலவில் கட்டப்பட்டு 19.11.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

* 89 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் (மகளிர் மற்றும் இருபாலர்) தூய்மையை பராமரிக்கும் பொருட்டும் மற்றும் மாணவியர்களின் நலன் கருதியும், 108 நாப்கின் வழங்கும் இயந்திரத்தை வாங்குவதற்காக அரசால், ரூ.46,69,600/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வியந்திரங்கள் வாங்கப்பட்டு மேற்படி கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

* 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு தேவையான இருக்கைகள் மற்றும் மேசைகள் வாங்குவதற்கும், ஆசிரியர்களுக்கு தேவையான நாற்காலிகள் மற்றும் மேசைகள் வாங்குவதற்கும் ரூ.100 கோடி திட்டத்தின் கீழ் அரசு ரூ.1,86,61,855/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கல்லூரிகளுக்குத் தேவையான மாணாக்கர்கள்/ ஆசிரியர்களுக்கான இருக்கைகள் மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாங்கப்பட்டு ஆசிரியர்களுக்கும் / மாணவர்களுக்கும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.

* 100 கோடி திட்டத்தின் கீழ் 2018–2019ஆம் ஆண்டில் சென்னை, மாநிலக் கல்லூரியில் உள்ள பழமை வாய்ந்த விக்டோரியா மாணவர் விடுதி கட்டடம் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்காக ரூ.3.20 கோடி அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

* கும்பகோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) மற்றும் சென்னை இராணி மேரி கல்லூரி ஆகியவற்றில் பழமையான கட்டடங்களை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.20.84 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.

* சுற்றுச்சுவர் இல்லாத அரசு கல்லூரிகளை பாதுகாக்கும் நோக்கில் 2018–2019ஆம் ஆண்டில், 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 2 அரசு கல்வியியல் கல்லூரிகளில் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக அரசால் ரூ.37.52 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* திருநெல்வேலி, கோயம்புத்தூர், பர்கூர், சேலம், வேலூர் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளில் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.36,58,40,000/– மதிப்பீட்டில் கூடுதல் விடுதிகள் கட்டுவதற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில் திருநெல்வேலி மற்றும் காரைக்குடி பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் விடுதிகள் கட்டும் பணி நிறைவு பெற்றுள்ளது. மற்ற கல்லூரிகளில் விடுதி கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* உயர்கல்வியை, பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியில் உள்ள மாணவர்களுக்கும் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கும் பொருட்டு, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, 2018–2019ஆம் கல்வியாண்டில் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். இதில் முதற்கட்டமாக, 14 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி அரசு கல்லூரிகளாக 2019–2020ஆம் கல்வியாண்டில் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* தனியார் பங்களிப்புடன், உயர்கல்வியினை விரிவாக்கம் செய்யும் நடவடிக்கையாக தனியார் பல்கலைக்கழகம் துவங்குவதற்கு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்களின் சட்டம் 2019, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

* 2017–2018ஆம் ஆண்டில் 25 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2018–2019ஆம் ஆண்டில் 29 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 2019–2020ஆம் ஆண்டில் 30 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் துவங்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

* சேலம் மாவட்டம், எடப்பாடி, பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2018–2019ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட புதிய பாடப்பிரிவுகளுக்காக புதிய கட்டடம் 15 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள், 4 துறைகளுக்கான கட்டடங்கள், 1 தடுப்புச்சுவர், 1 முகப்பு வாயில், அணுகுசாலை (300 மீட்டர்), விளையாட்டு மைதானம் மற்றும் கழிப்பறைகளுடன் கொண்ட கட்டடங்களை கட்டுவதற்காக 2019–2020ஆம் ஆண்டில் அரசால் ரூ.5.21 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

* சிவகங்கை மாவட்டம், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியில் கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ரூ.2,88,73,000/– மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்களுக்காக ரூ.1,04,37,800/– என ஆக மொத்தம் ரூ.3,93,10,800/– நிருவாக/நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்றுவருகின்றன.

* 2018–2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் புதிய கழிவறை தொகுப்புகள் கட்டும் பணிகளுக்காக அரசால் ரூ.2,08,11,000/–க்கு நிருவாக/நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுவருகின்றன.

* தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (இருபாலர்) 12 வகுப்பறைகள், 4 ஆசிரியர் அறைகள் மற்றும் 2 கழிவறைத் தொகுப்புகளுடன் கூடிய புதியக் கட்டடம் கட்டும் பணிகளுக்காக 2018–2019ஆம் ஆண்டில் ரூ.2,61,96,450/–க்கு நிருவாக / நிதி

ஒப்பளிப்பு செய்யப்பட்டு அக்கட்டடங்களை 19.11.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

- ✶ வேலூர் மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 2018–2019ஆம் ஆண்டில் ரூ.1,54,40,824/–க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ✶ 16.11.2018 அன்று கஜா புயலினால் பாதிப்படைந்த, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 14 அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசால் ரூ.1,99,95,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ✶ அரசு பொறியியல் கல்லூரிகளில், முதுநிலை படிப்பிற்கான கல்வி உதவித்தொகையாக ஆண்டுக்கு ரூ.4.32 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில், 2017–2018ஆம் கல்வியாண்டில் ரூ.4.27 கோடி வழங்கப்பட்டு, 593 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் 2018–2019ஆம் கல்வியாண்டில் ரூ.4.26 கோடி வழங்கப்பட்டு 592 மாணவர்களும், 2019–2020ஆம் கல்வியாண்டில் ரூ.4.29 கோடி வழங்கப்பட்டு 597 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

- ✶ 160 ஆண்டுகள் பழமையும் வரலாற்றுப் பெருமையும் கொண்டு விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு சமூக சிறப்பு வளர்ச்சி ஆய்வு மையம் ஏற்படுத்த அரசு ரூ. 5 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரிய கட்டடங்களான நூலக கட்டடம், மணிகூண்டு கட்டடம் மற்றும் ஆட்சிப் பேரவை கட்டடம் ஆகியவற்றை பழுது பார்த்தல் மற்றும் இக்கட்டடங்களின் எழில்மிகு மற்றும் பாரம்பரியமிக்க தன்மைகளை தக்க வைத்து சிறப்பான முறையில் பராமரிக்க ஏதுவாக, மேலும், ரூ. 5 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ✶ “எண்ணிலக்க கோளரங்கம்” மற்றும் “கோளத்தில் அறிவியல்” எனும் கருவிகள் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் முறையே ரூ.10 கோடி மற்றும் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.11.2019 அன்று திறந்து வைக்கப்பட்டன.

- ✶ அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமத்தின் (AICTE) விதிமுறைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, மோகனூர், நாமக்கல் மாவட்டம் மற்றும் பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் ஆகிய இடங்களிலுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்காக முறையே ரூ.20.57 கோடி மற்றும் ரூ.16.50 கோடி ஆக மொத்தம் ரூ.37.07 கோடிக்கு அரசு நிருவாக ஒப்பளிப்பு அளித்துள்ளது. மேற்கண்ட இரு கல்லூரிகளில் கட்டுமான பணிகளை தொடங்க ஏதுவாக ஒரு கல்லூரிக்கு ரூ.2.5 கோடி வீதம் 2019–2020ஆம் ஆண்டில் ரூ.5 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ✶ தேனி, தஞ்சாவூர், தருமபுரி, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, வேலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில்நுட்ப கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகளை மேற்கொள்ள ரூ.60 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 16 அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் உபகரணங்கள் வாங்குவதற்கும், திண்டுக்கல், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரியில் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் கட்டுவதற்கும், மதுரை மண்டல வளாகத்தில் பெண்கள் விடுதி கட்டுவதற்கும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ரூ.40 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ✶ அழகப்பா பல்கலைக்கழகம் இந்தியாவின் முதல் 10 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டு, ரூசா 2.0 திட்டத்தின் கீழ் அதன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ரூ.100 கோடி சிறப்பு மானியத்திற்கு ஒப்புதல் பெற்றது. இதில் முதற்கட்டமாக, ரூ.40 கோடி (60% மத்திய அரசு பங்கு மற்றும் 40% மாநில அரசு பங்கு) விடுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ✶ ரூசா பகுதி–II, உபகரணம்–10 ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட மொத்த தொகையான ரூ.300 கோடியில், அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம் ஆகிய 6 மாநில பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.7.5 கோடி வீதம் மொத்தம் ரூ.45 கோடியினை (60% மத்திய அரசு பங்கு மற்றும் 40% மாநில அரசு பங்கு) விடுவித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில் புதியதாக இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ள 54 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான 331 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 50 ஆய்வகங்களை கட்டும் பணிகளுக்காக ரூ.79.63 கோடிக்கு நிருவாக அனுமதியும் மற்றும் மேற்படி கட்டடங்களை கட்டுவதற்காக 2019–2020ஆம் ஆண்டில் ரூ.40 கோடி நிதி ஒப்பளிப்பும் அரசால் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கலைக்கல்லூரி மாணவியர்களுக்கென ஒப்வறையுடன் கூடிய மாணவிகள் வசதி மையம் (Student Amenities Centre) அமைக்கும் பணிக்கென 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.35,28,104/–க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டுள்ளது.
- ✶ கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககம் ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் 3,534 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டுவதற்கு ரூ.10 கோடிக்கு நிருவாக அனுமதியும் மற்றும் மேற்படி பணிகளுக்காக 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.3 கோடிக்கு நிதி ஒப்பளிப்பும் அரசால் செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் 10 வகுப்பறை கட்டடங்கள், கருத்தரங்கு கூடம் மற்றும் பொது கருவிமயமாக்கல் ஆய்வுக் கூடம், சுற்றுச்சுவர், துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்ட அரசால் ரூ.30 கோடி நிருவாக ஒப்பளிப்பும், இப்பணிகளை மேற்கொள்ள 2019–2020ஆம் ஆண்டில் ரூ.12 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.
- ✶ மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளை உலக தரத்திற்கு மேம்படுத்திடும் வகையில் அதிநவீன உபகரணங்களுடன் கூடிய மையம் 2019–2020ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவ நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்கலைக்கழக அறிவியல் கருவிமயமாக்கல் மையம் 2019–2020ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ தேசியதர மதிப்பீட்டு மற்றும் அங்கீகார சான்றிதழ் (NAAC) பெறுவதற்காக, 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான மரத்தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் அக்கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூ.54 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ 92 அரசு கல்லூரிகளில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள ரூ.116 கோடிக்கு நிருவாக அனுமதியும் அதில் முதற்கட்டமாக

45 அரசு கல்லூரிகளுக்கு 2019–2020ஆம் ஆண்டில் ரூ.58 கோடிக்கு நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

* அரசால் அறிவிக்கப்பட்டபடி, ஆராய்ச்சி நிதிதிட்டத்தின் கீழ் ரூ.25 கோடி நிதியினை உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 13 பல்கலைக்கழகங்கள் பெற்றுள்ளன. உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி வசதிகளை ஊக்குவிக்கவும், ஆராய்ச்சி திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கும் பொருட்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

* கன்னியாகுமரியில் மாவட்ட அறிவியல் மையம் ரூ.15.20 கோடி மதிப்பீட்டில் (திட்ட செலவுக்கு 50:50 மற்றும் கார்பஸ் நிதிக்கு 20:80) இந்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் ஒப்புதலுடன் ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தேசிய அறிவியல் அருங்காட்சியக கவுன்சிலிலிருந்த (NCSM) எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வமைப்பிடமிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன், மாநில அரசு பங்காக ரூ.8.65 கோடி அனுமதித்து உரிய அரசாணை பிறப்பிக்கப்படும்.

* நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம், பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக்கட்டடம் கட்டுவதற்கு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.7,87,50,000/–க்கு நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

* 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான 1,550 கணினிகள் (Desktop Computer-Intel i5 4570 with Preloaded Windows Operating System) மற்றும் 62 தடையில்லா மின்வழங்கிகள் (5KVA On line UPS with 60 minutes SMF battery backup) வாங்குவதற்கு 2018–2019ஆம் நிதியாண்டில் ரூ.8.61 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டுள்ளது. கணினிகள் வாங்கப்பட்டு மேற்படி கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* தேனி மாவட்டம், வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதலாக 7 வகுப்பறைகள் கட்டும் பணிக்காக ரூ.86,50,660/– நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

* புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில், சங்கரன்கோவில் மற்றும் ஆலங்குளம், தென்காசி மாவட்டம் மற்றும் ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகிய இடங்களில் 3 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும்.

* 25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான இருக்கைகள் மற்றும் மேசைகளை TANSI நிறுவனத்திடம் இருந்து 100 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு, 2019–2020ஆம் ஆண்டில் அரசால் ரூ.4.93 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கென விடுதி கட்டடம் கட்டும் பணிக்காக 2019–2020ஆம் ஆண்டில் ரூ.5.10 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிறுவன வள திட்டமிடலை நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.1.15 கோடி நிருவாக அனுமதியும், 2019–2020 ஆண்டிற்கு ரூ.88.86 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் அரசால் செய்யப்பட்டுள்ளது.

* வேலூரில் உள்ள திருவள்ளுர் பல்கலைக்கழகத்தின் மூலம் கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திட்டக்குடி, அரக்கோணம், தென்னாங்கூர் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் ஆறு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் விழுப்புரத்திலுள்ள முதுகலை விரிவாக்க மையம் ஆகியவற்றுக்கான ஆய்வக உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொருட்டு தலா ரூ.50 இலட்சம் வீதம், ரூ.3.50 கோடி நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டுள்ளது.

* வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய 3 புதிய துறைகளை உருவாக்குதல், துணைவேந்தர் குடியிருப்பு, பல்கலைக்கழக ஆடவர் மற்றும் மகளிர் விடுதிகள் ஆகியவை கட்ட ரூ.29 கோடிக்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அதில் 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.15 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

- ✶ ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சாலை கட்டமைப்பு வசதியானது, முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த முக்கிய துறைகள் வளர்ச்சி அடைவதில் சாலை போக்குவரத்து நேரடியாக பலன்களை வழங்குகிறது. எனவே, நெடுஞ்சாலைகளை பெருமளவிற்கு அகலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- ✶ 2017–2018ஆம் ஆண்டில் 5,060.85 கி.மீ. நீளச்சாலைகளில் அகலப்படுத்துதல் / உறுதிப்படுத்துதல் / மேம்பாடு செய்தல் பணிகளும் 99 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் பணிகளும் மற்றும் 638 பாதுகாப்பு பணிகள் மற்றும் நில எடுப்பு பணிகளுடன் மொத்தம் ரூ.2,772.50 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ 2018–2019ஆம் ஆண்டில் ரூ.3,535.95 கோடி மதிப்பில், 3,396.38 கி.மீ. சாலைகளில் அகலப்படுத்துதல், உறுதிபடுத்துதல், மேம்பாட்டு பணிகளுக்கு, 3,825.58 கி.மீ. சாலைகளில் ஓடுதள தரத்தினை மேம்படுத்துதல், 67 சிறுபாலங்கள் மற்றும் பாலங்கள் மற்றும் 1,135 பாதுகாப்பு பணிகளான வடிகால் வசதிகள், தடுப்புச்சுவர்கள், சாலை பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 75% சதவீதப் பணிகள் முடிவுற்றன.

- ✶ ரூ.4521.48 கோடி மதிப்பில், 3,257. கி.மீ. சாலைகளில் அகலப்படுத்துதல், உறுதிபடுத்துதல், மேம்பாடு பணிகளுக்கு, 3,597 கி.மீ. சாலைகளில் ஓடுதள தரத்தினை மேம்படுத்துதல், 56 சிறுபாலங்கள் மற்றும் பாலங்கள் மற்றும் 1,718 பாதுகாப்பு பணிகளான வடிகால் வசதிகள், தடுப்புச்சுவர்கள், சாலை பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ வேலூர் மாநகரத்திற்கு வட்டச் சாலை (முதற்கட்ட பகுதி) அமைப்பதற்கான நில எடுப்பு பணிகள் ரூ.38.82 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- ✶ 2017–2018ஆம் ஆண்டிற்கு சாலை பாதுகாப்பை மேம்படுத்த குறுகிய சிறுபாலங்கள் மற்றும் பாலங்களை அகலப்படுத்துல் / புதுப்பித்து கட்டுதல் / தாம்போகிக்கு பதிலாக பாலங்கள் கட்டுதல், “எஸ்” வடிவ வளைவுகளை மற்றும் குறுகிய வளைவுகளை நேர்ப்படுத்துதல், பாதுகாப்பு சுவர் கட்டுதல், உயரமான பகுதிகள் மற்றும் மலைச்சாலை பகுதியில் தடுப்புச் சுவர் கட்டுதல், சாலை சந்திப்புகள், விபத்து பகுதிகளை மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை ரூ.100 கோடியில் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு, இவற்றுள் 90 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டிற்கு, 664 மேற் பணிகளை ரூ.100 கோடியில் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள முக்கிய இணைப்புச் சாலைகளை மேம்படுத்த ரூ.216 கோடியும், ரூ.51.21 இலட்சம் மதிப்பில்

நிலத் திட்ட அட்டவணை தயார் செய்யவும், அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- புதுவாயல் – பழவேற்காடு சாலையில் கி.மீ. 2/0–6/2 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடச்சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல், நில எடுப்புப் பணிகள் உட்பட ரூ.45 கோடி மதிப்பில் TNIPP2 நிதியின் மூலம் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- ஒசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைப்பதற்காக ரூ.125.96 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- வாரணாசி – கன்னியாகுமரி (தேசிய நெடுஞ்சாலையால் கைவிடப்பட்ட பகுதி) சாலையில் கி.மீ. 437/10யில் சாலை மேம்பாலம் கட்டுவதற்கும், காளவாசல் சந்திப்பில் மற்றும் அரசரடி சந்திப்பு, மதுரை – கொச்சின் சாலையில் (SHU 107) (அரசரடி சந்திப்பு)கி.மீ. 4/6 யிலிருந்து (காளவாசல் சந்திப்பு) கி.மீ. 5/2 சமதள பரப்பில் மேம்பாடு செய்வதற்கு ரூ.54.07 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி நகரத்திற்கு ரூ.4.18 கோடியில் புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- நிரந்தர வெள்ள சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.514.05 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- மாநில உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு நிதியின் கீழ் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. இதன்படி மதுரை மாவட்டத்தில் 2 பணிகள், தேனி மாவட்டத்தில் 7 பணிகள் ஆகியவற்றிற்கு ரூ.48.43 கோடியும் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 2 பணிகள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 பணிகள் ஆகியவற்றிற்கு ரூ.31.79 கோடிக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- சிவகங்கை நகருக்கு ரூ.80.62 இலட்சம் மதிப்பில் புறவழிச்சாலை சாலை பணிக்கும் மற்றும் குன்னூர், ஊட்டி நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகளும் நில எடுப்பிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- விழுப்புரம் மாவட்டத்தில், கடலூர் – சித்தூர் சாலை கி.மீ. 72/0–72/6இல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே தாம்போகிக்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி மற்றும் வேலூர் மாவட்டத்தில் காங்கேயநல்லூர் மற்றும் சத்துவாச்சாரி கிராமங்களை இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி ஆகியவற்றிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு தலா ரூ.25 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேனி மாவட்டத்தில் 2 பணிகளுக்கும் மற்றும் கோயம்புத்தூர் நகரத்தில் உக்கடம் உயர்மட்டப் பாலத்தில் ஆத்துப்பாலம், உக்கடம் வழியாக ஒப்பணக்காரர் வீதி வரை பாலத்தை நீட்டிப்பு செய்யும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.37 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தேனி மாவட்டத்தில் ஒரு பணியில் வனத்துறையின் ஒப்புதல் பெறவேண்டி உள்ளது. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் மேட்டுத்தெரு மற்றும் அரியலூர் மாவட்டத்தில் மேலராமநல்லூர் (இணைப்பு சாலை அமைத்து) இணைக்கும் வகையில் மண்ணியாற்றின் குறுக்கே பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ரூ.37.50 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சியில் உள்ள சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ரூ.251.269 இலட்சத்தில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திண்டுக்கல், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு கோட்ட அலுவலகம், 4 உட்கோட்ட மற்றும் பிரிவு

அலுவலகங்களும், 3 பிரிவு அலுவலகங்களும் ரூ.2.40 கோடி மதிப்பில் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

✶ மாநகராட்சிப் பகுதிகளில் நகரப்புற சாலைகளை மேடு பள்ளங்கள் இல்லாமல் நேர்த்தியாக பராமரிக்க ரூ.8.99 கோடி மதிப்பில் 12 எண்ணிக்கையிலான பள்ளம் சரி செய்யும் கருவிகள் வாங்கவும் மற்றும் மூன்று வருடங்களுக்கு கருவியின் தொடர் பராமரிப்பினை மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ ரூ.7.98 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஒப்புதல்.

✶ பழனி கோட்டத்தில் ரூ.688.26 கோடி மதிப்பில் 205 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளையும், 302 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளையும் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் மேம்பாடு செய்ய ஒப்புதல்.

✶ சிவகங்கை கோட்டத்தில் உள்ள 198 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் 360 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளும் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் ரூ.715 கோடி மதிப்பில் மேம்பாடு செய்ய ஒப்புதல்.

✶ உதகை, பொள்ளாச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய கோட்டங்களில் ரூ.112.07 கோடி மதிப்பில் 200 எண்ணிக்கையிலான பாவுதளம் அமைத்தல், வடிகால் கட்டுதல், பாதுகாப்பு சுவர் கட்டுதல், சிறுபாலப் பணிகள் ஆகிய நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்புதல்.

✶ ரூ.25.15 கோடி மதிப்பில் மணச்சநல்லூர் நகருக்கு புறவழிச்சாலை அமைப்பதற்கு அரசு ஒப்புதல்.

✶ ரூ.106.51 கோடி மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்துதல், மேம்படுத்துதல், வடிகால் பணிகள் ஆகிய 11 பணிகளை மூன்றாம் கட்டமாக மேற்கொள்ள ஒப்புதல்.

✶ ரூ.63.26 கோடி மதிப்பில் புதியதாக அமைக்கப்பட உள்ள சியட் டயர் தொழிற்சாலைக்கு செல்லும் 3 சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகளுக்கு ஒப்புதல்.

✶ உதகை மாவட்டத்தில் கூடலூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.7.19 இலட்சம் அரசால் ஒப்புதல்.

✶ ஈரோடு மாவட்டத்தில் ரூ.4.87 கோடி மதிப்பில் பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் (கி.மீ. 0/0 – 0/625) வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✶ தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கி.மீ. 0/2இல் பெண்ணை பாலத்தின் அணுகு சாலையில் உயர்மட்டப்பாலத்தை சீரமைக்கும் பணிக்கு ரூ.2.30 கோடி மதிப்பில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ கோவை மாநகரில் ரூ.265.44 கோடி மதிப்பில் ஆத்துப்பாலம் மற்றும் உக்கடம் சாலை மேம்பாலத்தின் நீட்சிப்பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ரூ.100.63 இலட்சம் மதிப்பில் ஐந்து இடங்களுக்கு மதுரை–தொண்டி சாலை, மதுரை–நத்தம் சாலை, தேனி நகரம், அவினாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி.

- 2017–2018 முதல் 2019–2020 (10.01.2020), மாநில நிதியின் கீழ் ரூ.2,706.25 கோடி மதிப்பில் 4,758 கி.மீ. நீளமுடைய 1,643 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு, அரசு நிருவாக ஒப்புதல்.

- நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் நிதி ஆண்டில் ரூ.115.31 கோடி மதிப்பில் 56 ஆற்றுப் பாலங்கள், 2018–2019ஆம் நிதி ஆண்டில் ரூ.200.15 கோடி மதிப்பில் 70 ஆற்றுப் பாலங்கள், 2019–2020ஆம் நிதி ஆண்டில் ரூ.222.343 கோடி மதிப்பில் 80 ஆற்றுப் பாலங்கள் கட்டுவதற்கும் அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டுத்திட்டத்தின்கீழ் 240.02கி.மீ. நீளமுள்ள 19 சாலைப் பணிகள் ரூ.778.70 கோடிக்கும், 23 பாலப் பணிகள் ரூ.305.41 கோடிக்கும் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

- மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், 2017–2018இல் ரூ.1,105.92 கோடி மதிப்பில் 1,121.81 கி.மீ நீளத்திற்கு 152 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் 993.68 கி.மீ. நீளத்திற்கு 130 பணிகள் ரூ.862.73 கோடி செலவில் 2017–2018இல் முடிக்கப்பட்டுள்ளன. 2018–2019இல் ரூ.1,996.40 கோடி மதிப்பில் 624.79 கி.மீ. நீளத்திற்கு 71 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் 190.94 கி.மீ. நீளத்திற்கு 18 பணிகள் ரூ.249.49 கோடி செலவில் 2018–2019இல் முடிக்கப்பட்டுள்ளன.

- மாநில இணைப்பு திட்டத்தின் கீழ், 2017–2018இல் ரூ.72.905 கோடி மதிப்பிலான 41.2 கி.மீ நீளத்திற்கு சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 2019–2020இல் 29.25 கி.மீ நீளமுள்ள 4 சாலைப் பணிகள் ரூ.96.76 கோடி மதிப்பிற்கு மத்திய அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக பிரேரணை அனுப்பட்டுள்ளது.

- காலமுறை புதுப்பித்தல் / ஓடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ், 2019–2020இல் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், 53.952 கி.மீ. நீளமுள்ள 8 சாலைப் பணிகளுக்கு ரூ.48.77 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் வழங்கி இந்தப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

- 2017–2020இல், 53 ஆற்றுப்பாலங்கள், 19 இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள், 19 புறவழிச்சாலைகள், 4 இணைப்புச் சாலைகள், 1 உயர்மட்டச் சாலை வழித்தடம், 1 சாலை மேம்பாலம் மற்றும் 1 பல்வழிச் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.18.51 கோடிக்கு அரசினால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- 2 ஆற்றுப்பாலம், 9 இரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலம் மற்றும் 6 புறவழிச்சாலை பணிகளுக்கு முதற்கட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.304.39 கோடிக்கு அரசினால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு நிலஎடுப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- இதுமட்டுமின்றி, 14 இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலங்கள், 19 ஆற்றுப்பாலங்கள், 2 புறவழிச் சாலைகள், 1 இணைப்புச் சாலை மற்றும் 1 பல்வழிச் சாலை மேம்பாலம் அமைக்க கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.754.11 கோடிக்கு அரசினால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- 2019–2020 மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, 3 இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலப் பணிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க பணிகளுக்கு விரைவில் நிருவாக ஒப்புதல் வழங்கப்படவுள்ளது.

- ஜி.எஸ்.டி. சாலையில் பல்லாவரத்தில் சந்தை சாலை மற்றும் குன்றத்தூர் சாலை சந்திப்புகளை இணைத்து பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் ரூ.82.66 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- உள்வட்டச் சாலையில் கொளத்தூர் ரெட்டேரி அருகில் பெரம்பூர் செங்குன்றம் சாலை சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் (வலது புறம்) கட்டும் பணிகள் ரூ.41.08 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- கொரட்டூர் இரயில் நிலையம் அருகில் வரையறுக்கப்பட்ட இரயில்வே கீழ்பாலம் கட்டும் பணிகள் ரூ.21.96 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- கீழ்கட்டளை அருகே மவுண்ட் மேடவாக்கம் சாலை மற்றும் பல்லாவரம் துரைப்பாக்கம் சாலை சந்திப்பில்

மேம்பாலம் கட்டும் பணி ரூ.64 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- மேடவாக்கத்தில், மேடவாக்கம் சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு, மேடவாக்கம் மாம்பாக்கம் சாலை சந்திப்பு மற்றும் மவுண்ட் மேடவாக்கம் சாலை சந்திப்புகளில் மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையுடன் இணைக்கும் வகையில் மேம்பாலம் கட்டும் பணி ரூ.146.41 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- வேளச்சேரியில் விஜயநகரம் சந்திப்பில் தரமணி சாலை, தாம்பரம் வேளச்சேரி சாலை மற்றும் வேளச்சேரி புறவழிச்சாலைகள் இணையும் இடத்தில் மேம்பாலம் கட்டும் பணி ரூ.108 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் கி.மீ.0/6ல் பங்கிங்ஹாம்–கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம் திரும்ப கட்டும் பணி ரூ.58.64 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- தாம்பரம் – பெரிய தெற்கத்திய சாலையில் கி.மீ. 25/6இல் நகரும் படிகட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் மற்றும் ஆகாய நடைபாதை அமைக்கும் (தாம்பரம் பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையம் அருகில்) பணி ரூ.19.75 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- ஜவஹர்லால் நேரு சாலையில் கோயம்பேட்டில் காளியம்மன் கோயில் தெரு சந்திப்பு மற்றும் சென்னை புறநகர் பேருந்து நுழைவு வாயில் சந்திப்புகளை இணைத்து மேம்பாலம் கட்டும் பணி ரூ.93.50 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- மறைமலை அடிகள் பாலம் – இரும்புலியூர் சாலை கி.மீ 17/4 ராஜகீழ்பாக்கத்தில் இருந்து அகரம்தென் சாலை வழியாக பெருங்களத்துார் நோக்கி செல்லும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை கி.மீ 5/450 – 8/080 ரூ.36.69 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- கடவு எண்: 32 – தாம்பரம் வண்டலூர் இரயில் நிலையங்களுக்கிடையே பெருங்களத்தூரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ரூ.206.08 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

- சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.6,448 கோடியில் 15 மாநில நெடுஞ்சாலைகள் (சுமார் 655 கி.மீ.) நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாலையின் இருபுறங்களிலும் போக்குவரத்தின் தேவைக்கேற்ப தார்தள புருவங்களுடன் இருவழித்தடமாகவும், நான்கு வழித்தடமாகவும் மேம்படுத்தப்பட இருக்கின்றது. சாலை விரிவாக்கம் என்பதால், சாலை ஓரங்களில் நில எடுப்பும், மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் மாற்றுப்பாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டு, நில எடுப்பு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சாலை மேம்படுத்துதலில் விரிவாக்கம், புதுப்பாலங்கள், புதிய இரயில் மேம்பாலங்கள், ஆற்றுப் பாலங்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி பாதுகாப்பான போக்குவரத்திற்கு உறுதிபெறும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் விரைவில் துவங்க இருக்கின்றன.

- தமிழகத்திலுள்ள அதிக வாகன நெருக்கடி மிகுந்த சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II உருவாக்கப்பட்டு, பணிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கி மூலம் US$ 300 மில்லியனுக்கு கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் 28.05.2015இல் கையெழுத்திடப்பட்டது. கடன் ஒப்பந்தம் 10.07.2015 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் சாலை விரிவாக்கம், சாலை தரம் உயர்த்துதல், சாலைப் பாதுகாப்பு மற்றும் நிறுவன செயல்திறன் மேம்பாடு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) வகை ஒப்பந்தம் மூலம் 427 கி.மீ நீளமுள்ள போக்குவரத்து செறிவு மிகுந்த மாநில சாலைகளை கடின தளப்புருவங்களுடன் கூடிய இரு வழிச் சாலையாக ரூ.1,705 கோடி மதிப்பில் தரம் உயர்த்த ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 10 தொகுப்புகளாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் இபிசி 01, 02, 03, 05, 06, 07, 08, 09 & 10 ஆகிய பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இ.பி.சி பணி 4–க்கு பணியினை ஒப்பந்ததாரர் மேற்கொள்ளாததால் 01.11.2018 ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை எடுத்து செய்ய ஒப்பந்தப்புள்ளி 30.09.2019 அன்று திறக்கப்பட்டு, தற்பொழுது ஒப்பந்தப் புள்ளி ஆய்வு பணியில் உள்ளது.

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–I–இன் மூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ள ஆற்காடு முதல் திருவாரூர் சாலை மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 579.543 கி.மீ நீளமுள்ள சாலைகளை வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையில் ரூ.220.07 கோடியில் 5 வருட

காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன தற்பொழுது 4ஆவது ஆண்டுக்கான பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (பிபிபி) முறையில் 146.46 கி.மீ நீளத்திற்கு இருவழி சாலையை, நான்கு வழி சாலையாக அமைக்கும் பணி, மாற்றியமைக்கப்பட்ட ஆண்டு வீத முறையில் (Modified Annuity) வடிவமைத்தல், கட்டுதல், முதலீடு செய்தல், பராமரித்தல் மற்றும் மாற்றம் செய்தல் [(Design, Build, Finance, Operate, Maintain, and Transfer (DBFOMT)] அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 18 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரை கட்டுமானமும், 8 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளும் அடங்கும்.

- ✶ பிபிபி 01, பிபிபி 02, மற்றும் பிபிபி 03 அகிய மூன்று தொகுப்புகளில் பிபிபி 01 (மா.நெ. எண் 15) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 09.12.2019 அன்று திறக்கப்பட்டது. தற்பொழுது ஒப்பந்தப் புள்ளி ஆய்வுப் பணியில் உள்ளது. பிபிபி 03 (மா.நெ.எண் 39) 20.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 23.01.2020 அன்று திறக்கப்பட உள்ளது. பிபிபி 02 – (மா.நெ. எண் 37) சாலை பணிகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகிறது.

- ✶ 3,319 கி.மீ– நீளமுள்ள சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் பலகட்டங்களாக மேற்கொள்ள, ரூ.132.70 கோடி TNIDB நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 3,319 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் முதற்கட்டமாக 1,181.635 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 5 தொகுப்புகளாக பிபிசி 06, பிபிசி 07, பிபிசி 08, பிபிசி 09 மற்றும் பிபிசி 10 என எடுத்துக் கொள்ளப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளன. 212.785 கி.மீ நீளமுள்ள பிபிசி 06 பணிக்கான ஆலோசகர்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் 107 கி.மீ. நீளமுள்ள பணி பிபிசி 07 முதல் பிபிசி 10 வரை உள்ள தொகுப்பு பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஆலோசகர்கள் தேர்வு முன்னேற்றத்தில் உள்ளது.

- ✶ சென்னை வெளிவட்டச் சாலை கட்டம்–I ரூ.1,081.40 கோடி மதிப்பீட்டில் வண்டலூர் முதல் நெமிலிச்சேரி வரை 29.65 கி.மீ. நீளத்தில் சென்னை வெளிவட்ட முதற்கட்ட சாலைப் பணிகள் பொது–தனியார் பங்களிப்புடன் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்கம், ஒப்படைத்தல் (DBFOT) மற்றும் ஈவுத்தொகை வழங்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் வண்டலூர் அணுகு மேம்பாலம் மற்றும் நசரத்பேட்டையில் கிளாவர் வடிவ இணைப்புப் பாலங்கள் நீங்கலாக 99.50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் மார்ச் 2020 முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ✶ சென்னை வெளிவட்டச் சாலை கட்டம்–II ரூ.1,075 கோடி மதிப்பீட்டில் நெமிலிச்சேரி முதல் மீஞ்சூர் வரையில் 30.50 கி.மீ. நீளத்தில் அமைக்கப்படவுள்ள சென்னை வெளிவட்ட இரண்டாம் கட்ட சாலை பணிகளுக்கு பொது–தனியார் பங்களிப்புடன் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்கம், ஒப்படைத்தல் (DBFOT) மற்றும் ஈவுத்தொகை வழங்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்கின் காரணமாக நிலுவையில் உள்ள 0.50 கி. மீ நீளமுள்ள பகுதி நீங்கலாக 98.50 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. நிலுவையில் உள்ள வழக்கை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து எஞ்சியுள்ள இப்பணி மார்ச் 2020க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ✶ இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப துரித சாலையினை இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரை 25 கி.மீ நீளத்திற்கு திருப்போரூர் மற்றும் கேளம்பாக்கம் பகுதிகளில் இரண்டு புறவழிச்சாலைகளுடன், ஆறு வழிப்பாதையாக விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- ✶ இவற்றுள் முதற்கட்டமாக கேளம்பாக்கம் புறவழிச்சாலை 4.675 கி.மீ. நீளம், திருப்போரூர் புறவழிச்சாலை 7.45 கி.மீ. நீளத்திற்கு அமைக்க தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சித் திட்டம்–II கீழ், ரூ.243.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு புறவழிச்சாலைப் பணிகள் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 48 சதவிகித கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் டிசம்பர் 2020இல் முடிக்கப்பட்டு

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ✶ கிழக்கு கடற்கரை சாலை கி.மீ.69/300இல் இளையனார் குப்பத்தில் புதிய நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் ரூ.23.78 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. தற்போது 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் ஒப்பந்த காலத்திற்குள் (19.03.2020) முடிக்கப்படும்.

- ✶ பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (PPP) முறையில் மாற்றி அமைக்கப்பட்ட ஈவு ஒப்பந்த முறையின் மூலம் மதுரை சுற்றுச்சாலையில் நான்கு வழிச்சாலையினை அகலப்படுத்தி தரம் உயர்த்த ரூ.213.69 கோடி மதிப்பில், 27.20 கி.மீ நீளத்திற்கு 2017–2018இல் பணி துவங்கப்பட்டது. அவற்றில் கப்பலூர் இரயில்வே மேம்பாலப்பணி தவிர மீதமுள்ள அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 22.11.2019 முதல் வணிக வாகன போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது. மேலும் இரயில்வே பகுதியில், பணிக்கான பாதுகாப்பு அனுமதி பெற்று விரைவில் முடிக்கப்படும்.

- ✶ காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் பகுதியில் வளர்ந்து வரும் தொழிற்சாலை வளர்ச்சியினை கருத்தில் கொண்டு சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்பு திட்டத்தின் மூலம் 2017–2018ஆம் ஆண்டில் ஐந்தாம் கட்டப்பணியான வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் ஒரகடம் முதல் வாலாஜாபாத் வரை 15.40 கி.மீ. நீளச்சாலையினை, நான்கு வழிச்சாலையிலிருந்து ஆறு வழிச்சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.189.81 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டு 70% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 2018–2019ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் மண்ணிவாக்கம் கிராமத்தில் அடையாற்றின் குறுக்கே ரூ.5 கோடி மதிப்பில் சிறுபாலம் கட்டும்பணி தொடங்கப்பட்டு இதுவரை 75% பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ சென்னை எல்லை சாலைத் திட்டமானது எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி, மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள பூஞ்சேரி சந்திப்பில் முடிவடைகிறது. இதன் நீளம் 133.65 கி.மீ. ஆகும். இது 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சுமார் ரூ.12,301 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரிவு 1–னை செயல்படுத்த அரசு ரூ.2,673.42 கோடி நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இதற்காக ஜப்பான் பன்னாட்டு ஜெய்க்கா நிதி நிறுவனத்துடன் கடன் ஒப்பந்தம் 40,074 மில்லியன் ஜப்பானிஸ் யென் (ரூ.2,473.70 கோடி) 18, ஜனவரி 2019 அன்று மேற்கொள்ளப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்கான ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டு திட்ட அறிக்கை சீராய்வு பணிகள் தொடங்கியுள்ளது.

- ✶ சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் 2, 3 மற்றும் 5 பிரிவுகளுக்கு 558.53 ஹெக்டேர் நிலத்தினை கையகப்படுத்துவதற்காக ரூ.2,603.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பிரிவு 2 மற்றும் 3–னை செயல்படுத்த AIIB (Asian Infrastructure and Investment

Bank) மற்றும் OFID (OPEC Fund for International Development) வங்கிகளை அணுகி, இந்திய பொருளாதார விவகாரத் துறையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவ்வங்கிகளுடன் 478.07 மில்லியன் அமெரிக்க டாலருக்கு கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

- 2017–2018இல் ஊரக வளர்ச்சித் துறையில் 23 பொறியாளர்களுக்கு “தரக்கட்டுப்பாடு மற்றும் கட்டுமானப் பொருட்களின் பரிசோதனை செயல்முறைகள்” பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் “சாலைப் புருவங்கள், விலையில்லா கட்டுமானப் பொருட்கள் அதன் பண்புகள்” என்ற தலைப்பிலான ஒருநாள் சிறப்பு தொழில்நுட்ப பயிலரங்கத்தில் 80 நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் பயனடைந்துள்ளன. 20 நெடுஞ்சாலை பொறியாளர்களுக்கு “நெடுஞ்சாலை மேம்பாட்டு தொகுதி–IV மென்பொருள்” பற்றிய நடைமுறை பயிற்சி அளிக்கப்பட்டது. 2017–2018இல் 47 வாராந்திர தொழில்நுட்ப சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு 1,688 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். பொறியியல் பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் படிப்பு சார்ந்த திட்டங்களான ஒருநாள் தொழிற்பயிற்சியில் 326 பொறியியல் கல்லூரி மாணவர்களும், உள்ளிருப்பு பயிற்சியில் 23 மாணவர்களும் திட்டப் பணிகளில், 28 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

- 2018–2019ஆம் ஆண்டில் இத்துறையில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 161 உதவி பொறியாளர்களுக்கு 4 தொகுதிகளாக புத்தறிவு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தரக்கட்டுப்பாட்டு பயிற்சி 2 தொகுதிகளாக 54 பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 25 பொறியியல் கல்லூரி மாணவர்கள் உள்பயிற்சியும், 12 மாணவர்கள் தங்கள் படிப்பு சார்ந்த திட்டங்களையும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் முடித்துள்ளனர்.

- நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகள் மற்றும் துறையில் செயலாக்கப்படும் பணிகள் பற்றிய நுண்ணறிவு குறித்த பயிற்சி, தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2 தொகுதிகளாக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளது.

- இதை தவிர புவி தொழில் நுட்ப பரிசோதனை மற்றும் ஆழ்துளை தாங்குதூண் திறனாய்வு சோதனை, கற்கலவை வடிவமைப்பு மற்றும் அதன் செயல்திறன் கொள்கைகள், நிலக்கீலார்ந்த அடுக்குகளில் பயன்படுத்தப்படும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்கள் போன்ற தொழில்நுட்ப தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொது சேவை வரி, ஊக்கப்படுத்துதல் போன்ற பொதுதலைப்புகளில் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 15 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பொறியாளர்களுக்கு நொறுக்கப்பட்ட கல் மணலின் சோதனை முறைகள் குறித்த பயிற்சி தரமணியில் உள்ள தேசிய சோதனை மையத்தில் அளிக்கப்பட்டது.

- இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் 171 துறை பொறியாளர்களுக்கு சாலை பாதுகாப்பு தணிக்கை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டில் 52 துறை பொறியாளர்களுக்கு தரக்கட்டுப்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை 33 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு உள்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 3 ஆண்டுகளில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆய்வகங்களால் 74,844 சோதனைகள் கட்டுமான பொருட்களின் மீது நடத்தப்பட்டு ரூ.55.057 கோடி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

2017–2018 முதல் 2019–2020 முடிக்கப்பட்ட பணிகள் :

- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8,570 கோடி செலவில் 12,663 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்பாடு செய்தல் பணிகள் மற்றும் 1,993 சிறுபாலங்கள் / பாலங்கள் / சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ரூ.784 கோடி செலவில் 3,739 கி.மீ. நீளச்சாலைகளில் சாலையின் ஒடுதள மேம்பாட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

- காலமுறை புதுப்பித்தலின் கீழ் ரூ.2,513 கோடிக்கு 8,524 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

* சாலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.238.20 கோடி மதிப்பில் சாலையின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* சேலம் மாநகரில், சேலம் இரும்பாலை சாலை சந்திப்பில் எளிதான போக்குவரத்தினை ஏற்படுத்தி விபத்தினை தவிர்க்கும் வகையில் சேலம் இரும்பாலை சாலை சந்திப்பில் ரூ.21.97 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு 18.11.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

* புதுவாயல்–பழவேற்காடு சாலையில் கி.மீ. 0/0–2/0 வரை நான்கு வழித்தடச்சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணிகளை (நில எடுப்பு பணிகள் நீங்கலாக) ரூ.11.50 கோடி மதிப்பில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு முடிவுற்றது.

* மாநில உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு நிதியின் கீழ் பாளையூர் – அனுக்கூர் – வாலிகண்டபுரம் சாலை கி.மீ. 11/4இல் பாலம் அமைத்தல், கி.மீ. 8/6–12/0இல் சாலை மேம்பாட்டு பணிகள் கி.மீ. 8/6–9/0 மற்றும் கி.மீ. 11/4–12/0இல் சாலை வடிகால் அமைக்கும் பணி ஆகியவற்றிக்கு ரூ.3.96 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முடிவுற்றன.

* ஆண்டுத் திட்டம் 2017–2018இன் கீழ் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ரூ.1,059.44 கோடி மதிப்பிலான 510.48 கி.மீ நீளமுள்ள 53 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் 415.10 கி.மீ. நீள 45 சாலைப் பணிகள் ரூ.604.21 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 2018–2019இல் ரூ.843.11 கோடி மதிப்பிலான 142.33 கி.மீ நீளமுள்ள 22 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் 6.24 கி.மீ. நீள 3 சாலைப் பணிகள் ரூ.20.33 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

* காலமுறை புதுப்பித்தல் / ஒடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் 2018–2019இல் 41.55 கி.மீ. நீளத்திற்கு 5 சாலைப் பணிகள் ரூ.25.76 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2017–2018இல் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் II–இன் தொடர்ச்சியாக, மத்திய அரசு ரூ.58.93 கோடி மதிப்பில் 142.39 கி.மீ நீளத்திற்கு 40 சாலைப் பணிகள் ஒப்புதல் பெறப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றது.

* நபார்டு வங்கி கடனுதவியுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் 194 பாலங்கள் மற்றும் 87 கி.மீ. நீளமுடைய 32 சாலைகள் ரூ.480.38 கோடி செலவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் 27 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன் அடைகின்றனர்.

* மாநில நிதியின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில், 2,443 கி.மீ நீளமுடைய 813 ஊராட்சி சாலைகள் / ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.1,203.50 கோடி செலவில் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டு, 31 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன் அடைகின்றனர்.

* இரயில்வே திட்டப்பணிகள் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் / சாலை கீழ் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ், ரூ.180.08 கோடி செலவில், கடவு எண். 133க்கு மாற்றாக ஒரு இரயில்வே கீழ்ப்பாலம் திருப்பூர் கொங்குநகரிலும், கடவு எண். 406க்கு மாற்றாக ஒரு அளவான பயன்பாட்டு சுரங்கப்பாதை விருதுநகரிலும், கடவு எண். 7க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம் கோயம்புத்தூர் பீளமேட்டிலும், கடவு எண். 304க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம், தஞ்சாவூரிலும், கடவு எண். 2க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம் வெங்கடேசபுரம், விழுப்புரத்திலும், கடவு எண். 22க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம், நீடாமங்கலம் – வையகளத்தூரிலும், கடவு எண். 124க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம், ஈரோடு தொட்டிப்பாளையத்திலும், கடவு எண். 309க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம், திண்டுக்கல் யார்டில் உள்ள ஹனுமந்த நகரிலும், கடவு எண். 403க்கு மாற்றாக ஒரு இரயில்வே மேம்பாலம், விருதுநகர் நகரத்திலும் கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

* 19 இரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலப் பணிகள், 4 ஆற்றுப்பாலங்கள் மற்றும் 1 பல்வழிச்சாலை ரூ.211.04 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்பட்டது.

* கோடம்பாக்கம் – ஸ்ரீபெரும்புதூர் சாலை மவுண்ட் பூந்தமல்லி சாலை போரூர் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி ரூ.58.05 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு

25.06.2017 அன்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

* தண்டையார்பேட்டை – திருவொற்றியூர் இரயில்வே நிலையத்திற்கிடையில் திருவொற்றியூர் மாட்டு மந்தை கடவு எண். 3இல் மேம்பாலம் கட்டும் பணி ரூ.58.05 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு 28.07.2017 அன்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

* பெரியார் ஈ.வெ.ரா சாலையில், கி.மீ.6/6இல் அமைந்தகரை அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே கூடுதல் மூன்று வழித்தட பாலம் கட்டும் பணி ரூ.11.10 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு 04.01.2018 அன்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

* இராமாபுரம் அருகில் மவுண்ட் – பூந்தமல்லி சாலையில் கி.மீ. 2/6இல் அடையார் ஆற்றின் குறுக்கே உள்ள உயர்மட்ட பாலத்தை அகலப்படுத்தும் பணி ரூ.17 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு 04.06.2018 அன்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

* நெடுஞ்சாலைத் துறையின் மேம்படுத்தப்பட்ட வலைத்தளம் (www.tnhighways.gov.in) துவக்கி வைக்கப்பட்டது.

* நெடுஞ்சாலைத் துறையின் சென்னை, கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்திற்கான புதிய வலைதளம் (www.ckicp.tnhighways.gov.in) துவக்கிவைக்கப்பட்டது.

* 2017–2018ஆம் ஆண்டில் 5 இளநிலை உதவியாளர்கள், 28 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 9 உதவி வரைவாளர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் 15 இளநிலை உதவியாளர்கள், 21 பதிவுரு எழுத்தர்கள், 10 அலுவலக உதவியாளர்கள், 8 தட்டச்சர்கள், 2 துப்புரவாளர்கள் மற்றும் 1 உதவி வரைவாளருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2019ஆம் ஆண்டில் 21 இளநிலை உதவியாளர்கள், 15 பதிவுரு எழுத்தர்கள், 7 தட்டச்சர்கள், 6 உதவி வரைவாளர்களுக்கும் மற்றும் 12 அலுவலக உதவியாளர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

* 92 இளநிலை உதவியாளர்கள், 12 தட்டச்சர்கள் மற்றும் 5 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் 2017–2018இல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

* 164 உதவிப் பொறியாளர்கள், நிலை–1 தேர்வின் மூலமும் (ஒருங்கிணைந்த பொறியாளர் பணிகள்) 222 உதவியாளர்கள் , நிலை 2 எ தேர்வின் மூலமும் தமிழ்நாடு தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு 2018இல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

* 15 உதவியாளர்கள், 32 இளநிலை உதவியாளர்கள், 8 தட்டச்சர்கள் மற்றும் 3 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை III, தமிழ்நாடு தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு 2019இல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖

காவல் துறை இயக்குநரகம்

தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

✶ மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு, பொது அமைதி நிலவி வருகிறது. மாநில நுண்ணறிவுப் பிரிவினர் நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்கள் அளித்ததன் பேரில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் மாநிலத்தில் நடைபெற்ற விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலங்கள், காஞ்சிபுரம், அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவிலில் அத்திவரதர் விழா, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் நடைபெற்ற குருபூஜை மற்றும் தேவர் ஜெயந்தி விழா போன்ற அனைத்து நிகழ்வுகளும் அமைதியாக நடைபெற்று முடிந்தன.

✶ ஏப்ரல், மே மற்றும் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல், 22 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் மேலும் 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் மற்றும் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் ஆகிய அனைத்தும் எந்தவித அசம்பாவித சம்பவங்களுமின்றி அமைதியாக முடிந்தன. குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்வேறு முஸ்லீம் அமைப்பினர் மற்றும் அரசியல் கட்சிகளால் (தி.மு.க., இ.க.க., இ.க.க.–மா. போன்றவை) நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் அனைத்தும் சுமுகமாகக் கையாளப்பட்டன.

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

✶ மேதகு சீன மக்கள் குடியரசுத்தலைவர் மகாபலிபுரம் வருகை தந்தபோது சீரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுத் திறம்படச் செயல்படுத்தப்பட்டன.

✶ பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையுடன் இணைந்த தனிப்பிரிவு பயிற்சிப் பள்ளியில், 2019ஆம் ஆண்டில் 21 அணிகளாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அவற்றில் 600 அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பயிற்சி பெற்றனர்.

கடலோரப் பாதுகாப்புத் திட்டம் பகுதி – II

✶ இத்திட்டத்தின்கீழ், ஒப்பளிக்கப்பட்ட 30 கடற்காவல் நிலையங்களும் துவக்கி வைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் படகு நிறுத்தும் தளங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

கடல்சார் அமலாக்கப்பிரிவு

✶ கடலோர மாவட்டங்களில் தமிழ்நாடு கடல்சார் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம் 1983னை அமல்படுத்துவதற்கு மீன்வளத்துறை ஆணையாளர் இயக்குநரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் தனியாக ஒரு கடல்சார் அமலாக்கப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

✶ மீன்வளத்துறை ஆணையாளர் / இயக்குநரின் கட்டுப்பாட்டில் 93 அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள்

மற்றும் 20 அமைச்சுப் பணியாளர்களை காவல் துறையிலிருந்து நியமிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கிராம விழிப்புணர்வு குழுக் கூட்டங்கள்

✶ 2019ஆம் ஆண்டில், இதுவரை, 333 கிராம விழிப்புணர்வு குழு கூட்டங்கள் கடலோர பாதுகாப்பு குழும அதிகாரிகள் மூலம் நடத்தப்பட்டு கடலோர பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கடலோர கிராம மக்களுக்கும் கடலோர பாதுகாப்பு குழும காவலர்களுக்கும் இடையிலான நல்லுறவு மேம்படுத்தப்படுவதுடன் ரகசிய தகவல்கள் பெறுவதற்கும் ஏதுவாக உள்ளது.

அதிதீவிர படை

✶ அதிதீவிர படையில் உள்ள கமாண்டோக்கள் இளம் வயதினராகவும், துடிப்புடனும் இருக்க வேண்டும் என்பதற்காக, 2019ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் புதிதாக சேர்க்கப்பட்ட இளம் காவல் படையினர்களுக்கு தேர்வுகள், சோதனைகள், சிறப்பு பயிற்சிகள் வழங்கி மொத்தமுள்ள 240 கமாண்டோக்களில், 70 நபர்களை புதிதாக இணைத்து இளமைத் துடிப்போடு செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அதி தீவிரப்படை பயிற்சிப் பள்ளி

✶ தமிழ்நாடு அதி தீவிரப்படை பயிற்சிப் பள்ளியானது நாட்டிலேயே ஒரு முன்னோடி காவல் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிறுவனமானது இந்திய இராணுவப் படை, மாநில காவல் துறை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படையில் உள்ள திறமையான காவல் பயிற்சியாளர்களைக் கொண்டு 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

✶ இப்பயிற்சி நிறுவனமானது வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பிரிவு, மோப்ப நாய் படை ஆகிய இரண்டு பிரிவுகளையும் மேலும் நான்கு மண்டல பயிற்சி நிலையங்களான பள்ளிப்பட்டு (திருவள்ளூர் மாவட்டம்), மேட்டூர் (சேலம் மாவட்டம்), ஒத்திவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் வல்லநாடு (தூத்துக்குடி மாவட்டம்) ஆகிய இடங்களில் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது.

✶ சமீபத்தில் அமைக்கப்பட்ட திருச்சி மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு அதி தீவிரப் படை பயிற்சிப் பள்ளி மையமானது தற்சமயம் பொருளாதார குற்றப்பிரிவில் உள்ள சிலை கடத்தல் தடுப்புப் பிரிவின் பயன்பாட்டிற்காக தற்காலிகமாக பெறப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு அதி தீவிரப் படை பயிற்சிப் பள்ளியானது மிகக் குறைந்த பயிற்சியாளர்களைக் கொண்டிருந்த போதிலும், 2019ஆம் ஆண்டு பயிற்சி கையேட்டின் படி 18 வகையான பயிற்சிகளை சிறப்புற நடத்தி வருகிறது. அவற்றில் மிக முக்கியமான பயிற்சிகள் பின்வருமாறு.

- ஆண் மற்றும் பெண் காவல் ஆளிநர்களுக்கான கமாண்டோ பயிற்சிகள்
- துப்பாக்கி கையாளுதல் பயிற்சிகள்
- ஸ்னைபர் பயிற்சிகள்
- வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பயிற்சிகள்
- அனிச்சை சுடு திறன் பயிற்சிகள்
- மோப்ப நாய்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகள்
- கடலோர மற்றும் உள் மாவட்ட காவல் ஆளிநர்களுக்கான பேரிடர் மீட்புப் பயிற்சி

2019ஆம் ஆண்டில் சிறப்புப் பிரிவு செய்த சாதனைகள்

'ராம ஜென்ம பூமி–பாபர் மசூதி' தீர்ப்பிற்குப் பிந்தைய நிலவரங்கள்

✶ கடந்த 09.11.2019 அன்று இந்தியாவின் மாட்சிமைமிகு உச்ச நீதிமன்றம் 'ராம ஜென்ம பூமி–பாபர் மசூதி' வழக்கின் தீர்ப்பை வழங்கியது. கடந்த ஒரு மாத காலமாக அத்தீர்ப்பினை எதிர்நோக்கி மாநிலம் முழுதும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மாநிலம் முழுதும் மத நல்லிணக்க கூட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு பக்கங்களிலும் உள்ள தீவிரத்தன்மை வாய்ந்த கொடிய அடிப்படைவாதிகளின் செயல்கள் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டன. தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, மாநிலம் முழுதும் அமைதி நிலைநாட்டப்பட்டது.

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 2019–2020ஆம் ஆண்டுக்கான நிதி சாதனைகள்

✶ 2019–2020ஆம் ஆண்டுக்கான 'காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் மாநிலங்களுக்கான நிதியில் ரூ.43.55 கோடி (மத்திய

அரசின் பங்கு ரூ.26.13 கோடி மற்றும் மாநில அரசின் பங்களிப்பு ரூ17.42 கோடி) தொகைக்கான நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.195.59 இலட்சம் செலவில் பொது உபகரணங்கள் – விரல்ரேகை பதிவு கூடத்திற்கென உயர்தரமிக்க விரல்ரேகை ஆய்வகப் பெட்டகம்; சென்னை இருப்புப் பாதை காவலுக்காக இணையதளவழி குற்றப்பிரிவு அமைப்பதற்கு வேண்டிய சாதனங்கள்; தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கென படைக்கலன் சுடும் பயிற்சிக்கான சாதனம்; தமிழ்நாடு ஊர்க்காவலர் பயிற்சிக்கென ரப்பர் படகுகள் மற்றும் காவல் நிலையங்களுக்கான நடமாடும் ஒலிபெருக்கி சாதனங்கள் வாங்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல் அங்காடிகள்

- தமிழக அரசு 2011ஆம் ஆண்டில் ரூ.1 கோடி ஒப்பளிப்பு அளித்ததின் பேரில் த.சி.கா.முதலணி, திருச்சி ஆறாம் அணி, மதுரை மற்றும் த.சி.கா. படைபயிற்சி, ஆவடி ஆகிய 3 இடங்களில் தமிழ்நாடு காவல் அங்காடிகள் நிறுவப்பட்டு 28.03.2012 முதல் இயங்கி வருகிறது. தமிழக அரசு 2014ஆம் ஆண்டில் ரூ.6.55 கோடி ஒப்பளிப்பு அளித்ததின் மூலம் 44 இடங்களில் (32 மாவட்டங்கள் காவல் ஆணையரகங்கள் உட்பட மற்றும் 12 த.சி.கா. அணிகள்) தமிழ்நாடு காவல் அங்காடிகள் நிறுவப்பட்டு 15.09.2015 முதல் இயங்கி வருகிறது. 2017ஆம் ஆண்டில் சென்னையில் புதுப்பேட்டை (எழும்பூர்) மற்றும் கொண்டித்தோப்பு ஆகிய இடங்களில் ரூ.15.80 இலட்சம் செலவில் அங்காடிகள் அமைக்கப்பட்டு, புதுப்பேட்டை (எழும்பூர்) அங்காடி 19.10.2017 அன்று முதலும் மற்றும் கொண்டித்தோப்பு அங்காடி 04.06.2018 அன்று முதலும் இயங்கி வருகிறது. மேலும், தமிழக அரசு 2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம், ஊனமாஞ்சேரி, வண்டலூரில் புதியதாக ஓர் காவல் அங்காடியை நிறுவ ரூ.7.90 இலட்சம் ஒப்பளிப்பு அளித்து ஆணையிட்டது. இக்காவல் அங்காடி 14.12.2018 முதல் இயங்கி வருகிறது. தமிழக அரசு இதுவரை தமிழகம் முழுவதும் மொத்தம் 50 இடங்களில் காவல் அங்காடிகள் நிறுவ ஆணை வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு காவல் அங்காடியில் காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள், சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை மற்றும் வனத்துறையில் பணிபுரியும் சீருடை அலுவலர்கள், ஓய்வுபெற்ற அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களும் பயன்பெற்று வந்தனர். தற்போது தமிழக அரசு தமிழ்நாடு அங்காடியில் பொருட்கள் வாங்கி பயன்பெறும் வசதியை சிறைத்துறையை சார்ந்த அமைச்சுப் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு செய்து உத்தரவிட்டுள்ளது.

- முதற்கட்டமாக, பயனாளிகள் அனைவரும் தமிழ்நாடு காவல் அங்காடிகளில் விற்கப்படும் அனைத்து பொருட்களின் விலை மற்றும் இருப்பு (Price & Stock) விவரங்களை தங்கள் அலைபேசியின் வாயிலாக அறிந்து பயன்பெறும் வகையில் “காவலர் அங்காடி”

“KAVALAR ANGADI” என்ற செயலி மற்றும் www.tnpolicecanteen.com என்ற இணையதளம் ஆகியவற்றினை காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் 04.03.2019 அன்று அறிமுகம் செய்து வைத்துள்ளார். “காவலர் அங்காடி” செயலியை சுமார் 25,000த்திற்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்து பயனடைந்து வருகின்றனர்.

- ✶ காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை மற்றும் வனத்துறையில் பணிபுரியும் சீருடை அலுவலர்கள், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுமாக மொத்தம் 1,56,303 பயனாளிகள் தமிழ்நாடு காவல் அங்காடியில் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

காவலர் நிறைவாழ்வு பயிற்சி

- ✶ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவலர்களும் மன அழுத்தமின்றி பணிசெய்ய தமிழக அரசு 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பெங்களூரில் உள்ள “நிம்ஹான்ஸ்” (NIMHANS) என்று அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் தமிழக காவல்துறை இணைந்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவலர்களுக்கும் மன அழுத்தம் நீக்கி அவர்களின் பணித்திறனை மேம்படுத்தும் விதமாக காவலர் நிறைவாழ்வு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.09.2018 அன்று இத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள். பயிற்றுநருக்கான பயிற்சி 29.10.2018 அன்று பெங்களூரில் உள்ள “நிம்ஹான்ஸ்” (NIMHANS) தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 254 காவல்துறை அதிகாரிகளும், 201 தனியார் மனநல ஆலோசகர்களும் ஆக மொத்தம் 455 நபர்களுக்கு நிம்ஹான்ஸ் நிறுவனத்தால், பயிற்றுநருக்கான பயிற்சி (TOT) பெங்களூரில் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பயிற்றுநர்கள் அனைத்து மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் பணியாற்றும் காவலர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் “காவலர் நிறைவாழ்வு” பயிற்சியினை வழங்கி வருகிறார்கள். இதுவரை, 78,840 காவலர்களும், 81,862 காவலர் குடும்ப உறுப்பினர்களும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்து உள்ளனர். தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் இப்புதுமையான மற்றும் சீரிய நடவடிக்கையினை மாண்புமிகு முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார். மேலும், சேம காவல் படைக்கும் இப்பயிற்சி திட்டத்தை வழங்க உத்தேசித்துள்ளார்.

காவலர் பொதுப்பள்ளி

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.04.2013 அன்று சட்டசபையில் “உங்கள் சொந்த இல்லம்” என்ற திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு தாலுக்கா மேலக்கோட்டையூரில் குடியிருந்து வரும் காவலர் குடும்பங்களின் நலனுக்காக உயர்தரம் பொருந்திய ஆங்கில வழி உண்டு உறைவிடப் பள்ளி ஒன்று தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். இதனடிப்படையில் 27.12.2017 அன்று உண்டு உறைவிட காவலர் பொதுப்பள்ளி ஒன்று மேலக்கோட்டையூரில் தொடங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

புதிய உண்டு உறைவிட காவலர் பொதுப்பள்ளி தொடர்பாக இதுவரை முடிவுற்ற பணிகள்

- ✶ புதிய உண்டு உறைவிட காவலர் பொதுப்பள்ளி தொடங்குவதற்கான சங்கம் 26.04.2018 அன்று பதிவு செய்யப்பட்டது.

- ✶ ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருபாலருக்கான ஆங்கில வழியுடன் கூடிய உண்டு உறைவிட பள்ளி இக்கல்வி ஆண்டில் (2018–2019) தொடங்குவதற்கு அரசு ஆணை பெறப்பட்டது.

- ✶ இப்பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஐந்து இடைநிலை ஆசிரியர்கள் மாற்றுப் பணியாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- ✶ 2018–2019ஆம் கல்வி ஆண்டில் ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை தற்காலிகமாக தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகத்தில் ஐம்பது மாணவ/மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

- ✶ 2019–2020ஆம் ஆண்டில் புதியதாக மேலும் 15 மாணவ/மாணவியர் சேர்த்து மொத்தம் 65 பேர் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை கல்விக் கட்டணமில்லாமல் இலவசமாக கல்வி பயின்று வருகின்றனர்.

- ✶ ரூ.40 இலட்சத்தினை காசாக்கம் செய்து அலுவலக உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், ரூ.36,12,786க்கு பொருட்கள் காவல் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- ✶ ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை 50 மாணவ/மாணவியர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- ✶ ரூ.8,83,000 காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் 2018–2019 Discretionary நிதியிலிருந்து, சீருடை, உணவு மற்றும் திண்பண்டங்கள் பள்ளி வாகனத்தினை புதுப்பித்தல், உபகரணங்கள், புத்தகம் மற்றும் இதர உபகரணங்கள் (Stationeries) மற்றும் இதர செலவுகளுக்காகவும் இந்நிதியானது செலவிடப்பட்டது. இந்த கல்வி ஆண்டு 2019–2020 இல் ரூ.2,93,800/– காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் Discretionary நிதியிலிருந்து, சீருடை, உணவு மற்றும் திண்பண்டங்கள் வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✶ காவல் பொதுப்பள்ளி மற்றும் இதர கட்டடங்களுக்கும் கட்டுமானப் பணிகள் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

போக்குவரத்து

சாலை பாதுகாப்பு நிதி

- ✶ நடப்பு நிதியாண்டில் அரசு சாலைப் பாதுகாப்பு திட்டங்களை மேற்கொள்ள ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.
- ✶ இந்நிதியின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பொறியியல் சாராத பணிகளின்கீழ், அதிவேகம் செல்லும் வாகனங்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள அதிவேகம் கண்டறியும் கருவிகள் கொள்முதல் செய்யவும், குடிபோதையில் வாகனம் ஓட்டி விபத்து ஏற்படுத்தும் தீமையினை களைய மது அருந்தியதை கண்டறியும் பகுப்பாய்வு கருவிகள் வாங்கவும், பிரதிபலிப்பு கருவிகள் வாங்கவும் வழங்கப்பட்டு வருகிறது.
- ✶ பள்ளி மாணவர்களிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் ஏற்படுத்தப்பட்டு அதன் பராமரிப்பு பணிகளுக்காக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✶ 2019–2020 ஆம் நிதியாண்டில் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியின் கீழ், ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி சான்றிதழ் மென்பொருள் செயலி

- ✶ தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட தகுதி சான்றிதழ் பயன்பாட்டு மென்பொருள்

22.11.2019 அன்று ஆத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது.

இ–சலான் முறையை அறிமுகப்படுத்துதல்

- இ–சலான் என்பது போக்குவரத்து செயலாக்க பணியாளர்களால் வாகனங்களை சோதனை செய்யும்பொழுது உபயோகப்படுத்துவதற்காக புது டில்லியில் உள்ள சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினரால் உருவாக்கப்பட்ட ஆண்டிராய்டு செயல்பாட்டில் உள்ள கைபேசியில் இயங்கும் மற்றும் இணையதள அடிப்படையில் இயங்கும் ஒரு செயலியாகும்.
- இந்தத் துறையின் செயலாக்கப் பணியாளர்களுக்கு 244 இ–சலான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 19.08.2019 அன்று திருச்சி (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

- 2019ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் முடிய மொத்தம் 23,787 தீவிபத்து அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. இந்த அழைப்புகளில் 44 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதுடன், ரூ.263.25 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டில், அக்டோபர் மாதம் முடிய மொத்தம் 21,210 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டு இந்த அழைப்புகளில் 3,564 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் கட்டட பராமரிப்புப் பணிக்காக ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், மகேந்திரா வேர்ல்டு சிட்டி வளாகத்தில் ரூ.112 இலட்சம் செலவில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- மதுரை மாவட்டம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் ரூ.109.40 இலட்சம் செலவில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர், சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, நாமக்கல் மாவட்டம் வெப்படை, ஈரோடு மாவட்டம் நம்பியூர், திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான், சென்னை மாவட்டம் அண்ணாநகர், திருச்சி மாவட்டம் சமயபுரம், விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி, காஞ்சிபுரம் மாவட்டம் மகாபலிபுரம், மற்றும் மேடவாக்கம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ரூ.1,294.5 இலட்சம் ஒப்பளிப்பு.
- நாகப்பட்டினம் மாவட்டம் – மணல்மேடு, மதுரை மாவட்டம் – வாடிப்பட்டி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ரூ.227.46 இலட்சம் ஒப்பளிப்பு.
- விழுப்புரம் மாவட்டம் – திருநாவலூரில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ரூ.109.56 இலட்சம் ஒப்பளிப்பு.
- சென்னை மாவட்டம் – மெரினா கடற்கரையில் புதிய மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ரூ.87 இலட்சம் ஒப்பளிப்பு.
- கோயம்புத்தூர் மாவட்டம் – பீளமேட்டில் புதிய தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ரூ.122.26 இலட்சம் உரிய ஒப்பளிப்பு.

சிறைத்துறை

- சிறைத்துறைக்கு சிவில் பண்டகப் பொருட்களை வாங்கிட துறைத்தலைவருக்கு ஒரு பொருளை கொள்முதல் செய்திட வழங்கப்பட்ட தொகையை ரூ.4,000/–லிருந்து ரூ.25,000/–ஆகவும், ஒன்றுக்கும் மேற்பட்ட பொருட்களினை கொள்முதல் செய்திட வழங்கப்பட்ட தொகையை ரூ.7,500/–லிருந்து ரூ.50,000/– ஆகவும் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- அனைத்து மத்தியசிறை வளாகத்திலும் (புழல் மத்தியசிறை–2 நீங்கலாக) திறந்த வெளிச்சிறை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட சிறையின் நிருவாகத்திற்கு தேவையான 35 பணியிடங்களை உருவாக்கிட ஒரு ஆண்டிற்கு ரூ.235.07 இலட்சம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- 9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவி ரூ.21.85 இலட்சம் செலவில் வாங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

- 14ஆவது நிதிக்குழு பரிந்துறையின் படி மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுவழக்கறிஞர்கள்பயிற்சிமற்றும் திறன் மேம்பாட்டிற்கு மின்னணு சாதனங்கள், சட்டம் சார்ந்த இணையதள வசதி ஏற்படுத்தும் பொருட்டு ரூ.4,90,32,360 இத்துறைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தடய அறிவியல் துறை

- தடய அறிவியல் துறையின் செயல்பாட்டிற்கு புதிய உபகரணங்கள் மற்றும் மூன்று வாகனங்கள் வாங்குவதற்கு 2 கோடியே 32 இலட்சம் செலவில் அரசால் தடய அறிவியல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- 2019ஆம் ஆண்டு பெறப்பட்ட 52,315 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,04,940 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தடய அறிவியல் அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன.
- மேலும், தடய அறிவியல் துறையின் அறிவியலாளர்கள் குற்ற நிகழ்விடங்களை பார்வையிட்டு மாநிலம் முழுவதும் உள்ள காவல் அதிகாரிகளுக்கு உரிய அறிவியல் தடயங்களைச் சேகரிக்கவும் குற்றங்களை விரைவில் கண்டு பிடிக்கவும் பெரிதும் உதவி புரிந்து வருகின்றனர்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுபானங்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

- மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்கு விளக்கும் வகையில், மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம் நடத்திட தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திலிருந்து ரூ.3 கோடி 2018–2019ஆம் ஆண்டிற்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது.
- 2019–2020ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிதியில் இருந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்தொகையினை 32 மாவட்டங்கள், காவல்துறை கூடுதல் இயக்குநர் அமலாக்கப்பிரிவு, சென்னை மற்றும் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சென்னை, சேலம் மற்றும் மதுரை மண்டலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் 29.08.2018 அன்று முதன் முதலாக 2018ஆம் ஆண்டுக்கான 202 சார்பு ஆய்வாளர் (விரல்ரேகை) பதவிக்கான அறிவிப்பினை வெளியிட்டது எழுத்துத் தேர்வு, உடற்கூறு அளத்தல் மற்றும் நேர்முகத் தேர்வு முடிந்த பிறகு 14.02.2019 அன்று 202 சார்பு ஆய்வாளர் (விரல்ரேகை) பதவிக்கான தற்காலிகத் தெரிவுப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் 06.03.2019 அன்று 8,826 + 62 (பின்னடைவு காலிப் பணியிடங்கள்) இரண்டாம் நிலைக்காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்கான பொதுத்தேர்வு 2019க்கான அறிவிப்பினை வெளியிட்டது.
- இத்தேர்வுக்கான எழுத்துத் தேர்வு 25.08.2019 அன்று நடத்தப்பட்டு 26.09.2019 அன்று அதன் முடிவுகள் வெளியிடப்பட்டது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் 1:5 என்ற விகிதத்தில் அடுத்தகட்டத் தேர்வான உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு, உடற்திறன் போட்டிகள் மற்றும் சான்றிதழ்கள் சரிபார்த்தல் நடத்தப்பட்டுள்ளது. இப்பொதுத் தேர்வுக்கான தற்காலிகத் தெரிவுப்பட்டியல் 2019 டிசம்பரில் வெளியிடப்பட இருக்கிறது.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் 08.03.2019 அன்று 969 சார்பு ஆய்வாளர்கள் (Taluk, AR and TSP) பதவிக்கான அறிவிப்பினையும் வெளியிட்டது, மேலும், இப்பதவிக்கான எழுத்துத் தேர்வுகள் 2020 ஜனவரியில் நடத்தப்படவுள்ளது. இறுதி தற்காலிகத் தெரிவுப்பட்டியல் 2020 ஏப்ரல் மாத இறுதியில் வெளியிடப்பட இருக்கிறது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

- தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் 2019ஆம் ஆண்டு, நவம்பர் வரை 4,738 வீடுகள் (காஞ்சிபுரம் மாவட்டம் மேலகோட்டையூரில் கட்டப்பட்டுள்ள 2,673 வீடுகளையும் சேர்த்து) உங்கள் சொந்த இல்லத் திட்டத்தின் கீழ், 48,714 காவல் வாடகை குடியிருப்புகள், 1,208 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை ஊழியர்கள் குடியிருப்புகள், 1,426 சிறை துறை ஊழியர்கள்

குடியிருப்புகள், 924 காவல் நிலையங்கள், 572 ஒய்வறைகள், 2 விருந்தினர் இல்லம், 18 மாவட்ட காவல் அலுவலகங்கள், 17 ஆயுதப்படை வளாகங்கள், 30 துயில் கூடங்கள், 61 நாய் பட்டறைகள், 25 சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலைய கட்டடங்கள், 5 சிறப்பு பிரிவு சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலைய கட்டடங்கள், 8 நவீன கட்டுப்பாட்டு அறைகள், 5 மண்டல தடய அறிவியல் துறை கட்டடங்கள், 28 ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை கட்டடங்கள், 5 காவல் துறை துணை தலைவருக்கான சரக அலுவலகங்கள், 4 காவல் துறை தலைவருக்கான மண்டல அலுவலகம் மற்றும் 4 மாநகர காவல் அலுவலகங்களும் கட்டி முடித்துள்ளது. மேற்கூறியவை தவிர காவல் துறை இயக்குநர் அலுவலக இணைப்பு கட்டடம், புழல் மத்திய சிறை, தமிழ்நாடு காவலர் உயர்பயிற்சியகம், கடலோர காவல் படையினருக்கான கட்டடங்கள் மற்றும் சென்னை மாநகர காவல் அலுவலகம், குற்றப்புலனாய்வுத் துறை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைய வாரியம், சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, ஊழல் மற்றும் தடுப்புத் துறை ஆகியவற்றின் தலைமை அலுவலகக் கட்டடங்கள், மகளிருக்கான தனிச்சிறை, மாவட்டச் சிறைகள், கிளைச் சிறையினை மாவட்டச் சிறையாக மேம்படுத்துதல், தாய்கோ வங்கி மற்றும் கூட்டுறவு வங்கி சீரமைப்பு பணி, மகளிர் தங்கும் விடுதி, மாதிரிப் பள்ளிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக அலுவலகக் கட்டடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு மாவட்டத்தில் 10 ஏக்கர் நிலமும் மேலகோட்டையூரில் 100 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்து மொத்தம் 36,000 வீடுகள் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் கட்ட ஆணையிடப்பட்டது. இதன் முதல் திட்டமாக மேலகோட்டையூரில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை மற்றும் சிறைத்துறையினருக்கு 2,673 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

- இரண்டாம் கட்டமாக, சிவகங்கை மாவட்டம் பையூர் பிள்ளைவயல் கிராமத்தில் 201 வீடுகளும், சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் 60 வீடுகளும், விழுப்புரம் மாவட்டம், கண்டம்பாக்கத்தில் 53 வீடுகளும், கட்டப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் கிராமம், தருமபுரி மாவட்டம், பாப்பிநாயக்கன்அள்ளி கிராமம், செங்கல்பட்டு மாவட்டம், கீழக்கோட்டையூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், வெள்ளப்பாக்கம் கிராமம், ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இதர மாவட்டங்களில், நில உரிமை மாற்றம், நிலமதிப்பீடு, மற்றும் நிலம் கையகப்படுத்துதல், நிலத்திற்கான கட்டணத்தை செலுத்துதல், பணியாளர்களிடமிருந்து வீடுகள் தேவை பட்டியல் கோருதல், தோராய மதிப்பீடு மற்றும் வரைப்படம் தயாரித்தல், வீட்டிற்கான கட்டுமான தொகை நிர்ணயித்தல், போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றது.

- 5,426 காவல்துறை வாடகைக் குடியிருப்புகள் ரூ.652.41 கோடி செலவிலும், 160 காவல் நிலையங்கள் ரூ.109.16 கோடி செலவிலும் மற்றும் 118 இதர காவல்துறை கட்டடங்கள் ரூ.197.21 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 118 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.15.05 கோடி செலவிலும், 16 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையக் கட்டடங்கள் ரூ.13.81 கோடி செலவிலும், 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அதிகாரிகளுக்கான விருந்தினர் இல்லம் ரூ.0.37 கோடி செலவிலும், 1 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கான பாசறை ரூ.1.13 கோடி செலவிலும், 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் கோட்ட அலுவலகக் கட்டடம் ரூ.1.19 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 151 சிறைத்துறை குடியிருப்புகள் ரூ.18.32 கோடி செலவிலும், 2 சிறைத்துறை பணியாளர்களுக்கான பாசறைகள் ரூ.0.53 கோடி செலவிலும் மற்றும் 3 மாவட்ட சிறைச்சாலைகள் ரூ.26.05 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

- ரூ.2,117.55 கோடி மதிப்பீட்டில் 9,535 புதிய குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு / மேம்படுத்தப்பட்டு உள்ளது.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் 311 தொழில்நுட்பம் / தொழில்நுட்பம் அல்லாத பணியாளர்கள் புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- 9,611 குடியிருப்பு அலகுகள் மற்றும் 107 வணிக அலகுகள் உட்பட மொத்தம் 9,718 ஒதுக்கீடு தாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 5,611 விற்பனைப் பத்திரங்கள் வட்டித் தள்ளுபடி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.
- வாரியத்திட்டங்களில் 31 அலகுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2,593 குடியிருப்பு அலகுகள் விற்பனை மூலம் ரூ.504.29 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- 91 வணிக அலகுகள் விற்பனை மூலம் ரூ.93.04 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- ரூ.517.24 கோடி மதிப்பீட்டிலான 128.46 ஏக்கர் வாரிய நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

- தொலைநோக்குத் திட்டம் 2023இன் கீழ், 4,72,401 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகள் ரூ.23,426.41 கோடி செலவில் கட்ட மாநில அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- 1,25,390 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / தனி வீடுகள் நகர குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்காக கட்டப்பட்டன.
- 1,86,814 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- பல்வேறு திட்டப் பணிகளுக்காக மூலதன செலவினமாக ரூ.5,274.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 4,44,203 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / தனிவீடுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் அமைக்க ரூ.22,366.59 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு மையஅரசின் ஒப்புதல் பெறப்பட்டது.
- ரூ.1,156.36 கோடி மதிப்பீட்டில் 33 திட்டப்பகுதிகளில் 17,091 குடியிருப்புகள் / வீடுகள் தொடங்கி வைக்கப்பட்டன.
- ரூ.1.72 கோடி செலவில் புதிதாக கோவை சரக மற்றும் கோட்ட அலுவலக வளாகங்கள் திறந்து வைக்கப்பட்டது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆட்டோநகர் அமைக்க ரூ.19.64 கோடி திருத்திய மதிப்பீட்டில் 1,657 வணிக மனைகள் மேம்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் ஒருபகுதியாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் / தனி வீடுகள் அமைக்க ரூ.4,765.39 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.
- பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் குடிநீர் வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், திட்டப்பகுதி உட்புற சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்க ரூ.87.39 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

* அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.35 கோடி வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

* ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூரில் 9,280 குடியிருப்புகள் கட்டும் திட்டப் பணிகளுக்காக ரூ.95.87 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

* 808 குடியிருப்புகள் மற்றும் 1,421 மனைகளுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* 36,432 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் 74 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 20 இளநிலைப் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன மற்றும் 38 பல்வேறு சிறப்புப் பணியாளர்கள் தேர்வு செய்து பணியில் அமர்த்தப்பட்டனர்.

* சென்னையில் நதிக்கரைகளில் வாழும் குடும்பங்களுக்கு 38,000 வீடுகள் ரூ.4,545 கோடி செலவில் அயல்நாட்டு நிதியினைக் கொண்டு கட்ட திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளது.

கூட்டுறவு வீட்டுவசதித் துறை

கூட்டுறவு வீட்டுவசதி சங்கப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு உள்ளது போன்று மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு உள்ளது போன்று மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஆணைகளுக்கிணங்க 2017–2018ஆம் ஆண்டிற்கு 1,188 பணியாளர்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலம் ரூ.28,69,020 மருத்துவ காப்பீட்டு பிரிமியத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

* 2018–2019ஆம் ஆண்டிற்கு 1,144 பணியாளர்களுக்கு ரூ.26,93,090 மருத்துவ காப்பீட்டு பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது.

* 2019–2020ஆம் ஆண்டிற்கு 927 பணியாளர்களுக்கு ரூ.22,34,209 மருத்துவ காப்பீட்டு பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது.

* இக்காப்பீட்டு திட்டம் மூலம் இதுவரை (10.12.2019) 119 பணியாளர்கள் ரூ.43.75 இலட்சம் அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

சிறப்புக் காசுக்கடன் வழங்குதல்

* தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் நலிவடைந்த கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களை மேம்படுத்தும் வகையில் சிறப்புக் காசுக்கடனாக 6 சதவிகித வட்டி விழுக்காட்டில் முதன்மைச் சங்கங்களுக்கு சங்கம் ஒன்றிற்கு 16.02.2017 முதல் 10.12.2019 வரை முதற்கட்டமான ரூ.30, ரூ.50 இலட்சம் வீதம் 17 முதன்மைச் சங்கங்களுக்கு ரூ.518.81 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் தொடர்ந்து சிறப்புக் காசுக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கடன் வழங்குதல்

* இணையத்தில் 16.02.2017 முதல் 10.12.2019 வரை முதன்மைச் சங்கங்களின் மூலம் 7,113 உறுப்பினர்களுக்கு ரூ.273.50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபம்

* சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் சென்னை பெரம்பூர் ஜம்புலிங்க நகரில் ரூ.6 கோடி மதிப்பீட்டளவில் திருமண மண்டபம் கட்டப்பட்டு 11.05.2017 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பணிபுரியும் உபரி பணியாளர்களை நியாய விலை கடைகளில் பணியமர்த்தம் செய்தல்

* கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் சம்பளம் பெற இயலாமல் உள்ள உபரிப் பணியாளர்களுக்கு மறுவேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு நலிவடைந்த கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் 98 பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் நியாய விலைக் கடைகளில் 90 விற்பனையாளர்கள் மற்றும் 8 கட்டுநர்களாக மறுபரவல் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

கூட்டு உள்ளூர் திட்டப் பகுதி விரிவாக்கம்

✶ திருநெல்வேலி, நாகர்கோவில், திண்டுக்கல், கடலூர், கும்பகோணம், விழுப்புரம், சேலம் மற்றும் ஒசூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளின் விரிவாக்கம் அறிவிப்பினை உறுதிசெய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தனித்த உள்ளூர் திட்டப் பகுதி அறிவிப்பு

✶ காங்கேயம் மற்றும் கீரனூர் ஆகிய நகராட்சிகளுக்கான தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகளின் அறிவிப்பினை உறுதி செய்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

✶ கொடைக்கானல் முழுமைத் திட்டத்திற்கு, மறு ஆய்வு ஒப்புதல் வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய மண்டல அலுவலகம் உருவாக்கம்

✶ புதிய திருப்பூர் மண்டல அலுவலகம் உருவாக்கப்பட்டு 26.02.2019 முதல் இயங்கி வருகிறது.

✶ திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை சொந்த அலுவலக கட்டடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

தொழிற்சாலை

✶ தொழிற்சாலைகளுக்கு அதிகபட்ச தளபரப்பு குறியீடு 1–லிருந்து 1.50 மற்றும் மனை அடைப்பு 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரைஉயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

நிலப்பயன்பாடு தகவல்அமைப்பு மற்றும் மின்ஆளுமை செயலாக்கம்

✶ நகர் ஊரமைப்புத் துறையின் அனைத்து பகுதிகளுக்கும் பொதுமக்கள் அறியும்வண்ணம் 12.05.2017 முதல்நிலப் பயன்பாடு தகவல் அமைப்பு முறை தொடங்கப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக கட்டட விண்ணப்பங்கள் பரிசீலனையும் நடைமுறையில் உள்ளது.

புராதன நகர வளர்ச்சி திட்டம்

✶ பெருங்குளம், சுசீந்திரம், கொடுமுடி, திருப்பரங்குன்றம், திருபுவனவாசல், மயிலாடுதுறை மற்றும் திருமுருகன்பூண்டி ஆகிய புராதன நகரங்களின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இத்துறை ரூ.210.89 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

போக்குவரத்து வளர்ச்சி திட்டம்

✶ போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் 18 நகராட்சிகளுக்கு ரூ.602.50 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

பூங்கா மேம்பாட்டு திட்டம்

✶ 17 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பூங்கா வளர்ச்சிக்கு ரூ.230 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

உள் கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

✶ இந்த நிதியின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகையில் 10 திட்டங்களுக்கு ரூ.282.18 கோடி நிதி அனுமதிக்கப்பட்டது.

அனுமதியற்ற மனைப் பிரிவுகள் / மனைகள் வரன் முறைப்படுத்துதல்

✶ இத்திட்டத்தின் கீழ் 21,988 மனைப் பிரிவுகள் மற்றும் 7,51,474 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டது. மொத்த வருவாய் ரூ.757.55 கோடிக்கு மேல் உள்ளது.

பணியாளர்கள் நியமனம்

✶ 12 கட்டடக் கலை உதவியாளர்கள் / திட்ட உதவியாளர் மற்றும் 47 வரைவாளர் நிலை 3 பதவிகளுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டு தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

✶ தலைமை அலுவலகம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய அலுவலகங்களுக்கு வாகன ஏற்பாடு சம்பந்தமான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

✶ பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் பற்றிய விளக்கங்களைப் பெற தகவல் மற்றும் ஆலோசனை மையம் தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

✶ சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் “இணைய தள வசதி மற்றும் கணினி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல், கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் ஒப்புதல்” ஆகியவற்றிற்கான மென்பொருள் தயாரிப்பதற்கான செயல்திட்டத்தை தமிழ்நாடு மின்ஆளுமை நிறுவனம் மூலம் தேர்வுசெய்து சாஃப்டெக் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 06.12.2018 அன்றுமுதல் இணைய வழி செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இந்த அமைப்பின் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல், கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் ஒப்புதல் ஆகியவை தானியங்கமாக செயல்படுத்தப்படுகிறது. மேலும் இந்த அமைப்பு, திட்ட அனுமதி விண்ணப்பங்களை குறிப்பிட்ட காலவரைக்குள் ஒப்புதல் அளித்தலையும், பயன்பாட்டின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்துகிறது.

மாதவரத்தில் துணைப் புறநகர் பேருந்து முனையம் அமைத்தல்

✶ கோயம்பேட்டில் உள்ள சென்னைப் புறநகர் பேருந்து முனையத்தின் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் நோக்கில், மாதவரம் பேருந்து மற்றும் சரக்குந்து வளாகத்தில் உள்ள 8 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.95 கோடி மதிப்பீட்டில் துணைப் புறநகர் பேருந்து முனையம் கட்டி முடிக்கப்பட்டது. 10.10.2018 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

கோயம்பேடு உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் சேமிப்புக் கிடங்கு மற்றும் வணிகவளாகம் அமைத்தல்

✶ கோயம்பேடு உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், சேமிப்புக் கிடங்கு மற்றும் வணிகவளாகம் சுமார் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது. 10.10.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

தளப்பரப்பு குறியீட்டு (FSI) உயர்த்தியது

✶ நகரப் பகுதிகளில் வீடுகளின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு அரசு அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக அனுமதிக்கப்படும் தளப்பரப்பு குறியீட்டை (FSI) தற்போதுள்ள 1.5லிருந்து 2.0ஆக உயர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.09.2018 அன்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை செயல்படுத்த உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டன.

ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவில் அடுக்குமாடி கட்டடங்கள் (MSB) கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்படும்.

✶ பல அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் பெறப்பட்ட மனைப் பிரிவில் திட்ட அனுமதி வழங்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019

✶ பெருகிவரும் மக்கள் தொகையினை கருத்திற் கொண்டு, “அனைவருக்கும் வீடு (Housing for all)” என்ற உயரிய இலட்சியத்தை அடைய, அரிய இயற்கை வளமான நிலத்தை, திறம்படவும், சமச்சீரான, பாதுகாப்பான, திறன்மிக்க, நீடித்த மற்றும் திட்டமிட்ட வகையில் நகர்ப்புறங்கள், ஊரகங்கள் அமைவதை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019ஐ உருவாக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

- ✶ 2019ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மாபெரும் வெற்றியுடன் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக, 10.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 3,00,501 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதுவரை 53 திட்டங்களுக்கான தொழில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதோடு, 219 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்பாட்டில் உள்ளன.

- ✶ நியூயார்க் மற்றும் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் சந்திப்பில் ரூ.8,835 கோடி அளவிலான முதலீடுகளுக்கான 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அவற்றின் மூலம் 35,520 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில், 2019–2020ஆம் ஆண்டில் 63 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, ரூ.19,136 கோடி முதலீடு பெறவும், 83,837 புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ இரண்டாம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019இல் தமிழ்நாடு வானூர்தி மற்றும் தொழில் பாதுகாப்புக் கொள்கை 2019இல் வெளியிடப்பட்டது.

- ✶ தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதன் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவு துவக்கி வைக்கப்பட்டது. இந்த ஒற்றைச் சாளர தகவு மூலமாக, நகர மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் போன்ற 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குதல், அனுமதிகளை புதுப்பித்தல் ஆகிய சேவைகளைப் பெற இயலும்.

- ✶ தமிழ்நாடு அரசு தொழில் துறைக்கு தேவையான ஒவ்வொரு அனுமதியையும் அரசு துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க கால நிர்ணயம் செய்வதன் மூலம் ஒற்றைச் சாளர முறையினை வலுப்படுத்துவதற்கு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் 2018ஐ இயற்றியுள்ளது. மேலும் உரிய காலத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதை உயர் நிலைக் குழுக்கள் மூலம் கண்காணித்து குறைகளை நிவர்த்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தாமதமாகும் இனங்களில் அனுமதி அளிக்கப்பட்டதாக கருதப்படுவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு “யாதும் ஊரே” என்ற பெயரில் ஒரு வலைதளம் 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தொடங்கி வைக்கப்பட்டது.

- ✶ முதலீடுகளுக்கு தேவையான அனுமதிகளை வழங்கிடும் பொருட்டு, தொழில் தோழன் (Biz Buddy) என்ற ஒரு இணைய தளம் மற்றும் தொழில்

வழிகாட்டி நிறுவனத்திற்கு “வழிகாட்டி” என்ற புதிய பெயரையும் புதிய இலச்சினையும் (Logo) 2019 நவம்பர் 30ஆம் தேதியன்று நடைபெற்ற “முதலீடு மற்றும் திறன் மேம்பாட்டு அமர்வு” நிகழ்ச்சியில் துவக்கி வைக்கப்பட்டது.

✶ சிப்காட் நிறுவனம் 330 தொழில் நிறுவனங்களுக்கு 1,347.89 ஏக்கர் நிலம், ஒதுக்கீடு செய்துள்ளதோடு, ரூ.6,871.56 கோடி முதலீட்டினை ஈர்த்து 47,082 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. மூன்றாண்டுகளில் சுமார் 834.39 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

✶ போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் நோக்கத்தில், சிப்காட் தொழில் பூங்கா இருங்காட்டுகோட்டையில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.10.98 கோடி செலவில் ஒரு சரக்கு வாகன முனையமும் வல்லம் – வடகால் சிப்காட் தொழில் பூங்காவில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.10.25 கோடி செலவில் ஒரு சரக்கு வாகன முனையமும் என இரண்டு சரக்கு வாகன முனையங்கள் உருவாக்கம்.

✶ திருப்பெரும்புதூர் வட்டம், சிப்காட் வல்லம்–வடகால் தொழிற்பூங்காவில் சிப்காட் நிறுவனம் ரூ.198.25 கோடி செலவில் அமைய இருக்கின்ற “வானூர்திப் பூங்கா”விற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

✶ தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில் 600 பெண்களுக்கான தங்குமிட (Dormitory) கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

✶ சிப்காட் நிறுவனம், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சிப்காட் நிறுவனம் 25 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5,324.50 கோடியை வழங்கியுள்ளது.

✶ சிப்காட் நிறுவனம், கடலூர் தொழிற்பூங்காவில் (Ph-III) சுமார் 304 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த ஜவுளி செயலாக்க பூங்கா அமைப்பதற்காக M/s.SIMA Textile Processing Centre Ltd.,க்கு நிலஒதுக்கீடு செய்துள்ளது.

✶ இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், மணக்குடி கிராமத்தில் சுமார் 225 ஏக்கர் பரப்பளவில் ரூ.150 கோடியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா நிறுவப்படவுள்ளது.

✶ டிட்கோ நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் கிராமத்தில் வாலிநோக்கம் உப்பு உற்பத்தி வளாகத்தில் சூரிய மின் சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டம் பல கட்டங்களாக செயல்படுத்தபட உள்ளது. முதல் கட்டமாக சூரிய தகடு மூலம் 10 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை டைடல் பார்க் நிறுவனம் தங்களது மின்சார தேவைக்காக செயல்படுத்தியுள்ளது.

- தமிழக அரசின் 3 சதவிகித வட்டி மானியத்துடன் 2,297 தொழில்களுக்கு ரூ.1,158.61 கோடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்கியுள்ளது. இதனால் இந்நிறுவனங்கள், வெளிசந்தையில் நிலவும் கடனுக்கான வட்டி விகிதத்தை விட குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்று பயன் அடைந்துள்ளனர்.

- குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் குறைந்த செலவில் நிதி வழங்கிடும் வகையில், தமிழக அரசு இந்த வட்டி மானியத்தை 3 சதவிகிதத்தில் இருந்து 6 சதவிகிதமாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

- படித்த இளைஞர்கள் முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் (NEEDS) திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் பெரும்பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், 619 பயனீட்டாளர்களுக்கு, ரூ.298.51 கோடி அளவுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து மின் ஆக்கிகள் வாங்குவதற்கு பெறப்படும் கடன்களுக்கு தொழில்முனைவோரின் மூலதனத்தை 10 விழுக்காடாகக் குறைத்த திட்டத்தின் கீழ், 37 பயனீட்டாளர்கள், ரூ.2.96 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு பயன் பெற்றுள்ளனர்.

- ரூ.1,100 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அடுக்கு காகித அட்டை ஆலையின் விரிவாக்க திட்டத்தின், முதல்கட்ட பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் அலகில் 10 இலட்சம் டன் உற்பத்தி திறனுடைய புதிய சிமெண்ட் ஆலை திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் அரசுத் துறையின் சிமெண்ட் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் டன்னாக உயரும்.

- தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டத்தின் மூலம், ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மக்கள் தங்களின் சொந்த உபயோகத்திற்கான மூட்டை ஒன்றுக்கு ரூ.190 என்ற சலுகை விலையில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நாளது வரை, 46,26,365 டன் சிமெண்ட் 15,43,216 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மூன்று வகையான 'அம்மா உப்பு' அதாவது சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவற்றை

குறைந்த விலையில் பொதுமக்கள் வாங்கி பயன் பெறும் பொருட்டு வெளிசந்தையில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

- ✶ புவியியல் மற்றும் சுரங்கத் துறையானது 2018–2019ஆம் நிதியாண்டில் ரூ.1,186.13 கோடி கனிம வருவாய் ஈட்டியுள்ளது.

- ✶ பாரதப் பிரதமரின் பிரதான் மந்திரி கனிஜ் சேத்ரா கல்யாண் யோஜனா (PMKKKY) திட்டத்தின் ஒரு அங்கமான மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை (District Mineral Foundation) கடந்த 2017ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு, 12.01.2015க்கு முன்பும், பின்பும் குவாரி உரிமம் வழங்கப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்து அவர்கள் செலுத்தும் கனிம உரிமத் தொகையில் முறையே 30 சதவீதமும் மற்றும் 10 சதவீதமும் கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.593.39 கோடி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

- ✶ இத்திட்டத்தின் கீழ், 31.10.2019 வரை குடிநீர், கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், உள்கட்டமைப்பு மற்றும் பெண்கள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் ஆகிய திட்டங்களை செயல்படுத்த ரூ.403.79 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,512 திட்டங்கள் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 713 திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

- ✶ டான்மேக் நிறுவனம் துவங்கப்பட்ட நாளிலிருந்து முதல்முறையாக 2017–2018ஆம் ஆண்டு அதிகபட்சமாக 1,11,170 மெ.டன் டுனைட் உற்பத்தி மற்றும் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.

- ✶ டான்மேக் நிறுவனம் துவங்கப்பட்ட நாளிலிருந்து முதல்முறையாக 2017–2018ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய லாபமாக ரூ.75.14 கோடி ஈட்டியுள்ளது.

- ✶ கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு 2017–2018 அரவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய 1,46,058 விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.200 வீதம் மொத்தம் ரூ.136.43 கோடியும், 2018–2019 அரவைப் பருவத்தில், 94,555 விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.137.50 வீதம் மொத்தம் ரூ.89.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

- ✶ சேலம், ஜாகீர்அம்மாபாளையம் எல்கோசெஸ்சில் ரூ.19.72 கோடி செலவில் 50,000 சதுரடி தகவல் தொழில்நுட்ப கட்டடம்.
- ✶ கோயம்புத்தூர், விளாங்குறிச்சி எல்கோசெஸ்சில் ரூ.1.22 கோடியில் நிருவாக கட்டடம்.
- ✶ ஒசூர், விஸ்வநாதபுரம் எல்கோசெஸ்சில் ரூ.21 கோடியில் 50,000 சதுரடி கொண்ட தகவல் தொழில்நுட்ப கட்டடம்.
- ✶ தமிழ்நாடு தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 2018 வெளியிடப்பட்டது.
- ✶ சென்னை சோழிங்கநல்லூரில் அமைத்துள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் ஃபோர்ட் மோட்டார் பிரைவேட் லிட் நிறுவனத்தின் குளோபல் டெக்னாலஜி மற்றும் வணிக வளாக கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
- ✶ சென்னையில் “நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம்” (Centre of Excellence for FINTECH) திறந்து வைக்கப்பட்டது.
- ✶ மதுரை வடபழஞ்சி கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் ரூ.21.14 கோடியில் 70,000 சதுர அடி தகவல் தொழில்நுட்பக் கட்டடம்.
- ✶ 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், பதினொரு முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் மொத்த முதலீடு ரூ.11,974 கோடி மற்றும் 2,40,449 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று உறுதி செய்யப்பட்டது. இதுவரை 7 நிறுவனங்கள் தங்களுடைய ஆரம்ப கட்ட பணிகளை தொடங்கி ரூ.1,839 கோடி முதலீடு மற்றும் 19,150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

மின்–ஆளுமைத் துறை

- ✶ தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மின் ஆளுமைத் துறை, தமிழக அரசு துறைகள் மற்றும் தமிழக அரசு நிறுவனங்களில், மின் ஆளுமையை வெற்றிகரமாக செயல்படுத்த, தகவல் தொழில்நுட்பத் தீர்வு மற்றும் ஆதரவு சேவைகளை வழங்கி வருகிறது.

ஆதார் நிரந்தர பதிவு மையம் (PECs)

- ✶ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் UIDAI அங்கீகாரத்துடன் ஆதார் பதிவு செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 215 நிரந்தர ஆதார் பதிவு மையங்களை, நிறுவி குடிமக்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது.

வெளிப்படை அரசு தரவு தளம்

- ✶ தமிழக அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை தங்களது தரவுகள், ஆவணங்கள், சேவைகள், மற்றும் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பொருளாதார நலத்திட்டங்கள் ஆகியவற்றைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வெளியிடும் பொருட்டு, இதுவரை, 108 முதன்மை தரவு அலுவலர்கள் பதிவு செய்துள்ளனர். 56 அரசு துறைகளின் 16,930 வெவ்வேறு தரவுத் தொகுப்புகள் பதிவேற்றம் செய்ய மாநிலத்திற்கான

வெளிப்படை அரசு தரவு ஒன்று உருவாக்கப்பட்டு https://tn.data.gov.in/ என்ற இணைய முகவரியில் இயங்கி வருகிறது.

அரசு துறைகளுக்கான முக்கிய மின்–ஆளுமை திட்டங்கள்

✶ விவசாயத் துறை – ஒருங்கிணைந்த இணைய மென்பொருள் (விதை உற்பத்தி அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை)

✶ கூட்டுறவுத் தணிக்கைத் துறை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை – தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமைத் திட்டம்

✶ தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் துறை – இணைய மென்பொருள்

✶ மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை – மதிப்பாய்வு கணக்கெடுப்பு செயலி முணையம்

அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட இணைய தளங்கள்

✶ பள்ளிக்கரணை சதுப்பு நில பாதுகாப்பு ஆணையம்

✶ தமிழ்நாடு வனத்துறை

✶ தமிழ்நாடு தோட்டக் கலைத் துறை

✶ நிதித் துறை

✶ உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

✶ ஆதி திராவிடர் நல வாரியம்

✶ தொல்லியல் துறை

✶ அரசு அருங்காட்சியகம்

✶ தகவல் தொழில்நுட்பவியல் துறை

✶ நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

✶ கலை மற்றும் பண்பாட்டுத் துறை

திட்டம் துறை

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

✶ எல்காட் நிறுவனம் 2016 முதல் 2020 வரை மொத்தம் 21,60,482 மடிக்கணினிகள் கொள்முதல் செய்து இத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தரவு மையம் (TAMIL NADU STATE DATA CENTRE)

✶ திருச்சி எல்கொசஸ்ஸில் தமிழ்நாடு பேரிடர் தரவு மீட்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பல அரசு துறைகள் பேரிடர் தரவு மீட்புக்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

மின் ஆளுமை ஆணையரகம் / தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

கிராமத் தொழில்முனைவோர் வாயிலாக இயங்கும் இ–சேவை மைங்கள்:

✶ தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ், தமிழகம் முழுவதும் 12,805க்கும் மேற்பட்ட இ–சேவை மையங்கள் அமைக்கப்பட்டு கிராமத்தில் உள்ள படித்த இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, 2,335 கிராம தொழில் முனைவோர்களுக்கு அரசு சேவைகளை செயல்படுத்த பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டுள்ளது. மீனவர் சமுதாயத்தில் உள்ள படித்த இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு, 150 அரசு பொது சேவை மையங்கள் அமைக்க பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம்:

✶ பல்வேறு திட்டங்களின் கீழ் சான்றிதழ்கள் கோரி இ–சேவைமையங்களுக்குசெல்கிறபொதுமக்களிடம் கடந்த 02.05.2017 முதல் கைபேசி எண் பெற்று பதிவு செய்யும் முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பயனாக, உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் சான்றிதழ் தயாரானதும் இணைய வசதியுடன் கூடிய அலைபேசி எண்ணுக்கு தொடர்புடைய இணைப்பு முகவரி (Tiny - Url) குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். ஸ்மார்ட்போன்கள் மற்றும் இணையவசதியைக் கொண்டு பொதுமக்கள் தங்கள் வீட்டிலிருந்தே சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இ–மடல்

✶ தொழில்நுட்ப நிகழ்வுகளை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள உதவும் வகையில் மாதத்திற்கு இரண்டு முறை தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் வெளியிடப்பட்டு வரும் “இ–மடல்” மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று தொடங்கி

வைத்தார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து இ–சேவை மையங்களிலும் இ–மடல் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை இ–மடலின் 8 பிரதிகள் வெற்றிகரமாக வெளியிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துரைகள் பெறப்பட்டுள்ளது.

✶ தமிழக மக்கள் அனைவரும் தமது கருத்துகளை சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் வலைப் பதிவுகள் மூலமாக அரசுக்கு தெரிவிக்க “நமது அரசு” (Namadhuarasu.in) என்ற பொதுமக்களுக்கான வலைதளம் ரூ.91.80 இலட்சம் செலவில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

✶ CII-CONNECT, அரசு சேவைகளைப் பெறுவதற்கான விழிப்புணர்வு சார்ந்த காணொளிகளை பொதுமக்களின் பார்வைக்காக தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் யு–டியூப் காணொளி ஊடகம் தொடங்கி வைக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம் தொகுப்பின் கீழ் தொழில்நுட்பம் சார்ந்த பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) **நிரப்புதல்:**

✶ தொழில்நுட்பம் சார்ந்த 87 பணியிடங்களில் 46 பணியிடங்கள் நிரப்பப்பட்டு எஞ்சியுள்ள பணியிடங்கள் நிரப்பிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின்–ஆளுமை கொள்கை

✶ மாநில அரசின் பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்படும் மின்னாளுமை நடவடிக்கைகளுக்கு (e-Governance Initiatives) உரிய வழிகாட்டுதல்களை வழங்கும்.

தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்புத் திட்டம் (Tamil Nadu Geographical Information System (TNGIS) - 2017-2019

✶ இத்திட்டத்தில் 29 துறைகள் புவிசார் அடுக்குகளைப் பகிர்ந்துள்ளனர். இதுவரை 358+64 அடுக்குகள் பதிவிடப்பட்டுள்ளன. மேலும், 504 அலுவலர்களுக்கு அணுகல் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

✶ 4,623க்கும் அதிகமான பயனாளர்கள் அரசின் இந்த இணையதளம் வழியாக பதிவு செய்துள்ளனர்.

இடம்சார்ந்த தீர்வுக்கான ஆதரவு அமைப்புகள் (Spatial Decision Support Systems - SDSS)

✶ சுகாதாரத் துறையின் 108 மருத்துவ அவசர ஊர்தி சேவைக்கான இடம்சார்ந்த தீர்வுக்கான ஆதரவு அமைப்புகள் (SDSS).

குழு / அடர்த்தி பகுப்பாய்வு (Cluster/Density Analysis)

✶ விபத்து நடைபெறும் இடங்களை அடிப்படையாகக் கொண்ட குழு (Cluster) / அடர்த்தி (Density)

வரைபடங்கள் மற்றும் அருகிலுள்ள 108 மருத்துவ அவசர ஊர்தி சேவைகள் இல்லாத பகுதிகளை அடையாளம் காணுதல்.

கட்டம் பகுப்பாய்வு (Grid Analysis)

- 4 சதுர கிலோமீட்டர் அளவிலுள்ள பகுதியை ஒரு கட்டமாக அமைத்து, விபத்துகளின் அடர்த்தியை ஆராய்தல். (இறப்பு / கொடுங்காயங்கள்)

மாநில அளவில் அதிக விபத்துகள் நடைபெறும் இடங்கள் (Top Accident Locations in the State)

- கட்டங்களை (Grids) அடிப்படையாகக் கொண்டு அதிக விபத்துகள் நடைபெறும் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை கண்டறிதல்.
- அதிக விபத்துகள் நடைபெறும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் அருகாமையில் அமைந்துள்ள மருத்துவமனைகளை கண்டறிதல்.

சேவையாற்றி வரும் மிக அருகாமையில் அமைந்துள்ள பேரதிர்ச்சி பராமரிப்பு மையங்கள் (Availability / Access to nearest Trauma Care Facilities)

- அதிக விபத்துகள் நடைபெறும் கட்டப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட தொலைவில் பேரதிர்ச்சி பராமரிப்பு வசதி மையங்களின், சேவை இல்லாதது கண்டுபிடிப்பு.

அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கான இடம்சார் தீர்வுக்கான ஆதரவு அமைப்பு (SDSS)

- 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் பள்ளிகளின் சேர்க்கை/அணுகல்.
- விடுதிகள் மற்றும் குடியிருப்புப் பள்ளிகளின் சேர்க்கை / அணுகல்.
- சேவைகள் இல்லாத பகுதியில் பள்ளிகளை மேம்படுத்துதல்.

தொடக்க மற்றும் மேனிலைப் பள்ளிகள் இல்லாத இடங்களை அடையாளம் காணுதல்

- இந்த அமைப்பு குக்கிராமங்களைச் சுற்றி இடையகத்தை (Buffer) உருவாக்கி, சேவைகள் இல்லாத குக்கிராமங்களைப் பட்டியலிடுவதோடு (குறிப்பிட்ட பள்ளிகள் இல்லாத குக்கிராம இடையக மண்டலம்) வரைபடத்திலும் அவற்றைப் பிரதிபலிக்கிறது. தொடக்க / மேனிலைப் பள்ளிகள் மற்றும் வினவலில் (query) கேட்கப்படும் பள்ளிகளின் பட்டியலும் வரைபடத்தில் காட்டப்படுகின்றது. சேவை இல்லாத குக்கிராமங்களை அருகிலுள்ள தொடக்க /மேனிலைப் பள்ளியுடன் இணைக்கும் தொலைவுடன் (வான்வழி) மைய–கோடுகளும் வழங்கப்படுகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி

நிருவாக எல்லைகள், சாலைகள் மற்றும் சொத்து அடுக்குகள்

- தமிழ்நாடு முழுவதும் எல்லை வரையறையின்றி, மாவட்டம் / வட்டாரப் பகுதியில் அமைந்துள்ள சேவைகள் இல்லாத பள்ளிகள் அணுகப்படுவதை கவனித்துக்கொள்ளுதல்.
- விதிவிலக்கான குக்கிராமங்கள் மற்றும் பள்ளி சேவைகள் இல்லாத குக்கிராம வினவலுக்காக கருதப்படும்.
- விடுதிகளின் அமைவிடத்தை கண்டறிந்து பகுப்பாய்வு செய்யப்பட்டது; மலைப்பாங்கான பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் 2017–2018 கல்வியாண்டிற்கான திட்டமிடப்பட்டுள்ள குடியிருப்புப் பள்ளிகள்.

உற்று நோக்கு அடிப்படையில் உருவாக்கப்பட்ட அறிக்கை

- சேவைகள் உள்ள வாழ்விடம், சேவைகள் இல்லாத வாழ்விடம், விதிவிலக்கான மற்றும் முன்மொழியப்பட்ட பள்ளிக்கான அறிக்கை.
- முன்மொழியப்பட்ட மேனிலைப் பள்ளி.
- முன்மொழியப்பட்ட மேனிலைப் பள்ளி இடையகம்.

பொது சேவை மையம் ஆய்வு பயன்பாட்டு செயலி (CSC Inspection App)

- பொது சேவை மையங்களை ஆய்வு செய்வதற்கும் அதன் விவரங்களை பின்வரும் வசதிகளுடன் அறிக்கை அனுப்புவதற்கும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) அலுவலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பயனர் ஊடாடும் ஆன்ட்ராய்டு செயலி ஆகும்.
  - ➢ ஆய்வு செய்யப்பட்ட பொது சேவை மையத்தின் புவி குறியீட்டுத் தகவல்களை பதிவு செய்தல்.
  - ➢ ஆய்வு செய்யப்பட்ட பொது சேவை மையத்தின் படங்களை பதிவேற்றம்.
  - ➢ தானாகவே, ஆய்வு செய்யப்பட்ட பொது சேவை மையத்தின் அறிக்கையை தயார் செய்தல்.

* (SNCU & CEmONC) : கர்ப்பிணிப் பெண்களின் பிறந்த குழந்தைகளுக்கான சிறப்புப் பராமரிப்புப் பிரிவு மற்றும் முழுமையான அவசர கால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு மையங்கள் தொடர்பான வரைபடம் மாநிலம் முழுவதுமாக தயாரித்தல்.

* சேகரிக்கப்பட்ட இடம்சார்ந்த தரவுகள் (Collected spatial data).

* மாநில ஆவணங்களுக்கான பணியகம் (Collected spatial data) : காவல் நிலைய இருப்பிடம், காவல் நிலைய அதிகார வரம்பெல்லை மற்றும் முக்கிய தகவல்கள்.

* தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை (Tamil Nadu Disaster Risk Reduction Agency) : முழு மாநிலத்திற்கும் பேரழிவு பாதிப்பு ஏற்படும் பகுதிகள்.

* வனத்துறை : பாதுகாக்கப்பட்ட வனங்களின் மேம்படுத்தப்பட்ட வன அடுக்குகள், வனச்சரகம் மற்றும் வனக்கோட்ட எல்லைகள்.

புகைப்படக் கருவியுடன் ஆளில்லா குறுவானூர்தி சேவை (Drone as a Service)

* புகைப்படக்கருவி பொருத்தப்பட்ட ஆளில்லா குறுவானூர்தி சேவை தற்போது பல்வேறு அரசாங்க நலத்திட்ட பயன்பாடுகளுக்கு செயல்பட உதவும் வகையில் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது மின்னாளுமைக்கான மாநிலத்தின் முதன்மை முகமையாக (State Nodel Agency) செயலாற்றி பல்வேறு துறைகளுக்கு இக்கருவியின் மூலம் சேவைகளை வழங்க உள்ளது.

* தமிழ்நாடு மின்னாளுமை முகமை இதுகுறித்து பல்வேறு மாதிரி திட்ட செயல் முறைகளை நடத்தியுள்ளது. குறிப்பாக, தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB), சிறப்பு நகர நீர்நிலை பாதுகாப்பு, சென்னைப் பெருநகர மாநகராட்சி (GCC) ஆகியவற்றிற்கான மாதிரி திட்ட செயல் முறை நடவடிக்கைகள் ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது.

இணைய வழித் தேர்வு முறை சேவை (Online Exam service)

* தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, இணைய வழித் தேர்வுமுறையை பல்வேறு துறைகளுக்கு ஆள்தேர்வு நடவடிக்கைக்களுக்கான சேவையை புரிந்து வருகிறது. மேலும், தொழில்நுட்ப கூட்டாளரை (Technology Partner) கொண்டு இணையவழித் தேர்வுகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வுகள் தமிழ்நாடு முழுவதும் சுமார் 200 மையங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

இணையவழித் தேர்வுகள் நடத்தப்பட்டு வரும் துறைகளின் விவரம்

* தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக்குழு (வனவர், வன காப்பாளர் மற்றும் வன காவலர்).

* ஆசிரியர் தேர்வு வாரியம் (ஆசிரியர் தகுதி தேர்வு (TET), PGCI, முதுநிலை ஆசிரியர்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரி விரிவுரையாளர்கள்).

இணையவழித் தேர்வுகள் தொடங்க உள்ள துறைகளின் விவரம்

* தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) (உதவி பொறியாளர்கள், சுற்றுச்சூழல் விஞ்ஞானி, உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள்)

* தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) (சமூக அலுவலர், சுருக்கெழுத்து–தட்டச்சர்கள் நிலை–III, இளநிலை உதவியாளர்கள், வரி வசூலிப்பவர்)

* தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) (உதவி பொறியாளர்).

* மீன்வள மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் (TADHCO) (உதவி மேலாளர்) ஆசிரியர் தேர்வு வாரியம் (வட்டார கல்வி அலுவலர், பல் தொழில் நுட்ப விரிவுரையாளர்கள்)

* தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் சேவையின் வாயிலாக நாளது தேதி வரை சுமார் 12 இலட்சம் நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மின் – அலுவலக சேவை (e-office as a Service)

* கையேடு முறை செயலாக்கத்திற்கு பதிலாக அனைத்து கோப்புகளையும் மின்னணு வழி முறையில் பரிவர்த்தனை செய்யும் பொருட்டு, தமிழக அரசின் கட்டுபாட்டில் உள்ள அனைத்து அரசு துறைகள் / பொதுத்துறை நிறுவனங்கள் / வாரியங்கள் / முகமை உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களிலும், தேசிய தகவலிய மையத்தால் (NIC) உருவாக்கப்பட்ட மின் அலுவலக பயன்பாட்டு சேவை வழங்கப்படுகிறது.

திறந்த வெளி இணைய வழி சேவைகள் தொடர்பான பரிவர்த்தனை விவரங்கள் (Transactions through Open Portal):

- ✶ நாளது தேதி வரை திறந்த வெளி இணைய சேவைகளின் பரிவர்த்தனை எண்ணிக்கை கடந்த ஆண்டு எண்ணிக்கையான 1.64 இலட்சத்திலிருந்து, 8.72 இலட்சமாக உயர்ந்துள்ளது. பொதுமக்கள் அரசு பொது சேவை மையத்தினை அணுகாமல் திறந்த வெளி இணைய வழி சேவைகளின் வாயிலாக பயனடைந்து வருகின்றார்கள் என்பதனையே இது வெளிப்படுத்துகிறது.

செயற்கை நுண்ணறிவு (AI)

மெய்நிகர் தானியங்கு உதவி (Chat Bot-Anil)

- ✶ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது சென்னை அண்ணா பல்கலைகழகத்துடன் இணைந்து அரசு இ–சேவைகள் குறித்த மக்களின் சந்தேகங்களை தீர்க்கும் வகையிலான தானியங்கு மெய்நிகர் Anil எனும் உதவி மென்பொருளை உருவாக்கியுள்ளது. நவீன தொழில்நுட்பங்களான இயற்கை மொழி செயலாக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றினை பயன்படுத்தி இது செயல்படுத்தப்படுகிறது.

முக அடையாள வருகைப்பதிவேடு – Face Recognition System (FRS)

- ✶ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட முக அடையாளத்தை கொண்டு செயல்படும் மின்–வருகைப் பதிவேடு மின் ஆளுமையில் மற்றுமொரு மைல்கல் ஆகும். எளிய முறையில் வருகைப் பதிவேடுகளை கையாளவும், தரவுகள் மூலமான அறிக்கைகளை பெறவும் இது உதவுகிறது. தொடக்க நிலையில் சென்னை மாநகரின் இரண்டு பள்ளிகளில் இவ்வகை வருகைப்பதிவேடு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் பூச்சி அடையாள அமைப்பு “உழவன்” என்ற செயலி

- ✶ விவசாயிகளுக்கு பயிரில் உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்த உதவுகிறது. இந்த உழவன் செயலி தற்போது 5 இலட்சம் மக்களை சென்றடைந்துள்ளது.
- ✶ இந்த செயலியின் மூலம் விவசாயிகள் பூச்சியால் தாக்கப்பட்ட தங்கள் பயிரை தங்கள் கைபேசியில் படம் பிடித்து இந்த செயலியின் மூலம் பதிவேற்றம் செய்தால் அதற்கான தீர்வு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும்.
- ✶ இந்த மென்பொருள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.11.2019 அன்று நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப “கனெக்ட்” நிகழ்வின்போது துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

கேபிள் டிவி சேவை

- ✶ அனலாக் முறையில் 106 சேனல்களை ரூ.70/– என்ற குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்கி வந்தது.
- ✶ தமிழ்நாடு அரசின் இடை விடாத முயற்சிகளின் காரணமாக மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் DAS Licence வழங்கியுள்ளது.
- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.09.2017 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு விலையில்லா செட்டாப் பாக்ஸ்களை வழங்கி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள டிஜிட்டல் ஒளிபரப்பு சேவைக்கான MPEG 4 தொழில்நுட்பத்தில் தரம் உயர்த்தப்பட்ட கட்டுப்பாட்டு அறையை திறந்து வைத்து டிஜிட்டல் ஒளிபரப்பு சேவையைத் தொடங்கி வைத்தார்கள்.
- ✶ இதுவரை 36.7 இலட்சம் செட்டாப்பாக்ஸ் கொள்முதல் செய்யப்பட்டு 35.4 இலட்சம் செட்டாப்பாக்ஸ்கள் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- ✶ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் HD கேபிள் டிவி சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.07.2018 அன்று துவக்கி வைத்தார்கள்.
- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.08.2019 அன்று டிஜிட்டல் ஒளிபரப்பிற்கான கட்டணம் ரூ.219.99 + GST (209 Channels) குறைத்து, தற்சமயம் சேனல் தொகுப்பு – ரூ.130/– +GST மொத்தம் 200 சேனல் என மக்களுக்கு தரமான டிஜிட்டல் ஒளிபரப்பில் வழங்கப்படுகிறது.

அதிவேக அகண்ட அலைவரிசை இணையதள சேவைகள் மற்றும் பாரத் நெட்சேவைகள்

- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 01.03.2016 அன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் துவக்கி வைக்கப்பட்டது.
- ✶ 2019 நிலவரப்படி, மாநிலம் முழுவதும் உள்ள 835 வாடிக்கையாளர்களுக்கு ரயில்வயர் மற்றும் வணிக பங்குதாரர்கள் மூலம் வருவாய் பகிர்வு மாதிரியில் இணைய சேவைகளை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்குகிறது.

அரசு இ–சேவை மையங்கள்

- ✶ தமிழ்நாடு அரசு கேபிள் டிவியில் 595 அரசு இ– சேவை மையங்கள் தமிழ்நாடு முழுவதிலும் துவங்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் வருவாய்த் துறை மூலம் வழங்கப்படும் சான்றுகள், சமூக நலத்துறை உதவிகள் பெறுவதற்கான சேவைகள், மின்கட்டணம் செலுத்துதல், மற்றும் வாக்காளர் வண்ண அடையாள அட்டை வழங்குதல், ஓய்வூதிய அடையாள அட்டை மற்றும் அரசு அலுவலர்களுக்கான அடையாள அட்டை அச்சிட்டு வழங்குதல் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதார் சேர்க்கை மையங்கள்

- ✶ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 313 ஆதார் பதிவு மையங்களை தமிழகம் முழுவதும் செயல்படுத்தி வருகிறது. 16.02.2017 முதல் 15.12.2019 வரை ஆதார் பதிவு மையங்கள் மூலமாக 29,92,425 இந்த ஆதார் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இம்மையங்கள் மூலம் மொத்தம் 63,31,813 ஆதார் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ✶ முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கே சென்று ஆதார் பதிவு மேற்கொள்ள நடமாடும் ஆதார் பதிவு மையம் சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகம்

தமிழ் மின் நிகண்டு

- ✶ தமிழ் இணையக் கல்விக்கழகம் “தமிழ் மின் நிகண்டு” ஒன்றை உருவாக்கியுள்ளது. தமிழ் மின் நிகண்டு என்பது பொருள் குறித்த பல சொற்களை கொண்டிருக்கும். இதுவரையில் சுமார் 17,000க்கும் மேற்பட்ட தலைச்சொற்கள் கண்டறியப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மின்கற்றலுக்காக இணையதளம்

- ✶ தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மின்கற்றலுக்காக இணையதளம் புதுப்பிக்கப்பட்டு பல கூடுதல் வசதிகளுடன் கடந்த 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது.

கணித்தமிழ்ப் பேரவை

- ✶ தமிழ்நாட்டில் உள்ள 100 கல்லூரிகளில் கணித் தமிழ்ப் பேரவைகள் தொடங்குவதற்காக அரசு ரூ.25 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. மதுரை காமராசர், அழகப்பா, அண்ணா, சென்னை, பெரியார், அன்னை தெரசா, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் தமிழ்நாடு வேளாண், தமிழ்நாடு மீன்வளம், பாரதியார் ஆகிய தமிழகப் பல்கலைக்கழகங்களில் 100 கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கப் பெற்றுள்ளன.

தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்

- ✶ தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டத்தின் வாயிலாக 210க்கும் மேற்பட்ட அரசு துறைகளுக்கான தமிழ் மின் களஞ்சியங்களை உருவாக்குவதற்கான தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண்மை, மீன்வளம், கலை மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் 84 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலைக்களஞ்சிய வடிவிலான தமிழ்க் கட்டுரைகள் உருவாக்கப்பெற்றுள்ளன.

கணினி, அலைபேசியில் தமிழ் மென்பொருட்கள்

- ✶ கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசியில் தமிழ்ப்பாடங்கள், இலக்கணம் மற்றும் அகராதி ஆகியவற்றை கற்பிப்பதற்கான குறுஞ்செயலிகள் உருவாக்குவதற்கும், கணித்தமிழ் ஆய்வு கருவிகள்

உருவாக்குவதற்கும் ரூ.1.5 கோடி பெறப்பட்டு வல்லுநர் குழுவின் பரிந்துரையின்படி 15 மென்பொருட்கள் அடையாளம் காணப்பட்டு இதில் இதுவரை 12 மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

✶ 12 மென்பொருட்கள் பணி முடிவடைந்து அவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017, 11.10.2017 மற்றும் 13.03.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. மேலும் மற்ற மென்பொருட்களில் இரண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ஒரு மென்பொருளின் உருவாக்குதல் பணி நடைபெற்று வருகிறது.

✶ தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை எண் 31 – 2019–2020ஆம் ஆண்டு அறிவிப்பில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் ‘கணினித் தமிழ்ப் பிரிவு’ உருவாக்கப்படும் எனவும் இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் செலவாகும் என அறிவிக்கப்பட்டது.

கல்வி தொடர்பான காணொலிகளை (videos) தமிழில் மொழிமாற்றம்

✶ கான் கல்விக்கழகம் 8,706 கல்வி, ஆராய்ச்சி சார்ந்த காணொலிகளை தமிழில் மொழிபெயர்ப்புடன் உருவாக்கி உள்ளது.

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா

✶ பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் சேர்ந்து இணையம் வழியாக கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையே கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம்நடத்திவெற்றிபெற்றமாணவர்களுக்கு கவிதைக்கான முதல் பரிசு ரூ.25,000/–, இரண்டாம் பரிசு ரூ 15,000/–, மூன்றாம் பரிசு ரூ.10,000/– எனவும், கட்டுரைக்கான முதல் பரிசு ரூ.25,000/–, இரண்டாம் பரிசு ரூ.15,000/–, மூன்றாம் பரிசு ரூ.10,000/– பரிசுத் தொகையோடு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.11.2017 அன்று வழங்கப்பட்டது.

உரை மற்றும் வாய்மொழிக்காகக் கணினியில் பயன்படும் மென்கருவிகள்
(Text and Speech Computing Tools)

✶ தமிழ்நாடு Innovation Initiatives (TANII) 2017–2018 திட்டத்தின் கீழ், தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருள் (Text and Speech Computing Tools) உருவாக்கத்திற்காக ரூ.70.04 இலட்சம் தொகை ஒப்புதல் அளித்துள்ளது.

இயந்திர மொழிபெயர்ப்பிற்கான தமிழ்மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதி முறைகள்
(Sentence Patterns, Structures and Rules in Tamil for Machine Translation)

✶ இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் (Sentence Patterns, Structures and Rules in Tamil for Machine Translation) உருவாக்கப்பட்டுள்ளது.

மின்னுருவாக்கம்

✶ அரிய தமிழ் நூல்கள், இதழ்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்து பிரதிகள் ஆகியவை மின்னுருவாக்கப்பட்டு http://tamildigitallibrary.in என்ற இணையத்தில் பதிவேற்றப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

ஓலைச்சுவடி மின்னுருவாக்கம்

✶ டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் மற்றும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய இடங்களில் மின்னுருவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 6,85,574 ஓலைச்சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தகவலாற்றுப்படை

✶ தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, கலை மற்றும் பண்பாட்டு சின்னங்கள் உள்ளிட்டவைகளின் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியம் ஒன்றினை உருவாக்க ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

தொழிலாளர் ஆணையரகம்

சமரசப் பணிகள்

- ✶ 16.02.2017 முதல் 10.12.2019 வரை 7,911 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டு அவற்றுள் 4,178 வழக்குகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. நிலுவை வெகுவாக குறைக்கப்பட்டு தற்போது 661 தொழிற்தாவாக்கள் உள்ளன.
- ✶ 20 பொறியியல் நிறுவனங்கள், 24 இதர நிறுவனங்கள், 8 துணி நெசவு நிறுவனங்கள், 1 தோல் பதனிடும் தொழில் நிறுவனம், 3 தோட்ட தொழில் நிறுவனங்கள் உட்பட மொத்தம் 56 நிறுவனங்களில் சமரச பேச்சுவார்த்தையின் வாயிலாக வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு, இதன்பயனாக 1,92,691 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது.
- ✶ 4 பொறியியல் நிறுவனங்கள் மற்றும் 3 இதர நிறுவனங்கள் உட்பட மொத்தம் 7 நிறுவனங்களின் கதவடைப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 1,800 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது. 1947 வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டப்பிரிவு 12(3)இன் கீழ் 5 முக்கிய தொழில் நிறுவனங்களில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

நிருவாகப் பணிகள்

- ✶ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகங்கள் 19 மாவட்டங்களில் (சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, கடலூர், வேலூர், திருச்சி, கரூர், திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், சிவகங்கை, திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி, புதுக்கோட்டை, தேனி மற்றும் விருதுநகர்) புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948

- ✶ வீட்டு உபயோக துணிவகை உற்பத்தி தொழில் குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948இன் அட்டவணை பகுதி–1இல் சேர்க்கப்பட்டது. மேற்படி காலத்தில் வடிசாலைத் தொழில், வீட்டு வேலைத் தொழில், சமையல் தொழில், கை எம்ப்ராய்டரி மற்றும் ஜரி தொழில் மற்றும் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு

சட்டமுறை எடையளவு சட்டம், 2009

- ✶ சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 8,90,589 ஆய்வுகளும், 36,390 வழக்குகளில் குற்றங்களை தீர்வு செய்த வகையில் நீதிமன்றம் மற்றும் இணக்க கட்டணமாக ரூ.3.18 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. முத்திரைக் கட்டணமாக ரூ.103.68 கோடியும், உரிமம் வழங்கியதற்கான கட்டணம் ரூ.11.31 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

✶ 16.02.2017 முதல் 10.12.2019 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 3.33 இலட்சம் நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு 7,473 வழக்குகளில் குற்றங்களை தீர்வு செய்த வகையில் நீதிமன்றம் மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.2.33 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது பதிவுக் கட்டணமாக ரூ.6.34 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

✶ அனைத்து மாவட்டங்களிலுள்ள சட்ட அமுலாக்க அலுவலர்கள் மற்றும் மாவட்ட தடுப்பு படைகள் மூலம், 5.74 இலட்சம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 172 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, 221 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். 25 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.5,37,050/– அபராதம் வசூலிக்கப்பட்டதுடன், ஒரு வழக்கில் வேலை அளித்தவருக்கு இரண்டாண்டு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

✶ உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான ஜூன் 12இல் மாநில அளவிலான குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் பேரணிகளும், கையெழுத்து இயக்கமும் நடத்தப்படும். 12.06.2018 அன்று நடைபெற்ற குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் குறும்படம் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

கொத்தடிமை தொழிலாளர்

✶ கொத்தடிமை தொழிலாளர்களை கண்டறிதல், மீட்டெடுத்தல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் தொடர்பான மாநில செயல் திட்டம் மற்றும் வழிமுறை அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

✶ 914 கொத்தடிமை தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ.1,68,48,000/– உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல வாரியம்

✶ தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் 27,621 பயனாளிகளுக்கு ரூ.2,85,62,176/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

✶ 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் 6,42,524 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டதுடன், 13,04,133 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.598,50,94,044/– உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

✶ பணியிடத்தில் பணியின்போது, விபத்து ஏற்பட்டு இறக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதன்மூலம் 82 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

✶ 50 நகரும் மருத்துவமனைகள் 16 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்படுத்தப்பட்டு 89,652 கட்டுமான தொழிலாளர்களுக்கு அவர்களது பணியிடம் தேடி சென்று சுகாதார சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

✶ கட்டுமானத் தொழிலாளர்கள் கட்டுமான பணியிடங்களில் தற்காலிகமாக தங்குவதற்கு தூங்கும் அறைகள் (Dormitories) எழிச்சூர் மற்றும் தையூர் கிராமத்தில் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதுவரை 607 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கி பயனடைந்து வருகின்றார்கள்.

✶ ரூ.2,31,15,000/– செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியினை பயன்படுத்தி 50 கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் கட்டுமானத் தொழிலாளர்களது குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்கிடும் வகையில், அங்கன்வாடி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,036 கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

✶ இயற்கை மரணம் / ஈமச்சடங்கு நிதி உதவி இயற்கை மரணம் ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/–

ஆகவும், ஈமச்சடங்கு ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்க 17.11.2017 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

✶ சென்னை மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் சென்னை மாவட்டத்தில் உள்ள அம்மா உணவகங்களில் இலவசமாக உணவருந்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 48,204 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

✶ 2018–2019 மற்றும் 2019–2020 கல்வியாண்டுகளில் 80 கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டதற்கான கல்வி உதவித்தொகை ரூ.23,73,627/– வழங்கப்பட்டுள்ளது.

✶ மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களால் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டம் மற்றும் வியாபாரிகள் மற்றும் சுயதொழில் புரிவோருக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 10.12.2019 வரை தமிழ்நாட்டில் 54,080 தொழிலாளர்கள் பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ளனர் மற்றும் 271 தொழிலாளர்கள் தேசிய ஓய்வூதிய திட்டத்தில் (NPS) பதிவு செய்துள்ளனர்.

மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்

✶ மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் 27.12.2018 அன்று திருத்தியமைக்கப்பட்டு, 68ஆவது கூட்டம் 04.09.2019 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடைகள் மற்றும் நிறுவனங்களில் நீண்ட நேரமாக நின்றுகொண்டே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்தி கொடுக்கின்ற வகையில், 1947ஆம் வருட தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொழில் நல்லுறவு விருதுகள்

✶ “தொழில் நல்லுறவு விருதுகள்” என்ற திட்டத்தின் கீழ், 11.02.2019 அன்று விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களால் சிறந்த வேலையளிப்பவர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் 2015–2016ஆம்ஆண்டிற்கு விருதுகள் வழங்கப்பட்டது.

தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை

இணையவழி ஆய்வுத் திட்டம்

✶ நிறுவனங்களின் தன்மையின் அடிப்படையில் ஆய்விற்குரிய நிறுவனங்கள் கணினி வழியில் ஆய்வாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்

திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஆய்விற்குரிய நிறுவனங்கள் ஆய்வாளர்களுக்கு மாதத்தின் முதல் வாரத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அம்மாதத்தின் பிற வாரங்களில் ஆய்வு செய்யப்படுகிறது.

சுயசான்றிதழ் திட்டம்

- ✶ சுயசான்றிதழ் திட்டத்தின் கீழ், நிறுவனங்கள் மொத்த தொழிலாளர் எண்ணிக்கை, வழங்கப்படும் ஊதியம், பணிக்கொடை, விடுப்பு முதலிய விவரங்களுடன் கூடிய ஆண்டறிக்கையுடன் கூடிய சுயசான்றிதழினை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை மற்றும் சுயசான்றிதழ் திட்டம்

- ✶ குறைந்த அபாயமுள்ள நிறுவனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நேரடி ஆய்விலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- ✶ நடுத்தர அபாயமுள்ள நிறுவனங்கள் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

இணையவழி வழக்கு மேலாண்மை

- ✶ இத்துறையின் சமரச பணிகள், நீதிசார் அலுவல்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் நீதிமன்ற நடவடிக்கைகள், வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணை, விவாதம் மற்றும் இறுதி ஆணைகள் பிறப்பித்தல் போன்ற பல்வேறு பணிகள் தொடர்பான மென்பொருள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தொழிற்சாலைகள் பதிவு செய்தல்

- ✶ தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ், 5,359 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு 1,24,642 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள்

- ✶ புதிதாக 3,117 கட்டுமான நிறுவனங்கள், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ளன. கட்டுமான தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு கட்டுமான இடங்களில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கட்டுமான பணியிடங்களில் 178 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 15,355 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- ✶ மாநில பாதுகாப்பு மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் சார்பாக 20.09.2019 அன்று சென்னையில் நடைபெற்ற 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான தொழிற்சாலைகள் பாதுகாப்பு விருதுகள் மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கும் விழாவில் 332 மாநில பாதுகாப்பு விருதுகள் 268 தொழிற்சாலை நிருவாகத்தினருக்கும், உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் 235 தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம் மற்றும் சென்னை மண்டல சார்நிலை அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த சொந்த அலுவலகக் கட்டடம் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம் மற்றும் 16 சென்னை மண்டல சார்நிலை அலுவலங்களுக்கான ஒருங்கிணைந்த சொந்த அலுவலகக் கட்டடம் ரூ.8.95 கோடி செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பாதுகாப்பு பிரச்சார குழுக்கள்

- ✶ சென்னை, மதுரை மற்றும் கோவை மண்டல பாதுகாப்பு பிரசார குழுக்கள் காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று மேற்கண்ட உற்பத்தி பணிகளில் உள்ள அபாயங்கள் குறித்தும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது குறித்தும் நிர்வாகத்தினர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியும், விபத்தினை தடுக்கும் வகையில் தொழிலாளர்களால் கடைபிடிக்கப்படவேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது. மேற்படி

காலத்தில் இக்குழுக்களால் 182 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 8,183 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு பயிற்சி

- ✶ பாதுகாப்பான முறையில் பணிபுரிவதன் முக்கியத்துவம் குறித்து தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1,299 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 75,857 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

- ✶ தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு பயிற்சி மையம் சிவகாசியில் ரூ.2.61 கோடி செலவில் 2013ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டு காலத்தில் 14 குழுக்களுக்கு ஒரு மாத கால பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 229 போர்மேன்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் பயனடைந்துள்ளார்கள். மேலும், 113 ஒரு நாள் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 12,125 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

நடமாடும் கண்காணிப்புக் குழு

- ✶ பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிப்பது குறித்து விருதுநகர் மாவட்டத்தில் நடமாடும் கண்காணிப்பு குழு (MobileTeam) ஒன்று தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு, மேற்படி காலத்தில் 544 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது.
- ✶ தொழில்முனைவோருக்கு உதவும் பொருட்டு இவ்வியக்கத்திற்கென பிரத்தியேக வலைதளம் ரூ.1.81 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வியக்ககத்தின் பல்வேறு சேவைகள் / ஒப்புதல்களை இவ்வலைதளத்தின் (htts://dish.tn.gov.in) வழியாக பெற இயலும்.

இணைய கண்காணிப்பு மையம்

- ✶ தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை கண்காணிக்க தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ரூ.29.75 இலட்சம் செலவில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், இக்கண்காணிப்பு மையத்துடன் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் நிகழ்நேர மதிப்பீட்டின்படி கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- ✶ கட்டுமான பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்டப்பிரிவின் அமலாக்க அலுவலர்களுக்கு 30 மடிக்கணினிகள் வழங்க 28.02.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து ரூ.19.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திலிருந்து ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் தயாரிக்கப்பட்டு, கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களின் பணிபாதுகாப்பிற்கு உதவும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- ✶ பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்கவும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் இயக்கக அலுவலர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ரூ.18 இலட்சம் செலவில் பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்க 25.10.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு மூன்று பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வின் போது திரையிடப்பட்டு வருகிறது.
- ✶ ரூ.25 இலட்சம் செலவில் பல்வகை வாயு பகுப்பாய்விகள் இவ்வியக்கக அலுவலர்கள் ஆய்வின் போது எடுத்துச் சென்று தொழிற்சாலைகளில் வெளியாகும் விஷ வாயுக்களின் அடர்த்தியை அளவிடும் வகையில் பெற்று வழங்கப்பட்டது.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள்

- ✶ கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 25,000 தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து ரூ.5.44 கோடி செலவில் பாதுகாப்பு தலைக்கவசம், கையுறை, காரணிகள், பிரதிபலிப்பு மேலாடை, கண்ணாடி அடங்கிய பாதுகாப்பு பெட்டகம் வாங்கி வழங்கப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (வேலைவாய்ப்பு பிரிவு)

- ✶ அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களாக மறு சீரமைக்கப்பட்டு வேலை நாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.
- ✶ போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை, இணையவழி கற்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட மெய்நிகர் கற்றல் வலைதளம் (Virtual Learning System) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.02.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்விணையதளத்தில் இதுவரை 42,456 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.
- ✶ வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 12,891 வேலைநாடுநர்கள் பொதுத்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 459 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவர். சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 1,90,248 நபர்கள் தனியார் துறைகளில் பணி நியமனம் பெற்றுள்ளனர். இதில் 3,349 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவர்.
- ✶ சென்னை கிண்டியில், மாநில அளவிலான தொழில்நெறி வழிகாட்டும் மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.02.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம் வாயிலாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஆலோசகர்களால் வேலைவாய்ப்புக்கான ஆலோசனை வழங்குதல் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள தொகுதி 1 மற்றும் 2க்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- ✶ திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், கடலூர், வேலூர் ஆகிய ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மையங்கள் வாயிலாக தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் மற்றும் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.20.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'ஒரு நாள் – ஒரு செயல்பாடு':

- ✶ மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள் வரன்முறைப்படுத்தப்பட்டு "ஒரு நாள் – ஒரு செயல்பாடு" என்ற தலைப்பின் கீழ் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இச்செயல்பாடுகளால் பயன் பெற்றோர் விவரம் :
    - திறன் பயிற்சிக்கான பதிவு மேற்கொள்ளுதல் மூலம் 59,275 நபர்கள் திறன் பயிற்சிக்கு பதிவு செய்துள்ளனர்.
    - சேவை செவ்வாய் தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்துதல் மூலம் 2,770 தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் நடத்தப்பட்டு 1,79,280 நபர்கள் பயன் பெற்றனர்.
    - போட்டித் தேர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் மூலம் 2,802 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதில் 93,494 நபர்கள் பயன்பெற்றனர்.
    - குழு கலந்துரையாடல் மற்றும் தனிநபர் வழிகாட்டல் மூலம் 68,384 பதிவுதாரர்களுக்கு, பதிவின் போது வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டது.
    - தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மூலம் 1,73,339 வேலை நாடுநர்கள் தனியார் துறையில் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை திட்டம்

- ✶ கடந்த 16.02.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையை இரு மடங்காக உயர்த்தி உத்தரவிட்டார்கள். இத்திட்டத்தின் கீழ் 54,674 பயனாளிகளுக்கு ரூ.80.80 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

- ✶ பத்து அரசு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்காக 1,148 இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 44,719 வேலைநாடுநர்கள் பயன்பெற்றனர்.

தன்னார்வ பயிலும் வட்டங்கள்

- ✶ போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்ய விரும்பும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களின் செயல்பாட்டிற்கு, ஆண்டொன்றிற்கு ரூ.1 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2,017 இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில் 61,298 மனுதாரர்கள் கலந்துகொண்டு, 2,208 நபர்கள் பொதுத்துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

பயிற்சிப் பிரிவு

- ✶ உளுந்தூர்பேட்டை, சேலம், மேட்டூர் அணை, தருமபுரி, நாகர்கோவில், தஞ்சாவூர், நாகலாபுரம், அருப்புக்கோட்டை, கரூர், ஈரோடு ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.417.24 இலட்சத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- ✶ தமிழ்நாடு முன்னோடி திட்டத்தின் கீழ், 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.258.98 இலட்சம் செலவில் பற்றவைப்பவர் தொழில்நுட்பத்தைக் கணினி மூலம் கற்பிக்கும் கருவி பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ✶ மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் ரூ.517.96 இலட்சம் செலவில் 17 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் அமைக்கப்பட்டு பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- ✶ ஏற்கெனவே செயல்பட்டு வரும் 8 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 12 புதிய தொழிற்பிரிவுகள் ரூ.1,067 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

- ✶ அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 26 மாவட்டங்களில் உதவி இயக்குநர் அலுவலகம் ரூ.115.85 இலட்சம் செலவில் அமைக்க ஆணையிடப்பட்டது. இதன்படி, 04.10.2018 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு தற்போது வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

- ✶ முந்தைய வேலூர் மாவட்டம், தற்போதைய திருப்பத்தூர் மாவட்டம் – வாணியம்பாடி, ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிப்பாளையம் மற்றும் திருவாரூர் மாவட்டம் – கோட்டூர் ஆகிய மூன்று

இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.28.61 கோடி செலவில் துவங்கப்பட்டு பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், பயின்று அகில இந்திய தொழிற் தேர்வில் எட்டு தொழிற்பிரிவுகளில் மாநில அளவில் மதிப்பெண் அடிப்படையில் முதல் 25 இடங்களில் தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உயர்நிலையிலான சிறப்பு பயிற்சி வழங்கிட ரூ.57.81 இலட்சம் செலவில் ஆணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- ✶ நவீன மற்றும் உயர்நிலை தொழிற்பிரிவுகளான மருத்துவ மின்னணுவியல், கட்டடக்கலை உதவியாளர், ஆட்டோபாடி ரிப்பேரிங் மற்றும் பெயிண்டிங், மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் இயக்குபவர், டூல் அண்டு டை மேக்கர், கம்மியர் மின் மின்னணுவியல், இயந்திரவேலையாள், கம்மியர் குளிர்பதனம் மற்றும் தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழில் பாதுகாப்பு மேலாண்மை போன்ற தொழிற்பிரிவுகள் 20 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.38 கோடி செலவில் அறிமுகப்படுத்திட அரசால் ஆணையிடப்பட்டு ஆகஸ்டு 2019இல் பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் விதமாக உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள பற்றாக்குறையை பூர்த்தி செய்திடும் வகையில், ரூ.30 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் பயிற்சி அளித்திட ஆணையிடப்பட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து உரிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- ✶ தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 10,000 மாணவர்களுக்கு தொழில் நெறிமுறையினை வழங்கவும், வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், தேவையான திறன்களைப் பெறவும், தொழிற்சாலைகளில் நேரடியாக பயிற்சி அளித்திட ஆணையிடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் ரூ.2.85 கோடி செலவில் இரண்டு புதிய மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்கள் உருவாக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு கடந்த 22.02.2019 முதல் இவ்வலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர்கள், எளிய மொழியில் பாடத்திட்டத்தினை புரிந்து கொள்ளவும், பயிற்சியாளர்களுக்கு பயிற்றுவிக்கும் பொருட்டும் ரூ.1.27 கோடி செலவில் கணினி வழியில் பாடங்கள் அறிமுகப்படுத்த ஆணையிடப்பட்டு தற்போது அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் கொள்முதல் செய்யப்பட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- ✶ சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள கருமந்துறை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.58.56 இலட்சம் செலவில் புதிய கட்டடம் 01.09.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- ✶ மெய்நிகர் வகுப்பறைகள் தமிழ்நாடு முன்னோடி திட்டத்தின் கீழ், ரூ.80 இலட்சம் செலவில் மலை சார்ந்த பகுதிகளில் உள்ள ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆணையரகத்தில் 04.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மேலும், தொழிற்சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்ப்பு பணிகளை இணையதளம் வாயிலாக மேற்கொள்ளும் திட்டம் ரூ.40 இலட்சம் செலவில் 04.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- ✶ செம்போடை மற்றும் பெரும்பாக்கம் ஆகிய இரண்டு இடங்களில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்புடன் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வெற்றிகரமாக பயிற்சி முடித்துச் செல்லும் பயிற்சியாளர்களுக்கு கருவித்தொகுப்பு (Tools Kit) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு உணவு வசதியுடன் கூடிய தங்கும் விடுதிகள் ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பாதுகாப்பாக பயிற்சி பெறும்

பொருட்டு தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டு அரசாணை பெறப்பட்டு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ சின்னசேலம், திண்டிவனம், கூடலூர், திருச்செந்தூர், சேலம், கடலூர், இராணிப்பேட்டை ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.16.42 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் விடுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.11.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

தமிழ்நாடு திறன் மேம்பாடுக் கழகம்

- ✶ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு குறுகியகால திறன் பயிற்சி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் 512 திறன் பயிற்சி நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ✶ 2,23,166 இளைஞர்களுக்கு ரூ.24,523.60 இலட்சம் செலவில் குறுகியகால திறன் பயிற்சி வழங்குவதற்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழக இயக்குநர் குழுமத்தால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 3,58,654 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு 1,34,992 இளைஞர்களுக்கு பணி நியமனம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
- ✶ வேலை நாடுநர்கள் மற்றும் இளைஞர்களின் திறனை மதிப்பீடு செய்து உரிய பயிற்சி வழங்கும் பொருட்டு ரூ.87.40 இலட்சம் செலவில், 32 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டும் மையங்களில் பயிற்சி உபகரணங்களுடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள்அமைத்திட தமிழ்நாடு அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது மற்றும் அம்மா இருசக்கர வாகன பழுதுபார்த்தல் பயிற்சி மையங்களில் 1,400 நபர்களுக்கு ரூ.254.23 இலட்சத்தில் பயிற்சி அளித்திட அரசின் ஆணைகள் பெறப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மொத்தமாக 700 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ✶ மாநில திறன் போட்டிகளை ரூ.40 இலட்சம் செலவில் நடத்திட அரசால் ஆணையிடப்பட்டது. மாவட்ட அளவிலான திறன் போட்டிகளில் 2,317 பேர் பங்கேற்றனர் அதில், 2018ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்ற தேசிய திறன் போட்டியில் கலந்து கொண்டு 4 போட்டியாளர்கள் பதக்கங்களை வென்றனர். பதக்கம் வென்றவர்கள் இரஷ்யாவின் கசன் மாகாணத்தில் நடைபெற்ற உலகத் திறன் போட்டியில் பங்கேற்றதில் ஒருவர் சிறப்பு விருது பெற்றார்.
- ✶ 2019–2020ஆம் ஆண்டில் ரூ.296 இலட்சம் செலவில் மாநில திறன் போட்டிகள் நடத்திட தமிழக அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ சேவைத் துறையில் 20,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்

கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக குறுகியகால பயிற்சி வழங்கப்படுகிறது. இது வரை 32 மாவட்டங்களில் பல பிரிவுகளில் 9,100 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ 1,00,000 தொழிலாளர்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வழியாக திறன் மதிப்பீடு மற்றும் சான்றளிப்பது தொடர்பில் அரசின் ஆணைகள் பெறப்பட்டு இதுவரை 58,776 தொழிலாளர்களின் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது.

- ✶ ரூசா திட்டத்தின் கீழ், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 13,159 மாணவர்களுக்கு 19 தன்னாட்சிப் பெற்ற அரசு கலை மற்றும் கல்லூரிகள் வாயிலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.

- ✶ அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி வழங்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வாயிலாக கடந்த மூன்று ஆண்டுகளில் 58,910 இளைஞர்களுக்கு 2,035 நிறுவனங்கள் வாயிலாக பயிற்சி அளிக்கப்பட்டது.

- ✶ 2019–2020ஆம் ஆண்டிற்கு 25,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. 10,000 வேலைவாய்ப்பற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும்.

- ✶ பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு உயரிய தொழில்நுட்ப பயிற்சியளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், உலக அளவில் தானியங்கி மற்றும் ரோபோட்டிக்ஸ் துறையில் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக ஒரு திறன்மிகு மையம் மற்றும் 5 இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்களை ரூ.546.84 கோடி திட்ட மதிப்பீட்டில், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.54.68 கோடி செலவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டன. இம்மையங்களில் இதுவரை 9,484 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிருவகிக்கப்படும் PMKVY 2.0 திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் ரூ.34.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ரூ.15,493.98 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 67,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதுவரை, 235 நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டு 67,714, நபர்களுக்கு பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 41,061 நபர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டு 32,986 நபர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

- ✶ தமிழ்நாடு அரசு, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு (JICA) நிறுவனத்துடன் இணைந்து 5 துறைகளில் ரூ.100 கோடி செலவில் உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவிட நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்மையங்கள் உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சிகள் வழங்குவதன் மூலமாக, தமிழக இளைஞர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை பெறுவதற்கான வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. ஒப்பந்தபுள்ளி மூலம் 3 பிரிவுகளுக்கான முன்னணி செயலாக்க பங்குதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, 30.11.2019 அன்று நடைபெற்ற “தொழில்வளர் தமிழ்நாடு” நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் உயர்திறன் மேம்பாட்டு மையங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

- ✶ 2017–2018ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொழில் துறையின் தேவை மற்றும் இளைஞர்களின் திறன் நிலை ஆகியவற்றை அறிந்துகொள்ள 32 மாவட்டங்களிலும் தொழில்முறை திறன் இடைவெளி குறித்த ஆய்வு ரூ.1.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மாவட்டந்தோறும் தொழில்துறை எதிர்பார்ப்புகளான, திறன், தகுதி, தொழில்நுட்ப அறிவு, மொழித்திறன் மற்றும் மென்திறன் ஆகியவற்றினை அறிவதாக இருக்கும். மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தற்போது இருக்கக்கூடிய

திறன் தொகுப்புக்கள், தொழிற்சாலைகளின் திறன் தேவைகளை கணக்கில் கொண்டு திறன் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும். திறன் இடைவெளி குறித்த ஆய்வறிக்கை மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.11.2019 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

- வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவுக்கான விழிப்புணர்வு திட்டமானது (Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion) தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பு, தேசிய மற்றும் மாநில அளவில் பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்த தரமான திறன் பயிற்றுநர்களையும், மதிப்பீட்டாளர்களையும் உள்ளடக்கிய குழு கட்டமைப்பை உருவாக்கி அனைத்து திறன் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து சமூகத்தில் பின் தங்கியவர்களுக்கு சிறப்பான பயிற்சிகளை கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் இத்திட்டத்திற்கென ரூ.21.422 கோடிக்கான கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதில் ரூ.20.322 கோடி தொகைக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் ஆண்டிற்கான மத்திய அரசின் பங்காக ரூ.12,18,12,000/– ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

- 860 பதிவுதாரர்களை வெளிநாட்டு வேலைகளில் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தியுள்ளது மற்றும் இந்நிறுவனம் இக்காலகட்டத்தில் 1,097 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் உள்நாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.தி)

- 2019ஆம் ஆண்டில் 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (தொ.அ.ஈ) (ESI) மருத்துவமனைகள் – சென்னை அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஒசூர், மற்றும் சிவகாசி ஆகியவற்றிற்கு புதிய மருத்துவ அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளது.

- பெருமாநல்லூர் (திருப்பூர் மாவட்டம்), திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்), கூடங்குளம் (திருநெல்வேலி மாவட்டம்), ஆகிய இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்கப்பட்டு மொத்தம் 18,165 காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- வேலூர் மாவட்டம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஆம்பூரில் புதியதாக யுனானி பிரிவு 16.08.2019 அன்று தொடங்கப்பட்டு காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- 2019ஆம் ஆண்டில் 4 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மண்டல நிருவாக மருத்துவ அலுவலகம் – சென்னை, கோவை, மதுரை, சேலம் ஆகியவற்றிற்கு மருந்து இடமாற்றும் ஊர்தி வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை நந்தம்பாக்கம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் சித்தா பிரிவு புதியதாக தொடங்குவதற்கும், தூத்துகுடி மற்றும் கோவில்பட்டி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் புதியதாக ஹோமியோபதி தொடங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டில் கோத்தகிரி, இக்கரை (பொலுவம்பட்டி), உலிக்கல், உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், விக்கிரவாண்டி, விழுப்புரம், ஊத்துக்கோட்டை, உத்திரமேரூர், திண்டிவனம், விருத்தாச்சலம், மேலூர் (நீலகிரி), கந்தர்வக்கோட்டை, அடிஅண்ணாமலைபுரம், பட்டுக்கோட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 16 இடங்களில் ரூ.14.03 கோடி செலவில் புதிதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்கப்பட உள்ளது. இதனால் 40,533 தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

- 2019–2020ஆம் ஆண்டில் கொரட்டூர், சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், காஞ்சிபுரம், ஆவடி, ஒண்டிபுதூர், கணபதி, காங்கேயம், உதகமண்டலம், உப்பிலிபாளையம், பழநி, கருங்கல், முனிச்சாலை, திருநகர், தேனி, திருச்செந்தூர், பேட்டை, விருதுநகர், நெய்வேலி, தருமபுரி, பெருந்துறை, ஒசூர், நாமக்கல், செய்யாறு, மற்றும் பள்ளிக்கொண்டா ஆகிய 25 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் புதிதாக ஆய்வக வசதிகள் ரூ.1.24 கோடி செலவில் துவங்கப்பட உள்ளது. இதனால் 2,95,112 தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

❖ ❖ ❖

மாநில சட்ட ஆணையம்

- மாநில சட்ட ஆணையம், உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு தற்போதைய நிலைக்கேற்ப திருத்தங்களை / ஆலோசனைகளை பரிந்துரைக்க 15.06.2017 அன்று அரசால் திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தில் ஆணையத்தலைவர் தவிர, முழுநேர உறுப்பினர்களும், பகுதிநேர உறுப்பினர்களும் மற்றும் முழுநேர உறுப்பினர்–செயலாளரும் அரசால் நியமிக்கப்பட்டனர். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையம் தனது முதல் அறிக்கையை 27.10.2017 அன்றும், கூடுதலாக 26 அறிக்கைகளை 10.01.2020 வரை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அதன்படி, இதுவரை 256 முதன்மை மற்றும் திருத்தச்சட்டங்களை நீக்கறவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம்

- சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு.பொன்.கலையரசன் அவர்களை தலைவராகக் கொண்டு மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் 27.12.2018 அன்று மீண்டும் அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தின் முக்கியப் பணிகளானது, மத்திய மற்றும் மாநில சட்டங்களை தமிழில் மொழி பெயர்ப்பு செய்திடுவது மற்றும் சட்ட சொற்களஞ்சியம் (Law Lexicon) தமிழில் தயாரித்திடுவது ஆகும். இதுவரையில், இவ்வாணையம் 13 மையச் சட்டங்களை தமிழில் மொழி பெயர்த்து, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது.

சட்டக்கல்வி இயக்ககம்

- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு, தலா ரூ.75 ஆயிரம் வீதம் ரூ.5.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- மதுரை, திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் நூலகப் பயன்பாட்டிற்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் மரத் தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ.10.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிதாக கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டத்திற்கு தேவையான அறைகலன்கள் வாங்கிட ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில்

கலந்துகொள்ள திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியில் பயின்று வரும் 4 மாணவர்களுக்கு, தலா ரூ.75 ஆயிரம் வீதம் ரூ.3 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- ✶ விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று இடங்களில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரியினை துவக்கிட அனுமதி; அக்கல்லூரிகளுக்கு தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்காக ஒரு கல்லூரிக்கு ரூ.2.27 கோடி வீதம் மூன்று அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் மொத்தம் ரூ.6.81 கோடி நிதி ஒப்பளிப்பு.

- ✶ தமிழகத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் புதிதாக 157 முழுநேர உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிப்பு.

- ✶ வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு சட்டப்படிப்பில் புதிதாக ஒரு வகுப்பு துவக்கிடவும், அதற்கென ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும், அப்பணியிடங்களுக்கான தொடரும் செலவினமாக ரூ.43.32 இலட்சம் மற்றும் புத்தகங்கள் வாங்கிட தொடரா செலவினமாக ரூ.2 இலட்சம் என மொத்தம் ரூ.45.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை.

- ✶ விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு விழுப்புரம் வட்டம், சாலாமேடு கிராமத்தில் 1.93.0 ஹெக்டேர் நிலத்தினை, சட்டக் கல்வித் துறைக்கு நில உரிமை மாற்றம் பெறும் பொருட்டு, விழுப்புரம் நகராட்சிக்கு நில மதிப்பு தொகை ரூ.6.33 கோடி நிதி ஒப்பளிப்பு; மேலும், அவ்விடத்தில் நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் ரூ.60.69 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு.

- ✶ மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு ரூ.8.37 கோடிக்கு நிருவாக அனுமதி, 2017–2018 ஆண்டில் ரூ.4 கோடி நிதி ஒப்பளிப்பு.

- ✶ விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிகளுக்கு இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் ஒப்புதலை பெறுவதற்கு ஆய்வுக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணமாக ரூ.19.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- ✶ செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் ரூ.1.89 கோடி நிதி ஒப்பளிப்பு.

- ✶ சட்டக் கல்வித் துறையின் கீழுள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் சட்டப்புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவு தளங்கள் வாங்குவதற்கு, 2017–2018ஆம் கல்வியாண்டில் ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு.

- ✶ வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டும் பணிகளை ரூ.3.75 கோடி செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- ✶ செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிக்கு புதிதாக நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை ரூ.4.45 கோடி செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- ✶ விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி செயல்பாட்டிற்கென தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் புனரமைப்புப் பணிகளை ரூ.33.95 இலட்சம் செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- ✶ தருமபுரி அரசு சட்டக் கல்லூரி இயங்கும் தற்காலிக கட்டடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.11 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி புதுப்பாக்கம் கட்டுமானப் பணிகளுக்கு, ஏற்கெனவே நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையான ரூ.57.17 கோடி உடன் கூடுதலாக ரூ.23.74 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.57.41 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல்.

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி பட்டறைப் பெரும்புதூர் கட்டுமானப் பணிகளுக்கு, ஏற்கெனவே நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட

தொகையான ரூ.60.13 கோடி உடன் கூடுதலாக ரூ.23.97 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.60.37 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல்.

- ✶ 2013–2014ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளியில் இளங்கலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.29 இலட்சம் நிதி மீள் ஒப்பளிப்பு.

- ✶ பன்னாட்டு நீதிமன்றப் போட்டிகளில், கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரசின் நிதியுதவி ரூ.75,000/– என்பதனை, ரூ.1,00,000/– ஆக உயர்த்தி வழங்கி 2018ஆம் ஆண்டு ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொண்ட சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் 7 மாணவர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் ரூ.7,00,000/– நிதி ஒப்பளிப்பு.

- ✶ 2017–2018ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் நடப்பு செலவுகளுக்காக ரூபாய் ஒரு கோடி மானியம் ஒப்பளிப்பு.

- ✶ 2018ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியின் 5 மாணவர்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் மொத்தம் ரூ.3,75,000/– நிதி ஒப்பளிப்பு.

- ✶ திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தற்காலிக நிதியுதவி ரூபாய் நான்கு கோடி ஒப்பளிப்பு.

- ✶ விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி தற்காலிக கட்டடத்தில் மின்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.6,20,000/– நிதி ஒப்பளிப்பு.

- ✶ மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கென நிருவாக அனுமதி வழங்கப்பட்ட ரூ.8,37,04,061/–இல் 2017–2018ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.4,00,00,000/– போக எஞ்சியுள்ள தொகை ரூ.4,37,04,061/– 2018–2019ஆம் நிதியாண்டிற்கு ஒப்பளிப்பு.

- ✶ திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.15,70,98,000/– நிதி ஒப்பளிப்பு. இதில் 2018–2019ஆம் நிதியாண்டில் முதல் கட்டமாக ரூ.5,23,66,000/– நிதி விடுவிப்பு.

- ✶ தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு ரூ.69,29,18,000/– நிருவாக அனுமதியும் 2018–2019ஆம் நிதியாண்டில் ரூ.15,00,00,000/– நிதி ஒப்பளிப்பு.

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப் பெரும்புதூர் ஆகியவற்றுக்கு கூடுதல் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஒப்பளிப்பு.

* கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.10,16,60,000/– நிருவாக அனுமதி வழங்கி நிதி ஒப்பளிப்பு.

* சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப் பெரும்புதூர் ஆகிய இரு கல்லூரிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண சலுகை அட்டை வழங்குவதற்கு மொத்தம் ரூ.1,41,37,200/– நிதி ஒப்பளிப்பு.

* தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு திடீர் செலவு, பணியாளர்கள் சம்பளம் மற்றும் மற்ற பணிகளுக்காக தற்காலிக நிதியாக ரூ.7 கோடி ஒப்பளிப்பு.

* பல்கலைக்கழக மானிய குழுவின் திருத்திய ஊதியக் குழு பரிந்துரையின் படி, அரசு சட்டக்கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள், ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் நூலகர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் ஊதியத்தினை திருத்தி ஆணை.

* திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3,11,11,000/– நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

* சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப் பெரும்புதூர் வளாகங்களின் கலையரங்கத்தில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தும் பணிகளுக்கென ஒரு கல்லூரிக்கு தலா ரூ.99,34,725/– வீதம் இரண்டு கல்லூரிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.1,98,69,450/– நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

* அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவு தளங்கள் வாங்குவதற்கென கல்லூரி நூலகத்திற்கு தலா ரூ.3,45,000/– வீதம் 11 கல்லூரிகளின் நூலகங்களுக்கு மொத்தம் ரூ.37,95,000/– நிதி ஒப்பளிப்பு.

* திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் 2017–2018 ஆம் கல்வியாண்டில் பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த 16 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக்கட்டணம் ரூ.16,00,000/– மீள ஒப்பளிப்பு.

* அரசு சட்டக் கல்லூரிகளுக்கு ஏற்கனவே பெறப்பட்டுள்ள இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் ஒப்புதலை நீட்டித்துப்பெறும் பொருட்டு, ஆய்வுக் கட்டணம் மற்றும் விண்ணப்பப்படிவக் கட்டணம் செலுத்தும் வகைக்கென ரூ.46.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* 2019ஆம் ஆண்டு ஹாங்காங் மற்றும் வியன்னா பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொண்ட சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப் பெரும்புதூரில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.7 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினை, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப் பெரும்புதூர் வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யவும் மற்றும் உயர் மின்னழுத்த கம்பிகளை சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்க தேவைப்படும் செலவினங்களுக்கு ரூ.22.23 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர் வளாகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.43.43 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் வளாகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.67.11 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

* இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.61 கோடி நிதி ஒப்பளிப்பு.

* அரசு சட்டக்கல்லூரிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு அதிகபட்சமாக வழங்கப்பட்டு வந்த மதிப்பூதியம் ரூ.15,000/–

என்பதனை, மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.30,000/– என 01.02.2019 முதல் உயர்த்தி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது.

✶ ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமன முறையில் தெரிவு செய்யப்பட்ட 96 நபர்களை அரசு சட்டக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டது.

✶ சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் 2019–2020ஆம் கல்வியாண்டு முதல் 3 ஆண்டு சட்டப்படிப்பில் முதலாமாண்டில் 80 மாணவர்களுடனும் மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் 80 மாணவர்களுடனும் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டுள்ளது.

✶ விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு ஏற்கெனவே நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையான ரூ.60.69 கோடியுடன் தற்போது கூடுதலாக ரூ.9.91 கோடி சேர்த்து, ஆக மொத்தம் ரூ.70.60 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

✶ பட்டறைப் பெரும்புதூர் மற்றும் புதுப்பாக்கம் வளாகங்களில் இயங்கி வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் (Wi-Fi Zone) நிறுவும் பணிகளுக்கு ரூ.29.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

✶ 2018ஆம் ஆண்டு ஹாங்காங் மற்றும் வியன்னா சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொண்ட தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தின் 13 மாணவர்களுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.7.54 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

✶ புதிதாக தொடங்கப்பட்ட சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்காக மொத்தம் ரூ.8.46 கோடி நிதி ஒப்பளிப்பு.

✶ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப்பள்ளியில் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 கல்வியாண்டில் ஐந்தாண்டு சீர்மிகு சட்டப்படிப்பு பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.1.08 கோடி மீள ஒப்பளிப்பு.

✶ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு நடப்பு செலவாக 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடி ஒப்பளிப்பு.

✶ திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் 2018–2019 கல்வியாண்டில் இளநிலை சட்டம் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டணச் சலுகையாக ரூ.17 இலட்சம் மீள ஒப்பளிப்பு.

❖ ❖ ❖

* 01.07.2017 முதல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு சம்பளம் மற்றும் இதரப்படிகள் ரூ.55,000/–லிருந்து ரூ.1,05,000/–ஆக உயர்த்தப்பட்டு, அதற்கான நிலுவைத் தொகையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

* சட்டமன்றப் பேரவை / மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஒய்வூதியம் 01.07.2017 முதல் மாதமொன்றுக்கு ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், மருத்துவப்படி ஆண்டிற்கு ரூ.12,000/– லிருந்து ரூ.25,000/–ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது.

* மறைந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் மறைந்த சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கான மாத குடும்ப ஒய்வூதியம் 01.07.2017 முதல் ரூ.6,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தப்பட்டு, அதற்கான நிலுவைத் தொகையும் வழங்கப்பட்டது.

* தலைமைச் செயலகம் பிரதான கட்டடத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் அலுவலர்கள் அறைகள் மற்றும் பிரிவுகளுக்கு குளிர்ச்சாதன வசதி, மின் மற்றும் கட்டடம் சம்பந்தமான பணிகள் மேற்கொள்ள ரூ.1.80 கோடிக்கு ஒப்புதல் ஆணை வெளியிடப்பட்டு, குளிர்சாதன வசதி செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒலிபெருக்கி வசதியினை மேம்படுத்த ரூ.17 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் திருவுருவப் படத்தினை 12.02.2018 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைத்தார்கள்.

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய குளிர்சாதன இயந்திரத்தை (DX Air Handling Unit) அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.1.28 கோடிக்கு நிருவாக ஒப்புதல் ஆணை வெளியிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* சட்டமன்றப் பேரவை / மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு சென்னையில் நடைபெறுகின்ற குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின விழாக்களில் பங்கேற்பதற்காக சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்கள் தமது சொந்த ஊரிலிருந்து சென்னை வருவதற்கும், சென்னையிலிருந்து மீண்டும் அவர்கள் தமது சொந்த ஊர் திரும்புவதற்கும் குளிரூட்டப்பட்ட இரண்டாம் வகுப்பு (A.C. II Tier) இரயில் பெட்டியில் பயணம் செய்வதற்கு வசதி செய்து கொடுக்கும் வகையில், 1951ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள்

வழங்கல் சட்டத்தின் பிரிவு 12இல், திருத்தமொன்று உட்பிரிவு 12Dஆக உட்புகுத்தப்பட்டுள்ளது.

* சட்டமன்றப் பேரவை / மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு மருத்துவப்படியானது 01.07.2018 முதல் நிதியாண்டிற்கு ரூ.25,000/–இலிருந்து 30,000/– ஆக உயர்வு.

* “காகிதமில்லா சட்டமன்றம்” என்ற இலக்கை எய்த வேண்டும் என்ற எண்ணத்திற்கு வித்திடும் வகையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளை கணினி மூலம் இணையதளம் வழியாக பார்வையிட ஏதுவாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் இணையதளத்தில் வெளியிடும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் ஆகியோர் முன்னிலையில் 27.05.2018 அன்று துவக்கிவைக்கப்பட்டது. இந்த இணையதளத்தின் வாயிலாக 115 நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

* மேலும், பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் 2011 முதல் 2016 வரையிலான அனைத்து நடவடிக்கைக் குறிப்புகளும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

* சட்டமன்றப் பேரவைச் செயலக இணையதளத்தில், www.assembly.tn.gov.inஇல் ‘Debates’ என்ற தலைப்பின்கீழ் நடவடிக்கைக் குறிப்புகளைக் காணலாம்.

* 27.05.2018 அன்று சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதி திறந்து வைக்கப்பட்டது. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான விடுதி 10 தளங்களைக் கொண்டது. அதில் 68 அறைகளும், 1 மாநாட்டுக் கூடமும் அமையப்பெற்றுள்ளன. 60 அறைகள் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தங்குவதற்கும், 8 அறைகள் வெளிமாநில சட்டமன்ற குழு உறுப்பினர்கள் தங்குவதற்கும் ஏற்றவாறு அனைத்து அறைகளிலும் தக்க அறைக்கலன்கள், தொலைக்காட்சி வசதி, குளிர்ச்சாதன வசதி, அகத்தொலைபேசி (Intercom) மற்றும் அரசு கேபிள் டி.வி இணைப்பு வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன. இக்கட்டடம் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. 10ஆவது தளத்தில் 250 பேர்கள் அமரத்தக்க வகையில் அனைத்து வசதிகளும் கொண்ட மாநாட்டுக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில், முன்னாள் உறுப்பினர்களுக்கென 4 மின்தூக்கிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், அதிமுக்கிய பிரமுகர்கள் இடைநில்லாமல் நேரடியாக 10ஆவது தளத்திலுள்ள மாநாட்டுக் கூட்டத்திற்குச் செல்ல ஒரு மின்தூக்கி வசதி செய்யப்பட்டுள்ளது. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில் அறை முன்பதிவு இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென தனியே வலைதளம் ஒன்று இச்செயலகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. முன்னாள் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு மட்டும், விடுதி அறை நாளொன்றுக்கு ரூ.300/– வாடகையில் அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 5 நாட்கள் தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

* சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில், அகத்தொலைபேசி வசதியினை புதுப்பிக்கும் பணி ரூ.11,76,897/– செலவில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

* விடுதலைப் போராட்ட வீரர் திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவப் படத்தினை 19.07.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைத்தார்கள்.

* தமிழ்நாடு சட்டமன்ற பேரவை “யார்–எவர் 2016” வெளியீடு, பதினைந்தாவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர், வயது, கல்வித்தகுதி, வாழ்க்கை குறிப்பு, மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவான வாக்குகள் போன்ற விவரங்கள் உள்ளடக்கிய புத்தகம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் இணையதளம் www.assembly.tn.gov.inஇல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- ✶ அனைத்து மாநில சட்டமன்றங்கள் / யூனியன் பிரதேசங்களையும் ஒரே தளத்தின் கீழ் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் மிஷன் மோடு ப்ராஜெக்டான (Mission Mode Project) தேசிய இ–விதான் திட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் செயல்படுத்தும் பணியில் இச்செயலகம் உள்ளது. இதுகுறித்து இச்செயலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், இரண்டு நாட்களுக்கான பயிற்சி வகுப்பு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 2019 நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

- ✶ மேலும், பேரவைக் குழுக்களின் அறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றன.

- ✶ இச்செயலகப் பிரிவுகளில் காகிதப் பயன்பாட்டினைக் குறைக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றின் ஒரு பகுதியாக தமிழ்நாடு e-Governance முகமையினால் அறிமுகப்படுத்தப்பட்ட e-Office என்கின்ற செயலியை இச்செயலகத்தில் நடைமுறைப்படுத்திடும் வகையில், அதுகுறித்த பயிற்சி தமிழ்நாடு e-Governance முகமை மூலம் இச்செயலகத்திலுள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதனடிப்படையில், தற்போது இச்செயலகப் பிரிவுகளில் அனைத்துக் கோப்புகளும் e-Office செயலி வழியாகவே கையாள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ✶ சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியின் நுழைவாயிலின் தோற்றத்தை அழகுறச்செய்ய ரூ.1,72,80,325/– செலவில் மேற்கூரை விதானக்கட்டுமானம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

- ✶ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும் 32" LED TV ஒன்றும், 2 Ton திறன் கொண்ட குளிர்ச்சாதன இயந்திரம் ஒன்றும் மற்றும் RO இயந்திரம் ஆகியவற்றை நிறுவ ரூ.2,73,40,370/– செலவினத்திற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் 32" LED TV ஒன்றும், 2 டன் திறன் கொண்ட குளிர்ச்சாதன இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன. தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி ஒவ்வொரு குடியிருப்புத் தொகுப்பின் மேற்கூரையிலும் அமைத்து அனைத்து குடியிருப்புகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க குழாய் இணைப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

❖ ❖ ❖

குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை

- ✶ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வாயிலாக வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாட்டு மையம்.

- ✶ புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3,880 விண்ணப்பதாரர்களின் ரூ.464.39 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு, பரிந்துரைக்கப்பட்டு, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு ரூ.330 கோடி மதிப்பிலான 2,471 திட்டங்களுக்கு தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்டு அதில் 1,721 பயனாளிகக்கு ரூ.170 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், ரூ.21.27 கோடி 3% பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ மாநில அரசின் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டமான UYEGP என்ற திட்டத்தின் கீழ், 10,928 பயனாளிகளுக்கு ரூ.7,025.27 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ இந்திய அரசின் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும்திட்டத்தினை(PMEGP),செயல்படுத்தும் முகமையாக காதி கிராமத் தொழில் ஆணையம் தேசிய அளவிலும், காதி கிராமத் தொழில் வாரியம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்கள் மாநில அளவில் செயல்படுத்தும் முகமைகளாக உள்ளன. இதன்மூலம் விளிம்புத்தொகையாக ரூ.15,605.77 இலட்சம் 6,658 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ✶ மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை பல்வேறு மானியங்களாக பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

  - 8,020 பயனாளிகளுக்கு ரூ.63,522 இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
  - 2,172 பயனாளிகளுக்கு ரூ.1,747.63 இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
  - 464 பயனாளிகளுக்கு ரூ.473.81 இலட்சம் மின்னாக்கி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
  - 406 பயனாளிகளுக்கு ரூ.529.13 இலட்சம் மதிப்புக் கூட்டு வரி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான மனிதவள திறன் வேலையுடன் கூடிய 6 மாத கால பயிற்சி ஆகும். 2017 முதல் 2020 வரை 60,172 பயனாளிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* ரூ.86,701 கோடி அளவிற்கு முதலீடு செய்து, 44.47 இலட்சம் நபர்களுக்கு வேலை அளித்து 6,85,109 நிறுவனங்கள் உத்யோக் ஆதார் மூலம் பதிவு செய்துள்ளார்கள்.

* உள்நாடு மற்றும் உலகளாவிய வணிக முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு முதலீட்டாளர்களுக்கு தேவையான தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை விரைவாகப் பெற்று தருவதற்கு இணையதள வழி ஒற்றைச் சாளர தகவினை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான இணையதள வழி ஒற்றைச் சாளர தகவினை (MSME Single Window Portal) 04.05.2018 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஒற்றைச் சாளரதகவு மூலமாக, 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குதல், அனுமதிகளை புதுப்பித்தல் ஆகிய சேவைகளை பெற இயலும். இந்த இணைய தளத்தின் மூலம் 10.12.2019 வரை 945 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 705 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் 2017இன் கீழ், மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒற்றைச் சாளர குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் துறைகளுக்கிடையேயான இடர்பாடுகளை களைகிறது.

* தமிழக அரசு கயிறு பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 3 கயிறு குழுமங்கள் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் பூதலூரில் "கயிறு குழுமங்களை மேம்படுத்துதல் திட்டத்தின்" கீழ், ரூ.22 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.

* 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020 ஆகிய ஆண்டுகளில் 74 வசதியாக்கக் குழு கூட்டம் நடத்தப்பட்டு 102 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.1,047.13 இலட்சம் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

* ஐந்து இரசாயன பகுப்பாய்வகங்களான, இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி மற்றும் மண்டல சோதனை ஆய்வுக் கூடங்கள் மதுரை, கோவை சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஆய்வுக்கூடங்களில் கட்டுமானப் பொருட்களை பரிசோதனை செய்து வருகின்றது. இதவரை 2,51,495 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, ரூ.1,146.30 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

* கோயம்புத்தூர் மாவட்டம், காளப்பட்டியில் உள்ள மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டையில் சாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.50 இலட்சம் அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

* 2019–2020ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 300 தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 240 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.985.54 கோடி அளவிற்கு விற்று முதல் செய்து அதில் ரூ.15.86 கோடியை நிகர இலாபமாக பெற்றுள்ளன.

* நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு பகுதியைச் சார்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில், நஞ்சநாடு கிராமத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய தேயிலைத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

* 2019–2020ஆம் ஆண்டில் சேகோசர்வ் ரூ.644.46 கோடி அளவிற்கு விற்பனை அதிகரித்து ரூ.410.58 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டியது.

* 2019–2020ஆம் ஆண்டில் தாய்கோ வங்கி ரூ.1,208.03 கோடி அளவிற்கு வைப்புத்தொகை திரட்டியும் ரூ.538.67 கோடி அளவிற்கு பயனாளிகளுக்கு முன்பணம் மற்றும் கடனாக வழங்கியுள்ளது. இவ்வங்கி ரூ.3.66 கோடியை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

* சந்தை மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின் கீழ், மைய அரசானது 2017–2018ஆம் ஆண்டில் அனுமதித்த

ரூ.116.45 இலட்சத்தில், ரூ.58.23 இலட்சத்தை மாநில அரசின் பங்காக விடுவித்து கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியமாக வழங்கியுள்ளது. இரண்டாவது மற்றும் இறுதி தவணையான ரூ.58.23 இலட்சம் கயிறு குழுமங்களுக்கு 02.01.2019 அன்று வழங்கியுள்ளது.

* தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் இணைந்து அரசு தனியார் கூட்டு முயற்சி திட்டத்தின் கீழ், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் வர்த்தக மையம் அமைக்கப்படவுள்ளது. இதனை செயல்படுத்த ஒவ்வொரு வர்த்தக மையத்திற்கும் 50 சதவீதம் மாநில அரசு மானியமாக அதிகபட்சம் ரூ.5 கோடி அரசு வழங்கியுள்ளது.

* சிட்கோ நிறுவனம் நில வங்கி திட்டத்தின் கீழ், புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க 53 இடங்களில் 4,490.74 ஏக்கர் நிலங்களை கண்டறிந்தது.

* தமிழக அரசு (i) தனியார் தொழிற் குழுமமான கொடீசியா தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம், மோரிப்பாளையம் கிராமத்தில் அமைக்க தமிழக அரசின் பங்கு தொகையான ரூ.10 கோடி இரண்டு தவணைகளாக வழங்க ஆணையிட்டுள்ளது. (ii) விருதுநகர் மாவட்டத்தில் சதர்ன் டிஸ்டிரிக்ட் டெக்ஸ்டைல் பிராசஸ்சிங் குழுமத்திற்கு தமிழக அரசின் பங்கு தொகையான ரூ.912.75 இலட்சத்தில் (மொத்த திட்ட மதிப்பில் 75% – ரூ.1,217 இலட்சம்) முதல் தவணையாக ரூ.456.375 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. (iii) மதுரை மாவட்டம், மதுரை இன்ஜினியரிங் குழுமம் (பி) லிட், குழுமத்திற்கு தமிழக அரசின் பங்கு தொகையான ரூ.682.33 இலட்சத்தில் (மொத்த திட்டமதிப்பில் ரூ.1,364.66 இலட்சம்) 50 சதவீதம் முதல் தவணையாக ரூ.341.165 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

* வணிகத்தினை எளிமையாக்கும் வகையில் தமிழகத்தில் தகவல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகளை செயல்படுத்த, ரூ.44 இலட்சம் "தமிழ்நாடு புதுமை முயற்சி திட்டத்தின் மூலமாக சிட்கோவிற்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆணைகள்

- புதிய தொழிற்பேட்டை சிட்கோ மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் உருவாக்க வழிமுறைகள் ஏற்படுத்தி அரசாணை வெளியிட்டது.

- தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (ID) திட்டத்தில் மாநில அரசின் மானிய தொகை ரூ.113.60 இலட்சம் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர்

தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழங்கப்பட்டது.

- சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, கோரணம்பட்டியில் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசின் மானிய தொகை ரூ.266.40 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

- ஈரோடு மாவட்டம், பெருந்துறை கிராமம் (சிப்காட்), சேலம் மாவட்டம், கோரணாம்பட்டி கிராமம், திருவண்ணாமலை மாவட்டம், கட்டமடவு கிராமம் மற்றும் பெரியகோளப்பாடி, கண்ணக்குருகை கிராமம், வேலூர் மாவட்டம், முல்லுவாடி, நாகலேரி கிராமம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி கிராமம் ஆகிய 6 இடங்களில் 263.05 ஏக்கர் நிலம் பெறப்பட்டு புதிய தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சிட்கோ மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்சங்கங்களின் கூட்டு முயற்சி திட்டத்தின் கீழ், ஒசூர், திருமுடிவாக்கம் மற்றும் மதுரை கே.புதூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் பரிசோதனைக் கூடம் அமைக்கப்படவுள்ளது.

✶ நடப்பாண்டில் (2018–2019) குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP) கீழ், ரூ.273.65 கோடி மதிப்பீட்டில் 8 பொது வசதி மையங்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதேபோல், தற்போதுள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் புதிய தொழிற்பேட்டைகளுக்கு உட்கட்டமைப்பு அமைக்கவும் தமிழ்நாடு அரசு ரூ.40 கோடியினை ஒதுக்கியுள்ளது. மேலும், மத்திய அரசின் நிதி ரூ.4.137 கோடி இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

✶ தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் பொருட்டு, அரசு மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை மாநிலத்தில் செயல்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து குறைந்தபட்சம் 25 சதவிகிதம் முன்னுரிமை அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளது. மேலும், பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க அரசு ஊக்கமளிக்கின்றது. 2018–2019ஆம் ஆண்டில் 40 நிறுவனங்கள் பங்கேற்க ஆதரவளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் தொழில் கண்காட்சிகள் நடத்த அரசு ஆதரவு அளித்து வருகின்றது.

✶ 19.01.2019 அன்று தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018–2023 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

✶ தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ், மொத்தம் 76,203 பேருக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

✶ புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1,987 தொழில் முனைவோர் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 12,327 தொழில்முனைவோர்களுக்கு தொழில் முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

✶ 16.02.2017 முதல் 10.12.2019 வரை 3,007 தொழில் முனைவோர்கள், குழும மேம்பாட்டு நிருவாகிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

✶ 29.08.2019 அன்று கோயம்புத்தூரில் நடத்தப்பட்ட மகளிருக்கான தொழில் மாநாட்டில், 126 தொழில் முனைவோர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

❖ ❖ ❖

பெருநகர சென்னை மாநகராட்சி

பொதுசுகாதாரத்துறை

அம்மா உணவகம்

✶ பெருநகர சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களுக்கு உட்பட்ட 200 கோட்டங்களிலும் 400 அம்மா உணவகங்களும், பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்தும் 7 அரசு மருத்துமனைகளில் 7 அம்மா உணவகங்கள் என மொத்தம் 407 அம்மா உணவகங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

✶ அம்மா உணவகங்கள் மூலமாக 66.56 கோடி இட்லிகளும், 22.15 கோடி பலவகை சாதங்களும், 31.01 கோடி சப்பாத்திகளும் விற்பனை.

✶ கடந்த 04.03.2019 முதல் மேற்குறிப்பிட்ட 400 அம்மா உணவகங்களிலும் அடையாள அட்டையுடன் கூடிய பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படும் திட்டம் தொடங்கப்பட்டு உணவு வழங்கப்பட்டு வருகிறது. 10.01.2020 வரை 56,574 கட்டுமானத் தொழிலாளர்கள்இத்திட்டத்தில்பயனடைந்துள்ளனர்.

வீடற்றோருக்கான காப்பகம்

✶ மொத்தம் 51 காப்பகங்கள் இயங்கி வருகின்றன. திருநங்கைகளுக்காக பிரத்யேகமாக தனி காப்பகம் செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் புதியதாக 16 காப்பகங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. காப்பக பராமரிப்பு மற்றும் நிருவாக செலவினங்களுக்காக ரூ.5.28 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட நிதியின் கீழ், ரூ.23.17 கோடி மதிப்பீட்டில் 33 புதிய காப்பகங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிறப்பு (ம) இறப்பு பிரிவு

✶ இந்தியாவிலேயே முதன்முறையாக 07.09.2008 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் இலவசமாக பிறப்பு இறப்பு சான்றினை www.chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

✶ 2017 முதல் 10.01.2020 வரை கடந்த மூன்று ஆண்டுகளில் 88,76,583 பிறப்பு சான்றிதழ்களும், 18,34,328 இறப்பு சான்றிதழ்களும் பொதுமக்களால் இலவசமாக பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

மயானங்கள்

✶ பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 199 மயானங்கள் இயங்கி வருகின்றன. இந்த அனைத்து மயானங்களிலும் புதைத்தல் மற்றும் எரித்தல் இலவசமாக்கப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத்திட்டம்

- ✶ தீவிர காசநோய் கண்டறியும் திட்டத்தின் கீழ், சென்னை மாநகராட்சி மத்திய காசநோய் பிரிவால் தெரிவு செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு இலவசமாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 25,670 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 229 நபர்களுக்கு காசநோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ காசநோயில்லா சென்னை என்னும் புதிய திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 09.10.2017 அன்று தொடங்கப்பட்டு 257 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ரூ.4.41 கோடி மதிப்பீட்டில் எக்ஸ்ரே கருவி பொருத்தப்பட்ட 7 நடமாடும் காசநோய் பரிசோதனை ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளது.

ஆயுஷ் (Ayush) மருத்துவமனைகள்

- ✶ சென்னை மாநகராட்சியில் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஹோமியோபதி) இயங்கி வருகிறது. நாள்தோறும் சுமார் 600 நோயாளிகள் பயனடைகின்றனர். 16.02.2017 முதல் இதுவரை 5,60,000 நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

கல்வித்துறை

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித் துறையின்கீழ், 281 சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் மொத்தம் 83,348 மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

2017 முதல் கடந்த மூன்று ஆண்டுகளில்

- ✶ மழலையர் பள்ளி மாணவர்களுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் விலையில்லா வண்ணச் சீருடைகள் மற்றும் ரூ.39.83 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ✶ 200 மழலையர் பள்ளி மாணவர்களுக்கு ரூ.37.11 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் (Stainless Steel) தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ✶ 31 மழலையர் பள்ளிகளில் 66 வகுப்பறைகளுக்கு ரூ.60.39 இலட்சம் மதிப்பீட்டில் மாண்டிசோரி கல்வி முறைத் தொடர்பான மூலப் பொருட்கள் (Kinder Garten Materials) வழங்கப்பட்டுள்ளன.

- ✶ சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த 70 தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.3.24 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா மேலாண்மை

நிறுவனம் மூலம் தலைமைப் பண்பு பயிற்சி மற்றும் ரூ.1.77 இலட்சம் செலவில் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

* முதன்முறையாக சென்னை பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆணையாளருடன் கலந்துரையாடும் வகையில் Coffee with Commissioner என்ற நிகழ்ச்சி செயல்படுத்தப்பட்டுள்ளது.

* சென்னை பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு ரூ.7.07 கோடி மதிப்பீட்டில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை பள்ளிகளில் 100% வருகை புரிந்த மாணவர்களுக்கு ரூ.40.62 இலட்சம் ரொக்கப் பரிசும், ரூ.6.10 கோடி உயர்படிப்பு ஊக்கத் தொகையும், 100 சதவிகிதம் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கு தலா 1 இலட்சம் வீதம் ரூ.80 இலட்சம் ஊக்கப் பரிசும், பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.86.10 இலட்சம் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

* 10 மற்றும் 12 அரசு பொதுத் தேர்வில் பங்கு பெறும் மாணவ / மாணவர்களுக்கு ரூ.13.14 இலட்சம் செலவில் ஜெயித்துக்காட்டுவோம் நிகழ்ச்சி மற்றும் சிறப்பு வகுப்புகளில் பங்கு பெறும் மாணவ / மாணவர்களுக்கு ரூ.4.49 கோடி மதிப்பில் சுண்டல், 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 50 மாணவ/மாணவியர்கள் ரூ.26.38 இலட்சம் செலவில் தேசிய சுற்றுலா, ரூ.49.62 இலட்சம் செலவில் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், ரூ.59.56 இலட்சம் மதிப்பீட்டில் விதிமுறைகளின் படி விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

* ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் நூலகங்களுக்கு புத்தகமும், ரூ.70.14 இலட்சம் மதிப்பீட்டில் சீர்மிகு மின்னணு வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

* பெற்றோர் ஆசிரியர் சங்கம் மூலமாக ரூ.5.85 கோடி செலவில் தற்காலிக கணினி ஆசிரியர், கணினி உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.6.87 கோடி மதிப்பீட்டில் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* சென்னை பள்ளிகளில் 149 சாரணர்களும், 137 சாரணியர்களும் இராஜபுரஷ்கார் விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

* வில்லிவாக்கம் சென்னை நடுநிலைப்பள்ளியைச் சார்ந்த அனில் குமார் மற்றும் வினோத் தேசிய அளவிலான TATKWON-DO போட்டியில் தங்கமும், சென்னை மேல்நிலைப் பள்ளி, திருவான்மியூரைச் சார்ந்த டி. மதன் என்ற மாணவர் தேசிய அளவிலான கேரம் போட்டியில் தங்கம் வென்று முதலமைச்சரிடமிருந்து ரூ.2 இலட்சம் வெகுமதியும் பெற்றுள்ளனர்.

சென்னை சீர்மிகு நகரத் திட்டம் (Chennai Smart City)

* மத்திய அரசு 2016ஆம் ஆண்டு, சீர்மிகு நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 20 நகரங்களில் ஒன்றாக சென்னை தேர்வாகியுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கீடாக முறையே ரூ.500 கோடி என்று ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் ரூ.916.26 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 41 திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், சென்னை சீர்மிகு திட்டத்தின் கீழ், தற்போது 18 திட்டப்பணிகள் ரூ.130.94 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 18 திட்டங்கள் ரூ.553.11 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. 1 திட்டத்திற்கு ரூ.29.65 கோடி மதிப்பீட்டில் ஒப்பம் ஆய்வில் உள்ளது, 1 திட்டத்திற்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. 3 திட்டங்களுக்கு ரூ.127.89 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

முடிவுற்ற திட்டப்பணிகள் :

* ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் தியாகராயா நகரில் 1,772 தெரு விளக்குகள் எல்.இ.டி விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

- ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகர மக்கள், புகார்கள் தெரிவிப்பதை எளிதாக்கும் வகையில் “நம்ம சென்னை” என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.
- ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 28 பள்ளிகளில் மின்னணு வகுப்பறையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் 8 பூங்காக்களை மறு வடிவமைக்கப்பட்டுள்ளது .
- ரூ.0.36 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிக்கான பிரத்யேக தடம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் சாந்தோம் 4வது இணைப்பு டிரஸ்ட் சாலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான உணர்வு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் நேப்பியர் பாலம் அருகில் காமராஜர் சாலையில் போக்குவரத்து குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்கும் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.0.32 கோடி மதிப்பீட்டில் கோபதி நாராயண சாலையில் உள்ள மேம்பாலத் தூண்களை சுற்றி தொங்கும் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.9.37 கோடி மதிப்பீட்டில் தியாகராயா நகரில் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கும் பணி.
- ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் தியாகராயநகரில் மின்சார ஸ்மார்ட் மீட்டர் நிறுவும் பணி (பகுதி 1).
- ரூ.24.02 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடங்களில் சூரிய மின் உற்பத்தி அமைப்பு நிறுவும் பணி.
- ரூ.2.28 கோடி மதிப்பீட்டில் 15 குளங்களை சீரமைக்கும் பணி.
- ரூ.9.49 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டி பகிர்மானப்பணி.
- ரூ.9.78 கோடி மதிப்பீட்டில் 10 சாலைகளை மறு வடிவமைக்கும் பணி.
- ரூ.9.33 கோடி மதிப்பீட்டில் 13 சாலைகளை மறு வடிவமைக்கும் பணி.
- ரூ.20.57 கோடி மதிப்பீட்டில் தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் (பகுதி 1 – பனகல் பூங்கா முதல் தணிகாசலம் சாலை வரை) அமைக்கும் பணி.
- ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் (பகுதி 2 – தணிகாசலம் சாலை முதல் போக் சந்திப்பு வரை) அமைக்கும் பணி.
- ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் (பகுதி 3 – போக் சந்திப்பு முதல் அண்ணா சாலை வரை) அமைக்கும் பணி.

பேருந்து சாலைகள் துறை

- கடந்த மூன்று ஆண்டுகளில் பேருந்து சாலைகள் துறையால், ரூ.56.39 கோடி மதிப்பீட்டில் 48.65 கி.மீ. நீளமுடைய 82 பேருந்து தட சாலைப் பணிகள் மற்றும்

ரூ.639.21 கோடி மதிப்பீட்டில் 1,049.19 கி.மீ. நீளத்தில் 7,803 உட்புறச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.57.84 கோடி மதிப்பீட்டில் 49.13 கி.மீ. நீளத்திற்கு 49 நடைபாதை பணிகள், ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் நெசப்பாக்கம் இணைப்புச் சாலை, ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் வாட்டர் கெனால் சாலையில் மையத்தடுப்புச் சுவர் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
* ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் நூக்கம்பாளையம் இணைப்புச் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாகவும், ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தம் மேம்பாடு, ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் வாட்டர் கெனால் சாலையில் அணுகு சாலை அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
* கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற முறையில் 278 பேருந்து நிழற்குடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பாலங்கள் துறை

* 01.06.2016க்கு பிறகு நடப்பாண்டில் தற்போது வரை ரூ.538.35 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 132 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டில் 2 பெட்டக வடிவப்பாலங்கள் அமைக்கும் பணி, 3 அபிவிருத்தி பணி மற்றும் 53 இடங்களில் ஏற்கனவே உள்ள பாலங்களை பராமரிக்கும் பணிகள், 1 இடத்தில் நடைபாலம் அமைக்கும் பணி மற்றும் 1 மேம்பாலத்தில் செங்குத்து தோட்டம் அமைக்கும் பணி என 60 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
* மேலும், தற்போது ரூ.119.68 கோடி மதிப்பீட்டில் 3 பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி, 1 அபிவிருத்தி பணி, 4 சிறுபாலங்கள் மற்றும் 1 இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி என 9 பணிகள் நடைபெற்று வருகிறது.
* ரூ.411.53 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 8 பாலப் பணிகள் மற்றும் 1 இடத்தில் ஏற்கெனவே உள்ள பாலத்தை பராமரிக்கும் பணி, 2 இடங்களில் ஏற்கனவே உள்ள பாலங்களை புனரமைக்கும் பணி, 1 இடத்தில் நடைமேம்பாலம் அமைக்கும் பணி, 14 மேம்பாலங்களில் செங்குத்து தோட்டம் அமைக்கும் பணி மற்றும் 37 இடங்களில் (மேம்பாலம் / சுரங்கப்பாதை) மாறும் வண்ண மின் விளக்குகள் அமைக்கும் பணி ஆக மொத்தம் 63 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு துவங்கப்படவுள்ளது.

மின்துறை

* 2016–2017 முதல் 2019–2020 தற்போது வரை ரூ.127.48 கோடி மதிப்பீட்டில், 22,855 புதிய மின் சேமிப்பு வகை எல்.இ.டி விளக்குகளுடன் கூடிய தெரு மின் விளக்குகள் மற்றும் புதை மின் கம்பி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
* 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.141.35 கோடி மதிப்பீட்டில் 87,892 சோடியம் ஆவி விளக்குகளை

மாற்றி மின் சேமிப்பு வகை எல்.இ.டி. விளக்குகளாக பொருத்தப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியில் 2,85,828 எல்.இ.டி தெரு விளக்குகளாக பொருத்தியதன் மூலம் வருடத்திற்கு ரூ.30 கோடி மின் கட்டணம் சேமிப்பாகிறது.

* 662 பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடங்களில் ரூ.24.03 கோடி மதிப்பீட்டில் 3.064 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை மின் தகடுகள் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டிற்கு ரூ.3 கோடி மின் கட்டண சேமிப்பு ஏற்படுகிறது.

இயந்திரப் பொறியியல் துறை

* இயந்திரப் பொறியியல் துறையில், கடந்த 3 ஆண்டுகளில் 2017ஆம் ஆண்டிலிருந்து துப்புரவு பணி மேற்கொள்ளவும் பிற துறைகளின் பயன்பாட்டிற்காகவும் 2,509 எண்ணிக்கையில் பல்வேறு வகையான வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பல்வேறு நிதி ஆதாரங்களின் கீழ் ரூ.173.76 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ளவாறு கொள்முதல்.

* பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின் கீழ், ரூ.6.8 கோடி மதிப்பீட்டில் நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய 1 ஆம்பிபியன் உபகரணம், 4 நாய்பிடிக்கும் வாகனங்கள், 16 ஆய்வு வாகனங்கள், 2 நீரில் மூழ்கி இயங்கக்கூடிய பம்புகள், 49 இருக்கை வசதி கொண்ட 1 பேருந்து, வகை வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

* தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ரூ.34.77 கோடி மதிப்பீட்டில் 4 இயந்திரப் பெருக்கி வாகனங்கள், 3 ரோபோடிக் மல்டிபர்ப்பஸ் எஸ்கவேட்டர், 5 ஹாலேஜ் டிப்பர்கள், 15 ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள், 411 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் மற்றும் பேட்டரி மூலம் இயங்கும் 1 Litter Picker உபகரணம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், ரூ.38.72 கோடி மதிப்பீட்டில் அதிக உறிஞ்சும் திறன் கொண்ட ஜெட் இயந்திரம் பொருத்தப்பட்ட 6 தூர்வாரும் வாகனங்கள் மற்றும் 1 ஆம்பிபியன் உபகரணம் கொள்முதல் செய்வதற்கு பணி ஆணை வழங்கப்பட்டு வாகனங்கள் விரைவில் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ரூ.37.05 கோடி மதிப்பீட்டில் 1,684 பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள், ரூ.4.35 கோடி மதிப்பீட்டில் குப்பைகளை உறிஞ்சும் 15 வாகனங்கள், ரூ.6.6 கோடி மதிப்பீட்டில் 30 கனரக டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* ஸ்வதேஷ்தர்ஷன் திட்டத்தின் கீழ், ரூ.9.51 கோடி மதிப்பீட்டில் 5 வருட இயக்குதல் மற்றும் பராமரித்தலுடன் கூடிய 8 டிராக்டர் மூலம் இயக்கப்படும் மணல் சலிக்கும் இயந்திரங்கள் மெரீனா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் பணிக்காக கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

* மாநில பேரிடர் மீட்பு நிதியின் கீழ், ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் 22 எச்.பி. நீர் இறைக்கும் 10 பம்புகள், 50 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 25 எச்.பி. திறன் கொண்ட 30 நீர் இறைக்கும் பம்புகள், 5.3 எச்.பி. திறன் கொண்ட பெட்ரோல் இன்ஜின் மூலம் இயங்கும் 200 மரம் அறுக்கும் இயந்திரங்கள், ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் 6 இயந்திரங்கள், 1 Tele Handler உபகரணம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், ரூ.27.8 கோடி மதிப்பீட்டில் 6 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய 1 சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம், 3 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய 1 ரொபோடிக் எஸ்கவேட்டர், 8 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய 3 மினி ஆம்பிபியன் உபகரணங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டு விரைவில் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மழைநீர் வடிகால் துறை

* மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110இன்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் ரூ.4,034.30 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டமைப்பு உருவாக்கப்படும் என அறிவித்தார்கள். இதில் முதற்கட்டமாக தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ், (Tamil Nadu Sustainable Urban Development Project) உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.1,387.27 கோடி மதிப்பீட்டில் கூவம்

மற்றும் அடையாறு வடிநிலப்பகுதிகளில் 406 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- ✶ கே.எப்.ட்பிள்யூ என்ற ஜெர்மன் நாட்டு வங்கி நிதியில் கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ.1,243.15 கோடி மதிப்பீட்டில் 360 கி.மீ நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் பாலவாக்கம், கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், கானத்தூர், மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளில் M3 திட்டக்கூறு பணிகளுக்கு ரூ.270.38 கோடி செலவினத்தில் 52 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இந்த பணியினை மேற்கொள்ள, கண்காணிக்க திட்ட மேலாண்மை கலந்தாலோசகரை (Project Management Consultant) தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் தொரப்பாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளை உள்ளடக்கிய M1, M2 திட்டக்கூறுக்கு கே.எப்.டபிள்யூ. வங்கி வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாலோசகரை (Design and Project Management Consultant) நியமனம் செய்ய ஒப்பந்த புள்ளிகளை கோரியுள்ளது. மேலும், பொருளாதார விவகாரங்கள் துறை, தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவர்களுக்கிடையேஏற்படும்உடன்படிக்கையின் படி KfW வங்கி நிதி அளிக்கும் ஒப்பந்தத்தில் 06.12.2019 அன்று கையெழுத்திட்டார்கள்.

- ✶ கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ரூ.2,518 கோடி செலவினத்தில் 763 கி.மீ நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு திட்ட அறிக்கை பெறப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பெற மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புதுடெல்லியில், 22.01.2019 அன்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்கள் துறையின் வழிகாட்டு குழுவின் 96ஆவது கூட்டத்தில், இந்தத் திட்டத்தினை ஆசிய வளர்ச்சி வங்கிக்கு அனுப்ப ஒப்புதல் வழங்கியது. ஆசிய வளர்ச்சி வங்கியின் Reconnaissance Mission Team அக்டோபர், 18–21, வரை இத்திட்டத்தினை ஆய்வு செய்து நிதி வழங்க, AIDE Memorie அனுப்பியுள்ளனர். வரும் ஜனவரி 21–24, 2020இல் கடன் ஒப்பந்தம் கையெழுத்திட காலவரையை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

- ✶ சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.290 கோடி மதிப்பீட்டில் 359 இடங்கள் மற்றும் சீர்மிகு நகர நிதியின் கீழ் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 157 இடங்களில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சியில் 210 நீர்நிலைகள் உள்ளன. இதில் 9 நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகள் மூலதன நிதி, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 63 குளங்களின் புனரமைப்பு பணிகள் ரூ.48.08 கோடி மதிப்பீட்டில் சென்னை சீர்மிகு நகர நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 64 குளங்களில் புனரமைப்புப் பணி பெரு நிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு Corporate Social Responsibility (CSR) நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 47 குளங்களில் புனரமைப்பு பணி ரூ.109.88 கோடி மதிப்பில் CMCDM நிதியில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தபுள்ளிகள் 19.11.2019 அன்று பெறப்பட்டுள்ளது. மேலும் 27 குளங்கள் ரூ.152.09 கோடி மதிப்பில் CRRT நிதியின் மூலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கட்டடத்துறை

- ✶ 2016 முதல் 2019 டிசம்பர் வரை 42 பல்வேறு வகையான பணிகளான மருத்துவக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக்கூடக் கட்டடப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் ரூ.110.50 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

நிலம் மற்றும் உடைமைத்துறை

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை நீதிமன்ற உதவியுடன் ரூ.1,244 கோடி

சந்தை விலை மதிப்பு கொண்ட சொத்துக்களை சென்னை மாநகராட்சி மீட்டுள்ளது.

✶ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டடங்கள் மற்றும் நிலம் பற்றிய விவரங்கள் அனைத்தும் இணையதளத்தில் பதிவு செய்யும் பொருட்டு, ஒப்பந்தம் கோர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

பூங்காத்துறை

✶ AMRUT திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில், கடந்த மூன்று நிதியாண்டுகளில், 51 புதிய பூங்காக்கள் ரூ.34.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. 2017–2018ஆம் நிதியாண்டில் அம்ருத் திட்ட ஊக்க நிதியின் கீழ், 4 புதிய பூங்காக்கள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

✶ 2018–2019ஆம் நிதியாண்டில் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ், ரூ.14.93 கோடி மதிப்பீட்டில் மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரை (பெசன்ட் நகர்) பகுதிகளில் உள்கட்டமைப்புகள் தரம் உயர்த்தி மேம்படுத்தப்பட்டுள்ளன.

✶ 2018–2019ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வைப்பு நிதியின் கீழ், ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய அம்மா சுற்றுச்சூழல் பூங்கா, மூலதன நிதியின் கீழ் ரூ.0.33 கோடி மதிப்பீட்டில் 1 புதிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மூலதன நிதியின் கீழ் 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் 2 புதிய பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ இந்நிதியாண்டில் மூலதன நிதியின் கீழ் கூடுதலாக ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பிரத்தியேகமான அம்சங்களுடன் கூடிய 2 உணர்வு பூங்காக்கள் (Sensory Park) அமைக்க ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

✶ சென்னை மாநகரின் பசுமை பரப்பை அதிகரிக்க 2018–2020ஆம் நிதியாண்டில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

பொது சுகாதாரத்துறை (பூச்சித் தடுப்பு பிரிவு)

✶ இந்தியாவிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் Geo based Vector Control Monitoring System (Real Time) உருவாக்கப்பட்டு தீவிர கொசு ஒழிப்பு பணி சென்னையில் நடைபெற்று வருகிறது.

✶ டெங்குவை கட்டுப்படுத்த 2,056 கொசுப்புழு ஆய்வுப் பதிவேடு வழங்கப்பட்டுள்ளது. டெங்குவை கட்டுப்படுத்த 2,000 measuring jars வழங்கப்பட்டுள்ளது. கையில் கொண்டு செல்லும் சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது (Portable Fogging Machines - 66 Nos.).

✶ பூச்சி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 40 களப்பணி உதவியாளர்கள் (Field Assistant) நியமிக்கப்பட்டுள்ளனர்.

✶ நீர்வழிப்பாதைகளில் கொசுப்புழு நாசினி தெளிக்க 11 பைபர் படகு (Fibre Boat) கொள்முதல் செய்யப்பட்டது.

✶ பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நன்னீர் குட்டை / குளங்களில் கொசுப்புழுக்களை உண்டு வாழும் 3,50,000 கம்பூசியா என்னும் மீன்கள் விடப்பட்டுள்ளது.

✶ சிறிய அளவிலான புகைப்பரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. (Mini Fogging Machines - 25 Nos.).

✶ அதிவேக திறன்கொண்ட கொசுப்புழு நாசினி கைத்தெளிப்பான் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. (Power Sprayers Machines - 15).

✶ 40 களப்பணியாளர்களுக்கு ஆய்வு கருவிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

✶ கூடுதலாக 7 பெரிய வாகனங்கள் மூலம் புகைப்பரப்பும் இயந்திரம் (Pulse Fogging machine) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அரங்கத்துறை

- ✶ கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு உடற்பயிற்சி கூடங்களில் நவீன உடற்பயிற்சி கருவிகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ✶ கடந்த 2017–2018ஆம் நிதியாண்டில், மண்டலம்–6, வார்டு–72, பிரைட்டன்ஸ் சாலையில் உள்ள கன்னிகாபுரம் விளையாட்டுத்திடல் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும், மண்டலம்–10, வார்டு–136, தியாகராயநகர், வெங்கட நாராயணா சாலையில் உள்ள விளையாட்டுத்திடல் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ மண்டலம்–10, வார்டு–137, நெசப்பாக்கம், ஏரிக்கரை சாலையில் உள்ள விளையாட்டுத்திடல் 2018–2019ஆம் ஆண்டில் ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ TUFIDCO CSR நிதியின் கீழ், 2019–2020ஆம் ஆண்டில் ரூ.0.97 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று விளையாட்டு திடல்களை மேம்படுத்த நிருவாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறை

- ✶ மண்டலங்கள் 9, 10, 13 மற்றும் 11, 12, 14, 15இல் வீடுகள்தோறும் திடக்கழிவுகளை சேகரித்தல், கழிவுகளை சேகரித்து அதற்குரிய பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு செல்லுதல், எஞ்சிய கழிவுகளை குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் போன்ற பணிகளுக்காக ஒரு வருடத்திற்கு ரூ.447 கோடி மதிப்பீட்டில் 8 ஆண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- ✶ ரூ.801.47 இலட்சத்தில் 73 எண்ணிக்கையில் உரக்கிடங்குகள், ரூ.963.66 இலட்சத்தில் 63 எண்ணிக்கையில் வளங்கள் மீட்பு மையங்கள் மற்றும் ரூ.35.41 இலட்சத்தில் 7 எண்ணிக்கையில் உயிரி எரிவாயு நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ✶ கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.458 இலட்சம் மதிப்பீட்டில் 3,075 மீ. சுற்றுச்சுவர் அமைக்கும் பணி, குப்பை வாகனங்கள் வெளியே செல்லும் பாதை மற்றும் உள்ளே செல்லும் பாதையில் ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டில் எடை மேடையும் அமைக்கப்பட்டன. ரூ.147.20 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு இடங்களில் சுற்றுசுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், ரூ.933 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி 100 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை கொண்டு இயற்கை எரிவாயு தயாரிக்கும் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ✶ பள்ளிக்கரணை குப்பை கிடங்கு மற்றும் சோழிங்கநல்லூரில் ரூ.1,866 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி தலா 100 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை கொண்டு இயற்கை எரிவாயு தயாரிக்கும் 2 நிலையங்கள் அமைக்க நடவடிக்கை.
- ✶ அத்திப்பட்டு குப்பைமாற்றும் வளாகத்தில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி, புளியந்தோப்பு இறைச்சி கூட வளாகத்தில் ரூ.179.38 இலட்சம் மதிப்பீட்டில் 5 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட இரண்டு உயிரி எரிவாயு கூடம் அமைக்கப்பட்டுள்ளது.
- ✶ பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-Mining) பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்து சீரமைக்க அத்திப்பட்டு குப்பை மாற்றும் வளாகத்தில் ரூ.569.93 இலட்சம் மதிப்பீட்டிலும், பள்ளிக்கரணை குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.248.23 இலட்சம் மதிப்பீட்டிலும், சாத்தாங்காடு குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.998 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ✶ மண்டலங்கள்–1, 2, 3, 7 மற்றும் 11, 12, 14, 15இல் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் சேகரிக்க ரூ.156 இலட்சம் மதிப்பீட்டில் 13 மையங்கள், அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண்டலம்–2இல் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி 10 மெட்ரிக்டன் மறு சுழற்சி செய்ய இயலாத உலர்கழிவுகளை விஞ்ஞானரீதியில் எரியூட்டும் கலன் அமைக்கும் பணி முடிவுற்று செயலாக்கத்தில் உள்ளது.

வருவாய் துறை

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை மூலமாக சொத்துவரி ரூ.2,465.91 கோடி, தொழில் வரியாக ரூ.953.23 கோடி என மொத்தம் ரூ.3,419.14 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

- ✶ பொதுமக்கள், சொத்து வரியினை தெரிவு செய்யப்பட்ட வங்கி கிளைகள், புதிய கையடக்க கருவி மூலம் கடன் / பற்று அட்டை மற்றும் இணையதள வசதி போன்ற சேவைகளை பயன்படுத்தி செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ இணையதள வசதியினைப் பயன்படுத்தி தொழில் வரி மற்றும் கம்பெனி (நிறும) வரி ஆகியவற்றை உரிய விவரங்களுடன் சுய மதிப்பீடு (Self Assessment Scheme) செய்து வரி செலுத்தவும், தொழில் உரிமத்தை தாமாகவே புதுப்பிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ புவிசார் தகவல் அமைப்பு வரைபடம் தயாரித்தல் (வானூர்தி அளவீடு மூலமாக) (GIS Mapping through Drone Survey) பெருநகர சென்னை மாநகராட்சி, ட்ரோன் (Drone) எனப்படும் ஆளில்லா வானூர்தி மூலம் அனைத்து கட்டடங்கள், சாலைகள் மற்றும் சாலைகளில் அமைந்துள்ள அனைத்து துறைகளின் சேவை பயன்பாடுப் பொருட்களின் புவிசார் அமைப்பு (GIS) வரைபடத்தை தயாரிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் மூலம் உலக வங்கியின் நிதியுதவியுடன், மூன்று வட்டாரங்களையும் 15 மண்டலங்களையும் 200 வார்டுகளையும் உள்ளடக்கிய 426 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிக்கு புவியியல் தகவல் அடிப்படை வரைபடத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ✶ ஆளில்லா வானூர்தி பயன்படுத்தி தயாரிக்கப்படும் வரைபடம் நிலை உயர்த்தப்பட்ட பதிவுகளுடன் இணைக்கப்படும். இவ்வாறு உருவாக்கப்பட்ட பதிவுகள் நிருவாக பிரிவுக்கு திட்டமிடுதல், செயலாக்குதல், கண்காணித்தல் மற்றும் கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாக இருக்கும்.

அம்மா குடிநீர்

- ✶ ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 50 இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ரூ.5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

- ✶ இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. சராசரியாக நாளொன்றுக்கு ஒரு நிலையத்தின் மூலம் 8,000 லிட்டர் வழங்கப்பட்டு 10.01.2020 வரை மொத்தம் 35.20 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ சேவைகள் துறையில் 15 மண்டலங்கள் மூலமாக 14 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள், 3 இருபத்து நான்கு மணிநேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள், 2 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தேவையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் 15.02.2017 முதல் 10.01.2020 வரை 1,99,07,603 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று பயன்.

- ✶ 15.02.2017 முதல் 10.01.2020 வரை பிரசவித்த தாய்மார்களின் எண்ணிக்கை 32,192.

- ✶ அறுவை அரங்குகளின் சிறப்பு அம்சமாக பிரசவம் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்த கூடிய Disposable LSCS Delivery Kit, Video Laparoscopy மற்றும் Sonomamogram ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. 15.02.2017 முதல் 10.01.2020 வரை சுக பிரசவம் மூலம் 16,105 தாய்மார்களுக்கும் மற்றும் சிசேரியன் அறுவை

சிகிச்சை மூலம் 16,087 தாய்மார்களுக்கும் பிரசவம் நடைபெற்றுள்ளது.

- ✶ 15.02.2017 முதல் 10.01.2020 வரை பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை 20,034 தாய்மார்களுக்கு நடைபெற்றுள்ளது.
- ✶ 15.02.2017 முதல் 10.01.2020 வரை ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் 308 தந்தையர்களுக்கு நடைபெற்றுள்ளது.
- ✶ 15.02.2017 முதல் 10.01.2020 வரை 2,960 தாய்மார்களுக்கு பாதுகாப்பான கருகலைப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி அனைத்து தடுப்பூசிகளும் இலவசமாக அனைத்து நலவாழ்வு மையங்களிலும் மற்றும் களப்பணியின் போதும் போடப்படுகின்றன. முன்பு குழந்தைகளுக்கு DPT தடுப்பூசி போடப்பட்டு வந்தன. தற்போது அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு பென்டாவேலன்ட் தடுப்பூசிகள் போடப்படுகிறது.
- ✶ 15.02.2017 முதல் 10.01.2020 வரை பி.சி.ஜி. – 2,39,328 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- ✶ பென்டாவேலன்ட் வேக்சீன் தடுப்பூசி மற்றும் ஓரல் போலியோ டிராப்ஸ் 2,47,352 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- ✶ தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி 2,39,807 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- ✶ தற்போது ஊசி மூலமாக கொடுக்கப்படும் போலியோ தடுப்பூசி மருந்து 2,31,022 குழந்தைகளுக்கும் போடப்பட்டுள்ளது.
- ✶ பெண்களுக்கு எளிய முறையில் கருப்பபை வாய் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் 15.02.2017 முதல் 10.01.2020 வரை 1,68,663 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம்

- ✶ ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவி, பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு ரூ.25,000/– மற்றும் தங்க நாணயம் 4 கிராம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகின்றது. மேலும், 2016–2017 நிதியாண்டில் 23.05.2016 முதல் இத்திட்டத்தின் கீழ், 10ஆம் வகுப்பு முடித்த பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் தாலிக்கு தங்கம் 8 கிராம் வீதமும் பட்டம் மற்றும் பட்டைய படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் தாலிக்கு தங்கம் 8 கிராம் வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.
- ✶ 16.02.2017 முதல் 15.12.2018 வரை 3,039 நபர்களுக்கு ரூ.12,92,75,000/– மற்றும் 12,156 கிராம் தங்கமும் (4 கிராம் தங்கம் வீதம்) மற்றும் 16.02.2017 முதல் 10.01.2020 வரை 9,840 நபர்களுக்கு ரூ.42,54,00,000/– மற்றும் 78,720 கிராம் தங்கமும் (8 கிராம் தங்கம் வீதம்) வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்

- ✶ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம், அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொண்ட 2,07,145 கர்ப்பிணிப் பெண்களுக்கு 16.02.2017 முதல் 10.01.2020 வரை ரூ.121,33,92,000/– வழங்கப்பட்டுள்ளது.

ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

- ✶ பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ், ரூ.600 வழங்கப்படுகிறது. 16.02.2017 முதல் 10.01.2020 வரை 25,793 பயனாளிகளுக்கு ரூ.1,57,03,800 வழங்கப்பட்டது.

நகராட்சி நிருவாக ஆணையரகம்

தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டம்

- ✶ 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் 23,464.961 கி.மீ. சாலைகளை பராமரித்து வருகின்றன.

* இதுவரை 6,083.462 கி.மீ. சாலைகள் ரூ.2,491.40 கோடிக்கு பல்வேறு திட்ட பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

* ரூ.2,491.40 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகள் சீரமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

* மேற்குறிப்பிட்ட நிதி மானியமாகவும் உள்ளாட்சி பங்களிப்பாகவும் நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

* இதுவரை 6,083.462 கி.மீ சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 2015–2016ஆம் ஆண்டு வரை சாலைப் பணிகள் முடிக்கப்பட்டன. 2016–2017 முதல் 2018–2019ஆம் ஆண்டிற்குரிய சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* தமிழக அரசின் நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், 2019–2020ஆம் ஆண்டிற்கு முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டமாக மொத்தம் 1120.82 கி.மீட்டர் சாலைப் பணிகள் ரூ.692.70 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு சாலைப் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

* 9 குடிநீர்த் திட்டங்கள், ஒரு பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் 25 நகரங்களில் பூங்காக்கள் அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு ரூ.2,073.82 கோடி மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாநகராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டப்பணி மற்றும் பல்லவபுரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது மற்றும் 90 பூங்காக்கள் அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. பிற திட்ட உட்கட்டமைப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

* 2016–2017ஆம் ஆண்டிற்கான அம்ரூத் திட்டத்தில் 2 குடிநீர் வழங்கல் திட்டங்களும், 8 பாதாள சாக்காடை திட்டங்களும் மற்றும் 24 நகரங்களில் பூங்கா மேம்பாட்டிற்கான பணிகளும் ரூ.3,017.35 கோடி அனுமதி பெறப்பட்டு 133 பூங்காக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 123 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 10 பூங்கா மேம்பாட்டிற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. பிற திட்ட உட்கட்டமைப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

* 2017–2020ஆம் ஆண்டிற்கான அம்ரூத் திட்டத்தில் 3 குடிநீர் வழங்கல் திட்டங்களும், 4 பாதாள சாக்காடை திட்டங்களும் மற்றும் 24 நகரங்களில் பூங்கா மேம்பாட்டிற்கான பணிகளும் மொத்தம் ரூ.4,228.95 கோடிக்கு அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணிகள் நடைபெற்று வருகிறது. அனைத்து 135 பூங்காக்கள் அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளன. பிற திட்ட உட்கட்டமைப்பு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு தொகையினை ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரங்கள் (Smart Cities)

* இந்தியாவில் மொத்தம் 99 சீர்மிகு நகரங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

* முதலாவது ஆண்டு நகரங்களுக்கிடையே சவாலான போட்டி (City Challenge Competition) என்னும் முறையில் 2015–2016ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

* தொடர்ச்சியாக, இரண்டாவது ஆண்டில் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

* தொடர்ச்சியாக, மூன்றாம் ஆண்டில் திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருச்சி மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மற்றும் நான்காம் ஆண்டில், ஈரோடு மாநகராட்சி தேர்வு

செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாநகராட்சிகளிலும், சிறப்பு தேவைக்கான அமைப்பு (SPV) நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் கண்டறியப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

✶ சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 339 பணிகள் 9,526.42 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 53 பணிகள் ரூ.200.165 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

✶ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 2,72,130 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்டவும் மற்றும் 7,753 இருக்கைகளுடன் சமுதாயக் கழிவறைகள் கட்டவும் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி நிதி பங்களிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிகுடியிருப்பு கழிவறைகளை பொருத்தவரை மொத்தம் 2,72,130 எண்ணிக்கைகளில் 2,67,258 முடிக்கப்பட்டு, 4,872 எண்ணிக்கைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

✶ சமுதாய கழிப்பறைகளை பொருத்தவரை மொத்தமுள்ள 7,753 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பறை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (Day-NULM)

✶ மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை 2014–2015ஆம் நிதியாண்டிலிருந்து, பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு பதிலாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தை துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு;

- சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு.
- திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி.
- திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- சுயவேலை வாய்ப்புத் திட்டம்.
- நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம்,
- நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம்.

✶ தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டிற்கு மொத்தம் ரூ.344.39 கோடி மேற்கண்ட 6 கூறுகளுக்கு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, முதல் நான்கு கூறுகளான 1, 2, 3, 4 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் மூலமாக செயலாக்கம் செய்ய, மகளிர் மேம்பாட்டு கழக இயக்குனராக நியமித்துள்ளது, இரண்டு கூறுகளான “வீடற்றோருக்கு உறைவிடம்‘’ மற்றும் மேலும் எஞ்சியுள்ள “நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம்‘’, நகராட்சி நிருவாகம் ஆணையரகம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

✶ வீடற்றோருக்கு உறைவிடம் அமைத்தல் திட்டத்தின் கீழ், இந்த காலகட்டத்தில் இதுவரை 32 மாவட்டங்களில், 12,073 குடியிருப்பிற்கு தங்கும் வசதி கொண்ட 242 உறைவிடங்கள் ரூ.101.33 கோடி மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, 164 உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதர பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன,

✶ நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம் இதுவரை 1,03,048 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, 482 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாலையோர வியாபார குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

நெகிழி (பிளாஸ்டிக்) தடை

✶ ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகள் 01.01.2019 முதல் தடைசெய்யப்பட்டது. இத்தடையை நடைமுறைப்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளால் அபராதம் மற்றும் பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஜனவரி 2019 முதல் 13.12.2019 வரையிலான காலத்தில் 930.505 மெட்ரிக் டன் நெகிழிகள் பறிமுதல்

செய்யப்பட்டுள்ளதுடன், ரூ.403.41 இலட்சம் அபராதத் தொகையும் வசூலிக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

வறட்சி கால அவசர நடவடிக்கைகள்

- கல்குவாரியிலிருந்து நீர் பெறுதல்
- சென்னை நகரின் அருகிலுள்ள சிறிய ஏரிகளிலிருந்து நீர் பெறுதல்

✶ சென்னை மாநகர விரிவாக்கப்பட்ட பகுதிகளில், வீடுகளில் உள்ள கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகளிலிருந்து (Septic tank) கழிவுநீரை அகற்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் குறைந்த கட்டணத்தில் வாடகை கழிவுநீர் ஊர்திகள் ஏற்பாடு.

✶ சென்னை மாநகர பகுதிகளில் புதிய குடிநீர்/கழிவுநீர் இணைப்புகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல், கட்டணம் செலுத்துதல் மற்றும் கண்காணித்தல் முறை.

✶ இரட்டை ஏரியை குடிநீர் ஆதாரமாக கொள்ள சாத்தியக்கூறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளுதல்.

✶ சென்னை பெருநகரில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி.

✶ 2017–2019இல் ஈஞ்சம்பாக்கம், நந்தம்பாக்கம், நொளம்பூர், காரம்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் ரூ.102.56 கோடி மதிப்பீட்டிலான, முடிவடைந்த குடிநீர்த் திட்டப் பணிகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

✶ 2017–2019இல், மதுரவாயல், நொளம்பூர், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, உள்ளகரம் – புழுதிவாக்கம், கத்திவாக்கம், திருவொற்றியூர், சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் ரூ.471.22 கோடி மதிப்பீட்டிலான, முடிவடைந்த பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

✶ 2019ஆம் ஆண்டின் வறட்சி காலங்களில், வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறைவடைந்ததன் விளைவாக அதனை ஈடு செய்யும் வகையில் புதிய குடிநீர் ஆதாரங்களை கண்டறிய வேண்டியது அவசியமானது. அதற்காக வாலாஜா ஏரியிலிருந்து நேரடியாக நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீரை எடுத்து தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

✶ சிறப்பு உந்து குழாய் அமைப்பின் மூலம் எருமையூர் குவாரியிலிருந்து நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் நீர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

✶ இரட்டை ஏரி, பெரும்பாக்கம் மற்றும் அயனம்பாக்கம் ஏரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து குடிநீர் வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✶ ஜோலார்பேட்டையிலிருந்து இரயில் மூலம் 6 மாதங்களுக்கு நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் குடிநீர் அனுப்புவதற்கு ரூ.66 கோடி செலவில் 159 நடைகள் மூலம் 438 மில்லியன் லிட்டர் குடிநீர் ஜோலார்பேட்டையிலிருந்து இரயில் மூலம் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

✶ நெம்மேலியில் தற்போதுள்ள கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில், கூடுதலாக நாளொன்றுக்கு, 150 MLD திறன்கொண்ட, கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திட, ரூ.1,689.35 கோடிக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.06.2019 அன்று அடிக்கல் நாட்டி பணிகள் துவக்கப்பட்டன.

✶ கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ரூ.348 கோடி மதிப்பீட்டில், வடசென்னையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின் நிலையங்களின் தேவையை பூர்த்தி செய்ய

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 01.10.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- சோழிங்கநல்லூரில், நாள் ஒன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 31.10.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ரூ.486.21 கோடி மதிப்பீட்டில், இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீ பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 29.11.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- 29.11.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "அழைத்தால் இணைப்பு" மற்றும் "இல்லந்தோறும் இணைப்பு" ஆகிய இரண்டு திட்டங்கள் முறையே பிரதான சென்னை மாநகர் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தரை தளம் + இரண்டு தளங்கள் மற்றும் காலி தளம் + மூன்று தளங்கள் அமையப்பெற்ற கட்டடங்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்கு அறிவிக்கப்பட்டன. இத்திட்டங்களின்படி, இணைப்பு கோரிய நாளில் இருந்து 15 நாட்களுக்குள் எவ்வித ஆவணங்களோ மற்றும் முன் கூட்டியே பணம் செலுத்துதல் ஆகியவை எதுவும் இன்றி இணைப்பு வழங்கப்படும்.

- இணைப்பு வழங்கிய பின், நுகர்வோர், சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய இணைப்புக் கட்டணம் மற்ற பிற கட்டணங்கள். அத்தொகையை கணக்கிட்டு, பயனாளிகள் ஒரே தவணையிலோ அல்லது 10 தவணைகளில் வட்டியில்லாமல் ஐந்து வருடத்திற்குள் செலுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- ரூ.3,034.13 கோடி மதிப்பீட்டில், 14 மாவட்டங்களில் 57.81 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

- ரூ.373.24 கோடி மதிப்பீட்டில், 11 மாவட்டங்களில் 12.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 15 நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்கள்.

- ரூ.406.58 கோடி மதிப்பீட்டில், 8 மாவட்டங்களில் 5.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 11 பாதாள சாக்கடைத் திட்டங்கள்.

பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

- புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, கடலூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், சேலம், நாகப்பட்டினம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள கடலூர் நகராட்சி, 18 பேரூராட்சிகள் மற்றும் 8,822 குடியிருப்புகளில் உள்ள 45.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,638.24 கோடி மதிப்பீட்டில் 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திட்டங்கள்

- புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள 1,751 ஊரக குடியிருப்புகள் மற்றும் வல்லம் பேரூராட்சியை சார்ந்த 6.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.315.70 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம்.

- புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 1,766 ஊரக குடியிருப்புகள் மற்றும் S.புதூர் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களிலுள்ள 125 ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 6.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.301.50 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம்.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பேராவூரணி, அதிராமப்பட்டிணம், பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் 1,153 ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 6.39 இலட்சம்

மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.495.70 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம்.

- ✶ கடலூர் மாவட்டத்தில் உள்ள, கடலூர் நகராட்சி, புவனகிரி , பரங்கிப்பேட்டை ஆகிய 2 பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 6.93 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.260.54 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி–1).

- ✶ கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள தொண்டாமுத்தூர், பூளுவப்பட்டி, தென்கரை, வேடப்பட்டி, தளியூர், ஆலந்துறை, பேரூர் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட 134 ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 1.63 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.130.46 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள, நத்தம், நிலக்கோட்டை, அம்மையநாயக்கனூர் ஆகிய 3 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 1,276 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கவும், காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் மற்றும் கீரனூர், நெய்காரப்பட்டி ஆகிய 2 பேரூராட்சிகள், பழனி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 354 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் வையம்பட்டி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 135 ஊரகக் குடியிருப்புகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய ரூ.636 கோடி மதிப்பீட்டில் 5.76 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ சேலம் மாவட்டம் நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 698 குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சிகளுக்கு நீர் ஒதுக்கீட்டுடன் ரூ.158.64 கோடி மதிப்பீட்டில் 2.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோவில் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 3.39 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.105.70 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி மற்றும் விருதுநகர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 755 ஊரக குடியிருப்புகளில் உள்ள 5.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.234 கோடி மதிப்பீட்டிலான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

- ✶ திருநெல்வேலி, திருப்பூர், கடலூர், பெரம்பலூர், தேனி, ஈரோடு, திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள 5 பேரூராட்சிகள் மற்றும் 2,594 குடியிருப்புகளில் உள்ள 12.47 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.395.89 கோடி மதிப்பீட்டில் 16 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திட்டங்கள்

- ✶ திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளில் உள்ள 100 குடியிருப்புகளில் 0.89 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.68.10 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ திருப்பூர் மாவட்டத்தில் உள்ள குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளில் உள்ள 1.23 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.54.14 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சியில் 0.60 இலட்சம்

மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.18.16 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், ஆலத்தூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 306 ஊரக குடியிருப்புகள் மற்றும் அரும்பாவூர், பூலாம்பாடி பேரூராட்சிகளில் உள்ள 2.83 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.61.11 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ தேனி மாவட்டம், கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 கிராமங்களில் உள்ள 0.08 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.65 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம்.

- ✶ திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 1,262 ஊரக குடியிருப்புகளில் உள்ள 2.72 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.91.16 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி–2).

- ✶ திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 குடியிருப்புகளில் உள்ள 0.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.96 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த கண்டமனூர் மற்றும் 15 ஊரக குடியிருப்புகளில் உள்ள 0.14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 குடியிருப்புகளில் உள்ள 0.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.08 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளில் உள்ள 0.47 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.11 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

- ✶ தேனி மாவட்டம் வடுகப்பட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரக குடிருப்புகள், பெரியகுளம் தோட்ட வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான 1.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.45.70 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 17 தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 69 வழியோர குடியிருப்புகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தின் கொடியம்பாளையம் குடியிருப்புகளில் உள்ள 0.45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.19.14 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 51 ஊரக குடியிருப்புகளுக்கு பயன்பாட்டில் உள்ள 327 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்து தலைமை இடம், நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர்உந்து நிலையங்கள் மூலம் 0.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.9.50 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ✶ தேனி மாவட்டம், தேனி ஒன்றியத்தைச் சார்ந்த அரண்மனைப்புதூர் மற்றும் 4 இதர குடியிருப்புகளில் உள்ள 0.12 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.67 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

- ✶ தேனி மாவட்டம், மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள 0.05 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.0.98 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

* தேனி மாவட்டம், போடி ஒன்றியத்தைச் சார்ந்த கோடங்கிப்பட்டி மற்றும் 3 ஊரக குடியிருப்புகளில் உள்ள 0.09 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.0.93 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்கள்

* ஆரணி, கம்பம், பழநி, தாந்தோணி, கடையநல்லூர் (11,350 வீட்டிணைப்புகள்) உதகமண்டலம், தேனி–அல்லிநகரம், திண்டிவனம் ஆகிய 8 நகராட்சிகள் மற்றும் திருக்கழுகுன்றம், பொத்தனூர், தேவதானப்பட்டி, ஆண்டிப்பட்டி, முசிறி, கோத்தகிரி ஆகிய 6 பேரூராட்சிகளுக்கு 14 நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்கள் மொத்தமாக ரூ.322.34 கோடி மதிப்பீட்டில் 11.04 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அம்ரூத் திட்டங்கள்

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

* ரூ.50.90 கோடி மதிப்பீட்டில் 1.53 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள்

* அரியலூர், பெரம்பலூர் நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகள், கிருஷ்ணகிரி, பெரியகுளம், அரியலூர், போடிநாயக்கனூர், விருதுநகர், மேட்டூர், அரக்கோணம் நகராட்சிகள், பழனி செட்டிப்பட்டி பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் கருங்குழி பேரூராட்சி கசடு மேலாண்மைத் திட்டம் ஆக மொத்தம் ரூ.406.58 கோடி மதிப்பீட்டில் 5.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குடிநீர் திட்டங்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

* 2017ஆம் ஆண்டு வறட்சிக்காலத்தில் ஏற்பட்ட மற்றும் எதிர்நோக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி குடிநீர் வழங்கும் பொருட்டு மாநில/மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.121.18 கோடி மதிப்பீட்டில் 2,282 நீர் ஆதார மேம்பாட்டு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, கூடுதலாக நாளொன்றுக்கு 93 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

* ஒகி புயலால் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வெலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 37 கூட்டு குடிநீர் திட்டங்கள் போர்க்கால நடவடிக்கையின் காரணமாக மூன்றே நாட்களில் ரூ.11.69 கோடி செலவில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது.

* கஜா புயலின் தாக்கத்தினால் நான்கு கடலோர மாவட்டங்களில் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டங்களுக்கு மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதாலும், மரங்கள், மின்கம்பங்கள், மின்மாற்றிகள் சாய்வினால் குடிநீர் குழாய்கள் சேதமடைந்ததாலும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. எனினும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு மூன்றே நாட்களில் தற்காலிக ஏற்பாடாக 175 குடிநீர் லாரிகள் மற்றும் 273 ஜெனரேட்டர்கள் மூலம் 19 நகரங்கள் மற்றும் 8,122 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதில் ஏற்பட்ட தடைகள் சரி செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டது. இந்த புனரமைப்பு பணிகளுக்காக ரூ.12.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.

* 2017–2018ஆம் ஆண்டு நீண்ட காலத்திற்கு முன் செயல்படுத்தப்பட்டு வாரிய பராமரிப்பிலுள்ள 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டு அதனை முழு திறனுடன் மேலும் 15 ஆண்டுகளுக்கு செயல்பட வைக்கும் பணிகளுக்காக ரூ.179.09 கோடி அனுமதி அளிக்கப்பட்டு, அவற்றில் 49 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள்

* கன்னியாகுமரி, நாமக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, திருச்சி, திண்டுக்கல், கரூர், ஈரோடு, தேனி, திருவள்ளூர், விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி, 9 நகராட்சிகள், 27 பேரூராட்சிகள்

மற்றும் 3,542 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 46.23 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 34 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்திட மொத்தம் ரூ.3,120 கோடி மதிப்பீட்டிற்கு அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகள் நிருவாகம்

✶ நபார்டு திட்டத்தின் கீழ், 641 எண்ணிக்கையிலான 1,059.07 கி.மீ நீளத்திற்கு சாலை பணிகள் ரூ.530.70 கோடி மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ், ரூ.568.58 கோடி மதிப்பீட்டில் 1,041.16 கி.மீ நீளமுள்ள 692 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

✶ மாநில பேரிடர் நிவாரண நிதி தலைப்பின் கீழ், ரூ.45.22 கோடி மதிப்பீட்டில் 1,696 பணிகளும் மற்றும் பேரூராட்சிகள் பொது நிதியின் கீழ், ரூ.63.67 கோடி மதிப்பீட்டில் 2,506 பணிகளும் ஆக மொத்தம் ரூ.108.89 கோடி மதிப்பீட்டில் 4,202 குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ 58 பேரூராட்சிகளை 52 நகராட்சிகளுடன் ஒருங்கிணைத்து கசடு கழிவு திட்டப் பணிகள் செயல்படுத்தபட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

✶ குன்னத்தூர், குரும்பலூர், பெண்ணாடம், ஆலங்காயம், சேத்தூர், முதுகுளத்தூர், ஜலகண்டபுரம், பென்னகரம், காவேரிப்பட்டினம், ஆலம்பாளையம் மற்றும் செங்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் ரூ.31.17 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ், கசடு கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

✶ ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல், உரமாக்குதல், தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய 2,619 எண்ணிக்கையிலான பணிகள், ரூ.196.39 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 2,29,853 புதிய தனிநபர் குடியிருப்பு கழிப்பிடம் ரூ.183.88 கோடி மதிப்பீட்டிலும், மற்றும் 13,114 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் ரூ.102.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ 528 பேரூராட்சிகளில், 521 பேரூராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற பேரூராட்சிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

✶ உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி / மூலதன மானிய நிதியின் கீழ், 527 பணிகள் ரூ.503.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தின் கீழ், 244 பணிகள் ரூ.187.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் – அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புறம்) ரூ.809.21 கோடி மானியத்தில் 38,534 வீடுகள் கட்டும் பணிக்கு ஒப்புதல் பெறப்பட்டு 11,799 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

✶ மத்திய அரசின் நிதி உதவியுடன் புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் 22 பணிகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ தீன் தயாள் அந்யோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ், வீடற்ற நகர்ப்புற ஏழைகள் தங்குமிடம் ஒன்றும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனை வளாகங்களில் உள்நோயாளிகளுடன் வரும் உதவியாளர்கள் தங்குவதற்கான சிறப்பு தங்குமிடம் 34 ஆகமொத்தம் 35 பணிகள் ரூ.13.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 11 பணிகள் முடிவுற்று, எஞ்சிய 24 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டத்தின் கீழ், 9 பணிகள் ரூ.41.73 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- நகர் ஊரமைப்பு இயக்கக வளர்ச்சி நிதியிலிருந்து பூங்கா மேம்பாட்டு திட்டத்தின் கீழ், திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் 3 பணிகள் ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 136 பணிகள் ரூ.15.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 953 உட்கட்டமைப்பு பணிகள் ரூ.753.40 கோடி மதிப்பீட்டிற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

- ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மற்றும் கணபதிபுரம் பேரூராட்சிகளில் ரூ.11.21 கோடி மதிப்பீட்டில் 13 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 9 பணிகள் ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

- இந்த மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பினை, பேரூராட்சி பகுதிகளில் உள்ள 26,59,599 கட்டடங்களில் ஏற்படுத்திட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நாளது நிலையில் 20,38,961 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு நிலையான பேரூராட்சிகளில் பெரிய அளவில் "மரக்கன்றுகள் நடுதல்" பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஜூலை 2019 முதல் 1 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

- அனைத்து பேரூராட்சி பகுதிகளிலும் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களை பயன்படுத்துதல் 01.01.2019 முதல் முற்றிலுமாக தடைசெய்ய உரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நாளது வரை 118.65 MT நெகிழி பொருட்கள் கையகபடுத்தி அழிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.102.96 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

- 25.04.2017 அன்று நடைபெற்ற வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு நிறுவனத்தின் 47ஆவது வருடாந்திர விழாவில் இந்திய அளவில் சிறப்பான நடைமுறைக்கான சுகாதாரம் என்ற பிரிவில் பேரூராட்சி துறைக்கு மத்திய நகர்புர மற்றும் மேம்பாட்டுதுறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டது.

- 20.06.2017 அன்று புது டெல்லியில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் திடக்கழிவு மேலாண்மையில் சிறந்த செயல்பாட்டிற்கான "ஸ்காட்ச் ஸ்வச்பாரத்" விருது பேரூராட்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2018ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் ஆதார விருதுகள், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடி பேரூராட்சிக்கும், மணல்மேடு பேரூராட்சிக்கும் 25.02.2019 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய நீர் ஆதார மற்றும் கங்கை நதி புனரமைப்பு, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

- 2018ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் தூய்மையான நகரத்திற்கான சுவச் சர்வக்ஷன் விருது, 06.03.2019 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சர் அவர்களால் ஐந்து பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், ஈரோடு மாவட்டம் கூகலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் ஆகிய பேரூராட்சிகளுக்கு "வேகமாக வளர்ந்து வரும் நகரம்" என்ற தலைப்பின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டது.

- திண்டுக்கல் மாவட்டம், அகரம் பேரூராட்சிக்கு "தென் மண்டலத்தில் புதுமை மற்றும் சிறந்த செயல்பாட்டிற்காக" விருது வழங்கப்பட்டது.

- தஞ்சாவூர் மாவட்டம் மேலதிருப்பூந்துருத்தி பேரூராட்சிக்கு "திடக்கழிவு மேலாண்மையில் சிறந்த நகரம்" என்ற தலைப்பின் கீழ், விருது வழங்கப்பட்டது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, சிறப்புடன் செயல்படுத்தும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி மற்றும் தருமபுரி மாவட்டம் பாலகோடு பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது" வழங்கப்பட்டன.

- காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரம் பேரூராட்சியானது உலக சுற்றுலா மையங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளதை கருத்தில்கொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் ஆகியோரின் 11.10.2019இல் வருகையையொட்டி குறுகிய காலத்தில் மற்றும் போர்க்கால அடிப்படையில் பல்வேறு கட்டமைப்புகள் புனரமைக்கப்பட்டும், அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இப்பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள புராதான பகுதிகளை மெருகூட்டும் வகையில் மரங்கள், அழகு செடிகள் மற்றும் புல்தரைகள் அமைக்கப்பட்டது. இவை பார்வையாளர்களால் வெகுவாக கவரப்பட்டு அரசுக்கு நற்பெயர் ஈட்டித்தந்தது.

- "கஜா" புயலின் போது வீசிய அதிவேக காற்று மற்றும் கனமழையால் தஞ்சாவூர் (10 பேரூராட்சிகள்), நாகப்பட்டினம் (4 பேரூராட்சிகள்), திருவாரூர் (3 பேரூராட்சிகள்), புதுக்கோட்டை (8 பேரூராட்சிகள்) மற்றும் திருச்சி (2 பேரூராட்சிகள்) ஆகிய 5 மாவட்டங்களை சேர்ந்த 27 பேரூராட்சிகளில் அனைத்து பகுதிகளிலும் மிக அதிக அளவில் பாதிப்படைந்தன. பேரூராட்சிப் பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைத்திட ஏதுவாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.5 கோடி தற்காலிக மீட்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 27 பேரூராட்சிகளுக்கும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

- "ஒகி" புயல் மற்றும் கனமழையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 55 பேரூராட்சிகளிலும் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தும் மின் கம்பங்கள் சாய்ந்தும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. மேற்கண்ட பாதிப்புகளிலிருந்து இயல்பு நிலைக்கு திரும்ப போர்கால அடிப்படையில் அனைத்து நிவாரண பணிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. இப்பேரிடரினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைத்திட மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ரூ.1.10 கோடியும், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரால் ரூ.17.17 இலட்சம் கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

- ✶ 21.02.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொகுதி–4இல் அடங்கிய பதவிகளுக்கான தேர்வில் 5,451 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 22.05.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் (2001–2007) பதவிக்கான தேர்வில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 26.05.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் பதவிக்கான தேர்வில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 02.06.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு இந்து சமயம் (ம) அறநிலைய ஆட்சித் துறையில் செயல் அலுவலர் நிலை–III (2009–2011) பதவிக்கான தேர்வில் (1) ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.
- ✶ 14.06.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட வட்டார சுகாதார புள்ளியிலாளர் பதவிக்கான தேர்வில் 172 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 11.09.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொகுதி–Iஇல் அடங்கிய பதவிகளுக்கான தேர்வில் 74 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 27.09.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சார் ஆய்வாளர் மற்றும் கடல் முதலாள் பதவிகளுக்கான தேர்வில் 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 26.10.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொழில்துறை சார்நிலைப் பணியிலடங்கிய சோதனையாளர் மற்றும் உதவி சோதனையாளர் பதவிகளுக்கான தேர்வில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 09.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட கைத்தறி மற்றும் நெசவுத்துறை உதவி இயக்குநர் பதவிக்கான தேர்வில் 14 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 09.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு சிறைத்துறைப் பணியிலடங்கிய சிறை அலுவலர் பதவிக்கான தேர்வில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 16.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இளநிலை அறிவியல் அலுவலர் பதவிக்கான தேர்வில் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 22.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சமூக ஆய்வுப் பணி நிபுணர் (தமிழ்நாடு சிறைத் துறை சார்நிலைப் பணி) பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 28.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவிப்பணி மேலாளர் (எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணி) 2015–2016 பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✶ 04.12.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட கண்காணிப்பாளர் (உடைகள் மற்றும் உள்ளடக்கி தயாரிப்பு அலகு, வேலூர்) தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் (ம) விழிப்புப்பணி (2015–2016) பணிகளுக்கான தேர்வில் (1) ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.
- ✶ 05.12.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி சிறை அலுவலர், சிறைத்துறை, தமிழ்நாடு சிறைத்துறை

சார்நிலைப் பணியிலடங்கிய பதவிக்கான தேர்வில் 104 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 21.12.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமையியல் தேர்வு–III (தொகுதி–III-A) பணியிலடங்கிய பதவிகளுக்கான தேர்வில் 37 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 10.01.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொழிலக (ம) வணிகத் துறையில் உதவி இயக்குநர் (தொழிலக கூட்டுறவுத்துறை) பதவிக்கான தேர்வில் 4 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 19.01.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு இந்து சமயம் (ம) அறநிலையங்கள் சார்நிலைப் பணியிலடங்கிய செயல் அலுவலர், நிலை–IV (தொகுதி–VIII) பதவிக்கான தேர்வில் 49 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 19.01.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு வேலைவாய்ப்பு (ம) பயிற்சி சார்நிலைப் பணியிலடங்கிய விடுதி கண்காணிப்பாளர் (ம) உடற்கல்வி அலுவலர் பதவிகளுக்கான தேர்வில் 27 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 08.02.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவிப் பேராசிரியர் (கதிரியியக்க இயற்பியல்) பதவிக்கான தேர்வில் 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 08.02.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்ள உதவி புவியியலாளர் பதவிக்கான தேர்வில் 53 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 23.02.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு இந்து சமயம் (ம) அறநிலையங்கள் சார்நிலைப் பணியிலடங்கிய செயல் அலுவலர் நிலை–III (தொகுதி–VII B) பதவிக்கான தேர்வில் 29 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 17.04.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் (ம) விழிப்புப்பணி பணியிலடங்கிய கண்காணிப்பாளர் பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 17.04.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் பதவிக்கான தேர்வில் 333 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 07.05.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட த.நா. தலைமைச் செயலக (சட்டம் (ம) நிதித்துறை அல்லாத) துறைகளில் உதவியாளர் (தொகுதி–V-A பணிகள்) பதவிக்கான தேர்வில் 54 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 04.07.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்ள உளவியலாளர் பதவிக்கான தேர்வில் 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 04.07.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவிப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) பதவிக்கான தேர்வில் 21 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 11.07.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இந்திய மருத்துவம் ஹோமியோபதித் துறையில் உள்ள புள்ளியியலாளர் பதவிக்கான தேர்வில் 31 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 30.07.2018 அன்று வெளியிடப்பட்ட தொகுதி–4 பணியிலடங்கிய பல்வேறு பதவிகளுக்கான தரவரிசைப்பட்டியலின்படி 11,997 பேர் கிராம நிருவாக அலுவலர், இளநிலை உதவியாளர், வரித் தண்டலர்–(நிலை–I), நில அளவர், வரைவாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை–III)) ஆகிய பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 27.08.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமையியல் பணிகளிலடங்கிய தேர்வு–II-A (நேர்காணல் அல்லாத பதவிகள்) பதவிகளுக்கான தேர்வில் 2,281 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 20.09.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு இந்து சமயம் (ம) அறநிலையங்கள் துறை செயல் அலுவலர் நிலை–I பதவிக்கான தேர்வில் 4 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 16.10.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தடயவியல் துறையில் உள்ள ஆய்வக உதவியாளர் பதவிக்கான தேர்வில் 56 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 23.10.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி தோட்டக்கலை அலுவலர் பதவிக்கான தேர்வில் 805 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 24.10.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட நீதித்துறையில் உரிமையியல் நீதிபதி பதவிகளுக்கான பதவிக்கான தேர்வில் 320 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 09.11.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சுற்றுலா அலுவலர் பதவிக்கான தேர்வில் 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- ✶ 09.11.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இந்து சமயம் (ம) அறநிலைய ஆட்சித்துறை பணியிலடங்கிய உதவி ஆணையர் பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 30.11.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொறியியல் பணிக்கான தேர்வில் 330 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 06.12.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மோட்டார் வாகன பராமரிப்புத் துறை மற்றும் காவல் போக்குவரத்துப் பணிமனை துறைகளிலுள்ள தானியங்கி பொறியாளர் பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 06.12.2018 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி ஆணையர், தொழிலாளர் துறை பதவிக்கான தேர்வில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 27.12.2018 அன்று அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொறியியல் பணியிலடங்கிய பதவிகளுக்கான தேர்வில் 147 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 01.02.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) பதவிக்கான தேர்வில் 323 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 20.02.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணியில் அடங்கிய (தொகுதி–1) பதவிகளுக்கான தேர்வில் 85 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 20.03.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பணிகளில் அடங்கிய புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கான தேர்வில் 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 20.03.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் மக்கள் திரள் பேட்டியாளர் பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 10.04.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்ள இளநிலை பகுத்தாய்நர் பதவிக்கான தேர்வில் 24 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 11.04.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவப் பணியில் அடங்கிய விரிவுரையாளர் (புள்ளியியல்) பதவிக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 02.05.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு அலுவலர் / மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான தேர்வில் 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 09.05.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவிக்கான தேர்வில் 74 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 14.05.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி நூலகர் மற்றும் இளநிலை கல்வெட்டாய்வாளர் பதவிக்கான தேர்வில் 2 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 14.05.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி வனப்பாதுகாவலர் பதவிக்கான தேர்வில் 14 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 18.06.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் பணியில் அடங்கிய முதுநிலை வேதியியலாளர் பதவிக்கான தேர்வில் 2 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **18.06.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தோட்டக்கலை அலுவலர் பதவிக்கான தேர்வில் **101** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **25.06.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொழில் மற்றும் வணிகத் துறையில் உள்ள உற்பத்தி கணக்கு உதவியாளர் பதவிக்கான தேர்வில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

* **15.07.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட நகர் ஊரமைப்புத் துறையில் கட்டடக்கலை உதவியாளர் மற்றும் திட்ட உதவியாளர் பதவிகளுக்கான தேர்வில் **13** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **15.07.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி சிறை அலுவலர், சிறைத்துறை, தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப்பணியில் அடங்கிய பதவிக்கான தேர்வில் **30** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **24.07.2019** அன்று முடிவு வெளியிடப்பட்ட தொல்லியல் துறையில் உள்ள நூலகர் பதவிக்கான தேர்வில் ஒருவர் **(1)** தெரிவு செய்யப்பட்டார்.

* **24.07.2019** அன்று முடிவு வெளியிடப்பட்ட உப்பு ஆய்வாளர் பதவிக்கான தேர்வில் **2** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **20.08.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட வனத்துறையில் உள்ள வனப்பயிற்சியாளர் பதவிக்கான தேர்வில் **158** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **20.08.2019** அன்று முடிவு வெளியிடப்பட்ட மீன்வள உதவி ஆய்வாளர் பதவிக்கான தேர்வில் **6** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **20.08.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட கூட்டுறவுத் துறையில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் இளநிலை ஆய்வாளர் பதவிக்கான தேர்வில் **30** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **21.08.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தடயவியல் துறையில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர் (குளிர்சாதனம்) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (வாயு தொழிற்சாலை) பதவிகளுக்கான தேர்வில் **2** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **21.08.2019** அன்று முடிவு வெளியிடப்பட்ட தொழில் மற்றும் வணிகத் துறையில் வேதியியலாளர் மற்றும் இளநிலை வேதியியலாளர் பதவிகளுக்கான தேர்வில் **2** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **21.08.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் கணக்கு அலுவலர் நிலை–III பதவிக்கான தேர்வில் **4** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **17.09.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பணிகளில் அடங்கிய முதல்வர், தொழில் பயிற்சி நிலையம் / உதவி இயக்குநர் (பயிற்சி) மற்றும் தமிழ்நாடு தொழில்கள் சார்நிலைப்பணியில் அடங்கிய உதவிப் பொறியாளர் (தொழில்கள்) பதவிகளுக்கான தேர்வில் **41** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **20.09.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் உள்ள விடுதி கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் பதவிகளுக்கான தேர்வில் **6** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **15.10.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள செயல் அலுவலர் – நிலை–III பதவிக்கான தேர்வில் **55** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **18.10.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட அருங்காட்சியகத் துறையில் உள்ள காப்பாட்சியர் பதவிக்கான தேர்வில் **4** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **18.10.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மீன்வளத் துறையில் உள்ள ஆய்வக உதவியாளர் பதவிக்கான தேர்வில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

* **18.10.2019** அன்று முடிவு வெளியிடப்பட்ட பல்வேறு துறைகளில் உள்ள நூலகர், நிலை–I, நூலகர், படச்சுருள் நூலகர் மற்றும் நூலகர் மற்றும் தகவல் உதவியாளர், நிலை–I & II பதவிகளுக்கான தேர்வில் **29** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **18.10.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சமூக பாதுகாப்புத் துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் / விழிப்பு நிறுவனங்களில் உள்ள உதவி கண்காணிப்பாளர் பதவிக்கான தேர்வில் **4** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **18.10.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட நகர மற்றும் ஊரமைப்புத் துறையில் உள்ள வரைவாளர், நிலை–III பதவிக்கான தேர்வில் **53** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

* **05.11.2019** அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள செயல் அலுவலர் – நிலை IV பதவிக்கான தேர்வில் **65** பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 13.11.2019 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை–II பதவிக்கான தேர்வில் 113 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 25.11.2019 அன்று முடிவு வெளியிடப்பட்ட புவி மற்றும் சுரங்கத் துறையில் உள்ள உதவி புவியிலாளர் மற்றும் பொதுப்பணித் துறையில் புவி வேதியியலாளர் பதவிகளுக்கான தேர்வில் 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 31.12.2019 அன்று முடிவு வெளியிடப்பட்ட தமிழ்நாடு பொதுப்பணியில் அடங்கிய சமூகவியலாளர் மற்றும் பொருளியலாளர், சமூகநீதி மற்றும் மனித உரிமைக்கான காவல்துறை கூடுதல் இயக்குநர் அலுவலகம், சென்னை பதவிக்கான தேர்வில் 2 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 09.01.2020 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணியில் அடங்கிய (தொகுதி–1) பதவிகளுக்கான தேர்வில் 181 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

- 01.09.2019 அன்று நடைபெற்ற தொகுதி–4 தேர்விற்கான தரவரிசைப் பட்டியல் தேர்வு நடைபெற்ற 72 நாள்களில் (12.11.2019) வெளியிடப்பட்டது. (மொத்த காலிப்பணியிடங்கள்–9,398).

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

- கரூர் மாவட்டத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புதிய பிரிவு அலுவலகம் ரூ.75,86,400/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அவ்வலுவலகம் 25.06.2018 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

- திருவள்ளூர், திருவாரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புதிய பிரிவு அலுவலகங்கள் ரூ.3,12,42,717/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அவ்வலுவலகங்கள் 14.12.2018 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன.

- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய விசாரணை அறை (Interrogation Room) ரூ.17,20,451/– மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் தலைமையகத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய குற்ற ஆய்வுக்கூடம் (Cyber Lab) அமைக்க ரூ.6,36,53,260/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு லோக் ஆயுக்தா

- அரசு நிருவாகத்தில் தூய்மையையும், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம்–2018 மற்றும் விதிகள் இயற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொது ஊழியர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கென 'தமிழ்நாடு லோக் ஆயுக்தா' அமைப்பானது 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்

- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005இன் நோக்கங்களான நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் ஊழலை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் 2017ஆம் ஆண்டு தகவல் ஆணையத்தில் ஒரு தலைமைத் தகவல் ஆணையர் பணியிடமும், 4 தகவல் ஆணையர்கள் பணியிடங்களும் நிரப்பப்பட்டன.

- 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட தலைமைத் தகவல் ஆணையர் காலிப்பணியிடமும் 18.11.2019 அன்று நிரப்பப்பட்டுள்ளது.

- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005இன் கீழ் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்கள் சமர்ப்பித்தலை எளிதாக்கும் பொருட்டு, தேசிய தகவல் தொடர்பு மையத்தின் (NIC) உதவியுடன் இணையவழி இரண்டாம் மேல்முறையீட்டு விண்ணப்ப வலைப்பக்கம் ("Web Portal for Online filing of Second Appeal") ரூ.34.88 இலட்சத்தில், தகவல் ஆணைய இணையதள பக்கத்தில் ஏற்படுத்தப்பட்டு 13.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

- ரூ.17.63 இலட்சம் ஒதுக்கீட்டில், இரண்டாம் மேல்முறையீடுகளை விரைந்து தீர்வு செய்யும் பொருட்டு தமிழ்நாடு தகவல் ஆணைய அலுவலக தானியங்கு (Office Automation of Information Commission) கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- ரூ.27.79 கோடி மதிப்பீட்டில் சென்னை நந்தனத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் (தரைத்தளம்+5 தளங்கள்) தமிழ்நாடு மாநில தகவல் ஆணையக் கட்டடம் கட்ட முதற்கட்டமாக 2019–2020இல் ரூ.2.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் விசாரணை அறைகள் மற்றும் தகவல் ஆணையர்களின்

அறைகளில் பயன்படுத்துவதற்கான அறைகலன்கள் வாங்குவதற்கு தகவல் ஆணையத்திற்கு ரூ.19,18,640/– நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

- ✶ SSC, RRB, IBPS, TNPSC போன்ற முகமைகள் நடத்தும் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு, முறையான பயிற்சி அளிக்க சென்னையில் மற்றுமொரு பயிற்சி மையத்துடன், கோயம்புத்தூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் துவங்குவதற்கு ரூ. 4.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதில் நான்கு புதிய போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் துவங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்

- ✶ 2016ஆம் ஆண்டில், இப்பயிற்சி மையத்தில் பயின்ற 44 மாணவ, மாணவியர்கள் பல்வேறு அகில இந்திய குடிமைப் பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர்.
- ✶ 2017ஆம் ஆண்டில், இந்திய வனத் துறை (IFS) முதன்மைத் தேர்விற்கு ஆயத்தமாகும் பொருட்டு, 24 மாணவர்கள் 04.11.2017 முதல் 13.12.2017 வரை (40 நாட்கள்) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் தங்கி பயின்றனர். அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிட வசதி அளிக்கும் வகையில் ரூ.76,800/– நிதி ஒதுக்கீடு.
- ✶ 2017ஆம் ஆண்டில் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் முதல்நிலைப் பயிற்சியில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெற முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. சுமார் 16,268 விண்ணப்பங்கள் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பித்திருந்தனர். இது கடந்த ஆண்டைவிட விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை இருமடங்காகும்.
- ✶ மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.5.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை வசதிக்கான சிறப்பு உபகரணங்கள் வாங்கப்பட்டன.
- ✶ மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 20 பட்டதாரி இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ✶ 2018ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு இளைஞர்கள் 32 பேர் அகில இந்திய குடிமைப்பணிக்கான இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி ஆகிய பணிகளில் சேர தேர்வு செய்யப்பட்டனர். இவ்வாறு தேர்ச்சி பெற்றோரில் 21 பேர் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள். கூடுதலாக இம்மையத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எட்டு நபர்களில், மூவர் மத்திய அரசின் தேர்வாணையத்தின் இந்திய வனத் துறைப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ✶ அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணி பயிற்சி மையங்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்ட தொகையினை ரூ.3,000/– ஆக உயர்த்தி, அதற்குரிய செலவினத் தொகையான ரூ.25,75,000/–ஐ, ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதே போன்று பகுதிநேரப் பயிற்சியாளர்களின் உணவுக்கும், பயிற்சிக்குமாக ரூ.9.84 இலட்சம் கூடுதலாக ஒதுக்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ✶ தமிழக அரசு மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர்களின் நலன் கருதி அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி தேர்வு மையத்தில் ரூ.21,77,828/– மதிப்பில் மின்தூக்கி வசதி செய்துள்ளது.
- ✶ அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மைய வகுப்பறைகளில் விரிவுரையாளர்களால் நடத்தப்படும் பாடங்கள், தமிழக கிராமப்புற மாணவ/ மாணவியர்கள் பயன்பெறும் நோக்கில், நேரடி இணைய வழி ஒளிபரப்பு (Live Web Cast) வசதி துவங்கப்பட உள்ளது. இப்பணிக்காக தமிழக அரசால் ரூ.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

போட்டித்தேர்வுகள் பயிற்சி மையம்

- ✶ 04.01.2018 முதல் 10.12.2019 வரையிலான காலகட்டத்தில் இம்மையத்தில் பயிற்சி பெற்றவர்களில் 34 பேர் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றனர்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

- ✶ 16.02.2017 முதல் 10.12.2019 வரையிலான காலகட்டத்தில் 12,085 அரசுப் பணியாளர்களுக்கு 41 நாள் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், 37 நாள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பரவலாக்கப்பட்டு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் நடத்தப்பட்டு 933 அரசுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- ✶ நிலத்தடி நீர் சேகரிப்பு குளம், பயிற்சியாளர்களுக்கான பல்நோக்கு கட்டடம், சமையல் பொருட்களுக்கான கூடுதல் இருப்பறை, கூடுதலாக எரிவாயு சேகரிப்பு அறை, கூடுதல் துணி துவைக்கும் இடம், கூடுதல் கழிப்பறைத் தொட்டிகள், விடுதிகளில் 2 கூடுதல் துணி துவைக்கும் இடம், உயரமான கட்டடங்களுக்கு 17 இடிதாங்கி அமைப்புகள், 48 தானியங்கி தண்ணீர் மோட்டார் இயக்கிகள், 4 கூடுதல் ஜெனரேட்டர்கள், விடுதிகள் மற்றும் வகுப்பறைகளில் பொருத்தப்பட்டது. கணிப்பொறி கூடத்தில் சர்வர் பொருத்துதல் போன்ற பணிகளுக்காக ரூ.5.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ✶ 4 கூடுதல் வகுப்பறைகள், 2 கூடுதல் விடுதி கட்டடங்கள், 1 கூடுதல் உணவகம் கட்டவும், மேற்படி கட்டடங்களுக்கு தளவாட சாமான்கள் வாங்கவும் ரூ.10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையம்

- ✶ அண்ணா மேலாண்மை நிலையம் 16.2.2017 முதல் 10.12.2019ஆம் தேதி முடிய 604 பயிற்சி வகுப்புகளை நடத்தி, சுமார் 21,918 அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

- ✶ மைய அரசு பணியாளர் மற்றும் பயிற்சித்துறை, பகுதி II–இன் கீழ் வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிருவாகத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005இன் மூலம் மேம்படுத்துதல் என்ற மைய நிதி உதவி திட்டத்தின் கீழ் 16 மாவட்ட தலைநகரங்களில் பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஆரம்பத்தில் ரூ.15.58 இலட்சம் நிதி உதவி வழங்கியது. 16 மாவட்டங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சி பெற்றவர்களின் சாதகமான கருத்துக்களின் அடிப்படையில், மைய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை மற்றுமொரு கூடுதல் பயிற்சி வகுப்பினை மூன்றாம் கட்டத்தில் 32 மாவட்டங்களில் விழிப்புணர்வு பயிற்சியினை நடத்தும் வகையில் ரூ.34.38 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த பயிற்சியானது தொடர்ந்து நடத்தி முடிக்கப்பட்டது.

- ✶ 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் மைய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி துறையில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட 350 “இ பிரிவு (Group C) அரசு பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அடிப்படை திறன் பயிற்சி வழங்குவதற்காக ரூ.63 இலட்சம் நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து, 2016–2017ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் 2017–2018ஆம் ஆண்டில் திண்டுக்கல் ஈரோடு, திருப்பூர், நாகப்பட்டினம், மற்றும் திருவாரூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் பயிற்சிகள் நடத்தி முடிக்கப்பெற்றன.

- ✶ இந்திய அரசு 2013ஆம் ஆண்டில் ரூ.3.18 கோடி நிதி உதவி செய்ததின் அடிப்படையில் திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியானது 10.12.2019இல் உள்ளவாறு 6,000 அரசு அலுவலர்களுக்கும், கணினி

பயிற்சியானது 1,500 அரசுப் பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்டது.

- இந்திய அரசு 2018–2019ஆம் ஆண்டில் முதல் தவணையாக ரூ.17.29 இலட்சம் நிதி உதவி வழங்கியதன் அடிப்படையில் 10.12.2019 வரை 466 அரசு பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டது.

- COMMIT இணைய வழி பயிற்சி மைய அரசு நிதி உதவியுடன் நடத்தப்படுவதாலும் மற்றும் இப்பயிற்சியானது 8 மணிநேர நேருக்கு நேர் பயிற்சியும் 20 மணி நேர இணைய வழி பயிற்சியுமாகும். மொத்தமாக 15 பகுதிகளாகவும் அதில் 12 திறன் சார்ந்த பயிற்சியும் 3 பகுதிகள் செய்முறை பயிற்சியும், 518 அரசு அலுவலர்களுக்கு 2017–2018ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது.

- மைய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை, புது தில்லி "பாலின ஒதுக்கீடு" என்ற தலைப்பில் 3 சிறப்பு பயிற்சி திட்டங்களை வழங்கியதன் அடிப்படையில் பிப்ரவரி மற்றும் மார்ச் 2018இல் மொத்தம் 115 பயிற்சியாளர்கள் அண்ணா மேலாண்மை நிலையத்தால் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- அட்டவணை வகுப்பினர் / அட்டவணை பழங்குடியினருக்கு எதிரான "வன்முறை திருத்தச் சட்டம் 2015 மற்றும் திருத்தவிதி 2016" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சியினை 20 அணிகளில் நடத்துவதற்காக ரூ.6.6 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஒப்பளிப்பு வழங்கியதைத் தொடர்ந்து 2017–2018ஆம் ஆண்டில் 374 பயிற்சியாளர்ளுக்கு 20 அணிகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

- கருவூலம் மற்றும் கணக்கு–I துறையில் 29 அணிகளில் பயிற்சி நடத்துவதற்காக, ரூ.30 இலட்சம் ஒப்படைப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து "கருவூல அலுவலர்களுக்கு நிருவாகப் பயிற்சி" என்ற தலைப்பில் கருவூலம் மற்றும் கணக்குத் துறையின், உதவி கணக்கு அலுவலர்கள், கணக்கு அலுவலர்கள் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்களுக்கு 2018 மார்ச் மாதம் வரை 2 அணிகள் முடிக்கப்பெற்று, மீதமுள்ள அணிகள் 2018–2019ஆம் ஆண்டில் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

- இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தில் மாநில தலைமையிடத்து பயிற்சி நடத்துவதற்கு அரசு முடிவு செய்ததினைத் தொடர்ந்து, பயிற்சி 2011ஆம் ஆண்டு தகுதிகாண் பருவத்து இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. 2017ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்கான முதற்கட்ட பயிற்சி 28.05.2018 முதல் 15.07.2018 வரை அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட்டது. மேலும், 2016ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்கான இரண்டாம் கட்ட மாநில தலைமையிடத்துப் பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் 11.04.2018 முதல் 11.05.2018 வரை நடத்தப்பட்டது.

- முதல் முறையாக, அண்ணா மேலாண்மை நிலையத்தில் "பயிற்சி மற்றும் பயிற்சி நிலையங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்துதல்" என்ற தலைப்பில் 18.04.2018 அன்று ஒரு பட்டறை மற்றும் கலந்தாய்வு அமர்வினை மாநில பயிற்சி நிறுவனங்களுக்காக நடத்தப்பட்டுள்ளது.

- 2006ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, மாநிலத்தில் முதல்முறையாக 12ஆவது குடிமைப்பணி நாள், அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட்டது. மேலும், 32 மாவட்டங்களிலும் 12ஆவது குடிமைப்பணி நாள் அண்ணா மேலாண்மை நிலையத்தின் வழிகாட்டுதல் மற்றும் உதவியுடன் கொண்டாடப்பட்டது.

- தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறையின் மனித வள மேம்பாடு குறித்து சிறந்த கொள்கைகளை ஆராய்வதற்காக, அண்ணா மேலாண்மை நிலையம் ஒரு ஆலோசனை திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவி பெற்ற தமிழ்நாடு சாலைத் திட்டம்–II ஆகும். இத்திட்டம் நெடுஞ்சாலைத் துறையின் பயிற்சிகளின் திறன் மேம்பாட்டினை உள்ளடக்கியதாகும். அறிவு பரிமாற்ற பயிற்சிகள் ஐந்து தலைப்புகளில் நெடுஞ்சாலைத் துறையின் 250 பொறியாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

- அண்ணா மேலாண்மை நிலையத்தால் முதன் முறையாக "கோவில் நிர்வாகம் மற்றும் பாரம்பரிய மேலாண்மை" என்ற தலைப்பில் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களுக்காக இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சி 22.09.2018 மற்றும் 23.09.2018 அன்று நடத்தப்பட்டது.

- முதல் முறையாக தலைமைச் செயலக நிதித்துறையின் சார்புச் செயலாளர்களுக்காக 8 வாரம் கொண்ட கட்டாய உள்வகுப்பறை பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு முதல் அணிக்கு 01.11.2018 முதல் பயிற்சி தொடங்கப்பட்டு இதுவரை 26 சார்புச் செயலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, பெண்களின் மன எழுச்சி, உடல் திறன் மற்றும் தலைமைத்துவ பண்புகளின் திறமைகளை அதிகரிப்பதற்கான பயிற்சியினை அளிப்பதற்காக, குறிப்பாக தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பெண் அலுவலர்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு, 14 அணிகளில் 1,403 பெண் பணியாளர்களுக்கு சென்னையைச் சார்ந்த குளோபல் அட்ஜஸ்ட்மென்ட் பவுண்டேஷன் என்ற அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

- அண்ணா மேலாண்மை நிலையம் தனது "பொன்னரங்கம்" அரங்கில் 12.11.2018 அன்று தகவல் உரிமைச் சட்டம் நாளினை கொண்டாடியது மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள் நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக பங்கேற்றார். இந்தியாவில் முதன் முறையாக, தகவல் உரிமைச் சட்டத்தின் 20 சிறப்பு வெற்றி கதைகள் தேர்வு செய்யப்பட்டு, வெற்றியாளர்களுக்கு தலா ரூ.5,000/– பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசு வகுத்தளித்த வரையறையின்படி, "இந்திய ஆட்சிப் பணி" பயிற்சியாளர்களுக்கு 2011ஆம் ஆண்டு முதல் அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு அணி இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்கு 27.05.2018 முதல் 14.07.2018 வரையிலான காலத்தில் முதல் கட்டப்பயிற்சியும் 2017ஆம் ஆண்டு அணியினருக்கு 24.04.2019 முதல் 09.05.2019 வரையிலான காலத்தில் இரண்டாம் கட்ட பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

- 2017–2019ஆம் ஆண்டுக்கான அணியிலுள்ள 4 "இந்திய வனத்துறை பணி" பயிற்சியாளர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி 14.05.2019 முதல் 15.05.2019 வரை அளிக்கப்பட்டது.

- அண்ணா மேலாண்மை நிலையத்தில் முதன் முறையாக கல்வித்துறையைச் சார்ந்த மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி மாமல்லபுரம் சுற்றுலாத்துறை வளாகத்தில் நடத்தப்பட்டது.

- தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண் அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சியாக "பாதுகாப்பாக இணையத்தை கையாள்வது" குறித்த கருத்தரங்கம் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறையின் உதவியுடன் அண்ணா மேலாண்மை நிலையத்தில் 660 பெண் ஊழியர்களுக்கு 4 அணிகள் கொண்ட ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

- நமது மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம் இப்பயிற்சி அரங்க வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கம் முன்பு அவரது பிறந்த நாளை முன்னிட்டு திறந்து வைக்கப்பட்டது.

- அரசு அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு "கடித வரைவு மாதிரி" ஒன்றும், நடமாடும் ஏ.டி.எம். வாகனமும், பயிற்சி நிலையத்தில் உள்ள அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றும் போது அதனை பாராட்டிட ஏதுவாக பாராட்டு பலகையும் துவக்கி வைக்கப்பட்டது.

- ஓய்வு பெறப்போகும் அரசு அலுவலர்களுக்கான ஓய்வு பெறுவதற்கு முந்தைய பயிற்சி 22.10.2019 முதல் 24.10.2019 வரையிலான காலத்தில் அண்ணா மேலாண்மை நிலைய அண்ணா அரங்கத்தில் நடத்தப்பட்டது. பல துறைகளைச் சார்ந்த 150க்கும் மேற்பட்ட பயனாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

- 2021ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு சம்பந்தமாக சிறப்பு பயிற்சிகள் இரண்டு கட்டங்களாக 16.11.2019 முதல் 23.11.2019 வரையிலும் மற்றும் 02.12.2019 முதல் 07.12.2019 வரையிலும் அண்ணா மேலாண்மை நிலையத்தில் புள்ளியியல் துறை பணியாளர்கள் மற்றும் மக்கள் கணக்கெடுப்பு அலுவலகப் பணியாளர்களுக்கு நடத்தி வைக்கப்பட்டது.

- அண்ணா மேலாண்மை நிலைய மண்டல மையங்கள் மூலமாக 16.02.2017 முதல் 10.12.2019 வரை திருச்சி, சேலம் மற்றும் மதுரை மண்டலம் மூலமாக 542 பயிற்சிகள் நடத்தப்பட்டு 12,399 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ ❖ ❖

சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I இன் கீழ் ஏஜி.டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான (10 கி.மீ) கடைசி சுரங்கப்பாதை வழித்தடப் பகுதியில் 10.02.2019 அன்று திருப்பூரிலிருந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பயணிகள் சேவை, காணொளிக் காட்சி வழியாக துவக்கி வைக்கப்பட்டது. இத்துடன் சேர்த்து, கட்டம்–I இன் மொத்தம் 45 கி.மீ நீளத்திலான வழித்தடங்களில் பயணிகள் சேவை முழுமையடைந்துள்ளது.
- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I இன் கீழ் வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர்/விம்கோ நகர் வரை (9 கி.மீ) நீட்டிப்பதற்கான திட்டப் பணிகள் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 23.07.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. கட்டுமானப் பணிகளில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் பணிகள் 2020ஆம் ஆண்டு மத்தியில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.
- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் கீழ் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான 3 வழித்தடங்களுக்கான ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கைக்கு ரூ.69,180 கோடி செலவு மதிப்பீட்டில் 03.01.2019 இல் ஒப்புதல் வழங்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் ஜப்பான் கூட்டுறவு முகமை மற்றும் இதர நிதிநிறுவனங்களின் கடனுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.
- கட்டம்–II இல் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான வழித்தடங்களில், 52 கி.மீ நீளத்திலான வழித்தடப் பகுதிகளை ரூ.40,941 கோடி செலவு மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடனுதவியுடன் கட்டி முடிப்பதற்கான ஒப்புதலை 11.01.2019 அன்று அரசு வழங்கியுள்ளது.
- கட்டம்–II இன் கீழ் எஞ்சியுள்ள 66.9 கி.மீ நீளத்திலான வழித்தடப் பகுதிகளை செயல்படுத்துவதற்காக, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றிடமிருந்து கடனுதவி பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.
- கோயம்புத்தூர் மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு / திட்ட அறிக்கையை ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபுள்யூவின் நிதியுதவியுடன் தயாரிக்கலாம் என முடிவுசெய்து, அப்பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

மாநில திட்டக் குழு

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

- மாநில திட்டக் குழு 16.02.2017 முதல் 10.12.2019 வரை தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் ரூ.319.16 கோடி மதிப்பிலான 177 திட்டங்களை பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துதல்

- நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளில் ஒட்டுமொத்தமாக தமிழகம் மூன்றாவது இடம் பெற்றுள்ளது. மாநில திட்டக்குழுவில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான அலகு உருவாக்கப்பட்டுள்ளது. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான பிரிவுகள் துறைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களின் செயல்திறனை அவ்வப்போது மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்துவதற்கு சுட்டிக்காட்டிகள் இறுதி செய்யப்பட்டுவருகிறது.
- சுட்டிகாட்டிகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க இணையதளம் உருவாக்கப்பட்டு அதன்வழியாக நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் பற்றிய தகவல்களையும், சமீபத்திய செய்திகளையும் பகிர உதவுகிறது.

விருது பெற்றது

* "இந்தியா டுடே" மாநிலங்களை ஒப்பீடு செய்து தயாரித்த வருடாந்திர கணக்கெடுப்பில் தமிழ்நாடு ஒட்டு மொத்த அளவில் சிறந்த செயலாற்றும் மாநிலமாகவும், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலமாகவும் தரவரிசைபடுத்தபட்டுள்ளது.

* தற்பொழுது பொது விவகாரங்கள் மையம் (Public Affairs Centres) வெளியிட்டுள்ள 2019 தரவரிசை பட்டியலில் 3 முக்கிய கருப்பொருள், 5 காரணிகள், 13 இலக்குகள் மற்றும் 49 சுட்டிகாட்டிகளுடன் கூடிய தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. பொது விவகாரங்கள் மைய 2019 தரவரிசையின்படி, முந்தைய 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் இருந்த நிலையைப் போன்றே ஒட்டு மொத்த குறியீடுகளில் தமிழகம் இரண்டாம் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

* முக்கிய கருப்பொருட்களில் ஒன்றான "கட்டாய சம உரிமை" என்ற செயல்பாட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. பெங்களூருவில் 24.10.2019 அன்று நடைபெற்ற விழாவில் தமிழக அரசுக்கு "Scroll of Honour" என்ற விருது வழங்கப்பட்டது.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

* மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்தின் கீழ் 677 திட்டங்களுக்கு 2018–2019 வரை ரூ.519.93 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.79.66 கோடி மதிப்பிலான 50 திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.14.17 கோடி மதிப்புள்ள 21 திட்டங்களுக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

* 2011–2012 முதல் 2018–2019 வரை மொத்தம் 49 ஆராய்ச்சி ஆய்வுகள் ரூ.544.94 இலட்சம் வரை அனுமதிப்பட்டுள்ளன. அவற்றில் 38 ஆராய்ச்சி ஆய்வுகள் முடிக்கப்பட்டு 11 ஆராய்ச்சி ஆய்வுகள் நடந்து வருகின்றன. கூடுதலாக, மேற்கண்ட காலத்திற்கு நடத்தப்பட்ட 10 கருத்தரங்களுக்கு ரூ.52.16 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம்

* சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டமானது மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் நல்வாழ்வினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது தமிழகத்தில் 2016–2017ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டமானது தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்குட்பட்ட 71 வட்டாரப் பகுதிகளை இலக்காக கொண்டு 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

* 2016–2017 முதல் 2018–2019 வரை நிதியாண்டுகளில் ரூ.200.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,511 பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளை திறம்பட மற்றும் விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணையதளத்தில் வலைகண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

இந்திய புள்ளியியல் வலுப்படுத்தும் ஆதரவு திட்டம் :

* இந்திய புள்ளியியல் வலுப்படுத்தும் ஆதரவு திட்டத்தின் கீழ், 2011–2019ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு ரூ.27.08 கோடியினை விடுவித்துள்ளது மற்றும் இச்செயல் திட்டத்தின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ரூ.19.36 கோடி விடுவித்துள்து. இத்திட்டத்திற்காக, திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், மைய அரசு, 2016–2017ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் வரை ரூ.7.77 கோடி விடுவித்துள்ளது.

* காகித முறையிலிருந்து மாறி கணினி முறையில் கணக்கெடுப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள 674 கையடக்க கணினிகள் (Tablets) மற்றும் 225 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 3 மாவட்ட அலுவலகங்கள், 18 கோட்டப் புள்ளியியல் உதவி இயக்குநர் அலுவலகங்கள், 6 வட்டாரப் புள்ளியியல் ஆய்வாளர் அலுவலகங்கள் ஆகிய உட்கட்டமைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு

* J-PAL மற்றும் சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை வகுப்பை ஆதரிப்பதற்கான நுண்ணறிவுகளைப் பெற இரண்டு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

* கடந்த மூன்று ஆண்டுகளில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையிடம் 34 ஆய்வுகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில் 17 ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் 17 ஆய்வு அறிக்கைகள் செயல்பாட்டில் உள்ளன. ❖

முன்னாள் படைவீரர்களின் நலன்

✶ போர் அல்லது போரை ஒத்த நடவடிக்கைகளில் மற்றும் படைப் பணியில் உயிர் நீத்த படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மூன்றாண்டில் 75 நபர்களுக்கு கருணை அடிப்படையில் நியமனம்.

✶ முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகையாக கலை மற்றும் அறிவியியல் கல்வி இளங்கலை / முதுகலை படிப்புகளுக்கு ரூ.2,500லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தொழில் சார்ந்த பட்டப்படிப்புகள், பட்ட மேற்படிப்புகளுக்கு ரூ.14,000லிருந்து ரூ.25,000ஆக உயர்வு. ரூ.11,500லிருந்து ரூ.20,000ஆக பல்தொழில்நுட்ப பயிலக படிப்பிற்கும், தொழில் பயிற்சி படிப்பிற்கு ரூ.2,500லிருந்து ரூ.10,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

✶ முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்களில் புற்றுநோய், தொழுநோய், காசநோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் மனவளர்ச்சி குன்றிய, கைகால்கள் பாதிப்புற்ற, குள்ளத் தன்மை உடையவர், கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ நிவாரண நிதியுதவியாக மாதந்தோறும் வழங்கப்படும் தொகை ரூ.1,500லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு பள்ளிப் படிப்பை முடித்து மேற்படிப்பு தொடர நுழைவுத் தேர்வுகளுக்கான முன்னோடி பயிற்சியுடன் கலந்தாய்வு மற்றும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பை முடித்த பிள்ளைகளுக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான முன்னோடி பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான திறன் பயிற்சியும் பெறுவதற்கு உதவும் வகையில் ரூ.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

✶ இராணுவப் பணியில் ஓய்வூதியத்துடன் விடுவிக்கப்பட்டு 01.04.2003க்கு முன்பாக மறு வேலைவாய்ப்பு மூலம் குடிமைப் பணிக்கான (மாநில அரசுப் பணி) ஓய்வூதியம் பெற்ற முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தினர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் குடிமைப் பணியில் பணியாற்றியமைக்கான குடும்ப ஓய்வூதியமாக இரட்டை குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 99 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

✶ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இராணுவத்தில் 15 ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்களின் கல்வித்தகுதியை குடிமைப் பணிக்கு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கு நிகரான பட்டமாக கருதிட தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையின் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப்படிப்பு தகுதிகளுக்கான குரூப்

சி பிரிவு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்கள் ஒதுக்கீட்டின் அடிப்படையில் நேரடி தேர்வு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- அறிக்கை காலத்தில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து 32,173 பயனாளிகளுக்கு ரூ.71.87 கோடியும், தொகுப்பு நிதியிலிருந்து 8,970 பயனாளிகளுக்கு ரூ.14.87 கோடி நிதியுதவிகளும் பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், வழங்கப்பட்டுள்ளன.

- இதுவரை 1,766 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் மறுபணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

- முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு மருத்துவப் படிப்பிற்கான இடஒதுக்கீடு 6லிருந்து 11ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மருத்துவ படிப்பிற்கு 10, பல் மருத்துவத்திற்கு 01)

- போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளின் போதும், உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதும் தன்னுயிரை தியாகம் செய்யும் அல்லது உடல் ஊனமுற்ற முப்படைவீரர்கள் அவர்தம் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சார்ந்த துணை இராணுவப் படையினருக்கும் நீட்டிக்கப்பட்டதை தொடர்ந்து இக்கருணைத் தொகையானது தற்போது தமிழ்நாட்டைச் சார்ந்த கடலோர காவல் படையினருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து வழங்கப்படும் உலகப்போர் மாதந்திர நிதியுதவி முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.6,000லிருந்து ரூ.10,000ஆகவும், அவர்தம் கைம்பெண்களுக்கு ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் / கைம்பெண்ணின் ஒரு மகளுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதியுதவி ரூ.20,000லிருந்து ரூ.25,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிதியுதவி இரண்டாவது மகளுக்கும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

- முன்னாள் படைவீரர் இறப்பிற்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு நிதியுதவி ரூ.5,000லிருந்து ரூ10,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியுதவி முன்னாள் படைவீரரின் கைம்பெண் இறப்பிற்கும் நீட்டிப்பு செய்யப்பட்டு ரூ.5,000 வழங்கப்படுகிறது.

- போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளின் போதும், உள் நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதும் தன்னுயிரை தியாகம் செய்த வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு மற்றும் இந்நடவடிக்கைகளில் உடல் ஊனமுற்ற முப்படை வீரர்கள் அல்லது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தினை இதே காரணங்களினால் உயிர் நீத்த அல்லது ஊனமுற்ற துணை இராணுவ படைவீரர்களின் (CRPF, BSF, CISF, ITBP and SSB) வாரிசுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்

- அனைத்து ஒப்பந்த பணியாளர்களுக்கு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் வரை இழப்பீட்டு தொகையாக பெறும் வகையில் விபத்து காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 12 இறந்தவரின் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியாற்றிவரும் முன்னாள் படைவீரர்களின் செயல் திறன் மேம்பாட்டுக்கான கணினி பயிற்சி மூன்றாண்டில் 14 முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,363 முன்னாள் படைவீரர்களுக்கு வெவ்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மூன்றாண்டில் 3,328 முன்னாள் படைவீரர்கள், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் வழியாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும் நோக்குடன், “மின் திருட்டை தடுக்கும் படை” (Anti Power Theft Squad) அமைக்கப்பட்டது. மின்சார நுணுக்கம் அறிந்த 215 முன்னாள் படைவீரர்கள் இப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இக்காலகட்டத்தில் இந்த ஒப்பந்தம் மின்சார வாரியத்துடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.52.50 கோடி மின்சார வாரியத்தால் சேமிக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த பணியாளர்களின் பணி ஓய்வு வயது 58லிருந்து 60ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 8,685 ஒப்பந்த பணியாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனை திட்டம் தலா ரூ.3,000 தொகுப்பின் கீழ், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் 1,534 ஒப்பந்த பணியாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் நலன்

* கடந்த 14.08.2017 வரை ரூ.12,000 ஆக இருந்த விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 15.08.2019 முதல் ரூ.16,000 ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.6,000லிருந்து ரூ.8,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* வீரபாண்டிய கட்டபொம்மன் வழிதோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழிதோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நேரடி வாரிசுப் பேரனின் மனைவி ஆகியோருக்கு கடந்த 14.08.2017 வரை ரூ.6,000 ஆக வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 15.08.2019 முதல் ரூ.8,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அகதிகள் மறுவாழ்வுத் துறை

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள்

* 01.01.2020 தேதி நிலவரப்படி 34,273 இலங்கைத் தமிழ் அகதிகள் வெளிப்பதிவில் உள்ளனர். மேலும், 107 முகாம்களில் வசிக்கும் (1 சிறப்பு முகாம் உட்பட) 59,484 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீடித்த மற்றும் உயர்த்தப்பட்ட நிவாரண திட்டங்கள் பின்வருமாறு:–

தமிழ்நாடு மக்களுக்கான அனைத்து சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

அகதி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை

* இத்திட்டத்தின் கீழ், இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் உயர்கல்வி தொடரும் பொருட்டு வருடாந்திர கல்வி உதவித்தொகை 2018–2019ஆம் நிதியாண்டில் இத்திட்டம் அனைத்து பாடப் பிரிவுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு, குறைந்தபட்சம் ரூ.2,500லிருந்து அதிகபட்சம் ரூ.6,000வரை பாடப்பிரிவின் தன்மைக்கேற்ப வழங்கப்படுகிறது. 2016–2017ஆம் கல்வி ஆண்டில் 494 மாணவர்களுக்கும், 2017–2018ஆம் கல்வி ஆண்டில் 515 மாணவர்களுக்கும் 2018–2019ஆம் கல்வி ஆண்டில் 987 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு மொத்தம் 1,996 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

* 2017–2019 ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாடுகளில் இறந்த 284 நபர்களின் உடல்களை இந்தியா கொண்டு வந்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்திடவும், வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்று இன்னல்களுக்கு உட்பட்ட 379 நபர்களை அங்கிருந்து காப்பாற்றி இந்தியா அழைத்து வரவும், மேலும் மருத்துவ காரணங்களால் இன்னலுற்றிருந்த 29 நபர்களை இந்தியா அழைத்து வந்து அவர்கள் உறவினர்களின் ஒப்புதலுடன் அவர்கள் விரும்பிய மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற அனுமதித்திடவும், வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாயகம் திரும்பியோருக்கான நலத்திட்டம்:

* 2018–2019ஆம் ஆண்டில் தாயகம் திரும்பியோர்களுக்கு சிறப்பு திட்டமாக மாண்புமிகு முதலமைச்சரின் ''சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்'' திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் 1,000 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நடப்பு 2019–2020ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் 500 வீடுகள் தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

நீர்வள ஆதாரத்துறை

வரலாற்று சிறப்புமிக்க சாதனை– காவேரி தீர்ப்பினை நடைமுறைப்படுத்துதல்

✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினால் மத்திய அரசு 01.06.2018 அன்று காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்தது. இதன்மூலம் காவேரி கழிமுக பகுதி விவசாயிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு

✶ 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1,202.44 கோடி மற்றும் 2018–2019ஆம் ஆண்டில், ரூ.1,584.99 கோடி செலவில் பாசன கட்டுமானங்களை மேம்படுத்துதல், புனரமைப்பு பணிகள், வெள்ள தடுப்பு பணிகள் மற்றும் கடலோர பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

✶ 2019–2020ஆம் ஆண்டிற்கு பாசன கட்டுமானங்களை மேம்படுத்துதல், புனரமைப்பு பணிகள், வெள்ள தடுப்பு பணிகள் மற்றும் கடலோர பாதுகாப்பு பணிகளுக்கு ரூ.3,483.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 2019 வரை ரூ.1,217.27 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

குடிமராமத்து பணிகள்

✶ மக்கள் நலனுக்காக மக்களாலே செயல்படுத்துகின்ற மகத்தான திட்டமான மிக சிறப்புமிக்க குடிமராமத்துத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.03.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இச்சீர்மிகு திட்டத்தினை சிறப்பாக நிறைவேற்ற 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் மாநிலத்தின் 30 மாவட்டங்களில், 3,036 குடிமராமத்து பணிகள் ரூ.430.56 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 2,976 பணிகள் முடிவடைந்துள்ளன. இதர பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✶ 2019–2020ஆம் ஆண்டு 29 மாவட்டங்களில் ரூ.499.69 கோடி மதிப்பீட்டில் 1,829 குடிமராமத்து பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1,082 பணிகள் முடிவடைந்துள்ளன. இதர பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏரிகள், கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலுள்ள வண்டல் மண்ணை விவசாயிகள், மட்பாண்டம் செய்பவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விலையில்லாமல் வழங்க அனுமதித்தல்

✶ தமிழ்நாட்டில் (சென்னை, காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) ஏரிகள்,

கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள களிமண், வண்டல், சவுடு மற்றும் செம்மண்ணை நீர் நிலைகள் அமைந்துள்ள கிராமத்திலோ அல்லது அதன் சுற்றுப்புற கிராமத்திலோ உள்ள பொதுமக்கள், மட்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் இலவசமாக எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

* ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளிலிருந்து எடுக்கப்படும் வண்டல் மற்றும் களிமண்ணின் அளவு விவசாயிகளுக்கு விவசாய பயன்பாட்டிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டர் (ஒரு எக்டேருக்கு 185 கன மீட்டர்) மிகாமலும் புன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டர் (ஒரு எக்டேருக்கு 222 கன மீட்டர்) மிகாமலும் இலவசமாக எடுத்து செல்லலாம் எனவும் பொதுமக்களில் நபருக்கு 30 கன மீட்டர் மிகாமலும், மண்பாண்ட தொழிலாளர்கள் கூடுதலாக 60 கன மீட்டர் மிகாமலும் வண்டல் மண் இலவசமாக எடுத்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.
* 31.12.2019 வரை நீர்வள ஆதாரத்துறை மூலம் 17.630 மில்லியன் கன மீட்டர் வண்டல் படிவுகள் 1,23,050 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேட்டூர் அணை

* தமிழக வரலாற்றில் முதல்முறையாக மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டு 83 ஆண்டுகளுக்கு பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.05.2017 அன்று மேட்டூர் அணையில் வண்டல் மண் பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மட்பாண்டம் செய்பவர்களுக்கு விலையில்லாமல் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.
* மேட்டூர் அணையில் இதுவரை 2,37,492 கன மீட்டர் வண்டல் மண் அகற்றப்பட்டு 1,846 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்

* பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில் மருதையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் ரூ.124.20 கோடி மதிப்பீட்டில் 4,194 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் பொருட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
* திருவள்ளூர் மாவட்டத்தில், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை கிராமங்களில் உள்ள கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.380 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில், இரண்டு நிரப்புதலில், 1 டி.எம்.சி அடி கிருஷ்ணா நீரினைத் தேக்கி சென்னை மாநகர குடிநீருக்காக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைத்தல்

* கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.494.60 கோடி மதிப்பீட்டில் கடைமடை பகுதியிலுள்ள 31,221 ஏக்கர் நிலங்களுக்கான பாசனவசதி பெறும் பொருட்டு தலைமதகுடன் கூடிய கதவணை அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

அத்திக்கடவு – அவிநாசி வெள்ளக் கால்வாய் திட்டம்

* அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமாக ரூ.1,652 கோடி மதிப்பிற்கு மாநில நிதியின் கீழ், DBOT அடிப்படையில் செயல்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பவானி ஆற்றின் உபரி நீரான 1.5 டி.எம்.சி தண்ணீரினை காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து நீரேற்று முறையில் குழாய்களின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 கசிவுநீர் குட்டைகள் பயன்பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் 24,468 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். பணி முன்னேற்றத்திலுள்ளது.

தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TNIAMP)

* வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட நீர்வள நிலவளத் திட்டத்தின் தொடர் திட்டமாக பாசன

வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் மாநிலத்தின் 30 மாவட்டங்களில் மீதமுள்ள 66 உபவடி நிலங்களிலுள்ள 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன் பெறும் வகையில் ரூ.2,962 கோடி மதிப்பீட்டில் 2017ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தொடர்புடைய 6 துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் இவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தில், நீர்வள ஆதாரத்துறையின் மூலம் ரூ.2,131 கோடி மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்தல், ஏரியின் நீர்ப்பரப்புப் பகுதியில் செயற்கை முறையில் நீர்செறிவூட்டும் கிணறுகள் கட்டுதல், காவேரி கழிமுகப்பகுதி மற்றும் பிற உபவடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டது.

- முதற்கட்டமாக, 18 உபவடிநிலங்களில் 1,325 ஏரிகள் மற்றும் 107 அணைக்கட்டுகளை புனரமைக்கவும் மற்றும் 45 செயற்கைமுறை நீர்செறிவூட்டு கிணறுகள் அமைக்கவும் ரூ.743.56 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 57 ஏரிகள் மற்றும் 2 பிராத பாசன கால்வாய்களில் ரூ.43.63 கோடி மதிப்பீட்டிலான புனரமைப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

- இரண்டாம் கட்டமாக ரூ.649.55 கோடி மதிப்பீட்டில், 16 உபவடிநிலங்களில், 906 ஏரிகள், 183 அணைக் கட்டுகள் மற்றும் 37 செயற்கைமுறை நீர்ச் செறிவூட்டும் கிணறுகளை உள்ளடக்கிய புனரமைப்புப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கும்.

ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டம் (ADB)

- காவேரி கழிமுகப்பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம் ரூ.1,560 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பங்கு ரூ.1,092 கோடி மற்றும் மாநிலத்தின் பங்கு ரூ.468 கோடியாகும்.

- இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள வெண்ணாறு அமைப்பிலுள்ள 6 ஆறுகள் / வடிகால்களான அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாயும் உப்பனாறு வடிகாலும் மற்றும் 13 பல்வேறு நீரேற்றும் பணிகள் ரூ.960.66 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)

- அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டமானது, தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகளிலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) 20 அணைகளிலும் உலக வங்கி நிதியுதவியுடன் செயலாக்கத்திலுள்ளது.
- இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.803.49 கோடி இதில், நீர்வள ஆதாரத் துறையின் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.527.94 கோடியாகும்.
- நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகளில், புனரமைப்பு பணிகள் 67 அணைகளில் நிறைவடைந்துள்ளன. பேச்சிப்பாறை மற்றும் மணிமுத்தாறு அணைகளில் புனரமைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- 2012இல் துவங்கிய இத்திட்டத்தின் செயலாக்க காலம் தற்போது ஜுன் 2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தும் திட்டம்

- 2016–2017ஆம் ஆண்டு முதல் 2018–2019ஆம் ஆண்டு (RIDF XXII, XXIII மற்றும் XXIV) வரை, ரூ.1,304.97 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைகள் அமைத்தல் உள்ளிட்ட 166 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
- இதுவரை 126 பணிகள் ரூ.616.11 கோடி மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்போதுள்ள முக்கொம்பு (மேலணையின்) கீழ்ப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ஒரு புதிய நீரொழுங்கி ரூ.387.60 கோடி மதிப்பீட்டில் 12,58,460 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடைகின்ற வகையில் பணி நடைபெற்று வருகிறது. இதர 39 பணிகள் ரூ.301.26 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)

- மத்திய அரசின் நிதியுதவியுடன், தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நீரொழுங்கியினை மறுகட்டுமானம் செய்தல், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் தடுப்பணை அமைத்தல், சிவகங்கை மாவட்டத்தில் அணைக்கட்டு அமைத்தல் மற்றும் வேலூர் மாவட்டத்தில் நிலத்தடி தடுப்புச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.17 கோடி மதிப்பீட்டில் 1,874 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் பொருட்டு நிறைவடைந்துள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் நிலத்தடிநீர் செறிவூட்டும் கட்டமைப்பு அமைத்தல்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் அணைக்கட்டு அமைத்தல் பணி ரூ.4 கோடி மதிப்பீட்டில் 667 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் பொருட்டு முன்னேற்றத்திலுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், வள்ளவிளைத்துறையில் கடலரிப்பு தடுப்புச்சுவர் மறுகட்டுமானம் செய்யும் பணிகள் ரூ.0.945 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு நேரடி தொடர்புடைய நீர்நிலைகள் செப்பனிடுதல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் (RRR) திட்டத்தின் கீழ் ஏரிகளைப் புனரமைத்தல்

- இராமநாதபுரம், வேலூர், சிவகங்கை, ஆகிய மாவட்டங்களிலுள்ள 104 ஏரிகளை (கட்டம் I & II) ரூ.54.32 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 21,756 ஏக்கர் நிலம் பயன்பெறும்.
- திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 49 ஏரிகளை (கட்டம் III) ரூ.23.43 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 48 ஏரிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, 1 பணி முன்னேற்றத்திலுள்ளது.
- சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 89 ஏரிகளை (கட்டம் IV) ரூ.49.3119 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள, மத்திய அரசிடமிருந்து ரூ.14.79 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது. பணிகள் துவங்கப்படவுள்ளன.

வெள்ளத் தணிப்புப் பணிகள்

- ✶ காஞ்சிபுரம் மாவட்டத்தில், வெள்ளத்தில் சேதம் அடைந்த அடையாறு மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் ஆற்றினை தரப்படுத்தும் பணிகளும், வேகவதி ஆற்றினை புனரமைத்து, மறு சீரமைக்கும் பணிகள் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளன.
- ✶ கடலூர் மாவட்டத்தில், வெள்ளப்பாக்கம் வாய்க்கால், கடிலம் ஆறு, விரூர் ஓடை மற்றும் பெரியகாட்டுப் பாளையம் ஓடை ஆகியவற்றை புனரமைத்தல், பாசிமுத்தான் ஓடை, தில்லையம்மன் ஓடை, ஓமக்குலம் வடிகால், கான்சாகிப் கால்வாய் மற்றும் முத்தையாபிள்ளை உபரிநீர் ஓடை ஆகியவற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மணவாய்க்கால் மற்றும் பழைய கொள்ளிடத்தினை மேம்படுத்துதல் போன்ற 5 வெள்ளத் தடுப்புப் பணிகள் நபார்டு நிதியுதவியுடன் ரூ.140.01 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளன.
- ✶ சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், மிக அதிகமாக பாதிப்பு அடையும் பகுதிகளில், நீண்ட கால வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ.338.23 கோடி மதிப்பீட்டில் 28 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், ரூ100.10 கோடி மதிப்பிலான 16 பணிகள் முடிவுற்றுள்ளன மற்றும் 12 பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

கடலோரப் பாதுகாப்புப் பணிகள்

- ✶ திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர்குப்பம் மற்றும் எண்ணூர் இடையிலான தொலைகல் 15/200 கி.மீ முதல் 19/000 கி.மீ வரை மற்றும் தொலை கல் 19/000 கி.மீ முதல் 15/200 கி.மீ வரை 19 தூண்டில் வளைவு தொகுப்பு கட்டுமானப் பணிகள் ரூ.70.21 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- ✶ தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், வீரபாண்டியபட்டினம், கீழவைப்பார், பெரியதாழை மற்றும் கல்லாமொழி ஆகிய 5 இடங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் ரூ.69.49 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- ✶ கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இரவிபுத்தன்துறை மற்றும் சின்னத்துறையில்

கடலரிப்பு தடுப்புச்சுவர் புனரமைக்கும் பணிகள் ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

- ✶ கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடுபுதூரில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.
- ✶ கன்னியாகுமரி மாவட்டத்தில், ரூ.14.69 கோடி மதிப்பீட்டில் பூத்துறையில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படவுள்ளது.
- ✶ கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில், ரூ.1.416 கோடி மதிப்பீட்டில் மார்த்தாண்டம்துறை கடலரிப்பு தடுப்புச்சுவர் அமைத்தல் மற்றும் கீழ்மிடாலம் கிராமத்தில் கடலரிப்புத் தடுப்புச்சுவரினை புனரமைத்தல் ஆகிய பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

நீர்நிலைகளை தூர்வாருதல்

- ✶ பாசன மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கு உரிய நேரத்தில் நீர் அளிக்க நீர்நிலைகளின் கொள்ளளவினை தூர்வாருதல் மூலம் மீட்டெடுக்க நீர்வள ஆதாரத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பரப்பலாறு நீர்த்தேக்கத்தைத் தூர்வாருதல்

- ✶ பரப்பலாறு நீர்த்தேக்கத்தை தூர்வாரி, அதன் கொள்ளளவினை மீளப்பெறும் பணிக்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் முதற்கட்ட ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ✶ நீர்பிடிப்புப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக வனத்துறைக்கு வைப்புத் தொகை செலுத்த ரூ.66.96 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு ரூ.61.96 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு இரண்டாம் கட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- ✶ தூர்வாரும் பணிகளை குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் வருவாய் ஈட்டும் வகையில் ரூ.119.25 இலட்சம் மதிப்பீட்டில் திருத்தப்பட்ட விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தூர்வாரும் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

வீராணம் ஏரியைத் தூர்வாருதல்

- ✶ கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், லால்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியினை ரூ.40 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் 1,465 மி.க.அடி முழுக்கொள்ளளவினை மீளப்பெறுவதற்கான பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.
- ✶ இத்திட்டத்தில், இவ்வேரிக்கு நீர்வழங்கும் வடவாறு வாய்க்காலினை புனரமைத்து அதன் நீர்க்கடத்தும் திறனை அதிகரிப்பதற்கான பணிகளும் செயலாக்கப்படுகின்றன.
- ✶ இந்த ஏரியினால் 44,856 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறுவதோடு சென்னை பெருநகரத்தின் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் நீர்நிலைகளில் கொள்ளளவு திறனை அதிகரித்தல்

- ✶ திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சோழவரம் ஏரி மற்றும் மாதவரம் வட்டத்தில் செங்குன்றம் ஏரி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரிகளை ரூ.19.36 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி கொள்ளளவினை மீளப்பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ சென்னையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் மேற்கண்ட ஏரிகளை தூர்வாருவதன் மூலம் மொத்தம் 1.180 டி.எம்.சி அடி கொள்ளளவு மீட்கப்படும்.

காவேரி டெல்டா பகுதிகளில் தூர்வாருதல்

- ✶ காவேரி டெல்டா பகுதிகளான நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாரும் 281 பணிகளுக்கு ரூ.60.954 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கடைமடை வரை பாசன நீர் சென்றடைந்ததுள்ளது.

மேட்டூர் அணை – சரபங்கா வடிநில நீரேற்று திட்டம்

- ✶ மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர்

வழங்கும் திட்டத்திற்கு ரூ.565 கோடி மதிப்பீட்டில் 100 ஏரிகளின் 4,238 ஏக்கர் பாசனப்பரப்பு பயன்பெறும் பொருட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நில கையகப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காவேரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் (ERM)

✶ நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் காவேரி வடிநிலத்திலுள்ள கல்லணைக் கால்வாய், காவிரி உபவடிநிலம், வெண்ணாறு உபவடிநிலம், கீழ் பவானி திட்டம், கீழ் கொள்ளிட உபவடிநிலம், கட்டளை உயர்மட்ட கால்வாய் திட்டம், ராஜவாய்க்கால், நொய்யல் உபவடிநிலம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

✶ ரூ.749.50 கோடி மதிப்பீட்டில் கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன திட்டம், ராஜவாய்க்கால் பாசனத் திட்டம் மற்றும் நொய்யல் உபவடிநிலத்தில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்திற்கு மாநில அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

✶ ரூ.2,298.75 கோடி மதிப்பீட்டில் கல்லணைக் கால்வாய்த் திட்டம் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asia Infrastructure Investment Bank AIIB) நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடந்தாய் வாழி காவேரி

✶ 20.07.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் விதி எண்: 110இன் கீழ் நீர்நிலைகளின் சுற்றுச் சூழலை மீட்டெடுத்தல், பேணிக்காத்தல் மற்றும் நீர் ஆதாரங்களை அதிகரித்தல் நோக்கமாக கொண்ட தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கத்தின் செயல்பாடுகளை அறிவித்தார். இதில், முக்கிய திட்டமாக காவேரி ஆறு மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க “நடந்தாய் வாழி காவேரி” எனும் மாபெரும் திட்டத்தினை அறிவித்தார்கள்.

✶ தமிழகத்தில் காவேரி ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க “நடந்தாய் வாழி காவேரி” திட்டத்தில் புனரமைக்கும் பணிக்கான பூர்வாங்க திட்ட அறிக்கை ரூ.11,250 கோடி மதிப்பீட்டிற்கு தயாரிக்கப்பட்டு கொள்கை ஒப்புதல் கோரி மத்திய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மணல் விற்பனை

✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.06.2017 அன்று, தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் உபயோகிப்பாளர்களுக்கு எளிதில் கிடைத்திட ஏதுவாக “தமிழ்நாடு மணல் இணைய சேவை”

(www.tnsand.in) இணையதளத்தையும், (tnsand) செல்லிடப்பேசி செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

- 01.07.2017 முதல் மணலை இணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளவும், 18.07.2017 முதல் இணையதளம் வழியாக மணல் விற்பனைத் தொகையை செலுத்தும் வசதியும் செயல்பாட்டில் உள்ளது.

- கட்டுமானப் பணிகளுக்காக வெளிநாடுகளிலிருந்து ஆற்று மணலை தமிழ்நாட்டிலுள்ள 1) சென்னை எண்ணூர் காமராஜர் துறைமுகம், 2) காட்டுப் பள்ளி துறைமுகம் மற்றும் 3) தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் ஆகியவற்றின் வழியாக மாதம் 5 இலட்சம் மெட்ரிக் டன் வீதம் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆற்று மணலை தேசிய அளவில் ஒப்பந்த புள்ளிகள் மூலம் இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- அக்டோபர் 2018 முதல் இறக்குமதி செய்யப்படும் இயற்கை ஆற்றுமணல் இணையவழி பதிவு மூலம் துறைமுகங்களில் உள்ள கிடங்கிலிருந்து நுகர்வோருக்கு பொதுப்பணித்துறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

கட்டட அமைப்பு

- விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "ஏ மற்றும் பி" வகை அரசு அலுவலர்களுக்கு 25 பணியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் 72.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களால் 29.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- சென்னை, அடையாறு பசுமைவழிச் சாலையில் அமைந்துள்ள பொதிகை வளாகத்தில் ரூ.4.84 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு அமைச்சர்களுக்காக நான்கு அரசு மாளிகைகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- சென்னை, ராஜ்பவனில் ரூ.444.50 இலட்சம் மதிப்பீட்டில் தரையில் நிறுவப்பட்ட உள்ள கிரிட்டுடன் இணைக்கப்பட்ட 400 kWp சோலார் போட்டோ வோல்டிக் பவர் பிளான்ட் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் 15.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்புச் சுவர் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை வளாகத்தில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி மூலம் 12.12.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையத்தில், பெண் பயிற்சியாளர்களுக்கான அறைகள் மற்றும் உணவருந்தும் அறை கட்டும் பணி ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

- பொதுப்பணித்துறை கட்டடத்துறையின் கீழ் இயங்கும் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் 16 எண்ணிக்கையில் வாங்குதல் பணி ரூ.97.28 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டது.

- திருச்சிராப்பள்ளியில் பொதுப்பணித்துறை மண்டல தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.3.72 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களால் காணொலி மூலம் 12.12.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ✶ சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை தலைமையக அலுவலக கட்டடத்தில் உள்ள பணியாளர் கழிவறைகள், மின் அமைப்பு மற்றும் தரைதளம் ஆகியவற்றினை மேம்படுத்தும் பணி ரூ.76.95 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.
- ✶ சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாக கட்டடத்தினை புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான 13 நபர்களுக்குட்பட்ட 2 எண்ணிக்கையில் மின்தூக்கி அமைப்பு நிறுவும் பணி ரூ.2.69 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.
- ✶ கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் பொதுப்பணித்துறை வளாகத்தில் அரசு ஆய்வு மாளிகையின் அருகில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.
- ✶ சென்னை, சேப்பாக்கம் பிரதான அலுவலக முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) கட்டடத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூ.71.72 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.
- ✶ சென்னை, தாடண்டர் நகர், அரசு அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் அ மற்றும் ஆ வகை குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.76.39 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.
- ✶ பொதுப்பணித்துறை கட்டடத் துறையின் கீழ் இயங்கும் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் 19 எண்ணிக்கையில் வாங்குதல் பணி ரூ.130 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டது.
- ✶ பொதுப்பணித்துறை கட்டட அமைப்பின் தலைமைப் பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட மகிழுந்துகளுக்குப் பதிலாக புதிய 3 மகிழுந்துகள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டது.
- ✶ பொதுப்பணித்துறை கட்டடத்துறையின் கீழ் இயங்கும் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற் பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் 8 எண்ணிக்கையில் வாங்குதல் பணி ரூ.55.70 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- ✶ சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் திட்டம் மற்றும் வடிவமைப்பு மற்றும் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம் மற்றும் கொதிகலன்கள் இயக்குநரக அலுவலக கட்டடத்தில் பழுதுகளை சீரமைக்கும் பணி ரூ.208.03 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- ✶ வேலூர் மாவட்டம், காட்பாடியில் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகம் மற்றும் உபகோட்ட அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி ரூ.127 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- ✶ மதுரை மாவட்டம், மதுரையில் உள்ள தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொ.ப.து., மதுரை மண்டலம் பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி ரூ.490 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

* சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள தீயினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான ஹுமாயுன் மஹாலை புனரமைக்கும் பணி ரூ.41.12 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
* முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் அலுவலகத்திற்கு கழிவு செய்யப்பட்ட கணினி மற்றும் உபரி பாகங்களுக்குப் பதிலாக புதிய கணினிகள் மற்றும் உபரி பாகங்கள் ரூ.31.73 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.
* சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பாரம்பரியமிக்க புராதன கட்டடத்தினை புதுப்பிக்கும் பணி ரூ.18.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
* சென்னை, தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், சென்னை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி ரூ.23.05 கோடி ரூபாய்க்கான அரசாணை பெறப்பட்டுள்ளது.
* மதுரையில் உள்ள பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி 3.50 கோடி ரூபாய்க்கான அரசாணை பெறப்பட்டுள்ளது.
* மதுரை மாவட்டம், மதுரையில் அரசு அலுவலர்களுக்கான 100 எண்ணிக்கை கொண்ட “சி” வகை குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.25 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* சென்னை, அடையாறில் மாண்புமிகு அமைச்சர்களுக்கான 4 எண்ணிக்கை குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.9.86 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கு, ஆய்வகத்துடன் கூடிய கோட்ட அலுவலகக் கட்டடம் ஒவ்வொன்றும் ரூ.4 கோடி (மொத்தம் ரூ.8 கோடி) மதிப்பீட்டில் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.
* சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்களின் ஆய்வகத்திற்காக உபகரணங்கள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் வாங்கும் பணி துவங்கப்படவுள்ளது.
* சென்னை, அடையாறு, பசுமைவழிச்சாலையில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் குடியிருப்பு மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்பு வளாகங்களில் சுகாதார வசதி, உட்புறச் சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணி துவங்கப்படவுள்ளது.
* சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர்நகர் அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் 1 எண்ணிகை 500 KLD மற்றும் 2 எண்ணிக்கை 60 KLD கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகத்திற்கான அமைப்பு ரூ.3 கோடி மதிப்பீட்டில் நிறுவும் பணி துவங்கப்படவுள்ளது.
* சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர்நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் மழைநீர் வடிகால், சேகரிப்பு மற்றும் மேற்பரப்பு வடிகால் அமைப்பு ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவும் பணி துவங்கப்படவுள்ளது.
* திருநெல்வேலியில் உள்ள மின் கோட்டம் மற்றும் மின் உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பொதுப்பணித் துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* திண்டுக்கல் மாவட்டம், பழனி பொதுப்பணித் துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணத்தில் செயற்பொறியாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.1 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.
* திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.1 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படவுள்ளது.

❖ ❖ ❖

அம்மா திட்டம்

✶ அம்மா திட்டம் முகாம் 2 கட்டடங்கள் முடிவடைந்த நிலையில் மீதமுள்ள 7 கட்டடங்கள் நடைபெற்று வருகின்றன.

✶ இதுவரை 64,077 முகாம்கள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 64.16 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 64 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புக் குறைதீர்க்கும் திட்டம்

✶ சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம் 19.08.2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, இந்த முகாம்களின் மூலமாக மொத்தம் 9,77,286 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டது. நிலம் சார்ந்து பெறப்பட்ட மொத்த 2,92,066 மனுக்களில், 1,87,420 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், பெறப்பட்ட 3,98,325 மனுக்களில் 1,42,102 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. சமூக நலத்திட்டத்தின் கீழ், பெறப்பட்ட 22,547 மனுக்களில் 12,236 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. பொது விநியோகம் திட்டம் தொடர்பாக பெறப்பட்ட 12,253 மனுக்களில் 10,026 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலவாழ்வு தொடர்பாக பெறப்பட்ட 10,614 மனுக்களில் 7,730 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் நகர்புற உட்கட்டமைப்பு தொடர்பாக பெறப்பட்ட 62,125 மனுக்களில் 52,448 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகள் தொடர்பாக பெறப்பட்ட 16,297 மனுக்களில் 13,739 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் கால்நடைகள் தொடர்பாக பெறப்பட்ட 10,600 மனுக்களில் 6,454 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது மற்றும் இதர பொருள் தொடர்பாக பெறப்பட்ட 85,056 மனுக்களில், 48,721 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது.

விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள்

✶ 2017 முதல் 2019 வரை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 4.74 கோடி பயனாளிகளுக்கு ரூ.1,454.86 கோடி செலவில், (4,75,01,838 சேலைகள் மற்றும் 4,74,92,851 வேட்டிகள்) வழங்கப்பட்டது.

மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள், குறு வட்டம் மற்றும் வருவாய் கிராமங்கள்

✶ 5 புதிய மாவட்டங்கள், 7 கோட்டங்கள், 25 வட்டங்கள், ஒரு குறுவட்டம் மற்றும் 6 புதிய வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை உருவாக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

விரிவுப்படுத்தப்பட்ட சென்னை மாவட்டம்

✶ சென்னை வருவாய் மாவட்டத்தின் ஆட்சி எல்லையை, சென்னை மாநகராட்சிக்கு இணையாக, விரிவுபடுத்தி ஆணை.

✶ காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து 25 கிராமங்களும், திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து 42 கிராமங்களும், சென்னை வருவாய் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு, மொத்தம் 121 வருவாய் கிராமங்கள், 16 வருவாய் வட்டங்கள், மற்றும் 3 வருவாய் கோட்டங்களுடன் விரிவுப்படுத்தப்பட்ட சென்னை வருவாய் மாவட்டம், 16.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

புதிய வருவாய்த்துறை கட்டடங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்

- ✶ ரூ.277 கோடி செலவில் 4 மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், 5 புதியதாக உருவாக்கப்பட்ட புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம், 10 வருவாய் கோட்ட அலுவலகம், 12 வருவாய் கோட்ட அலுவலர் குடியிருப்புகள், 89 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு, 3 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் என 123 கட்டடங்கள்.

மருத்துவ கல்லூரிகளுக்கு மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் நிலம் ஒதுக்கீடு

- ✶ நாமக்கல், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் மருத்துவ கல்லூரிகள் அமைத்திட முறையே 24.78 ஏக்கர், 22.68 ஏக்கர், 22.42 ஏக்கர் மற்றும் 21.42 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை.

வருவாய்த்துறை அலுவலர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கீடு

- ✶ 2018–2019ஆம் நிதியாண்டில் திருப்பூர், நாகப்பட்டினம், ஈரோடு மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் முக்கிய பிரமுகர் வருகை பயன்பாட்டிற்காக, ரூ.1,22,31,741/– செலவில் ஆறு புதிய வாகனங்களும், ஈரோடு மாவட்டம், பெருந்துறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டாட்சியர்களின் பயன்பாட்டிற்காக ரூ.12,25,000/– செலவில் இரண்டு புதிய வாகனங்களும் வாங்க நிதி ஒப்பளிப்பு.

- ✶ ரூ.1,64,03,581/– செலவில் 423 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் இணையதள வசதியுடன் கூடிய சிம்கார்டு வழங்கவும், ரூ.6,34,500/– செலவில் கணினி பயிற்சி வழங்கவும், வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக ஓராண்டு சந்தாவுடன் கூடிய இணையதள வசதியுள்ள சிம்கார்டுகள் மொத்தம் 1,863 அலுவலர்களுக்கு ரூ.67,19,676/– செலவில் வழங்கிடவும் ஆணை.

- ✶ கிராம நிருவாக அலுவலர்களுக்கு 2012ஆம் ஆண்டு வழங்கப்பட்டு தற்போது வழக்கற்ற நிலையில் உள்ள 7,787 மடிக்கணினிகளுக்கு பதிலாகவும் மற்றும் புதியதாக பணியில் சேர்ந்துள்ள 1,846 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குவதற்கும் ரூ.23.97 கோடி செலவில் 9,633 புதிய மடிக்கணினிகள் வழங்குவதற்கு நடவடிக்கை.

* 2019–2020ஆம் நிதியாண்டில் தூத்துக்குடி, விருதுநகர், திருச்சி, நாமக்கல், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் முக்கிய பிரமுகர் வருகை பயன்பாட்டிற்கு ரூ.2,32,27,416/– செலவில் 10 புதிய வாகனங்களும், திருவள்ளூர் சார் ஆட்சியர் மற்றும் வால்பாறை (கோயம்புத்தூர்), மணமேல்குடி (புதுக்கோட்டை) மற்றும் கீழ்பென்னாத்தூர் (திருவண்ணாமலை) வட்டாட்சியர்களின் பயன்பாட்டிற்காக ரூ.31,98,226/– செலவில் 5 புதிய வாகனங்களும் வாங்க நிதி ஒப்பளிப்பு.

இணையம் மூலம் பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குதல்

* தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் e-District திட்டம் செயல்பட்டு வருகிறது.

* 5 வகையான வருவாய் சான்றிதழ் சேவைகள் முறையே 1) அனைத்து வகையான சாதிச்சான்றுகள், 2) வருமானச் சான்று, 3) இருப்பிடச் சான்று, 4) முதல் தலைமுறை பட்டதாரி சான்று 5) கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான சான்றிதழ்கள் மின்னணு முறையில் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கூடுதலாக கீழ்க்கண்ட 16 சேவைகள் உள்ளிட்ட மொத்தம் 21 சேவைகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

* விவசாய வருமான சான்றிதழ், சிறு, குறு விவசாயி சான்றிதழ், கலப்புத் திருமணச் சான்றிதழ், விதவைச் சான்றிதழ், வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ், குடிபெயர்வு சான்றிதழ், இயற்கை இடர்ப்பாடுகளினால் இழந்த பள்ளி / கல்லூரி சான்றிதழ்களின் நகல் பெற சான்றிதழ், ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ், திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், வசிப்பிடச் சான்றிதழ், சொத்து மதிப்பு சான்றிதழ், அடகு பிடிப்போர் உரிமம் சான்றிதழ், கடன்கொடுப்போர் உரிமம், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ், தற்காலிக பட்டாசு உரிமம்.

* 2,15,35,063 சான்றிதழ்கள் மின்னாளுமை திட்டத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* 6ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 2,84,034 வகுப்பு, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

இ–அடங்கல்

* விவசாயிகள் விரைவாக பயன்பெறும் வகையிலும், கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை எளிமைப்படுத்திடவும், பொதுமக்கள் அடங்கலை எளிதில் பார்வையிடவும் TNeGA மூலம் அடங்கல் பதிவேடு “மின்னணு வடிவிற்கு” மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர்கள் இ–அடங்கலில் பதிவுகள் மேற்கொள்வது மட்டுமின்றி விவசாய பெருமக்களும் அவர்கள் பயிர் செய்யும் விவரத்தினை அவர்களே பதிவிடவும், அதனை கிராம நிருவாக அலுவலர்கள் உறுதி செய்திடவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இ–அடங்கல் முறையில் ஒவ்வொரு மாதமும் ஜி–அறிக்கை மூலம் பயிர்பரப்பு இறுதி செய்யப்பட்டவுடன் அடங்கல் பதிவினை பொதுமக்கள் எவ்வித கட்டணமுமின்றி பார்வையிடவும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும்.

* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.10.2018 அன்று இ–அடங்கல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இ–அடங்கல் கைப்பேசி செயலியும் (Mobile App) துவக்கி வைக்கப்பட்டது.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

* சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ், 31,37,963 பயனாளிகளுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

* 3,16,686 புதிய பயனாளிகளுக்கு (2017இல் 1,25,926 மற்றும் 2018இல் 1,50,340) மாதம் ரூ.1,000/– ஒய்வூதியமாக வழங்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

* புதியதாக, தகுதியான 5 இலட்சம் முதியோர்களுக்கு ஒய்வூதியம் வழங்க உத்தரவு.

* முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம் மூலம் சமூகப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3,98,325 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1,42,473 புதிய தகுதியான பயனாளிகளுக்கு ஒய்வூதியம்.

கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டம்

* கஜாபுயலால்பாதிக்கப்பட்டமாவட்டங்களுக்குதமிழக அரசு பல்வேறு நிதியிலிருந்து ரூ.2,480.46 கோடி

நிதியினை பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

வீடுகள் கட்டமைப்பு

- ✶ கஜா புயலினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களின் ஊரகப்பகுதிகளில் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (கிராம) திட்டத்தின் கீழ், புதிய வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 1,24,846 பட்டா உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ கஜா புயலினால் அதிக பாதிப்பிற்குள்ளான நான்கு மாவட்டங்களின் நகரப்பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்ட 10,549 பட்டா உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை

- ✶ கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலை விவசாயிகள் வாழ்வாதாரத்திற்காக தோட்டக் கலைத் துறைக்கு ரூ.149.07 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ✶ கஜா புயலினால் சேதமடைந்த தென்னை விவசாயிகள் வாழ்வாதாரத்திற்காக வேளாண்மைத் துறைக்கு ரூ.81.01 கோடி வழங்கப்பட்டது.
- ✶ மொத்தம் 35 இலட்சம் தென்னை மரக்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 23,52,408 தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

வனத்துறை

- ✶ திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், செருகளத்தூர் கிராமத்தில் மரபூங்கா அமைக்க ரூ.5 கோடி செலவில் வனத்துறையின் மூலமாக கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மீன்வளத்துறை

- ✶ கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மீனவ மக்களின் மாற்று வாழ்வாதாரத்திற்காக, ரூ.31.15 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு.

மீட்பாளர்கள் கண்டறிதல் மற்றும் குழுக்கள் அமைத்தல்

பல்துறை மண்டலக் குழுக்கள்

- ✶ வெள்ள பாதிப்பிற்குள்ளாகும் 4,399 பகுதிகளில், 5 முதல் 7 வரையிலான பகுதிகளின் தொகுப்பிற்கு பல்துறை அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு வீதம் கண்காணிப்பு பணிகளில் சிறப்பு கவனம் செலுத்திட இதுவரை 662 பல்துறை மண்டலக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பேரிடர் உதவிப் படை

- ✶ பேரிடர் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட காவல்துறையில் உள்ள ஊர்க்காவல் படையினைப் போன்று முதற்கட்டமாக கடலோர மற்றும் மலைப்பகுதிகள் அடங்கிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் (ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்பு மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம்) மூலம் பேரிடர் உதவிப் படை உருவாக்கப்பட்டுள்ளது.

முதல் நிலை மீட்பாளர்கள்

- ✶ பேரிடர்களின்போது, பொதுமக்களின் பங்களிப்பும் பெற்றிடும் வகையில் பெண் மீட்பாளர்கள் உட்பட 30,759 முதல் நிலை மீட்பாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நீச்சல் மற்றும் மரம் ஏறும் பயிற்சிகள் முன்பருவ காலங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

முதல் நிலை கால்நடை மீட்பாளர்கள்

- பேரிடர்களின்போது, கால்நடைகளை விரைவாக மீட்டு, பாதுகாப்பான இடங்களில் கட்டி வைப்பதற்காக 8,624 முதல் நிலை கால்நடை மீட்பாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

தேடல், மீட்பு, தகவல் தொடர்பு சாதனங்கள் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொள்முதல் செய்தல்

- 2017–2018ஆம் நிதியாண்டில் உயரமான ஏணிகள், வாட்டர் பவுசர், நீர் இறைப்பான்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் உட்பட தேடுதல், மீட்பு, வெளியேற்றுதல் மற்றும் தகவல்தொடர்பு உபகரணங்கள் கொள்முதல் செய்திட ரூ.23.13 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளது.

- 2018 – 2019 ஆம் நிதியாண்டில் மரம் அறுப்பான்கள், களை எடுப்பான், மீட்பு படகுகள், தீயணைப்பு மற்றும் மீட்பு வாகனம் உட்பட தேடுதல், மீட்பு, வெளியேற்றுதல் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் கொள்முதல் செய்திட ரூ.12.50 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் ரூ.6.90 கோடி மாநில நிதியிலிருந்தும் தொடர்புடைய துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வடகிழக்கு பருவமழை காலத்தினை எதிர்கொள்ளும் பொருட்டு தேடல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் மற்றும் நவீன கருவிகள் கொள்முதல் செய்திட ரூ.13.40 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ரூ.5.50 கோடி தீயணைப்பு துறைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் நிதியாண்டில் வடகிழக்கு பருவமழை காலத்தினை எதிர்கொள்ளும் பொருட்டு தேடல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் மற்றும் நவீன கருவிகள் கொள்முதல் செய்திட ரூ.7.25 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு Satellite Phone, NavIC and NAVTEX **கருவிகள் வழங்குதல்**

- பேரிடர்கள் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்திலிருந்து பெறப்படுகின்ற எச்சரிக்கை தகவல்களை, ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, ரூ.3.40 கோடி செலவில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து Satellite Phone, NavIC and NAVTEX என்ற மூன்று விதமான உயர்தொழில் நுட்ப தொலைத் தொடர்பு கருவிகள் மீன்வளத்துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்பு படை

- தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை – பேரிடர்களின் போது மீட்பு மற்றும் வெளியேற்றும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள, தற்போதுள்ள ஒரு படைப் பிரிவினை பிரத்யேக தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையாக (TNDRF) மாற்றப்பட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.15 கோடி, திறன் மேம்பாடு மற்றும் தேவையான தகவல் மற்றும் மீட்பு உபகரணங்கள் ஆகியவற்றிக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆளில்லா வானூர்தி மூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV)

- தமிழகத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு வான்வழி புகைப்படவியல் ஆய்வு ஆளில்லா வானூர்தி மூலம் மேற்கொள்ள ரூ.701.59 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் மூலம், 3,207.28 ச.கி.மி. பரப்பளவில் கடலூர், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வான்வெளி அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு (CFLOWS)

- சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பானது (CFLOWS) சென்னையில் ஏற்படக்கூடிய வெள்ள அபாய நிலையினை, மழையளவு, கடல் அலை வேகம், ஆறுகள் மற்றும் நீர் தேக்கங்களின் நீரின் அளவுகள் மற்றும் இன்னும் பிற புள்ளி விவரங்களின் அடிப்படையிலான நீரியக்க விசை சார்ந்த தொழில் நுட்பத்தின் (Hydro Dynamic Model) அடிப்படையில் கணிக்கும்.

தற்காலிக மறுசீரமைப்பு பணிகளுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதி

- வடகிழக்கு பருவமழை 2017இல் ஏற்பட்ட கூட்டமைப்புகள் தொடர்பான சேதங்களை மறுசீரமைப்பு செய்ய நெடுஞ்சாலைகள், பொதுப்பணி (நீர்வள ஆதாரம்), நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, பேரூராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளுக்கு ரூ.3,430.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

ஒகி புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்

- இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் / தலா ரூ.10 இலட்சம், காயமடைந்த மீனவர்களின் மறுவாழ்வுக்காக தலா ரூ.5 இலட்சம், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற காயமடைந்த மீனவர்களுக்கு தலா ரூ.50,000, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கான உதவித் தொகை ரூ.5,000 (தலா ஒரு குடும்பம் வீதம்), வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட காணாமல் போன மீனவ குடும்பங்களுக்கான உதவித் தொகை ரூ.5,000 (தலா ஒரு குடும்பம் வீதம்), குஜராத், மகாராஷ்ரா, இலட்சத்தீவுகளில் தஞ்சமடைந்த மீனவர்களை மீட்டு வர ஒரு படகிற்கு 1,000 லிட்டர் டீசல் படியும், உணவுப்படியாக ஒரு நபருக்கு ரூ.2,000/–, கருநாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் தஞ்சமடைந்த மீனவர்களை மீட்டு வர ஒரு படகிற்கு 700 லிட்டர் டீசல் படியும், உணவுப்படியாக ஒரு நபருக்கு ரூ.2,000/–, நாட்டுப் படகுகளில் சென்ற மீனவர்களுக்கு ஒரு படகிற்கு 200 லிட்டர் டீசல் படியும், உணவுப்படியாக ஒரு நபருக்கு ரூ.2,000/– வழங்கப்பட்டது.

- இறந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினரைச் சார்ந்த 136 நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் அரசுத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கஜா புயல் – வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

- கஜா புயலினால் உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 இலட்சம், கொடுங்காயத்திற்கு தலா ரூ.1 இலட்சம் மற்றும் சிறு காயத்திற்கு தலா ரூ.25,000.

- உயிரிழந்த பசு மற்றும் எருமை மாடுகளுக்கு இழப்பீடு தலா ரூ.30,000, காளை மாடுகளுக்கு தலா ரூ.25,000, ஆடுகளுக்கு தலா ரூ.3,000, முழுவதும் சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு ரூ.10,000, பகுதி சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு ரூ.4,100.

- முகாம்களில் தங்கியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய். முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை கூடுதலாக வழங்கப்பட்டதுடன், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்கள் சமையல் செய்யவும், விளக்கு எரிக்கவும் கூடுதலாக 4 லிட்டர் மண்ணெண்ணெய்.

- முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார நிவாரணமாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000.

- முகாம்களிலிருந்து வீடு திரும்புவோர் உடனடியாக தங்கள் அன்றாடப் பணிகளை துவக்க ஏதுவாக, துணிமணிகள், பாத்திர பண்டங்கள் ஆகியவை வாங்க குடும்பம் ஒன்றுக்கு ரூ.3,800/– ஒதுக்கீடு செய்யப்பட்டு 27 பொருட்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பு வழங்கப்படும்.

- முகாம்களில் தங்கியுள்ள பெரியோர்கள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆவின் நிறுவனம் மூலம் பால் வழங்கப்பட்டது.

- ‘‘கஜா’’ புயலினால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கான எரிபொருள் தேவையை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு கூடுதலாக எரிபொருள் வழங்கும் எண்ணத்தில், டிசம்பர் மாதத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை, நவம்பர் மாதமே சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளில் வழங்க உத்தரவிட்டார்கள்.

- நெல் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணமாக ஹெக்டேருக்கு ரூ.13,500 வழங்கப்பட்டு வருகிறது.

- கரும்பு, வாழை, காய்கறிகள் மற்றும் மலர்கள் போன்ற பாசன பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக ஹெக்டேருக்கு ரூ.13,500 வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிர்களை மறுசாகுபடி செய்ய ஆகும் செலவில் 40 முதல் 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

- சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமாக, ரூ.75,000 வரை வழங்கப்பட்டு வருகிறது.

- கரும்பு, வாழை போன்றே பலா, முந்திரி, வெற்றிலைக் கொடி மற்றும் மிளகு உள்ளிட்ட பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000 நிவாரணம்.

- சாய்ந்த முந்திரி மரங்களை வெட்டி அகற்றிட மரம் ஒன்றுக்கு ரூ.500, அதிகபட்சமாக 800 மரங்களுக்கு ரூ.4 இலட்சம்.

- முழுவதும் சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டு மரங்களுக்கு தலா ரூ.4,200, பகுதி சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டு மரங்களுக்கு தலா ரூ.20,000 வரை, பகுதி சேதமடைந்த F.R.P

படகுகள் மற்றும் வலைகளுக்கு தலா ரூ.30,000, முழுவதும் சேதமடைந்த விசைப் படகுகளுக்கு தலா ரூ.5 இலட்சம், பகுதி சேதமடைந்த விசைப் படகுகளுக்கு தலா ரூ.3 இலட்சம், வலைகள் மட்டுமே சேதம் அடைந்திருந்தால் தலா ரூ.10,000 வரை, எஞ்சின் பழுது நீக்கம் செய்ய தலா ரூ.5,000.

- கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு துறைகள் வாயிலாக ரூ.2,403.50 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 33 சதவீதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, மாநில பேரிடர் நிவாரண நிதி வரையறைகளின்படி, இடுபொருள் மானிய நிவாரணத் தொகை வழங்க, ரூ.2,247/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி, ரூ.1,867.13/– கோடி வறட்சி நிவாரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.
- தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ரூ.1.86 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.27.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.241.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2018ஆம் ஆண்டு கோடைக்கால வறட்சி எதிர்கொள்ளும் விதமாக குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்காக ரூ.50 கோடி துறை வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீரியல் வறட்சி – 2019

- தமிழகத்தில் 24 மாவட்டங்கள் மற்றும் 38 வட்டாரங்களை உள்ளடக்கிய 7 மாவட்டங்கள், நீரியல் வறட்சி பாதித்த மாவட்டங்கள் / வட்டாரங்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டு குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள ஏதுவாக ரூ.290.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்கன் படைப்புழுவினால் பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, ரூ.186,25,07,782/– இடுபொருள் நிவாரணமாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கி அரசு ஆணை.

வறட்சி தணிப்பு பணிகள்

- மாநிலத்தில் வறட்சி காலங்களின் போது ஏற்படக்கூடிய பேரிடர் அபாயங்களை தணிக்கும் பொருட்டு தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமைக்கு உதவும் பொருட்டு மாநில மற்றும் மாவட்ட வறட்சி கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் வறட்சி தொடர்பான குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்கான ஆலோசகர் சேவை, திறன் வளர்ச்சி மேம்பாடு மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.12.50 கோடியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 2017–2018ஆம் ஆண்டிற்காக ரூ.2.50 கோடியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

- பேரிடர் மேலாண்மை சட்டம் 2005இன் படி வறட்சி தொடர்பான தொடர் கண்காணிப்பு நடவடிக்கை பொருட்டு தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமைக்கு உதவும் வகையில் மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் உருவாகப்பட்டுள்ளது.
- இம்மையமானது இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் முன்கணிப்பு மையம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை வளர்ப்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் மின்சாரத்துறை ஆகியவற்றின் உதவியுடன் வறட்சி தொடர்பான திட்டங்களுக்கான உள்ளீடுகளை பெற்று அதன் மூலம் மேற்கொள்ளப்படும் வறட்சி தொடர்பான அறிவியல் மதிப்பீடு மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளும்.

மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

- மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையமானது மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு செயல்படும். வறட்சி தொடர்பான தொடர் கண்காணிப்பு நடவடிக்கை பொருட்டு இவ்வமைப்பானது மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமைக்கு உதவும்.

நீண்ட கால வறட்சி தணிப்பு நடவடிக்கைகள்

- ✶ நீண்ட கால வறட்சி தணிப்பு நடவடிக்கையாகவும், விவசாய நிலங்களின் வளத்தை செழிப்படைய செய்வதற்காகவும் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959இல் திருத்தம் செய்யப்பட்டு, நீர்தேக்கம், அணை, ஏரி, குளங்கள் போன்றவற்றில் உள்ள வண்டல் மண்ணை தூர்வார அனுமதி அளிப்பதற்கான ஒரு உன்னதமான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் நிலங்களின் வளத்தை மேம்படுத்தவும் மற்றும் மகசூலை பெருக்கவும், வண்டல் மண் மற்றும் சவுடு ஆகியவற்றை இலவசமாக பெற மாவட்ட மற்றும் வட்ட நிருவாகம் அனுமதி வழங்குகின்றது.
- ✶ 32,592 நீர் தேக்கங்கள் / ஏரிகளில் இருந்து 7.51 கோடி கன மீட்டர் அளவில் வண்டல் மண் எடுக்கப்பட்டு 15.09.2019 அன்றைய நிலவரப்படி 6,68,039 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இதர பணிகள்

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018–2030

- ✶ கடந்த மார்ச் 18, 2015 ஜப்பான் நாட்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மூன்றாம் உலக மாநாட்டினை தொடர்ந்து பேரிடர் அபாயக்குறைப்பிற்கான சென்டாய் கட்டமைப்பினை (2015–2030) ஒருங்கிணைத்து இந்திய அரசாங்கம் கடந்த மே 2016இல் தேசிய பேரிடர் மேலாண்மை திட்டத்தினை உருவாக்கியது. சென்டாய் கட்டமைப்பானது, 2015 பின்னெடுக்கப்பட்ட முதல் உலகளாவிய வளர்ச்சித் திட்ட ஒப்பந்தம் ஆகும்.
- ✶ தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018–2030 ஆனது சென்டாய் கட்டமைப்பின்படி தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

திறன் மேம்பாடு

- ✶ பேரிடர் மீட்பு, நிவாரண மற்றும் மறுவாழ்வு ஆகிய செயல்களில் ஈடுபடும் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் திறன் மேம்பாடு அளித்திட ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து, மாதிரி ஒத்திகைகள், கருத்தரங்கள், பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ✶ தமிழக அரசுப் பணியாளர்களின் திறனையும், தொழில்நுட்பத் திறனையும் மேம்படுத்தும் வகையில் நீண்டகால அளவில் பயிற்சி அளித்திட தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ✶ அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையத்துடன் இணைந்து "வெள்ள அபாய முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சியினை 25.09.2018 முதல் 27.09.2018 வரையும் மேலும் "வடகிழக்கு பருவம் 2018 முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சியினை 25.10.2018 முதல் 27.10.2018 வரையும் சென்னை

அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது.

காணொலி காட்சிகள் நிறுவுதல்

✶ பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை கண்காணித்து, துரிதப்படுத்தவும், உயிர் மற்றும் பொருட்சேதங்களை தடுக்கவும், 'எல்காட்' மூலமாக சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் ரூ.1.93 கோடி செலவில் காணொலி காட்சி நிறுவப்பட்டுள்ளது.

புவிசார் தகவல் மையம்

✶ புவிசார் தகவல் மையானது, தேசிய அவசர மேலாண்மை தரவுகள் (NDEM) வழியில் மாநில அவசர மேலாண்மை தரவுகளை (SDEM) உருவாக்கிட வழிவகுக்கும். இம்மைய செயல்பாடானது, தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம், அண்ணா பல்கலைக்கழகம், தொலை உணர்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம் பயிற்சி மையம் மற்றும் இந்திய தொழில்நுட்பக்கழகம், மெட்ராஸ் ஆகிய தொழில்நுட்ப அமைப்புகளுடன் கூட்டு உடன்படிக்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சி (HADR) 2019

✶ மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் வருடாந்திர பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சியை நடத்த முப்படைகளுக்கு உத்திரவிட்டதை தொடர்ந்து, இந்திய கடற்படை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தோடு இணைந்து காஞ்சிபுரம் தவிர்த்து கடலோர மாவட்டங்களில் சூறாவளி மற்றும் நகர்புற வெள்ளம் தொடர்பான பயிற்சி நடத்தபட்டது.

✶ தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், இராணுவம், கடற்படை, விமான படை, கடலோர காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்பு படை, காவல்துறை, மீன்வளத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இந்த பயிற்சியில் கலந்து கொண்டுள்ளன.

ஆப்த மித்ரா– சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சி திட்டம்

✶ தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தேசிய அளவில் வெள்ளத்தினால் மிகக் கடுமையாக பாதிப்பிற்குள்ளாகும் 30 மாவட்டங்களில் தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்க மத்திய நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தில் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் கண்டறியப்பட்டது. இத்திட்டத்தின்படி, 200 தன்னார்வலர்களுக்கு ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக 100 தன்னார்வலர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கான சுருக்கப்பட்ட பயிற்சி

✶ மாநில பேரிடர் மீட்பு நிதியிலிருந்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறைக்கு ரூ.15 இலட்சம் சிறப்பு நிதியாக பின்வரும் பல்வேறு மீட்பு நடவடிக்கைகளுக்காக, தமிழ் நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு சுருக்கப்பட்ட பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது.

வெகுஜன விழிப்புணர்வு பிரச்சாரங்கள்

✶ 5 மாவட்டங்களில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. மனிதர்கள் மற்றும் இயற்கையால் ஏற்படும் பேரழிவுகளைத் தடுப்பது மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், குறிப்பாக நீர்நிலைகள் ஆறுகள், வனப்பகுதியில் உள்ள ஓடைகள், நீர்வீழ்ச்சி, கைவிடப்பட்ட ஆழ்துளை கிணறுகள், கால்வாய்கள், குளங்கள், ஏரிகள் மற்றும் வடிகால்கள் தொடர்பான விபத்துகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டது.

நீர்நிலைகளில் ஏற்படும் பேரிடர் மேலாண்மை நடைமுறைகள் குறித்து ஜம்முவில் மாநாடு

✶ "ஒரே இந்தியா சிறந்த இந்தியா" என்ற தலைப்பில் 'நீர்நிலைகளால் ஏற்படும் பேரழிவு மேலாண்மை' நடவடிக்கைகள் குறித்து இம்மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாடு அவசர கால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்ட செயலி

✶ பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் தாக்கத்தை அளவிட்டு அதனடிப்படையில் அவசர கால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்டம் (TN-SMART) ஓராண்டு காலத்தில் வருவாய் நிருவாக ஆணையரகம் மற்றும் ஆப்பிரிக்க மற்றும் ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்புடன் (RIMES) இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது ஒரு சாதனையாகும்.

* பேரிடர் ஆபத்தை குறைக்க தேவையான முன்னறிவிப்பு, கைப்பேசி மென்பொருள்களின் மூலம் தனிப்பட்ட எச்சரிக்கை, பொதுமக்களின் புகார்கள் பதிவு மற்றும் கண்காணிப்பு போன்றவை இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும் இத்திட்டம் அபாய முன்னறிவிப்பை கொண்டு சாத்தியமான அபாயங்களான வெள்ளம், புயல் மற்றும் சுனாமி ஆகியவற்றை மதிப்பீடு செய்து. சிறந்த முன்னேற்பாடுகளை மேற்கொண்டு பேரிடர் ஆபத்தை குறைக்க வழிகாட்டும் வரக்கூடிய ஆபத்தினை கணித்து, களநிலை அலுவலர்களை கைபேசி மென்பொருள் மூலம் எச்சரிக்கை செய்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி அதன் மூலம் அபாயத்தின் தாக்கத்தை குறைக்க உதவும் இந்த கைப்பேசி மென்பொருள் தனிப்பட்ட எச்சரிக்கை அமைப்பு கொண்டது. இதன் மூலம் கைபேசி அமைதியான நிலையில் இருந்தாலும் எச்சரிக்கை அறிவிப்பு, பயனர் அளிக்கக்கூடும். மேலும் இந்த எச்சரிக்கை அறிவிப்பு, பயனர் அதனை கண்டவுடன் தான் ஓயும். இதன்மூலம் சுனாமி போன்ற உயிரை அச்சுறுத்தும் பேரிடர்களிலிருந்து உயிரிழப்பைக் குறைக்க உறுதி செய்யும். இந்த கைபேசி மென்பொருள் மூலம் அளிக்கப்பட்ட புகார்களை பதிவுசெய்து பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகுந்த நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கண்காணிக்க உதவும்.

கடலோர பேரிடர் அபாயக் குறைப்பு திட்டம்

* உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசு ரூ.1,549.27 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் :

பல்வேறு பேரிடர்களை தாங்கக்கூடிய வீடுகள்

* 488 கடலோர கிராமங்களில் பேரிடரை தாங்கக்கூடிய 14,347 வீடுகள் ரூ.310 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

பல்நோக்குப் பாதுகாப்பு மையங்கள்

* கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள், ரூ.331.03 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மீன்வள உட்கட்டமைப்புகள் மற்றும் நிலைத்த வாழ்வாதாரம்

* நீடித்த மீன்வளத் திட்டத்தின் கீழ், ரூ.210.30 கோடி செலவில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு மீன்பிடி துறைமுககங்களை மறுசீரமைப்பு செய்தல், நவீனப்படுத்துதல், ஆற்று முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 17,539 எண்ணிக்கையிலான VHF கடல்சார் கையடக்க வானொலிகள் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதோடு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான பல்வேறு மீன்வள மேலாண்மை திட்டங்கள் ரூ.107.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பேரிடர் அபாய மேலாண்மை குறித்த பள்ளி மாணவர்களுக்கான திறன் மேம்பாடு

* பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையேயும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 7 முதல் 12ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத்திட்டங்களிலும் ரூ.2.50 கோடி செலவில் பேரிடர் மேலாண்மை குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை திட்டம்

* தமிழக கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பேரிடர் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை பயிற்சி மொத்தம் 5,892 குழுக்கள் அடங்கிய 3,34,457 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை கருவிகள்

* பேரிடர்கள் வருவதை முன்கூட்டியே அறிந்து கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு பேரிடர் குறித்து தகவல்களை விரைவாக வழங்கும் பொருட்டு ரூ.50 கோடி செலவில் 450 இடங்களில் முன்னெச்சரிக்கை கருவி (EWS) அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன

தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல்

* வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகராட்சிகளில் மின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை

தவிர்க்கும் விதமாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புகளை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றும் பணி ரூ.406.83 கோடி செலவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நில நிருவாக ஆணையம்

இலவச வீட்டுமனை

- ✶ வீடற்ற ஏழை மக்களுக்கு அரசு இலவச வீட்டுமனைகளை வழங்கி வருகிறது. கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனை ஒப்படை அரசால் வழங்கப்படுகிறது. அம்மக்களின் தேவைக்கு போதுமானதாக கிராம நத்தம் நிலங்கள் இல்லாதபோது, ஆட்சேபகரமற்ற இதர அரசுப் புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்ய, வருவாய்க் கோட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுதியுள்ள வீடில்லா ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.
- ✶ 16.02.2017 முதல் 10.01.2020 வரையிலான காலத்தில் 7,70,468 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இணையதள வழியிலான பட்டா மாறுதல்

- ✶ பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொதுமக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக, இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறை உருவாக்கப்பட்டது.
- ✶ வட்ட அலுவலர்களால், பட்டா மாறுதல் கோரும் மனு மீது work-flow based system–இன்கீழ் இணையதள வழியாகத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- ✶ பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (sms) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி, மனுதாரர் சிட்டா நகலையும், ‘‘அ’’ பதிவேடு நகலையும் ‘‘எந்நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமாயினும்’’ (“anytime anywhere”) https://eservices.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி எடுக்கப்படும் நகல்களில், இணைய வழி கையொப்பம் மற்றும் சிறப்பு குறியீடு (“Quick Response” – QR Code) இணைக்கப்பட்டு, இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன.
- ✶ இத்திட்டமானது, மாநிலத்தில் 310 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 32,25,340 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 12.02.2018 முதல் ஊரகப் பகுதி நிலப்பதிவேடுகள் பதிவுத்துறையின் STAR 2.0 மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அதனால் பதிவுத் துறையில் அசையா சொத்துக்களுக்கான பத்திரப்பதிவு மேற்கொண்டவுடன் இணையவழி பட்டா மாறுதல் விண்ணப்பம் தமிழ் நிலம் வலைதளத்திற்கு நேரிடையாக மாற்றப்பட்டு பட்டா மாறுதல் மேற்கொள்ளப்படுகிறது.
- ✶ இத்திட்டமானது, “best e-Governance Scheme” என்ற சான்றிதழை Confederation of Indian Industries – Connect Event of 2017 என்ற அமைப்பிடமிருந்து பெற்றுள்ளது.

நில மாற்றம்

- ✶ 1,036 ஏக்கர் அரசு நிலங்கள், பள்ளிக் கல்வி, உயர் கல்வி, சட்டம், நீதி, போக்குவரத்து, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப்பணி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வருமான வரி, வணிக வரி, வருவாய், சமூக நலம், மீன் வளம், இராணுவம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கு 138 இனங்களில் நில மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நில உரிமை மாற்றம்

- ✶ தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், கழிவுநீர் அகற்றல் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவைகளின் செயல்பாடுகளுக்கு, நிலக்கிரையமின்றி இலவசமாகவே சிறப்பு நேர்வாக அரசால் நில உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்றே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு, வீடற்ற மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டவும், நிலங்கள் அரசால், இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

* மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட 196 இனங்களில் 3,153 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள், பொது நோக்கங்களுக்காக, நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தம்

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

* இத்திட்டத்தின் கீழ், 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர்.
* விவசாய உறுப்பினரது இயற்கை மரணத்திற்காக வழங்கப்படும் நிவாரணம் ரூ.10,000/– நலிந்தோர் நலத்திட்டத்தில் வழங்கப்படும் நிவாரணத்திற்கு இணையாக ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
* 1,47,00,974 நபர்கள் உறுப்பினர்களாகவும் 1,35,72,162 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்த உறுப்பினர்களாகவும் மொத்தம் 2,82,73,131 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.
* 16.02.2017 முதல் 10.01.2020 வரையில் 8,76,095 பயனாளிகளுக்கு ரூ.676.44 கோடி வழங்கப்பட்டுள்ளது.
* நடப்பு நிதியாண்டில் (2019–2020) அரசால் வழங்கப்பட்ட ரூ.169.82 கோடி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.156.92 கோடி 1,70,698 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் நீதிமன்றம்

* பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.
* 01.02.2017 அன்று 4,951 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 01.02.2017 முதல் 30.11.2019 வரை 11,900 வழக்குகள் வரப்பெற்று மொத்தம் நிலுவையில் உள்ள 16,575 வழக்குகளில் 01.02.2017 முதல் 31.12.2019 வரை 14,563 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 01.12.2019 அன்று 2,288 வழக்குகள் மாவட்டத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

மிகை நிலம் அறிவிப்பு

* தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 மற்றும் திருத்தச் சட்டத்தின் கீழ், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் 196 ஏக்கர் நிலம் மிகை நிலமாக அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரி திட்டம் பதிவேடுகள் துறை

பொதுமக்களுக்கு உடனுக்குடன் பட்டா வழங்குவதற்காக இணையவழி பட்டா மாறுதல் திட்டம்

- இத்திட்டத்தின் கீழ், 305 வட்டங்களில் 10.01.2020 வரை 303 வட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற / நகர்ப்புற நிலஆவணங்கள் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், 124 நகரங்களில் 92 நகரங்களும், 12 மாநரகரங்களிலும் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக 11,50,851 உட்பிரிவு பட்டாக்களும், 29,85,708 உட்பிரிவு அல்லாத பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

- 150 இளநிலை உதவியாளர்கள், 530 நில அளவர்கள், 488 வரைவாளர்கள், 5 சுருக்கெழுத்து தட்டச்சர்களும், 29 தட்டச்சர்களும், 6 அலுவலக உதவியாளர்கள், 4 புல உதவியாளர்கள் ஆகியோர் அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் என மொத்தம் 1,212 நபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நிலஅளவர் / வரைவாளர்களுக்கு நவீன நிலஅளவைப் பயிற்சி

- நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றை கையாள்வதற்கு சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள சி–ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 2,553 நபர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும், புத்தாக்க பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

நில ஆவணங்களை கணினிமயமாக்குதல்

- அனைத்து வகை நிலஆவணங்களையும் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக கணினிப்படுத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 100 சதவிகிதம் நத்தம் நிலஆவணங்களும், 100 சதவிகிதம் நகர்ப்புற நிலஆவணங்களும், 99 சதவிகிதம் புலப்படங்களும் ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்டுள்ளன. 99 சதவிகிதம் கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்கள் இணைய வழியில் கொண்டுவரப்பட்டுள்ளன.

- நகர்ப்புறத்தை பொறுத்தவரையில் 12 மாநகராட்சிகள் மற்றும் 92 நகரங்களின் நிலஆவணங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இணையவழியில் கொண்டுவரப்பட்டுள்ளன.

நகர்ப்புற நில ஆவணங்களை கணினிமயமாக்குதல்

- நகர்ப்புற நில ஆவணங்களை கணினிமயமாக்கும் பணியினை செயல்படுத்தி 37.87 இலட்சம் நில ஆவணங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைத்து வட்டங்களின் நகர ஆவணங்கள் இணைய வழியில் கொண்டுவரப்பட்டுள்ளன.

- பொதுமக்களிடமிருந்து நகர்ப்புறங்களில் 1,32,172 பட்டா மாறுதல் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களில் 80,388 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரப்பதிவுத்துறை மென்பொருளுடன் நிலஅளவைத்துறை தரவுதளத்தை ஒருங்கிணைத்தல்

- ஆவணப்பதிவு செய்யப்பட்டவுடன் அதன் விவரங்களை இணைய வழியில் அனுப்பி பட்டா மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக, பதிவுத்துறையின் மென்பொருளும் (STAR 2.0) கிராமப்புறநில ஆவணங்களுக்கான மென்பொருளும் (Tamil Nilam), 12.02.2018 முதல் இணையவழியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

- இந்நடைமுறை செயல்பாட்டிற்கு வந்தது முதல், இதுவரை 6.61 இலட்சம் பட்டாக்கள் நில உரிமைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை குறிப்பிட்ட அலுவலகங்களுக்கு கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல்

- சென்னை மத்திய நிலஅளவை அலுவலகம், 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் 32 மாவட்ட நிலஅளவை அலுவலகங்களை மேம்படுத்தும் வகையில் 2018–2019ஆம் நிதியாண்டில் மத்திய நிலஅளவை அலுவலகத்திற்கு ரூ.0.59 கோடி செலவிலும், மண்டல மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ.1.60 கோடி செலவிலும் கணினி, தடையற்ற மின்சாரம் வழங்கும் கருவிகள் (UPS) மற்றும் மின்கலன்கள் (Battery) மற்றும் அச்சுப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன.

நவீன கருவிகளின் மூலம் மறுநில அளவைப்பணி

- நவீன நிலஅளவை கருவிகளான வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி (DGPS) மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி (ETS

ஆகியவற்றைக் கொண்டு மறுநில அளவைப் பணி 3 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. 5 மாவட்டங்களில் நில அளவைப் பணி முடிவுற்றன. 2 மாவட்டங்களில் நகர நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ நத்தம் நிலவரித்திட்டப் பணியின் கீழ், 2,897 பட்டாக்களும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணியின் கீழ், 6,05,000 பட்டாக்களும் வழங்கப்பட்டன.

நகர்ப்புற நிலஉச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரி

✶ தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் ரூ.25.76 கோடி நகர்ப்புற நிலவரித் தொகை வசூல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

✶ 'அறியாக் கிரயம் பெற்றோர்' திட்டத்தின் கீழ், வரன்முறை செய்ய அரசால் இசைவளிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை 707; வரன்முறை செய்ய இசைவளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு 1,88,467.4 சதுர மீட்டர்.

✶ இத்திட்டத்தின் கீழ் ரூ.9,97,00,995/– நில மதிப்புத் தொகையாக அறியாமல் கிரயம் பெற்ற மனுதாரர்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக ஐந்து சுருக்கெழுத்துத் தட்டச்சர் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன; கருணை அடிப்படையில் மூன்று இளநிலை உதவியாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி உதவியாளர் நிலையில் தெரிவு செய்யப்பட்ட 41 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

✶ இத்துறை சார்ந்த பணிகளைச் செய்வதற்கு ஏதுவாக 2018–2019ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்திடமிருந்து 10 நவீன கணினிகள் வாங்குவதற்கு ரூ.6,05,690/– ஒதுக்கீடு.

✶ 2018–2019ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்திடமிருந்து நவீன 20 அச்சுப் பொறிகள் வாங்குவதற்கு ரூ.2,86,032/– ஒதுக்கீடு.

✶ மதுரை (நகர்ப்புற நிலவரி) உதவி ஆணையர் அலுவலக உபயோகத்திற்கு அறைகலன்கள் கொள்முதல் செய்ய ஏதுவாக ரூ.3,30,592/– ஒதுக்கீடு.

✶ மதுரை, திருச்சி (நகர்ப்புற நிலவரி) உதவி ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோவை (நகர்ப்புற நிலவரி) தனி வட்டாட்சியர் அலுவலக உபயோகத்திற்கு 6 நவீன கணினிகள் மற்றும் 3 நவீன அச்சுப் பொறிகள் தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்திடமிருந்து வாங்குவதற்கு 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.3,59,233/– ஒதுக்கீடு.

❖ ❖ ❖

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

- ✶ முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ், 80,000 வீடுகள் ரூ.1,680 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டத்தின் (ஊரகம்) மூலம் 5,27,552 வீடுகள் ரூ.8,968.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

- ✶ "அரசு திட்டங்களின் கீழ், கட்டப்பட்ட வீடுகள் பராமரித்தல்" என்ற புதியத் திட்டத்தின் கீழ், ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் 45,594 வீடுகளில் பழுது பார்க்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 19,180 கி.மீ. நீளமுள்ள 11,016 சாலைப் பணிகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

- ✶ நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ், 2,060 கி.மீ. நீளமுள்ள 1,096 ஊரகச் சாலைகள் மற்றும் 191 பாலங்கள் ரூ.812.68 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

- ✶ ரூ.1,209 கோடி மதிப்பீட்டில் ஒரு கி.மீ. நீளத்திற்கு குறைவாக உள்ள 5,067 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ ஊராட்சி ஒன்றியங்களுக்கான மாநில நிதிக் குழு மானிய பகிர்வு தொகை மற்றும் 14ஆவது மத்திய நிதிக் குழு மானியத்தின் கீழ், 3,174 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் ரூ.717 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ், 3,947 கி.மீ. நீளமுள்ள 1,340 சாலைகள் மற்றும் 61 பாலங்கள் ரூ.2,066 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெறுகின்றன.

- ✶ பிரதம மந்திரி கிராம சாலைத்திட்டத்தை 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசு ரூ.100.90 கோடியை ஊக்க நிதியாக மாநில சாலைகளின் காலமுறை பராமரிப்பு பணிகளுக்காக விடுவித்துள்ளது. இப்பணிகளுக்கு மாநில அரசின் பங்குத் தொகை ரூ.67.26 கோடியுடன் மொத்தத்தில் ரூ.168.16 கோடி மதிப்பீட்டில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தில் காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், 77.25 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு அதற்காக ரூ.14,245.15 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் – குடிமராமத்து திட்டத்தின் கீழ், 2019–2020ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள

நீர் நிலைகளை எந்திரங்கள் மூலம் தூர்வாரவும், கரைகளை பலப்படுத்தவும் மாநில அரசு நிதி ரூ.500 கோடியும், அவற்றில் கட்டுமான பணிகளை மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியாக ரூ.750 கோடியும் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள், மாநிலத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளில் ரூ.206.04 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் மொத்தம் 66,025 “தூய்மைக் காவலர்கள்” மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன அமைப்பு :

* தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில், மக்கள் நிலை ஆய்வு பட்டியலிலுள்ள விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. மொத்தத்தில் 32,238 குழுக்கள் புதுப்பிக்கப்பட்டும், புதிய சுய உதவிக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டும் உள்ளன.

* மூன்று மாதம் முடிவு பெற்று தர மதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.15,000/– வீதம் நிதி வழங்கப்படுகிறது. தகுதியான 24,139 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக குழு ஒன்றிற்கு ரூ.15,000/– வீதம் மொத்தம் ரூ.3620.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும், 59,746 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. 29,873 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

* மக்கள் நிலை ஆய்வின்போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக, 5,839 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சங்கம் ஒன்றிற்கு ரூ.25,000/– வீதம் மொத்தம் ரூ.4,145 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

திறன் வளர்ப்பு – 2017–2019 :

* 11,690 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.235.78 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* 14,820 சமுதாய சுய உதவிக் குழு பயிற்சியாளர்களுக்கு, ரூ.70.98 இலட்சம் செலவினம் மேற்கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* 14,820 சமுதாய சுய உதவிக்குழு பயிற்சியாளர்களுக்கு ரூ.1,742.90 இலட்சம் மதிப்பூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

* கிராம வறுமை ஒழிப்புச்சங்க உறுப்பினர்களுக்கு, ரூ.53.67 இலட்சம் செலவினம் மேற்கொண்டு 12,734 உறுப்பினர்களுக்கு, புத்தக பராமரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலிமைப்படுத்த ரூ.200.81 இலட்சம் செலவினம் மேற்கொண்டு 12,286 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், 14,998 நபர்களுக்கு ரூ.10.52 கோடி மதிப்பீட்டில் வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதற்கான நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நிதி உள்ளாக்கம் :

* வங்கிகள் மூலம் 8,05,548 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், 108 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் கடன் இணைப்பு, மற்றும் பெருங்கடனாக ரூ.29,427.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* 1,48,352 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 2,077.25 இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு

* தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (ஆஜிவிக்கா திறன் பயிற்சி திட்டம்)

திட்டத்தின் மூலம் 18 முதல் 35 வயது வரை உள்ள 9,063 கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு ரூ.90.64 கோடி செலவில் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு, ஊதியம் ஈட்டும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பு முகாம் 2017–2019

* 888 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ.7.70 கோடி செலவில் நடத்தப்பட்டு 74,394 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தீன்தயாள் அந்தியோதய யோஜனா (DAY NULM)

* நகர்ப்புறங்களில் 42,347 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
* 30,662 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30.66 கோடி ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது.
* 1,023 பகுதி மற்றும் 45 நகர் அளவிலான கூட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
* 535 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதி ரூ.2.76 கோடி வழங்கப்பட்டுள்ளது.
* சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 28,922 தனி நபர்கள் ரூ.168.21 கோடி உதவி பெற்றுள்ளனர்.
* சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP–I)ன்கீழ், 229 தெருவோர வியாபாரிகள் ரூ.90 இலட்சம் உதவி பெற்றுள்ளனர்.
* சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 19,482 குழுக்கள் ரூ.577.75 கோடி உதவி பெற்றுள்ளன.
* சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 69 ஒத்த தொழிலார்வ குழுக்கள் (CIG) ரூ.58.20 இலட்சம் உதவி பெற்றுள்ளன.
* நகர்ப்புறங்களில் செயல்படும் 27,100 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1,056 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
* EST&P (திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்)–ன் மூலம் 22,083 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

வாழ்வாதாரம்

* அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் 2017–2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.394.65 கோடி மானிய உதவியுடன் 1,70,025 பயனாளிகளுக்கு இருசக்கர வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக

நடப்பு 2019–2020 ஆண்டிற்கு மேலும் 1 இலட்சம் பயனாளிகள் இலக்குடன் ரூ.252.50 கோடி மதிப்பீட்டில் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ✶ தேசிய ஊரக வாழ்வாதார திட்ட ஆண்டு செயல் திட்டத்தின் கீழ், 2016–2017ஆம் ஆண்டு முதல் 4 கட்டங்களாக பண்ணை மற்றும் பண்ணைச் சாரா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை செயல்படுத்த ரூ.168.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.39.66 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், முதல் கட்டமாக முறையே காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, 16,800 பெண் விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர். இதற்காக ரூ.11.99 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்துதல் :

- ✶ 2017–2018 முதல் 2019–2020 வரை கடந்த மூன்று வருடங்களில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இதுவரை மாநில அளவில் 5 விற்பனைக் கண்காட்சிகள், மாவட்ட அளவில் 68 கண்காட்சிகள், 192 கல்லூரி சந்தைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், திருச்சி, வேலூர், சேலம், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெற்ற 5 மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சிகள் மற்றும் பிற மாநிலங்களில் நடைபெற்ற 23 சாராஸ் கண்காட்சிகள் ஆகியவற்றின் மூலம் மொத்தம் ரூ.1,275.25 இலட்சம் மதிப்பிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு, இதன் மூலம் 8,618 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளனர்.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

- ✶ மீன் வியாபாரம் செய்யும் ஏழை மகளிருக்கு நிதி உள்ளீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அந்த மகளிரை ஒருங்கிணைத்து கூட்டுப் பொறுப்பு குழுக்களாக உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்தும் வகையில், நிதி நிறுவனங்கள் மூலம் கடன் இணைப்பு ஏற்படுத்தி வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது. இம்முயற்சிக்கு “நிதி உள்ளீடு” பிரிவின் கீழ் ஸ்கோச் (SKOCH) தேசிய விருது கிடைத்துள்ளது.

- புதிய முயற்சியாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வியாபார மேம்பாட்டு முகவர்களாக அறிமுகப்படுத்தப்பட்டு, நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் வழங்கும் போதும் மற்றும் கடன் திருப்பம் செய்யும் போதும் அவர்களுக்கு 2 சதவிகிதம் தரகு தொகை வழங்கப்படுகின்றது. இதன் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிலைத்த தன்மையை பெற்று தொடர்ந்து பயனடைய வழிவகுக்கும். இம்முயற்சிக்கு, ஸ்கோச் (SKOCH) தேசிய விருது கிடைத்துள்ளது.

- மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கடலுக்கடியில் 12 செயற்கை பவளப் பாறைகள் ரூ.222 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

- 4,124 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16,603.73 இலட்சம் வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத்தரப்பட்டது.

- 2,527 கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் உள்ள 12,550 பயனாளிகளுக்கு ரூ.5,151.78 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

- துயர் குறைப்பு நிதியாக 10,334 பயனாளிகளுக்கு ரூ.728.79 இலட்சம் மென் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- 10,367 பயனாளிகள் சமுதாய பரிமாற்றுப் பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

- 15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

- 46 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அதில் 2,052 மீனவர்கள் ரூ.722.55 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மேலும், மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு திட்டத்தில் 10,044 மீன்பிடி படகுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

- ரூ.132.80 இலட்சம் மதிப்பீட்டில் 16 மீன் விற்பனை சங்கங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

- ரூ.1,130.90 இலட்சம் மதிப்பீட்டில் 99 மீன் வலை பின்னும் தளங்களும், 23 மீன் உலர் களங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

- திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ரூ.32 இலட்சம் செலவில் மூன்று குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- 2,566 மகளிர் மீன் வியாபாரிகளை இணைத்து 542 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பிணையில்லாக் கடனாக ரூ.384.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

- தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் 3,994 கிராம ஊராட்சிகளில் ரூ.918.20 கோடி நிதி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ், பல்வேறு பணிகளில் நியமனம் செய்ய 31.10.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 525 நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில் செயல்படுத்தவும் மேற்பார்வையிடவும் 24 மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- புதியதாக பணியில் அமர்த்தப்பட்ட திட்ட பணியாளர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

- மாவட்டத்தில் ஊரகத் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, பல்வேறு உற்பத்தி பொருட்களையும் மற்றும் தொழில் வாய்ப்புகளையும் கண்டறிய மாவட்ட பகுப்பாய்வு (District Diagnostic Study) மேற்கொள்ளப்பட்டு 26 மாவட்டங்களிலும் பகுப்பாய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

- ✶ மூன்று ஆண்டுகளில் 250 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 202 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன மற்றும் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில், முதன் முறையாக, மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம் 32 பள்ளிகள் எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ளடக்கிய மாதிரி பள்ளிகளாக மாற்றப்பட்டு அப்பள்ளிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.16 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, கூடுதலாக கல்வி மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் 88 மாதிரி பள்ளிகள் உருவாக்கிட 2019–2020ஆம் ஆண்டில் ரூ.17.60 கோடி செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✶ 2018–2019ஆம் ஆண்டில் மாணவர்களின் சுயவிபரங்களை எளிதில் அறியக் கூடிய வகையில் திறன் அட்டைகள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 66.45 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.12.70 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.1.17 கோடி செலவில் திறன் அட்டைகள் ஆசிரியர்களுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✶ பள்ளி மாணவர்களின் நலன் கருதி 2,448 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பின்னூட்ட பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ரூ.48.96 கோடி செலவில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✶ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் மாணவர்களின் படைப்பாற்றல் திறனைத் தூண்டும் விதமாக 267 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் "அடல் டிங்கரிங்" ஆய்வகங்கள் ரூ.49.97 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✶ மாணவர்களின் சந்தேகங்களுக்கு எளிதில் விளக்கம் பெறவும், விரைவான குறைதீர்வுக்கான புகார் செய்திடவும் கட்டணமில்லா தொலைபேசி எண் 14417 ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூறாவது பிறந்தநாள் நினைவை போற்றும் வகையில் பள்ளிக்கல்வி இயக்கக வளாகத்தில் ரூ.39.90 கோடி செலவில் "புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு கட்டடம்" என்ற பெயரில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது.
- ✶ இந்திய அளவில் நடைபெறும் அனைத்து வகையான போட்டித் தேர்வுகளில் பங்குகொள்ளும் மாணாக்கர்களை தயார்படுத்தும் பொருட்டு 413 மையங்களில் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
- ✶ மாணவர்களின் நலனுக்காக முதற்கட்டமாக அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருகைப் பதிவிற்கு தொட்டுணர் கருவி (Bio-Metric) முறை முதற்கட்டமாக ரூ.9 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

* பள்ளி மற்றும் மாணவர்களின் முழுமையான கல்வி வளர்ச்சிக்கு சிறப்பாக செயல்படும் பள்ளிகளுக்கு "புதுமைப் பள்ளி" விருது வழங்கப்பட்டு வருகிறது.

* அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று கல்வி மற்றும் பாட இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்துவதற்கு, 'பெருந்தலைவர் காமராசர்' விருது ஏற்படுத்தப்பட்டு 10ஆம் வகுப்பு மாணக்கர்களுக்கு ரூ.10,000/– மற்றும் 12ஆம் வகுப்பு மாணக்கர்களுக்கு ரூ.20,000/– ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

* சிறந்த நூலகர்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருதின் பரிசுத்தொகை ரூ.2,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* மாணவர் சேர்க்கை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் பயனடையும் வகையிலும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டயாக் கல்வி உரிமை சட்டத்தில் 25% இட ஒதுக்கீட்டின் கீழ், மாணவர் சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2017–2018 முதல் 2019–2020 வரை இத்திட்டத்தின் கீழ், 2,27,987 குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். மேலும், 2017–2018ஆம் ஆண்டில் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கான தொகை ரூ.248.76 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

* பொதுத் தேர்வு முடிவுகளை தேர்வர்களுக்கு உடனடியாக அலைபேசி வாயிலாக குறுஞ்செய்திகளாக அனுப்பப்படுகின்றன.

* 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும் மாநில அளவில் பொதுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 2019–2020ஆம் ஆண்டு முதல் 5 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பொதுத் தேர்வு நடத்தப்பட உள்ளது.

* மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் விதமாக பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மொழிப்பாடம் தாள்–I, II மற்றும் ஆங்கில மொழிப்பாடம் தாள்–I, II என இருந்ததை ஒருங்கிணைத்து தமிழ்மொழி மற்றும் ஆங்கிலம் மொழித்தாள் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

* பள்ளி, ஒன்றியம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தி மிகப்பெரிய அளவில் மாணவர் "கலைத்திருவிழா" நடத்தப்பட்டுள்ளன. இதுவரை கலைத்திருவிழா நடத்துவதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* மாணவியர்கள் பயிலும் 3,334 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவியர் நலனுக்காக ரூ.11.88 கோடி செலவில் 4,161 நேப்கின் இயந்திரம் மற்றும் எரியூட்டி இயந்திரம் பள்ளிகளில் பொருத்தப்பட்டுள்ளது.

* இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கு தொழிற்கல்வி திட்டம் ரூ.3.55 கோடி செலவில் 67 பள்ளிகளில் முன்னோடி திட்டமாக 2018–2019ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2019–2020ஆம் ஆண்டில் 53 பள்ளிகளுக்கு தொழிற்கல்வித் திட்டம் ரூ.6.10 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

* கஜா புயலில் பாடப்புத்தகங்களை இழந்த மாணவர்களுக்கு தங்களது கல்வியை இடையூரின்றி தொடர ரூ.4.67 இலட்சம் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பட்டயக் கணக்காளர் நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில், பயிற்சி அளிப்பதற்காக 320 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்றவர்கள் மூலம் மாணவர்கள் பயிற்சி பெறுவர்.

* அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு புதிய பயனுள்ள கலைநுட்பம் உள்ளடக்கிய நூல்கள் ரூ.5 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

* அரிய வகை நூல்கள், ஆவணங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றை பொதுமக்கள் மற்றும் தனியார் அமைப்புகளிடமிருந்து பெற்று பாதுகாத்து பயன்படுத்த ஏதுவாக ஒரு புதிய இயக்கம் (Movement) தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

* மதுரையில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் ஒரு இலட்சம் நூல்கள் அடங்கிய ஒரு மாபெரும் நூலகம் ரூ.5.79 கோடி மதிப்பில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 255 பட்டதாரி ஆசிரியர், 2,467 முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் 516 சிறப்பாசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சட்ட கல்லூரிகளுக்கு 117 உதவி பேராசிரியர்கள் (சட்டம்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

- ✶ மேற்பார்வை மற்றும் கண்காணிப்புகளை சிறப்பாக செயலாற்றுவதற்காக முன்னெப்போதும் இல்லாத வகையில் துறையின் மூலம் நிருவாக மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.
- ✶ கல்வி மாவட்டங்களின் எண்ணிக்கை 67இல் இருந்து 120ஆக உயர்த்தப்பட்டது.
- ✶ முன் மழலையர் கல்வியை மேம்படுத்துவதற்காக LKG/UKG வகுப்புகள் அங்கன்வாடிகள் இயங்கும் 2,381 நடுநிலைப் பள்ளிகளில் துவங்கப்பட்டுள்ளது.
- ✶ 1,646 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 244 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 21 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா வசதி அமைத்திட வகை செய்யப்பட்டுள்ளது.
- ✶ 2020–2021ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலணிகளுக்கு பதிலாக, கால்ஏந்திகள் (Shoes) மற்றும் காலுறைகள் (Socks) ரூ.12.85 கோடி கூடுதல் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனால் 28,64,885 மாணவர்கள் பயன்பெறுவர்.
- ✶ அரசு மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், இருக்கைகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.417.24 கோடி செலவில் நபார்டு வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✶ புதிய கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்து வகுப்புகளுக்கும் புதிய பாடப்புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டு அப்புதிய செறிவூட்டப்பட்ட பாடப்புத்தகங்கள் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்செறிவூட்டப்பட்ட பாடப்புத்தகங்கள், பாடப்பொருள் சார்ந்த காணொளிகளோடு இணைக்கப்பட்ட விரைவு குறியீட்டு துலங்கள் (QR Code) கொண்டதாக மேம்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2019–2020ஆம் ஆண்டு புதியதாக வடிவமைக்கப்பட்ட பள்ளிச் சீருடைகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ தகவல் தொழில்நுட்ப செயல்திறனை பள்ளிகளில் இணைக்கும் பொருட்டு மாணாக்கர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக 3,090 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் அதி நவீன ஆய்வகக் கூடங்கள் ரூ.520.13 கோடி செலவில் அமைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✶ நூலகங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக 32 மாவட்ட மைய நூலகங்களிலும் ரூ.32 இலட்சம் செலவில் ஸ்மார்ட் டி.வி / எல்.இ.டி. ஒளிப்படவீழ்த்தி மற்றும் ஆடியோ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களின் நலன்கருதி 100 முழுநேர நூலகங்களில் நகலெடுக்கும் கருவி அல்லது அச்சு ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ரூ.1.50 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கூடிய மாதிரி நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் ரூ.96 இலட்சம் செலவில் பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாடு உள்ள வாசகர்களின் நலனுக்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒலி உபகரணம், தொடுதிரை போன்ற வசதிகள் கொண்ட தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றலை குறைக்கும் பொருட்டு, சத்துள்ள மதிய உணவு, விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினி, சீருடை, காலணி, புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப்பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி, புவியியல் வரைபட புத்தகம், கம்பளிச்சட்டை, மழைக்கால ஆடை, உறைக் காலணி, காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்கள் மற்றும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான துயர்துடைப்பு நிதி உதவி, விபத்தை எதிர்கொண்ட மாணவர்களுக்கான காப்பீடுத் திட்டம், 10ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பள்ளி இடைநிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத் தொகை போன்ற தனித்தன்மை வாய்ந்த திட்டங்களும் 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் ரூ.3,243.22 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் ரூ.2578.87 கோடி செலவில் இந்நலத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

* தமிழகத்திலுள்ள மத்திய மற்றும் மாவட்ட சிறைச் சாலை வளாகங்களிலுள்ள, முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் வகையில் ரூ.14.60 இலட்சம் மதிப்பீட்டில் எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில், 15 வயதுக்கு மேற்பட்ட, முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத சுமார் 1,68,716 பேருக்கு, 2019–2021ஆம் ஆண்டுக்குள் அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் வகையில் ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் சிறப்பு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* தகவல் தொழில்நுட்பங்களை புகுத்தி மாணவர்களுக்கு திறம்பட கற்பித்திட புதிய வழிகளை உருவாக்க ஆசிரியர்களுக்கென தனி இணையதளம் (TNTP) உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான இணையதளத்தின் மூலமாக ஆசிரியர்களுடைய கற்பிக்கும் திறன் மேம்படுத்தப்படுகிறது.

* மாணவர்களின் கற்கும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள், கல்வித் தொலைக்காட்சி மூலமாக 24X7 முழுமையும் தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்தின் மூலமாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

* அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 2019–2020ஆம் கல்வியாண்டு முதல் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்பு கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

* புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்தி 100 அரசுப் பள்ளிகள் மற்றும் 44 அரசு மாணவியர் விடுதிகளில் சூரிய ஒளி மின்கலங்கள் ரூ.4.51 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

* அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் வருகையை பெற்றோர்களுக்கு தெரிவிக்கும் வகையில் குறுஞ்செய்தியாக (SMS) தகவல் அனுப்பப்படுகிறது.

* 10,11,12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணாக்கர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் தேர்வு காலம் 2.30 மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

* பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்போது, தரப்பட்டியல் அறிவிக்கும் நடைமுறை கைவிடப்பட்டது.

* தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் உள்ள நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கும் பொருட்டு சேகரிக்கப்பட்ட ஒரு இலட்சம் தமிழ் நூல்கள் யாழ்ப்பாணம் நூலகத்திற்கு (Jaffna Library) அனுப்பப்பட்டுள்ளது.

* அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் செவி மற்றும் பேச்சுத் திறன் குறைபாடுடையவர்களுக்கான சிறப்பு பிரிவு ரூ.48 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை.

* தரமான கல்வி வழங்குதலின் தற்போதைய அணுகுமுறையில் ஒரு பகுதியாக அனுபவம் பெறத்தக்க மகிழ்ச்சியான வகுப்பறை கற்றல் மூலம் சுதந்திரமான சிந்தனை மற்றும் சிக்கல்களை தீர்க்கும் படைப்பாற்றலை மாணவர்களிடம் தூண்டுவது மட்டுமல்லாமல் மாணவர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் குழுவாக செயல்படும் திறன்

போன்ற சமூக ஆளுமை பண்புகளை ஊக்குவிப்பது ஆகிய நடவடிக்கைகள் சார்ந்து ஆசிரியர்களுக்கு ஒருங்கிணைந்த திறன்மேம்பாட்டு பயிற்சி ரூ.61.63 கோடி செலவில் 2019–2020ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு வருகிறது.

- ✶ அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடல் மற்றும் மனநலம் பேணுகின்ற வழிமுறைகள் கற்றுத்தரப்படும் வகையில் மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த நலவாழ்வுத் திட்டம் ரூ.12.31 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✶ பின்தங்கியுள்ள சமூகத்தை சேர்ந்த குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு மூன்று புதிய உண்டு உறைவிடப் பள்ளிகள் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1.72 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.2.84 கோடி செலவில் இரண்டு புதிய உண்டு உறைவிடப் பள்ளிகள் 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு வருகிறது.
- ✶ குழந்தைகளுக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய சிறப்பு நூலகம் சேலம் மாவட்ட மைய நூலக வளாகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.
- ✶ அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்தும் முயற்சியாக அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வழியாக ஆங்கிலத்தில் உரையாடும் திறனை வளர்ப்பதற்காக ஒரு பாட வேளை ஒதுக்கப்பட்டு ஆங்கில உரையாடல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- ✶ பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து காலமான பணியாளர்களின் 121 வாரிசுதார்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ கடந்த மூன்றாண்டுகளில் கற்கும் பாரதம் திட்டத்தின் மூலமாக கல்வி அறிவு பெறாத 2,67,301 நபர்கள் அடிப்படைக் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.
- ✶ கல்வித்தகவல் மேலாண்மை முறைமையானது (EMIS) இணைய வழியாக்கப்பட்டு, அதன் மூலம் அரசு / அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் விபரங்கள், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பற்றிய முழுவிபரங்கள் அனைத்தும் உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது.
- ✶ சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பண்டைய நாகரிகங்கள் சார்ந்து சிவகங்கை மாவட்டம், கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக்கலைகள் குறித்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் குறித்து திருச்சிராப்பள்ளிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் குறித்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் ரூ.3.91 கோடி செலவில் சிறப்பு நூலகங்கள் மற்றும் கண்காட்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

❖ ❖ ❖

- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.281.19 கோடி செலவில் 1,13,348 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ், 304 குழந்தைகள் (ஆண்–121, பெண்–183) மீட்கப்பட்டுள்ளனர்.

- 5,660 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், பயனாளிகளுக்கு வழங்கிட ஏதுவாக 3,22,000 எட்டு கிராம் (22 காரட்) மற்றும் 4,895 நான்கு கிராம் (22 காரட்) தங்க நாணயங்களுடன் நிதியுதவியாக பட்டம் / பட்டயம் அல்லாதோருக்கு ரூ.25,000/–மும், பட்டம் / பட்டயம் பெற்றோருக்கு ரூ.50,000/–மும் கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன.

- சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் 9,290 தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- மூன்றாம் பாலினர்கள் சொந்த தொழில் தொடங்குவதற்காக கடந்த ஆண்டுகளில் ரூ.1,45,60,000/– வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் நிதியாண்டு முதல் மூன்றாம் பாலினருக்கான மானியம் ரூ.20,000/–லிருந்து ரூ.50,000/–மாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1,000/– வீதம் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் 1,000 மூன்றாம் பாலினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3.40 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- சிறந்த மூன்றாம் பாலினர் ஒருவருக்கு மூன்றாம் பாலினர் தினமான ஏப்ரல் 15 அன்று "மூன்றாம் பாலினருக்கான சிறப்பு விருது" ரூ.1,00,000/– மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கி வழங்கப்படும்.

* அனைத்து மூன்றாம் பாலினர்களும் தங்களை பற்றிய சுய விவரங்களை பதிவு செய்து கொள்ள, மூன்றாம் பாலினர்களுக்கென தனியாக ஒரு செயலி உருவாக்க ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* சத்துணவு திட்டத்தின் கீழ், பயன்பெறும் மாணவ, மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 119.44 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

* இச்சீருடைகள், சமூகநல ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ், இயங்கும் 98 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் மூலம் தைக்கப்பட்டு ரூ.259.96 கோடி தையற்கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

* மாநில பெண்கள் வளமையம் வாயிலாக மகளிர்க்கான உதவி எண் (181) துவக்கப்பட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்கும் பொருட்டு 10.12.2018 அன்று மகளிர் உதவி மையம் துவக்கப்பட்டது.

* நிர்பயா நிதியின் கீழ், பெண்களின் பாதுகாப்புக்கு, ஒருங்கிணைந்த சேவை மையம் 32 மாவட்டங்களிலும் துவக்கப்பட்டு 24 மணி நேரம் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

* கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, டிஜிட்டல் எழுத்தறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகள், மகிளா சக்தி கேந்திரா பணியாளர்கள் மூலம் 32 மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுவருகிறது.

* முதியோர்களுக்கான உணவூட்டு மானியம் ரூ.300/–லிருந்து ரூ.1,200/–ஆக 01.09.2016 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

* 20 முதியோர் இல்லங்களில் தங்கியுள்ள 674 முதியோர் பயனடையும் வகையில் மாநில அரசின் மானியமாக கடந்த 2 ஆண்டுகளில் ரூ.194.03 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த வளாகங்களில் தங்கியுள்ள முதியோர்களுக்கான உணவூட்டுத்தொகை மானியம் ரூ.653/–லிருந்து ரூ.1,200/– ஆகவும் குழந்தைகளுக்கு ரூ.750/–லிருந்து ரூ.900/– ஆகவும் 01.11.2018 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 51 ஒருங்கிணைந்த வளாகங்களில் தங்கியுள்ள 1,199 குழந்தைகள் மற்றும் 1,147 முதியோர் பயன்பெற 2017–2018, 2018–2019 ஆண்டுகளில் மாநில அரசின் மானியம் ரூ.1301.81 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மானியம் பெறும் முதியோர் இல்லங்களில் தங்கியுள்ள 4,133 முதியோர்களுக்கு நுரையீரல் தொற்றுநோய் தடுப்பூசி (நிமோனியா) போடும் திட்டத்திற்காக தமிழக அரசால் ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12.12.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

* கடந்த இரு ஆண்டுகளில் 37 ஸ்வதார் இல்லங்களில் 1,110 பயனாளிகள் பயனடையும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசு மானியமாக ரூ.759.28 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* 19,230 சத்துணவு மையங்களுக்கு அலுமினிய பிரஷர் குக்கர்கள் ரூ.480.75 இலட்சம் செலவிலும் 12,000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு சமையல் உபகரணங்கள் ரூ.6 கோடி செலவிலும் வழங்கப்பட்டுள்ளது.

* புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், 43,205 சத்துணவு மையங்களுக்கு சோப்பு, நகவெட்டி, துண்டு மற்றும் கையுறை போன்றவை உள்ளடக்கிய சுகாதாரப் பேழைகள் (hygiene kit) ரூ.1.73 கோடி செலவில் வழங்க அரசாணை வெளியிடப்பட்டு, இரண்டு கட்டமாக 39,366 சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

* பெரம்பலூர், நாமக்கல், கோயம்புத்தூர், மதுரை, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்களுக்கு (ச.உ.தி) அவர்களுக்கு 6 புதிய வாகனங்கள் வாங்கி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

* தருமபுரி, மதுரை, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதற்கட்ட பரிசோதனையாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள்

கீழ் அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி ரூ.529.25 இலட்சம் மதிப்பீட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

✶ 2019–2020ஆம் ஆண்டில் 6,319 மையங்களுக்கு ரூ.9.15 கோடி செலவில் சமையல் உபகரணங்கள் வாங்கி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

✶ ஒரு மையத்திற்கு ரூ.5,000 வீதம் 10,024 சத்துணவு மையங்களில் காய்கறித் தோட்டம் அமைக்க ரூ.501.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ 2,167 சத்துணவு மையங்களிலுள்ள சிறு பழுதுகள் (Minor Repairs) சரிசெய்ய ரூ.216.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு நகவெட்டி, கைத்துண்டு, சோப்பு மற்றும் சீப்பு அடங்கிய சுகாதாரப் பேழைகள் 2017–2018 முதல் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

✶ வயது முதிர்வினால் ஓய்வுபெறும் அங்கன்வாடிப் பணியாளர்கள்/ குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஒரு இலட்சமும், அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.50,000மும், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000மும் 01.10.2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

✶ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அனைத்து பயனாளிகளின் ஆதார் எண்களை சரிபார்த்து திட்டத்துடன் அணைத்திடும் பணி ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்பட்டு, மே 2018 வரை, 56 சதவீதம் 0–5 வயது குழந்தைகள், கர்ப்பிணிகள்/ தாய்மார்களின் ஆதார் விவரம் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

✶ பெற்றோர் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 32 மாவட்டங்களில், அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் இயங்கும், 2,381 அங்கன்வாடி மையங்களில் LKG / UKG வகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.01.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டபணிகள், சத்துணவுத் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் காய்கறி, தாளிதப் பொருட்கள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட உணவூட்டு செலவினம், பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்கு ரூ.1.52 எனவும், பருப்பு பயன்படுத்தாத நாட்களுக்கு ரூ.1.81 எனவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

* 2018–2019, 2019–2020 ஆகிய ஆண்டுகளில் 2,269 அங்கன்வாடி மையங்களுக்கு தலா ரூ.10,000/– செலவில் குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்கு ரூ.226.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 2018–2019ஆம் ஆண்டில் 54,439 அங்கன்வாடி மையங்களுக்கும் கொசுவலைகள் ரூ.160 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

* 2018–2019ஆம் ஆண்டில் 54,439 அங்கன்வாடி மையங்களுக்கும் கோரைபாய்கள் ரூ.411.55 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

* 2019–2020ஆம் ஆண்டில் அரசு சொந்த கட்டடங்களில் செயல்படும் 40,744 அங்கன்வாடி மையங்களுக்கு தலா ரூ.3,000/– வீதம் வருடாந்திர பராமரிப்பு தொகையாக ரூ.1,222.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 2017–2018, 2018–2019, 2019–2020 ஆகிய ஆண்டுகளில் அங்கன்வாடி மையங்களில் பயிலும் 13,68,114 குழந்தைகளுக்கு விலையில்லா வண்ணச் சீருடைகள் வழங்குவதற்காக ரூ.3,593.06 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 2017–2018, 2018–2019, 2019–2020 ஆகிய ஆண்டுகளில் 2,734 அங்கன்வாடி மையங்களுக்கு குழந்தை நேய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.328.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 2017–2018, 2018–2019, 2019–2020 ஆகிய ஆண்டுகளில் 3,303 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.6,606 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 2019–2020ஆம் ஆண்டில் 10,888 அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்குவதற்கு ரூ.10.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* போஷன் அபியான் திட்டம், நாட்டில் நிலவும் வயதிற்கேற்ற வளர்ச்சியின்மை (குள்ளத்தன்மை), ஊட்டச்சத்து குறைபாடு, இரத்தசோகை, குறைவான எடையுடன் குழந்தை பிறத்தல் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே ஊட்டச்சத்தினை அதிகப்படுத்த மார்ச் 2018இல் கொண்டுவரப்பட்ட ஒரு முன்னோடி திட்டமாகும்.

* அங்கன்வாடி மைய பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை தொடர்ந்து கண்காணித்து மேம்படுத்தும் விதமாக, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு, ரூ.54.86 கோடி செலவில் பொதுவான மென்பொருள் பயன்பாடு (Common Application Software) என்ற செயலி பொருத்தப்பட்ட 59,488 திறன்பேசி (Smart Phone) மற்றும் பவர் பேங்குகளை (Power Bank) தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

* சிறு குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer) குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவி (Mother & Child Digital Weighing Scale), மற்றும் குழந்தைகளின் எடை கருவி (Infant Weighing Scale), ஆகியவை முதற் மற்றும் இரண்டாம் கட்டமாக, 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு, ரூ.36.92 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சி கண்காணிப்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* தருமபுரி, கடலூர், நாமக்கல் மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் நான்கு புதிய சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களை ரூ.67.34 இலட்சம் செலவில் தொடங்குவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* சென்னை, சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உள்ள சிறுமியர்களுக்கு நவீன தொழிற்பயிற்சிக்கு 10 புதிய தையல் இயந்திரங்கள் வாங்க ரூ.2,70,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* 7 அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் 2 அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் உளவியல் ஆலோசகர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு, அரசு ஒரு புதிய தலைவர் மற்றும் 6 புதிய உறுப்பினர்களை நியமனம் செய்துள்ளது.

* போதைப் பழக்கத்திற்கு அடிமையாக உள்ள சிறுவர்களின் நலனை கருத்திற் கொண்டு அவர்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டி தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் போதை தடுப்பு மையம் ரூ.22.99 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

* சமூகப் பாதுகாப்பு ஆணையரகத்தின் கீழ், செயல்படும் பல்வகையான குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ளுறையும், குழந்தைகளை ஆக்கப்பூர்வமான குடிமக்களாக உருவாக்க "நாடக அரங்க நிகழ்ச்சிகள் நடத்தும்" திட்டம் ரூ.29,97,500 நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. "ஆக்கப்பூர்வான குடிமக்களை, நாடக அரங்க நிகழ்ச்சிகள் மூலம் உருவாக்குதல்" என்னும் திட்டத்தை MACT நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடையே காணொலிக் காட்சி திட்டம் ரூ.49.72 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

* சேலம் மாவட்டத்தில் உள்ள அன்னை சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகத்தில் தற்போதுள்ள பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் 100 குழந்தைகள் தங்க, கட்டடம் கட்டுதவற்கு ரூ.9.46 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* தருமபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவாரூர், தேனி, விருதுநகர், சென்னை, தஞ்சாவூர், மதுரை, கடலூர், நாகப்பட்டினம், சேலம், காஞ்சிபுரம், நீலகிரி, திண்டுக்கல் மற்றும் பெரம்பலூர் ஆகிய 16 மாவட்டங்களில் காலமுறை ஊதிய அடிப்படையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நியமனம் சமூகப் பாதுகாப்புத்துறையில் இதுவே முதல் முறையாகும்.

* சென்னை, கெல்லீஸ் சிறுமியர்களுக்கான கூர்நோக்கு இல்லத்திற்கு அனைத்து நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.40 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே ஏற்படும் தற்கொலை எண்ணத்தை தடுக்க, குறிப்பாக இறுதி தேர்வின் முடிவில் தற்கொலை எண்ணத்தை தடுக்க அரசு ரூ.15.04 இலட்சம் செலவில் மாநிலம் முழுவதிலும் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

- அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு உளவியல் ஆலோசனையானது உளவியல் ஆலோசர்கள் மூலம் ரூ.21.60 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

- சென்னையில் தற்போதுள்ள ஒரு குழந்தை நலக்குழுவினை தவிர்த்து மேலும், கூடுதலாக இரண்டு புதிய குழந்தை நலக்குழுக்கள் அமைத்தல்.

- 2017–2018 ஆண்டிற்கான சமூகப்பாதுகாப்புத் துறையின் கீழ், செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளிடையே விளையாட்டு போட்டிகள் நடந்துவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மதுரை மாவட்டம், அன்னை சத்யா குழந்தைகள் இல்லத்திற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.5 கோடி செலவில் கட்டுதல்.

- கோவை, சேலம், மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் நீதிமன்றங்களில் உள்ள விசாரணை அறையில் ரூ.35 இலட்சம் செலவில் குழந்தைகளுக்கு ஏற்ற நட்புறவான சூழ்நிலையை உருவாக்குதல்.

- தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.4 கோடி செலவில் கட்டுதல்.

- 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத்தீர்வு செய்வதற்கு, 28 மாவட்டங்களில் குழந்தைகள் நலக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னையில் சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் பல்நோக்கு வள மையத்திற்கு ரூ.9 இலட்சம் செலவில் ஓர் இணைப்பு கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

- வேலூர் மாவட்டத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இல்லத்திற்கு 27 பல்வேறு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- சென்னை, இராயபுரம் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு சுற்றுச்சுவர், கைப்பந்து மைதானம் அமைக்க ரூ.73.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

- 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு தவறிழைத்தாக கருதப்படும் குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத்தீர்வு செய்வதற்கு, 27 மாவட்ட இளைஞர் நீதி குழுமங்களுக்கு புதியதாக தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- மதுரை மாவட்டத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கூர்நோக்கு இல்லத்திற்கு 27 பல்வேறு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், பாதுகாப்பு இடம், வேலூர் மற்றும் 16 மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடைய (திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், கரூர், அரியலூர், புதுக்கோட்டை, தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி) காணொலிக் காட்சி வசதி ரூ.2,60,65,776/– மதிப்பீட்டில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு இரண்டாம் கட்டம் (தரை தளத்தின் இரண்டாவது பகுதி மற்றும் முதல் தளம்) அமைக்க ரூ.4.53 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

- குழந்தை தகவல் அமைப்பு என்ற புதிய மென்பொருள் உருவாக்க ரூ.65 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

- 2019–2020ஆம் ஆண்டிற்கான சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ், செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்காக ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

- ✶ சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையினால் செயல்படுத்தப்படும் மாணாக்கர்களுக்கான விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 2016–2017, 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளில் பயின்ற/பயிலும் 19.80 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,439.47 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ மேல்நிலைக் கல்வியின் முதல் ஆண்டு துவக்கத்திலேயே, ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி மடிக்கணினியைப் பயன்படுத்தி போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்கு ஏதுவாக, 2018–2019ஆம் ஆண்டு முதற்கொண்டு, பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பதிலாக பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை அரசு வழங்கி வருகிறது.

❖ ❖ ❖

தமிழ் வளர்ச்சித் துறை

- ✶ கணினியில் ஆங்கில மொழிக்கெனப் ‘பிழை திருத்தி’ இருப்பதைப் போல், தமிழிலும் பிழை திருத்துவதற்கேற்ப “அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்” எனும் மென்பொருள் ரூ.30 இலட்சம் செலவில் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்கும்பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.05.2017ஆம் நாளன்று வெளியிடப்பட்டு 10,000 குறுந்தகடுகள் அரசு அலுவலகங்களுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டது.

- ✶ பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125ஆவது பிறந்தநாளைப் போற்றும் வண்ணம் 2016–2017ஆம் ஆண்டிற்கு 125 கவிஞர்கள் மூலம் ரூ.5 இலட்சம் செலவில் தமிழ்க்கவிஞர் நாள் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் தமிழ்க்கவிஞர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

- ✶ மாவட்ட அளவில் கவிதை / கட்டுரை / பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 2016–2017, 2017–2018, 2018–2019, 2018–2019, 2019–2020ஆம் ஆண்டில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை வாயிலாக இலக்கணம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கென ஆண்டுக்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.80 இலட்சம் வழங்கப்பட்டது.

- ✶ 2017, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பிப்ரவரித் திங்கள் 21ஆம் நாள் உலகத் தாய் மொழி நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- ✶ திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் 2018, 2019 ஆகிய ஆண்டுகளுக்குரிய திருவள்ளுவர், பாரதியார், பேறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், பாரதிதாசன், திரு.வி.க., கி.ஆ.பெ.விசுவநாதம் உள்ளிட்ட 7 விருதுகள் தமிழறிஞர்களுக்கு வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டது.

- ✶ சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரில் புதியதாக விருது தோற்றுவிக்கப்பட்டு 2018ஆம் ஆண்டு முதல் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதாக வழங்கப்பட்டு வருகிறது.

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2015ஆம் ஆண்டுக்கான தமிழ்ச்செம்மல் விருது, முதலமைச்சர் கணினித்தமிழ் விருது மற்றும் 2016ஆம் ஆண்டுக்கான சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள், அம்மா இலக்கிய விருது, மொழிபெயர்ப்பாளர் விருது என 52 விருதுகளும், 2017ஆம் ஆண்டுக்கான சித்திரை தமிழ்ப்புத்தாண்டு விருதுகள்

(20 பேருக்கு), 2016, 2017ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருது (64 பேருக்கு) மற்றும் உலகத் தமிழ்ச் சங்க விருது (6 பேருக்கு) என 90 விருதுகளும், 2018ஆம் ஆண்டுக்கான சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் (21 பேருக்கு), 2018ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருது (32 பேருக்கு) மற்றும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் (3 பேருக்கு) என 56 விருதுகளும் ஆக மொத்தம் 3 ஆண்டுகளில் 198 விருதுகள் வழங்கப்பட்டன.

- ✶ 2018ஆம் ஆண்டில் தமிழறிஞர் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார், அயோத்திதாசப் பண்டிதர் விருதும், 2019ஆம் ஆண்டில் அருட்பெருஞ்சோதி வள்ளலார், வீரமாமுனிவர், காரைக்கால் அம்மையார், தேவநேயப் பாவாணர் ஆகியோரின் பெயரிலும், மேலும், தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் பெயரில் ‘சிற்றிதழ் பரிசு’ என்ற புதிய விருதும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- ✶ தமிழ்நாடு அரசின் சார்பில் குவகாத்திப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் தமிழ் நூலகம் அமைக்கவும் கணினிவழி தமிழ்மொழி கற்கக் கணினிகள் வாங்கிடவும் ரூ.2.89 இலட்சம் வழங்கப்பட்டது.

- ✶ கணினியுகத்திற்கேற்ப அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டம் குறித்து மின்காட்சியுரை மூலம் ஆட்சிமொழிப் பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்திட ரூ.22.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ ஆட்சிமொழிப் பயிலரங்கம் நடத்துவதற்கென ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த செலவினத் தொகை ரூ.30,000த்திலிருந்து ரூ.50,000ஆக உயர்த்தப்பட்டது. மாவட்டங்களில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான சில்லறை செலவினத் தொகை ரூ.10,000/–த்திலிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ 2017ஆம் ஆண்டு முதல் சிறந்த நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், தற்பொழுது வழங்கப்படும் நூல் மதிப்பீட்டுத் தொகையில் 60 விழுக்காடு என்பதை 100 விழுக்காடாக உயர்த்தி, உச்சவரம்புத் தொகையாக ரூ.50,000/– வரை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

- ✶ ‘குறள் பரிசு’ திட்டத்தின் கீழ் 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளில் மொத்தம் 190 மாணவர்களுக்கு ரூ.10,000/– வீதம் பரிசுத் தொகை வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டு முதல் குறள் பரிசு திட்டத்தின் கீழ், பரிசுபெறும் மாணவர் எண்ணிக்கை 50 லிருந்து 70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ✶ தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிவரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.2,500/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை பெற ஆண்டு வருவாய் வரம்பு ரூ.36,000/– லிருந்து ரூ.72,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ✶ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2018–2019ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 50லிருந்து 100ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் மொத்தம் 191 பேருக்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- ✶ 2018ஆம் ஆண்டு முதல் எல்லைக் காவலர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.4,000/–லிருந்து ரூ.4,500/– ஆகவும், தமிழறிஞர்களுக்கு ரூ.3,000/–லிருந்து ரூ.3,500/–ஆகவும், எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.2,500/– ஆகவும், தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட வகையில் உதவித்தொகை பெற்று வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் / தமிழறிஞர்கள், மற்றும் மரபுரிமையர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படி ரூ.100/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு முதல் தமிழறிஞர்கள் / எல்லைக்காவலர்கள் இயற்கை எய்தும் நேர்விலே ஈமச்சடங்குத் தொகை ரூ.1,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வகையில் பரிவுத் தொகையாக, முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.11 இலட்சமும், திரு.மேலாண்மை பொன்னுசாமி அவர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.11 இலட்சமும் மற்றும் முனைவர் பொன்.சவுரிராசன் அவர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.3 இலட்சமும் என மொத்தம் ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டில், தமிழறிஞர்கள் உளுந்தூர் பேட்டை திரு.சண்முகம், கவிஞர் நா.காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம.கோபால கிருட்டினன் மற்றும் பாபநாசம் குறள்பித்தன் ஆகிய 7 பேரின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அமெரிக்காவில் சிகாகோ மாநகரில் 2019 ஜூலைத் திங்கள் 4 முதல் 7 வரை 10ஆவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு நிதியுதவியாக தமிழ்நாடு அரசால் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு அலுவலர்கள் 10 பேர், தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் பற்றாளர்கள் 10 பேர் என மொத்தம் 20 பேர் பங்கேற்க ஆணையிடப்பட்டது.

- தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 01.11.1956ஆம் நாளினைப் பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1ஆம் நாளை ‘தமிழ்நாடு நாள்’ என்ற பெயரில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக மாநில அளவில் மொழி, இன, பண்பாட்டு விழாக்களோடு 01.11.2019ஆம் நாளன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் “தமிழ்நாடு நாள் விழா” மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

- ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூ.10 கோடி மற்றும் ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ஒரு கோடி ரூபாய் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

- பிரான்சு நாட்டின் பாரிசு நகரில் 28.09.2019 முதல் 29.09.2019 வரை நடைபெற்ற 4ஆவது ஐரோப்பிய தமிழ் ஆய்வியல் மாநாட்டிற்கு அரசின் நிதியுதவியாக ரூ.16.50 இலட்சம் வழங்கப்பட்டது.

- அயலாருக்கும் தமிழ் அறியாத பிற மாநிலத்தவருக்கும் தமிழ் மொழியினைக் கற்பிக்கும் பொருட்டு கணினிமயமாக்கப்பட்ட மொழிப்பயிற்சி ஆய்வுக் கூடத்தின் வழியே கடந்த மூன்றாண்டுகளில் சப்பானியர் இருவரும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இருவரும், இந்தியாவின் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த ஏழு மாணவர்களும் தமிழ் மொழிப் பயின்றனர்.

- திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் வழியாக கடந்த ஆண்டில் திருக்குறள் ஆய்வடங்கல், திருக்குறளும் விவிலியமும் என இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. திருக்குறள் அகராதி பணி நடைபெற்று வருகிறது.

- 2018ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாடு ஆய்வு இருக்கை ரூ.1 கோடி வைப்புத் தொகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டது.

- ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் சுமார் 700 அரிய சுவடிக்கட்டுகள் முழுமையாகச் செப்பனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வழியாக நிறுவனத்தின் 650 ஓலைச் சுவடிக்கட்டுகள் மின் எண்மம் செய்யப்பட்டுள்ளது.

- உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏழு ஆய்விருக்கைகளும் மற்றும் தமிழார்வலர்களின் நிதியுதவியோடு தமிழ்ச்சான்றோர்களின் பெயரில் ஒன்பது புதிய அறக்கட்டளைகளும் நிறுவப்பட்டுள்ளன.

- தமிழ்ப்பல்கலைக்கழகம் வாயிலாக தமிழ்ப் பண்பாட்டு மையத்தினை விரிவான முறையில் செயல்படுத்துவதற்கு முதல் தவணை ரூ.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. அதில் ரூ.16.50 இலட்சம், பாரிசு பன்னாட்டு உயர்கல்வி நிறுவனத்திற்கும், ரூ.8.50 இலட்சம் தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்கும் என வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்ப்பல்கலைக்கழகம் வாயிலாக தமிழ் வளர் மையம் அமைப்பதற்கு ரூ.2 கோடிக்கு நிருவாக அனுமதியும் தமிழ் மொழியில் 8 படிநிலைகளில் பாடங்கள் நடத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டு முதற்கட்டமாக ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் யோகா பயிற்சி மையம் அமைத்திட ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி இயக்ககம் மேற்கொண்டுள்ள சொற்குவைத் திட்டம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கண்காணிப்பில் நடைபெற அனுமதிக்கப்பட்டு அதற்கென ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டு முதல்தவணை நல்கை ரூ.70.26 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

- ✶ அமெரிக்கா, ஆசுதிரேலியா, இங்கிலாந்து, பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெற்ற 12 ஆய்வரங்கங்கள் நடத்தப் பெற்றன.

- ✶ மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியுடன் இணைந்து 27.03.2017 அன்று 'கீழடி ஆய்வும் முன்னெடுப்புத் தேவைகளும்' என்ற கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை

நினைவகங்கள்

- ✶ கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கொண்டையம் பாளையம் கிராமம், மஜரா வையம்பாளையம் கிராமத்தில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு ரூ.1.50 கோடி செலவில் மணிமண்டபம், கடலூர் மாவட்டத்தில் இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் சென்னை, காமராஜர் சாலையில் ரூ.2.52 கோடி செலவில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் நினைவு வளைவு ஆகியவை அமைக்கப்பட்டு முறையே 06.02.2019, 25.11.2019, 27.02.2019 ஆகிய தேதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் நினைவாக சென்னை, அடையாறில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு 01.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரூ.50.80 கோடி செலவில் அன்னாருக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு பொதுப்பணித்துறையால் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள

“வேதா நிலையம்” இல்லம் அரசு நினைவிடமாக மாற்றப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, “வேதா நிலையம்” இல்லம் அமைந்துள்ள நிலத்தினை கையகப்படுத்தி அரசுக்கு ஒப்படைக்க சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு நிருவாக அனுமதி அளித்து 05.10.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தினை கையகப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில் உள்ள மாவீரன் பூலித்தேவன் நினைவு மாளிகை மற்றும் திருமண மண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் புனரமைப்பு பணிகளும், சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் ரூ.85 இலட்சம் செலவில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு நினைவுத் தூண் ரூ.20 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் முடிவுற்று திறக்கும் தருவாயிலும், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் பாரதமாதா நினைவாலயமும், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் டாக்டர். பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபமும் ரூ.2 கோடியே 84.28 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் நிறைவுறும் தருவாயிலும் உள்ளன.

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் மணிமண்டபத்துடன் கூடிய நூலகமும், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மற்றும் எம்.கே. தியாகராஜ பாகவதர் ஆகியோர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் மணிமண்டபமும், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும், மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் கிராமத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கும் முழு திருவுருவச் சிலையுடன் மணிமண்டபத்துடன் கூடிய நூலகமும் மற்றும் வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கும் கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும் அதில் நூலகமும் அமைக்க நிருவாக ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளன.

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் ஒரு நூலகமும் ரூ.51,78,646/– மதிப்பீட்டில் அமைக்கவும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு திருவுருவச் சிலை ரூ.21,80,000/– மதிப்பீட்டில் அமைக்கவும் நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளன.

- தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தை புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் ஒரு நூலகமும் ரூ.72,70,415/– மதிப்பீட்டில் அமைக்கவும், ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 தியாகிகளை கௌரவிக்கும் வகையில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் நினைவு

மண்டபமும் அமைக்க அரசாணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

விழாக்கள் பிரிவு

- ✶ பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா 30.06.2017 அன்று மதுரையில் கோலாகலமாக துவங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாக்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.5,744.24 கோடி மதிப்பீட்டில் 3,214 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ரூ.5,158.97 கோடி செலவில் முடிவுற்ற 2,370 புதிய திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. ரூ.5,475.58 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 8,31,527 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- ✶ திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்தநாள் விழா ஆவணித் திங்கள் 16 அன்றும், ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்த நாள் விழா அக்டோபர் 4 அன்றும் தலா ரூ.25,000/– செலவில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- ✶ சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், செப்டம்பர் 16இல் அவரது பிறந்தநாள் விழாவும், கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதாசாகேப் பால்கே ஆகிய விருதுகளைப் பெற்று நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்ட மறைந்த திரு.சிவாஜி கணேசன் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய சேவையை போற்றிடும் வகையில், அக்டோபர் 1 இல் அவரது பிறந்த நாள் விழாவும், சேலம் மாவட்டம், சேலம் மாநகரில் அமைந்துள்ள பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் மணி மண்டபத்தில் முறையே ஜனவரி 17 மற்றும் பிப்ரவரி 24 இல் அவர்களது பிறந்தநாள் விழாவும், கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு ஜனவரி 15 இல் பிறந்தநாள் விழாவும், திரு.காலிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் காலிங்கராயன் வாய்க்கால்களை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாளான தை 5 இல் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அன்னாரின் மணிமண்டபத்திலும், சிலம்புச்செல்வர் திரு.ம.பொ.சிவஞானம் அவர்களின் பிறந்தநாள் ஜூன் 26 இல் சென்னை, தியாகராய நகரில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தும், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாள் ஜூலை 11 இல் சென்னை எழும்பூரில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச்

சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தும், திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களது பிறந்தநாள் செப்டம்பர் 27 இல் சென்னை எழும்பூரில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தும் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் நலன்

- தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.8,000/–லிருந்து ரூ.10,000/–ஆகவும், குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.4,750/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தியும் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2,00,000/–லிருந்து ரூ.3,00,000/–ஆகவும், பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித்தொகை ரூ.50,000/–ஐ ரூ.1,00,000/–ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியிலிருக்கும் காலகட்டத்தில் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.3,00,000/– என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பின் ரூ.2,25,000/– என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பின் ரூ.1,50,000/– என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பின் ரூ.75,000/– என்றும் உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம் அமைப்பது தொடர்பாக சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- புதுடெல்லியில் பணிபுரியும் தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி மற்றும் பத்திரிகையாளர் நலநிதியம் உட்பட அனைத்து நலத்திட்டங்கள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திரைப்பட தொழில்நுட்ப பிரிவு

- 2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுகளில், குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா ரூ.7 இலட்சம் வீதம், 10 கோடியே 43 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.06.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள்.

- 14ஆவது மற்றும் 15ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தலா ரூ.50 இலட்சமும், 16ஆவது மற்றும் 17ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தலா ரூ.75 இலட்சமும், தமிழக அரசின் சார்பில் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- “Film Bazaar” என்ற பெயரில் 12ஆவது மற்றும் 13ஆவது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தலா ரூ.10 இலட்சம் தமிழக அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா படப்பிடிப்பு தளம் அமைப்பதற்கு ரூபாய் ஒரு கோடி நிதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- மாநில அரசின் கீழ், அனைத்து துறைகளுக்கும் மற்றும் பொதுத்தேர்தல்களுக்கும் தேவையான அச்சுப்பணிகள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

- நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களுக்கான படிவங்கள், கையேடுகள், பல்வேறு வகையான உறைகள், ரப்பர் முத்திரை, வாக்குச்சீட்டு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்திற்கான சிறப்பு அட்டைகள் ஆகியவற்றை குறித்த காலத்தில் அச்சிடப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு குறித்த காலத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

- இத்துறையின் கீழ், சென்னை, திருச்சி மற்றும் மதுரையில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் மூலமாக தமிழ்நாடு அரசிதழ்கள், விதிமுறை நூல்கள் மற்றும் சட்டத் தொகுப்புகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகிறது. மேலும், பெயர் மாற்றம் செய்தும் உரிய அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது.

- அரசு மைய அச்சகத்தில் (தீ விபத்தினால் சேதமடைந்த சிகப்பு கட்டடத்திற்கு மாற்றாக) புதிய கம்பீரமான கட்டடம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 23.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ரூ.2.53 கோடி மதிப்பிலான நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரம் சீன நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- அச்சுப் பிரதிகளை பல வண்ணங்களில் குறைந்த செலவில் தரமாக அச்சிட்டு வழங்கும் பொருட்டு ரூ.53.80 இலட்சம் செலவில் நான்கு வண்ண தனித்தாள் அச்சு இயந்திரம் (4 Colour Sheet Fed Offset Machine) அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு கிளை அச்சகத்தில் சுமார் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய "வெப் ஆப்செட்" இயந்திரம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- அரசு கிளை அச்சகம், சேலத்தில் எண்மிய முறையில் எண்ணிடும் இயந்திரம் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு கிளை அச்சகத்திற்காக ரூ.49.26 இலட்சம் செலவில் தானியக்க உயர் விரைவு வெட்டும் இயந்திரம் (Fully Automatic High Speed Cutting Machine) சீன நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- புதுக்கோட்டையிலுள்ள அரசு கிளை அச்சகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, காவல்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஓய்வூதியத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை அச்சடிக்கத் தேவையான அச்சுத் தகடுகளைத்

தயாரிக்க பிளேட் எக்ஸ்போசர் இயந்திரம் (Plate Exposure) ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

* நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்ட அரசிதழ்கள் அச்சிட சிறிய கல்லச்சு இயந்திரம் (Mini Offset Machine) ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

* திருச்சி அரசு கிளை அச்சகத்தில் அரியலூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களுக்கான அரசிதழ்கள் அச்சிட, ஒரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் (Single Colour Web Offset Machine) ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலும், சிறிய கல்லச்சு இயந்திரம் (Mini Offset Machine) மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதங்களை தள்ளுவண்டியில் தேவையான இடத்துக்கு எடுத்துச் செல்ல, நீரழுத்தவிசைத் தள்ளுவண்டியும் (Hydraulic Trolley) ரூ.8.27 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

* அரசு கிளை அச்சகம், மதுரையில் எண்மிய முறையில் எண்ணிடும் இயந்திரம் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

* இத்துறையில் பணிபுரிந்து வருகின்ற பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் தையற்கூலி ரூ.700/–லிருந்து ரூ.1,400/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* இத்துறையில் பணிபுரிந்து வருகின்ற ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்பட்ட தையற்கூலி ரூ.800/–லிருந்து ரூ.1,200/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் காலிப் பணியிடங்களில், 49 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் உட்பட 265 பணியாளர்களுக்கும் மற்றும் 4 உதவிப் பணிமேலாளர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

* தமிழக பல்கலைக்கழகங்களுக்கான விடைத் தாள்கள் அச்சுப்பணி மேற்கொண்டது தொடர்பாக ரூ.39.60 கோடி அச்சுக் கட்டணமாக இத்துறை ஈட்டியுள்ளது.

* 2018–2019ஆம் நிதியாண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் இயக்ககம் உள்ளிட்ட பத்து அலகுகளில் சுமார் ரூ.2.52 கோடி மதிப்பில் பல்வேறு விதமான நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன.

* 2019–2020ஆம் நிதியாண்டில், அரசு மைய அச்சகம் உள்ளிட்ட எட்டு அரசு அச்சகங்களில் ரூ.80.70 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு விதமான நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட உள்ளன.

* இத்துறையிலுள்ள பத்து அலகுகளுக்கும் ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (R.O.water purifier) கொள்முதல் செய்து நிறுவப்பட உள்ளது.

* அரசு மைய அச்சகத்தில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கொட்டாரம் (Shed) கட்டப்படவுள்ளது.

* இத்துறையிலுள்ள 10 அலகுகளுக்கும் தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பறைகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* மாற்றுத்திறனாளிகளுக்குப் பொது வேலைவாய்ப்பில் 4 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது அரசின் கொள்கையாக இருப்பினும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் 14 சதவிகிதம் பணியிடங்களில் மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்தி, இத்துறை அனைத்து அரசுத் துறைகளுக்கும் சிறந்த முன் மாதிரியாக விளங்குகிறது.

❖ ❖ ❖

சுற்றுலாத்துறை

- ✶ 2019 ஜனவரி மாதம் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடைபெற்ற பிட்டுர் சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்துகொண்டது.

- ✶ 2019 மார்ச் மாதம் ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்ற பன்னாட்டு சுற்றுலா சந்தையில் கலந்து கொள்ளப்பட்டது.

- ✶ 2019 மே மற்றும் ஜூன் மாதங்களில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கல்வராயன் மலை மற்றும் ஜவ்வாது மலை ஆகிய மலைப்பிரதேசங்களில் கோடை விழா நடத்தப்பட்டது.

- ✶ 2019 செப்டம்பர் மாதத்தில் கஜகஸ்தான் நாட்டில் அஸ்தானாவில் நடைபெற்ற பாட்டா சுற்றுலா சந்தையில் கலந்து கொள்ளப்பட்டது.

- ✶ செப்டம்பர் 27 அன்று சேலத்தில் மாநில அளவிலும், அனைத்து மாவட்டங்களிலும் உலக சுற்றுலா தின விழா கொண்டாடப்பட்டது.

- ✶ 2019 அக்டோபர் மாதத்தில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பன்னாட்டு சுற்றுலா சந்தையில் கலந்து கொள்ளப்பட்டது.

- ✶ 2019 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2 இலட்சம் வீதம் ரூ.64 இலட்சத்தில் ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா நடத்தப்பட்டது.

- ✶ 2019 நவம்பர் மாதத்தில் இலண்டனில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் கலந்துகொள்ளப்பட்டது.

- ✶ 2019இல் நேரடி நியமன அடிப்படையில் நான்கு சுற்றுலா அலுவலர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்டனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

- ✶ ஊட்டி மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் உணவகம் கட்டுமானப் பணிகள், வெளிப்புறச் சுவற்றில் வர்ணம் பூசுதல் மற்றும் தார்ச் சாலையை புதுப்பித்தல் மற்றும் இதர மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.166.30 இலட்சம் ஆணை வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன. தார்ச் சாலையை புதுப்பித்தல் பணி நடைபெற்று வருகிறது.

- ✶ திருச்சி மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், மாநாட்டுக் கூடம், உணவகம் மற்றும் மதுபான விடுதி ஆகியவை ரூ.133.35 இலட்சம் நிதி வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

- ✶ மதுரை மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் பொதுக்கழிவறைகள், நடைபாதை ஓடுகளை மாற்றுதல், உணவகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.93.87 இலட்சம் நிதி வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

- ✶ சென்னை மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், பொதுக் கழிவறை மற்றும்

ஆழ்துளை கிணறு ஆகியவற்றை அமைக்கும் பணிகள் ரூ.19.20 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டன.

✶ 'பிரசாத்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் காஞ்சிபுரத்திலுள்ள கோவில் குளங்கள் புனரமைத்தல், நினைவு சின்னங்கள், ஒன்பது கோவில் கோபுரங்கள் ஒளியூட்டு அலங்காரங்கள், ஏகாம்பரேஸ்வர் கோவிலுக்கு அடிப்படை வசதிகள், பேருந்து நிறுத்துமிடத்தை மேம்படுத்துதல் மற்றும் நடைபாதை, நகருக்குள் செய்யப்படும் வசதிகள் ஆகிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதியாக ரூ.1,647.67 இலட்சத்தினை அனுமதித்தும் அதில் ரூ.1,318.13 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ 'பிரசாத்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணி கடற்கரையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், பேருந்து நிலையத்தில் கழிப்பறை வளாகம் மற்றும் மாரியம்மன் குளம் மேம்படுத்தல் ஆகிய பணிகளுக்காக நிர்வாக அனுமதியாக ரூ.560.08 இலட்சத்தினை அனுமதித்து அதில் ரூ.448.06 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ 'சுவதேஷ் தர்ஷன்' (கடற்கரை சுற்றுலா மேம்பாடு) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக 1. சென்னை (மெரினா மற்றும் பெசன்ட் நகர்), 2. மாமல்லபுரம், 3. இராமேஸ்வரம், 4. குலசேகரப்பட்டினம், 5. கன்னியாகுமரி ஆகிய கடற்கரைகள் மற்றும் தெற்குறிச்சி, மணக்குடி, திரிவேணி சங்கமம் ஆகிய இடங்களை தேர்ந்தெடுத்து ரூ.7,457.81 இலட்சம் ஒப்பளித்து அதில் ரூ.5,342.46 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ உதகை படகு இல்லத்தில், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.110 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

✶ பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிடத்தில் ரூ.60.20 இலட்சம் செலவில் மணிமண்டபம் புனரமைக்கப்பட்டது.

✶ நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் ரூ.257 இலட்சத்தில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் 16 ஓட்டல்களில் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.379.28 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் யாத்திரிகள் தங்குவதற்காக சுற்றுலா ஓய்வு அறை, பலபடுக்கைகள் கொண்ட கூடம் மற்றும் சுற்றுலா வரவேற்பு மையத்தை நவீன வசதிகளுடன் அமைக்கக் கூடிய கட்டடப் பணிகள் மேற்கொள்ள ரூ.1,039.58 இலட்சம் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவித்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் சுற்றுலா விருந்தினர் மாளிகை மற்றும் சுற்றுலா தகவல் தொடர்பு மையம், திருச்சியில் விருந்தினர் கூடத்துடன் கூடிய அறைகள் மற்றும் கன்னியாகுமரியில் அமைந்துள்ள பாரம்பரிய சுற்றுலா மையத்தை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.696 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ ஊட்டி மண்டலத்தில் உள்ள படகு குழாம்களுக்கு ரூ.4.46 இலட்சம் செலவில் உயிர் காக்கும் கவசம் வாங்கப்பட்டது.

✶ திருச்சி மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.133.35 இலட்சம் மற்றும் புதிய மெத்தைகள், மெத்தை விரிப்புகள், குளிர்சாதனப்பெட்டிகள், தொலைக்காட்சிகள் மற்றும் சமையலறை உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.32.51 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

✶ மதுரை மண்டலத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் பொதுக்கழிவறைகள், நடைபாதை ஓடுகளை மாற்றுதல், உணவகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.93.87 இலட்சத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.43.30 இலட்சம் செலவில் தொலைநோக்கி, தொலைக்காட்சிகள், அறைகளில் குளிரூட்டும் கலன், மெத்தைகள் மற்றும் சமயலறை உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

- ✶ சென்னை மண்டலத்தில், தமிழ்நாடு ஓட்டல்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.15.04 இலட்சம் மற்றும் தொலைக்காட்சிகள், ஜெனரேட்டர், மெத்தைகள் மற்றும் சமையலறை உபகரணங்கள் ரூ.26.35 இலட்சம் மதிப்பில் வாங்க ஆணை வழங்கப்பட்டது.

- ✶ 35 இருக்கைகள் கொண்ட இரண்டு குளிர்சாதன சொகுசுப் பேருந்துகள் அசோக் லேலண்டு நிறுவன அடிச்சட்டத்தின் மேல் ரூ.80 இலட்சம் மதிப்பில் வடிவமைக்கப்பட்டன.

- ✶ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2019ஆம் ஆண்டில் வழக்கமான 38 வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இதனுடன் கூடுதலாக 4 புதிய சுற்றுலாக்கள் மற்றும் 4 புதிய சிறப்பு சுற்றுலா தொகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ✶ கடந்த நிதியாண்டுடன் சுற்றுலா பிரிவின் ஒப்பீட்டு வருவாய் ரூ.77.31 இலட்சம் (நவம்பர் 2019 வரை) ஆக அதிகரித்துள்ளது.

- ✶ ஒட்டுமொத்த நிதியாண்டுடன் ஒப்பிடும்போது, சுற்றுலாப் பயணிகளின் வருகையின் சதவீதம் அரையாண்டு முடிவிற்குள் 78 சதவிகிதத்தை எட்டியுள்ளது.

- ✶ மாமல்லபுரத்தில் சுற்றுலா தலத்தை முழுவதும் சிரமமின்றி பார்வையிடும் வகையில் 'ஹாப்–ஆன்; ஹாப்–ஆஃப்', அதாவது "எங்கும் ஏறலாம்; எங்கும் இறங்கலாம்" என்ற சுற்றுப்பயணமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- ✶ தினசரி திருப்பதி சுற்றுலாப் பயணிகளுக்கு இரவு உணவு திருத்தணி, ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ✶ உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கு புதிய சுற்றுலாக்களை அறிமுகம் செய்து சுற்றுலா பயணங்களை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

- ✶ 'ஜாடா – 2019' ஜப்பானில் பங்கேற்றல்.

- ✶ 'ஐஎப்டிஎம் – 2019' பிரான்ஸில் பங்கேற்றல்.

- ✶ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தால் நடத்தப்படும் 22 ஓட்டல்கள் மற்றும் அனைத்துச் சுற்றுலாக்களை ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.10.49 கோடியை 2019–2020 ஆண்டில் (நவம்பர் மாதம் வரை) வருவாய் ஈட்டியுள்ளது. இச்சேவை மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் குறிப்பாக ஸ்பெயின், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரேலியா, பின்லாந்து, கனடா, நார்வே, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர், சீனா, துபாய், மலேசியா, இலங்கை, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட சுமார் 125 நாடுகளில் இருந்து முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் தங்களுடைய ஆன்லைன் முன்பதிவு செய்யும் வசதியை திருப்பதி தேவஸ்தான ஆன்லைன் முறையுடன் இணைத்து, பயணிகளுக்கு திருப்பதி தரிசனத்திற்கு பார் குறியீடு வசதியுடன் கூடிய பயணச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் திருப்பதியில் பயணிகளின் அடையாளச் சீட்டை கணினியில் கண்காணிக்கப்பட்டு அவர்களின் உடனடி தரிசனத்திற்கு அனுமதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் இயங்கும் திருச்சி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருச்செந்தூர், ஏற்காடு, ஒகேனக்கல், காஞ்சிபுரம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய எட்டு தமிழ்நாடு ஓட்டல்களில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் Wi-Fi வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சென்னை தீவுத்திடலில் நடத்தும் 46ஆவது இந்திய தொழில் பொருட்காட்சிக்கு பார்வையாளர்கள் தங்கள் நுழைவுச் சீட்டு மற்றும் சிறுவர் இரயில் பயணச்சீட்டுகளை ஆன்லைன் (online) மூலம் முன்பதிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் கீழ் இயங்கும் படகு இல்லங்களான ஊட்டி, பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல்–1 மற்றும் கொடைக்கானல்–2 ஆகிய படகு இல்லங்களில் புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது குறிப்பாக சுற்றுலாப்பயணிகள் தங்களின் படகு சவாரியின் கால அளவு அறியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் படகு சவாரி செய்ய வழங்கப்படும் பயணச் சீட்டுகளில் முறைகேடுகள் ஏற்படாமல் இருக்கவும் படகுகளின் இருப்பு ஆகியவற்றை தெரிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* தற்போதைய சுற்றுலாத்தகவல்கள் மற்றும் நிகழ்வுகளை சுற்றுலாப் பயணிகள் அறியும் வண்ணம் சமூக வலைதளங்களான Face-book, Twitter, You-tube and Instagram ஆகியவை மூலம் “டிஜிட்டல் சந்தைப்படுத்துதல்” (Digital Marketing) உருவாக்கப்பட்டு 2019–2020 (நவம்பர் மாதம் வரை) வருடத்தில் சுற்றுலா நிகழ்வுகள் Face-book மூலம் பகிரப்பட்டதில் சுமார் 79.95 இலட்சம் மக்களைச் சென்றடைந்துள்ளது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயங்கும் ஒன்பது படகு குழாம்களின் அழகிய காட்சி அமைப்புகளை வரைபட மற்றும் இட இருப்பிட காட்சியுடன் வடிவமைக்கப்பட்டு இணையத்தில் பார்க்கும் வண்ணம் வசதி செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதியதாக அறிமுகப்படுத்திய சுமார் ஒன்பது சுற்றுலா பயணங்களை டிஜிட்டல் வடிவில் இணையதளம் மற்றும் இணையவழி முன்பதிவு வசதியுடன் இணைக்கப்பட்டு, பயணிகள் முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* ஆன்லைன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை முன்பதிவு செய்யும் பயணிகள் தங்களின் இணைய வழி வங்கி சேவை வசதியை பெறும் வகையில் மதிப்பு கூட்டப்பட்ட சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை பிரிவு மற்றும் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யும் சுற்றுலாப் பயணிகள் தங்களின் சுற்றுலாப் பயணத்தை ஒரு நாள் முன்பு நினைவூட்டும் வகையில் அவர்களின் முன்பதிவு விவரங்களுடன் கூடிய தங்களின் பேருந்து எண் மற்றும் ஏறுமிடம் குறித்த குறுஞ்செய்தி (SMS) அலைபேசி மூலம் அனுப்பப்படுகிறது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், Google நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலா தகவல்கள் அறியவும் மற்றும் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யவும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

* ஆன்லைனில் முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை சுற்றுலாப் பயணிகள் எப்போது ரத்து செய்தாலும் அதற்கான திரும்பப்பெறும் தொகையை (Online Refund System) ஆன்லைன் மூலம் உடனடியாக பெற்றுக் கொள்வதற்கான வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

* சென்னை தீவுத்திடல் மைதானத்தில் 45ஆவது மற்றும் 46ஆவது இந்திய சுற்றுலா பொருட்காட்சிகள், மாரத்தான் ஓட்டம், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி, வீதி உணவுத் திருவிழா, படப்பிடிப்புகள், தீபாவளி பொருட்காட்சி ஆகிய நிகழ்ச்சிகள் நடத்த இடம் ஒதுக்கீடு செய்ததன் மூலம் ரூ.6.39 கோடி வாடகை வருவாய் ஈட்டியுள்ளது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த நிதி ஆண்டில் (2017–2018) ஈட்டிய மொத்த வியாபாரத் தொகையான ரூ.105.08 கோடியுடன் ஒப்பீடு செய்ததில், இந்த ஆண்டு (2018–2019) மொத்த வியாபாரத் தொகை ரூ.114.56 கோடி ஈட்டியுள்ளது. இது 9 சதவிகித வளர்ச்சியாகும்.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கடந்த 2013–2014, 2014–2015, 2016–2017, 2017–2018, 2018–2019 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுக்கு ஆதாயப்பங்காக ரூ.3.13 கோடி வழங்கியுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டம்–தொகுதி–4

* ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டம் தொகுதி 4இன் கீழ், ரூ.218 கோடி மதிப்பீட்டில் 14 துணைத் திட்டப் பணிகள் (14 Sub-project

works) செயல்படுத்தப்படவுள்ளன. இவற்றில் 12 துணைத் திட்டப் பணிகளுக்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. தொகுதி 4க்கான திட்ட முடிவுறு காலம் 30.06.2020.

- 2019இல் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு, 43 இருக்கைகள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இரண்டு வால்வோ குளிர்சாதன பேருந்துகள் ரூ.2.22 கோடி மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன.

- ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ், ரூ.2.85 கோடி செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் கீழ் இயங்கும் படகு குழாம்களுக்கு 129 புதிய படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

- எஞ்சியுள்ள இரண்டு துணைத்திட்டப் பணிகளான இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான திருவெண்காடு மற்றும் 7 இடங்களில் உள்ள கோவில்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுலா மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய பணிகள் பல்வேறு தொகுப்புகளின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கியின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

கலை பண்பாட்டுத் துறை

- கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கி, கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, புதிதாக கலை பண்பாட்டு மையம் தோற்றுவிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, கோயம்புத்தூர் இசைக் கல்லூரி வளாகத்தில் புதிய மண்டல அலுவலகம் 12.07.2017 முதல் செயல்பட்டு வருகிறது.

- 169 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பழுதடைந்த வகுப்பறைகள் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.1.40 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- நலிந்த நிலையில் வாழும் சிறந்த மூத்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு, நிதியுதவி ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டது.

- 2017–2018ஆம் ஆண்டில், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, கலை வல்லுநர்களைக்கொண்டு பணியிடை பயிற்சி ரூ.8 இலட்சம் செலவில் சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் 04.01.2018 மற்றும் 05.01.2018 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேலும் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் ஒலி, ஒளி நூலகம் ரூ.17 இலட்சம் செலவினத்தில் அமைக்கப்பட்டது.

- 2019–2020ஆம் ஆண்டு சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்பத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் ஆண்டு சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்கு ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரிகளின் மூலம் ரூ.6 இலட்சம் செலவினத்திலும், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் ரூ.12.75 இலட்சம் செலவிலும் தமிழிசை விழாக்கள் 2017–2018ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

- கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 7 மண்டல கலைப் பண்பாட்டு மையங்கள், சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய 10 இடங்களில் ரூ.10 இலட்சம் செலவினத்தில் ஓவிய சிற்பக் கலைக் கண்காட்சிகள் 2017–2018இல் நடத்தப்பட்டன.

- பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் கலை பண்பாட்டுத்

துறை சார்பாக ரூ.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு ஒரு புதிய பொலிரோ வாகனம் ரூ.7.24 இலட்சத்தில் 2018 இல் வாங்கப்பட்டது.

- தமிழகத்தில் 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான எட்டு ஆண்டுகளுக்குரிய பல்வேறு கலைப் பிரிவுகளைச்சார்ந்த சிறந்த புகழ்பெற்ற 201 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகளும், 2016 முதல் 2018 வரையிலான ஆண்டுகளுக்கு இயல், இசை, நாட்டியத் துறையில் சிறந்து விளங்கும் ஒன்பது கலைஞர்களுக்கு முறையே பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோர்களின் பெயர்களில் தலா மூன்று அகில இந்திய அளவிலான விருதுகளும், மூன்று சிறந்த கலை நிறுவனங்களுக்கு விருது மற்றும் ஒரு சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற்கேடயம் ரூ.270 இலட்சம் செலவில் கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.08.2019இல் வழங்கப்பட்டன.

- தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும், மக்களிடையே பண்பாடு சார்ந்த விழிப்புணர்வை மேம்படுத்திடவும், கிராமியக் கலை விழாக்களை அனைத்து மாவட்டங்களில் நடத்திடவும் ஒதுக்கப்படும் ரூ.100 இலட்சம் நிதியானது 2018–2019ஆம் நிதியாண்டு அறிவிப்பில் ரூ.265 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன மக்கள் குடியரசுத் தலைவர் அவர்கள் மாமல்லபுரத்திற்கு வருகை தந்தபோது அவர்களை வரவேற்கும் விதமாக விமான நிலையம் முதல் மாமல்லபுரம் வரை 11.10.2019 மற்றும் 12.10.2019 ஆகிய இரு நாட்களுக்கு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் ரூ.67 இலட்சத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலமாக 507 நாட்டுப்புற மற்றும் பரதநாட்டியக் கலைஞர்கள் பயன்பெற்றனர். மேலும் இந்நிகழ்வு தமிழகத்தின் கலைப்பண்பாட்டினை பிரதிபலிப்பதாக அமைந்தது.

- தமிழ்நாடு நாள் விழா கொண்டாட்டத்தின்போது பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ரூ.26.39 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. மேலும் கலைவாணர் அரங்கத்தில் 01.11.2019 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவின்போது மாநில அளவிலான மரபு ஓவியம் மற்றும் சிற்பக் கலை கண்காட்சி நடத்தப்பட்டு ரூ.10 இலட்சம் செலவில் 60 மூத்த மற்றும் இளம் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

அருங்காட்சியகங்கள் துறை

- 2018–2019ஆம் ஆண்டில் தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் தலா ரூ.130 இலட்சம் செலவில் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடப்பு நிதியாண்டில் பணிகள் நிறைவுறும்.

- புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு அரசு அருங்காட்சியகங்களின் பாரம்பரிய கட்டடங்களை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்யவும் மற்றும் காட்சியமைப்புகளை மேம்படுத்தவும் ரூ.558.17 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. உதகமண்டலம் அருங்காட்சியகத்தில் பணிகள் முழுமையாக நிறைவுற்றது.

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், நடைபாதைகள், மின் விளக்குகள் மற்றும் அதற்கான கேபிள்கள், உட்புறச் சாலைகள், மியூசியம் பிளாசா, திறந்த வெளி கலையரங்கம் (Amphitheatre) அமைக்க ரூ.11 கோடி செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB- Infrastructure Development Investment Programme for Tourism) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அரியலூரில் புதை உயிரிப்படிவ கள அருங்காட்சியகம் ரூ.2 கோடி செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.08.2019 அன்று பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக வளர்கலைக் கூட கட்டடத்தின் தரை தளத்தில் நிலையான கண்காட்சிக் கூடம் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு அதில் முதல் கண்காட்சியாக 'தேர்ச் சிற்பங்கள்' சிறப்பு கண்காட்சி வடிவமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாடு துறை அமைச்சர் அவர்களால் 19.09.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- சென்னை அரசு அருங்காட்சியக மானிடவியல் பிரிவில் தனித்த இசைக் கருவிகள் காட்சிக்கூடம் ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மார்ச் 2019இல் பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது.

- 2018–2019ஆம் ஆண்டில் கருத்தியலான சிறப்புக் கண்காட்சிகள், சொற்பொழிவுகள், பணிப் பட்டறைகள், கருத்தரங்கங்கள் போன்ற கல்விப் பணிகளை அரசு அருங்காட்சியகம், சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

- சென்னை, அரசு அருங்காட்சியக பார்வையாளர் வசதிக்காக காணொலி கேட்டொலியுடன் கூடிய செயலியினை (Museum app.) ரூ.25 இலட்சம் செலவில் உருவாக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.70 இலட்சம் செலவில் சிற்பப்பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காணொலி காட்சி திரைகள் (Video Wall) ரூ.100 இலட்சம் செலவிலும், உள்சுற்று தொலைக்காட்சிகள் மற்றும் பல்வேறு பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பு (Security Management Control System - SMCS) அமைப்புகள் ரூ.250 இலட்சம் செலவிலும், ரூ.60 இலட்சம் செலவில் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.70 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியக படிமங்கள் காட்சிக்கூடத்தில் சீர்வளி (Airconditioner) வசதியை மாற்றியமைக்கும் பணிகளும் நடைபெற உள்ளன.

- அரசு அருங்காட்சியகம், சென்னை மற்றும் 21 மாவட்ட அருங்காட்சியகங்கள் பல்வேறு கல்விப் பணிகளின் மூலம் அருங்காட்சியக வழிக் கற்றலை ஊக்குவித்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தமிழர் தம் பண்பட்ட அறிவினை பரவலாக்கும் செய்யும் பணியினை ஆரவாரமின்றி செய்து வருகின்றன.

தொல்லியல்துறை

- விழுப்புரம் மாவட்டம், சோழவாண்டிபுரம் கிராமம் ஆண்டிமலையில் உள்ள சமணர் சிற்பங்கள், படுக்கைகள் மற்றும் கல்வெட்டுகள் ஆகியவற்றினை பாதுகாத்திட மலை முழுவதும் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் உயர் அலுவலர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு ஒரு அணிக்கு 41 செயல் அலுவலர்கள் வீதம் நான்கு அணிகளாக மொத்தம் 164 அலுவலர்களுக்கு 2 வார குறுகிய கால "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு" பயிற்சி அளிக்க ரூ.45 இலட்சம் பெறப்பட்டு, மேற்படி பயிற்சி வகுப்புகள் 12.11.2018 முதல் தொடங்கப்பட்டு 07.01.2019 வரை நடைபெற்றது.

- தொல்லியல் துறையின் 91 பாதுகாக்கப்பட்ட சின்னங்களில் புனரமைப்பு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப்பணிகள் மேற்கொள்வதற்காக பெறப்பட்டு வந்த தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்வு.

- சுற்றுலாத்துறை மூலம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 12 நினைவுச் சின்னங்களில் புனரமைப்பு, பாதுகாப்பு, பராமரிப்பு பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதி உதவி மூலம் மேற்கொள்ள ரூ.22.75 கோடி ஒதுக்கீடு.

- திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப் பெரும்புதூர் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் அகழாய்வுப்பணி ரூ.20 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ சுமார் 1,200 அரிய தொல்பொருட்கள் மற்றும் தொல்லியல் எச்சங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இந்த

அகழாய்வில் செங்கல்லிலான சங்ககாலக் கிணறு ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்ககால செங்கல் கிணறு தமிழக அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதன் முறையாகும்.

✶ சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வுப் பணிக்கு ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி அகழாய்வுப் பணிகள் முடிவடைந்துள்ளது. ஏறத்தாழ 34 அகழாய்வுக் குழிகள் அமைக்கப்பட்டு சுமார் 5,820 அரிய தொல்பொருட்கள் மற்றும் தொல்லியல் எச்சங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இந்த அகழாய்வில் சுடுமண்ணாலான உறை கிணறு, பல அரிய கல்மணிகள், யானை தந்தத்தினால் ஆன பொருட்கள், சுடுமண்பாத்திரங்கள், விளையாட்டுப் பொருட்கள், பானை ஓடுகள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் மணிகள், கண்ணாடி மணிகள், கார்னீலியன் மணிகள் (Carnelian Beads), அகேட் (Agate) மணிகள், சங்கு வளையல்கள், செப்புகாசுகள் போன்றவை முக்கியமானது. கீழடியில் தொடர் அகழாய்வுகளின் வாயிலாக சங்ககால மக்களின் சமுதாய, பொருளாதார மற்றும் பண்பாட்டினை முழுமையாக வெளிக்கொணர்கிறது.

✶ தொல்லியல் துறையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளித்திட திறன் மிகு வகுப்பறை அமைக்க ரூ.9 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ தொல்லியல் துறையின் 27 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் 14 அகழ்வைப்பகங்களில் ரூ.6.50 இலட்சம் மதிப்பில் 85 தீயணைப்பு கருவிகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✶ தொல்லியல் துறையின் 14 அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் சிறப்பு நூலகம் அமைத்திட ரூ.20 இலட்சம் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ தொல்லியல் விழாக்களான உலக மரபுநாள் (ஏப்ரல் 18), உலக மரபுவாரம் (நவம்பர் 19 முதல் 25 வரை) சிறப்பாக கொண்டாடுவதற்கு சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.15 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

✶ தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் காவல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் 50 பகுதிநேரப் பணியாளர்களுக்கு நிலை ஊதியத்தினை ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுநிலை பட்டயபடிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.2,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ கருணை அடிப்படையில் ஓர் இளநிலை உதவியாளர், ஓர் தட்டச்சர், ஓர் விற்பனை சிற்றெழுத்தர், ஓர்

அலுவலக உதவியாளர், இரண்டு பெருக்குநர் ஆக ஆறு நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாக ஓர்தட்டச்சர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- ✶ துறையில் காலியாக இருந்த 23 காவலர் பணியிடங்கள் மற்றும் ஒரு தோட்டக்காரர் பணியிடம் ஆகியவை சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் உபரியாக இருந்த காவலர்கள் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.
- ✶ முறையான தொல்பொருள் ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சிகளை நடத்துவதற்காக, 2019–2020ஆம் ஆண்டில் ரூ.2 கோடி தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கான பங்களிப்பை நினைவுகூறும் வகையில் “ஆரம்பகால தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம்” என்ற தலைப்பில் ஆண்டு சர்வதேச கருத்தரங்கை நடத்துவதற்காக, 2019–2020ஆம் ஆண்டில் தொடரும் செலவினமாக ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய கையெழுத்துப் பிரதிகளை அடையாளம் காணவும், சேகரிக்கவும், பாதுகாக்கவும், கையெழுத்துப் பிரதிகளை டிஜிட்டல் மயமாக்கவும், தனித்துவமான ஒன்றை உருவாக்கவும் அரசாங்க ஓரியண்டல் கையெழுத்துப் பிரதிநூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கையெழுத்துப் பிரதி வளமையத்தை அமைப்பதற்காக ரூ.60 இலட்சம் செலவில் தமிழகத்தில் கையெழுத்துப் பிரதித் திட்டத்தைத் தொடங்குவது, மெட்டா டேட்டாவுடன் தரவுத்தளம் மற்றும் ஐந்து ஆண்டுகளில் அதை ஆன்லைனில் உருவாக்க பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
- ✶ திருமலை நாயக்கர் மஹால், தஞ்சாவூர் அரண்மனை மற்றும் டேனிஷ்கோட்டை போன்ற முக்கியமான பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் வளாகத்தில் பொங்கல், சித்திரை அழகர் திருவிழா, ஐப்பசி சதயம் போன்ற பண்டிகை காலங்களில் பாரம்பரிய கலாச்சார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய, 2019–2020ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் தொடரும் செலவாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ✶ ரூ.32 இலட்சம் செலவில் 14 தள அருங்காட்சியகங்கள் மற்றும் துணை அலுவலகங்கள் வளாகத்தில் சமீபத்திய சி.சி.டி.வி. கேமராக்களை துணைகருவிகளுடன் நிறுவுதல் மற்றும் அவற்றை தலைமை அலுவலகத்திலிருந்து கண்காணித்தல்.
- ✶ கீழடியில் ஒரு உலகத்தரம் வாய்ந்த தள அருங்காட்சியகம் அமைக்க ரூ.12.21 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை

- ✶ 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- ✶ 1,745 திருக்கோயில்களில் ரூ.134.15 கோடி செலவில் திருப்பணிகள் முடிவுற்று குடமுழக்கு நடத்தப்பட்டது.
- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 66 திருக்கோயில்களில் ரூ.63.60 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.
- ✶ இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்புறத்தில் அமைந்துள்ள 2,075 திருக்கோயில் திருப்பணிகளுக்கு கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி மூலம் திருக்கோயில் ஒன்றுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.20.75 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
- ✶ இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 2,601 திருக்கோயில் திருப்பணிகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதிமூலம் திருக்கோயில் ஒன்றுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.26.01 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 123 திருக்குளங்கள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது.
- ✶ 25 திருத்தேர்கள் ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது.

* 15 திருக்கோயில்களில் ரூ.5.58 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

* இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.29 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்குவதற்கு யாத்ரி நிவாஸ் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டு வருகிறது.

* ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் புதியதாக ஓய்வுகூடங்கள், குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் உள்ளடக்கிய யாத்ரி நிவாஸ் ரூ.33.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

* 15 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

* நிதி வசதியற்ற 241 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

* 406 திருக்கோயில்களுக்கு சொந்தமான 2,794.33 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

* 2016–2017ஆம் ஆண்டிற்கு 09.02.2017 முதல் 10.03.2017 வரை யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 30 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இதில் 31 தமிழக திருக்கோயில் யானைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்றன.

* 2017–2018ஆம் ஆண்டில் 31 தமிழக திருக்கோயில் யானைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்றன.

* 2018–2019ஆம் ஆண்டில் 27 தமிழக திருக்கோயில் யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்ற முகாம் 48 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

* 2019–2020ஆம் ஆண்டிற்கான யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 48 நாட்களுக்கு 15.12.2019இல் துவங்கப்பட்டுள்ளது. இதில் 26 தமிழக திருக்கோயில் யானைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்கின்றன.

* இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த 902.89 ஏக்கர் பரப்பளவுள்ள

நிலங்களும், 255 கிரவுண்டு 2,381 சதுர அடி பரப்பளவுள்ள மனைகளும், 101 கிரவுண்டு 0197 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடங்களும் சுவாதீனம் பெறப்பட்டது. இவைகளின் மதிப்பு சுமார் ரூ.840.19 கோடி ஆகும்.

- நிதி வசதிமிக்க திருக்கோயில் நிதியிலிருந்து 10,000 சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.50 கோடி மதிப்பில் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- ஸ்ரீராமானுஜர் 1,000ஆவது அவதாரத் திருவிழா 21.04.2017 முதல் 01.05.2017 முடிய ஸ்ரீராமானுஜர் அவதரித்த தலமான திருப்பெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயில் மற்றும் தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள இதர வைணவ திருத்தலங்களிலும் இவ்விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

- ஸ்ரீராமானுஜரின் வரலாற்று ஆவணப்படம் மற்றும் 2017ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியையும் இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.05.2017 அன்று ஸ்ரீராமானுஜரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய “வைணவ மாநிதி” என்ற தலைப்பிலான படங்களுடன் கூடிய மும்மொழி நூலினை வெளியிட்டார். ஸ்ரீராமானுஜரின் ஆயிரமாவது அவதார திருவிழாவினை முன்னிட்டு இந்திய அஞ்சல் துறை சார்பாக ஸ்ரீராமானுஜர் சிறப்பு அஞ்சல்தலை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் புதுதில்லியில் 01.05.2017 அன்று வெளியிடப்பட்டது.

- காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில் நாற்பது வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஸ்ரீ அத்தி வரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 முடிய நாற்பத்தி எட்டு நாட்கள் திருக்கோயிலின் பழக்க வழக்கங்களின்படி சிறப்பாக நடைபெற்றது. இத்திருக்கோயிலின் மேற்கு இராஜகோபுரம் அருகே உள்ள அனந்தசரஸ் திருக்குளத்தில் ஸ்ரீ அத்தி வரதர் சிலை நாற்பது ஆண்டுகள் கழித்து வெளியே எடுக்கப்பட்டு நாற்பத்தி எட்டு நாட்கள் பூஜைக்காகவும், பொதுமக்கள் தரிசனத்திற்காகவும் எழுந்தருளச் செய்யப்பட்டு சுமார் ஒரு கோடியே ஏழாயிரம் பக்தர்கள் தரிசனம் செய்தனர். இவ்வைபவத்தை முன்னிட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் சிறப்பு அஞ்சல் உறையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அத்திவரதர் பற்றிய சிறப்பு புத்தகமும் வெளியிடப்பட்டது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை “தூய்மையான புனித தலமாக” தேர்வு செய்து, ‘தூய்மை இந்தியா’ (Swachh Bharath) விருது இந்திய அரசால் 02.10.2017 அன்று வழங்கப்பட்டது.

- பழைமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்காக ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு, 2017 UNESCO Asia-Pacific Heritage Award of Merit for Conservation விருது 01.11.2017 அன்று வழங்கப்பட்டது.

- இணையதள வழி வருடாந்திர வாக்களிப்பு செயல்முறைகளின் அடிப்படையில், சிறந்த தொன்மையான தலம் பிரிவில், இந்திய டுடே சுற்றுலா ஆய்வு விருது–2019இன் இரண்டாம் பரிசு, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை மூலம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்படும் அறநிலையத்துறை அரங்கிற்கு ஆண்டுதோறும் முதல் இடம் / சிறப்பு அந்தஸ்திற்கான விருது பெறப்பட்டு வருகிறது. 2018இல் நடைபெற்ற 44ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் சிறந்த அரங்கிற்கான விருதும், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 45ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் மாநில அரசுத் துறை பிரிவில் முதல் பரிசும் இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

* தமிழ்நாடு அரசு ரூ.5,890 கோடி மதிப்பீட்டில் 12,000 புதிய பேருந்துகள் மற்றும் 2,000 புதிய மின்சார பேருந்துகள் வாங்குவதற்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

* தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற மற்றும் பணியிலிருக்கும் தொழிலாளர்களின் நலனை கருத்தில்கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்கிட வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழக அரசு ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஈட்டிய விடுப்பு சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகையாக 2017–2018ஆம் ஆண்டில், ரூ.2,147.39 கோடியும், பணியிலுள்ள தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி நிலுவைத் தொகை மற்றும் சம்பளம் பிடித்த நிலுவைத் தொகையாக ரூ.291.99 கோடியும், மோட்டார் வாகன இழப்பீட்டுத் தொகையாக ரூ.485.23 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,924.61 கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டு 31.03.2018 வரை ஓய்வு பெற்ற அனைத்து போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் ஓய்வு கால பணப்பலன்கள் முழுவதையும் அரசு வழங்கியுள்ளது.

* 2018–2019ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.487.56 கோடியும், பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு ரூ.325.47 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.813.02 கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது. மேலும் இதன் தொடர்ச்சியாக 2018–2019ஆம் ஆண்டில், ரூ.1,093 கோடியை பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஈட்டிய விடுப்பு சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகையாகவும் 31.03.2019 வரையில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம் ரூ.1,906.02 கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது.

* தமிழக மக்களின் வசதி மற்றும் சுகமான பேருந்து பயணத்தைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்திடும் பொருட்டு 16.02.2017 முதல் 10.12.2019 வரை 4,921 புதிய பேருந்துகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு, தடத்தில் இயக்கப்பட்டுள்ளன. இதில், தமிழக போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் முதன்முறையாக தூங்கும் வசதியுடன் கூடிய 36 பேருந்துகள் மற்றும் 106 இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதன சொகுசு பேருந்துகளும் தடத்தில் இயக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் புதிய 3x2 என்ற இருக்கை வசதியுடன் கூடிய 100 குளிர்சாதன பேருந்துகள் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் வசதிக்காக வழித்தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை மூலம் இரண்டு அதிநவீன சொகுசு குளிர்சாதன பேருந்துகள் பொதுமக்களின் வசதிக்காக தடத்தில் இயக்கப்பட்டுள்ளன.

- மேலும், போக்குவரத்துக் கழகங்களை சிறப்பாக மேம்படுத்தும் பொருட்டு மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில், 04.03.2017 அன்று கண்ணகி நகரில் ஒரு பணிமனையும், 04.07.2017 அன்று பெரும்பாக்கத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) சார்பில் 04.03.2017 அன்று செங்கத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) சார்பில் 08.03.2017 அன்று சாத்தான்குளத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) சார்பில் 18.03.2017 அன்று பவானியில் ஒரு பணிமனையும் 04.07.2017 அன்று சூலூரில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) சார்பில், 25.07.2018 அன்று எடமலைப்பட்டிபுதூரில் ஒரு பணிமனையும் சேர்த்து ஆக மொத்தம் ஏழு பணிமனைகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.

- ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய மேம்பட்ட ஒரு கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்பட்டு 03.09.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖

- மாற்றுத்திறனாளிகளுக்கு 3,000 சிறப்பு சக்கர நாற்காலிகள் மற்றும் 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டினை அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அமல்படுத்த ஆணை. அதன் தொடர்ச்சியாக அனைத்துத் துறைகளிலும் தொகுதி ‘இ’ மற்றும் ’ஈ’ பிரிவிலுள்ள பதவியிடங்கள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களாக கண்டறியப்பட்டுள்ளன. மேலும், தொகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவில் 244 பதவியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த பதவியிடங்களை கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மனவளர்ச்சி குன்றியவர்கள், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் தற்போது 1,80,868 பயனாளிகளுக்கு ரூ.306.07 கோடி நிதி ஒதுக்கீடு.

- பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் அருகில் உள்ள பொருட்களை அதிர்வுகள் மூலம் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் ரூ.2.41 கோடி மதிப்பில் நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் 7,193 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மின்கலத்தினால் இயங்கும் சிறப்பு நாற்காலிகள் ரூ.6.50 கோடி மதிப்பில் 872 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.37 கோடி மதிப்பில் 5,000 மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தில் பயன்பெறுவர்.

- போக்குவரத்து நெரிசல்மிக்க இடங்களில் பார்வையற்றவர்கள் பாதுகாப்பாக சாலையினை கடப்பதற்கு ஏதுவாக குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் சென்னை மாநகரில் உள்ள 150 சாலை சந்திப்புகளில் நிறுவ ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.43.82 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சேலம் மற்றும் மதுரை மாநகரங்களில் செயல்படுத்திட ஏதுவாக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகர பேருந்துகளில் வழித்தடங்களை பார்வையற்றவர்கள் அடையாளம் கண்டு எளிதில் பயணித்திட ஏதுவாக 13 வழித்தடங்களில் இயங்கும் 75 பேருந்துகளில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி எழும்பும் சமிக்ஞைகள் கருவி பொருத்தப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தன்னிச்சையான நடமாட்டத்திற்கு உதவும் வகையில் 1,432 குழந்தைகளுக்கு ரூ.20 இலட்சம் செலவில் நடைபயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.10 இலட்சம் செலவில் 617 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இந்த

உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் முதன்மைத் தேர்வு எழுத மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூ.50,000/– வீதம் ரூ.10 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பாதுகாக்கும் இல்லங்களில் தொழிற்பயிற்சி வழங்க ஏதுவாக ரூ.13 இலட்சம் செலவில் 42 இல்லங்களுக்கு பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது. கூடுதலாக 23 மாவட்டங்களுக்கு மனவளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு 01.12.2019 முதல் செயல்படுத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

* பார்வையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்டு அரசு பணிக்கு செல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பயணப்படியான ரூ.1,000/–, காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்தொகை தற்போது ரூ.2,500/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

* இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.23.74 கோடி செலவில் 4,264 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் விதமாக ரூ.11.97 கோடி நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016 பிரிவு 88 இன்படி ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாநில நிதியம் உருவாக்கப்பட்டு அதில் ரூ.12.70 இலட்சம் செலவில் மாற்றுத்திறனாளிகள் குறித்து மாநில அளவிலான முன்னோட்ட கணக்கெடுப்பு நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சுய வேலைவாய்ப்பிற்கான மானியத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தப்பட்டு, 2018–2019ஆம் ஆண்டில் 1,615 பயனாளிகளுக்கு ரூ.3.81 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 2,000 பேர் பயனடையும் வகையில் ரூ.5 கோடி நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- 70 இல்லங்களில் உள்ள 3,120 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் ஒன்றிற்கான உணவூட்டு மானியம் ரூ.650/–லிருந்து ரூ.900/–ஆக உயர்த்தப்பட்டு ரூ.1.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தன்னார்வு தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகள் மற்றும் மையங்களில் பணிபுரியும் 1,127 சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் மதிப்பூதியம் ரூ.10,000/–லிருந்து ரூ.14,000/–ஆக ஏப்ரல் 2018 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. எனவே அதன்படி 2018–2019ஆம் ஆண்டிற்கு ரூ.5,41,92,000/– செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.50 இலட்சம் செலவில் 5 மனவளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்களில் தொழிற் பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் 5 மாவட்டங்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.
- புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக ரூ.52.36 இலட்சம் செலவில் 14 மாவட்டங்களில் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவி 8,546 பயனாளிகளுக்கு ரூ.2.23 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.1 கோடி மதிப்பில் 5,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.
- மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, பிரெய்லி கைகடிகாரம், சிறப்பு சக்கர நாற்காலி, கருப்பு கண்ணாடிகள், பிரெய்லி கைகடிகாரம், உருப்பெருக்கிகள், காலிப்பர், செயற்கை அவயம், ஊன்று கோல் போன்ற உபகரணங்கள் 10,591 பயனாளிகளுக்கு ரூ.2.07 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.1.21 கோடி மதிப்பில் 5,000 பயனாளிகளுக்கு மேற்கண்ட உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- ✶ அரசுத் துறைகளில் கண்டறியப்பட்ட பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 3% இடஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் பணி நியமனம் செய்ய ஆணை.

- ✶ தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்” செயல்படுத்துவதற்காக 2019–2020ஆம் ஆண்டில் ரூ.76.23 கோடி நிதி ஒதுக்கீடு. இத்திட்டத்தின் கீழ் கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் (அல்லது) பூப்பந்து (அல்லது) இதர விளையாட்டுகள், இவற்றில் ஏதேனும் மூன்று விளையாட்டுகளுக்கு ஆடு களங்கள் மற்றும் திறந்த வெளி உடற்பயிற்சி மையம் அமைக்கப்படும். விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் மற்றும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படும்.

- ✶ பல்வேறு சீனியர் மற்றும் ஜீனியர் அளவிலான சர்வதேச சாம்பியன்ஷிப், தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- ✶ பல்வேறு சர்வதேச / தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.27.51 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறனுடைய விளையாட்டு வீரர்களுக்கு உதவும் பொருட்டு பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திட்டம் (Mission International Medals Scheme) அறிமுகம். இத்திட்டத்திற்கு திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தேவை அடிப்படையிலான நிதியுதவி வழங்கும் பொருட்டு தொடர்மானியமாக ரூ.5 கோடி ஒப்பளிப்பு. இதன்மூலம், 48 திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யயப்பட்டுள்ளனர்.

- ✶ ரூ.13.62 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை இடையப்பட்டியிலுள்ள தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.09.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

- ✶ ரூ.1,312.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மை நிலை மையம் அமைக்க ஒப்பளிப்பு.

- ✶ காஞ்சிபுரத்தில் புதியதாக மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்திட ரூ.15.62 கோடி ஒப்பளிப்பு.

- ✶ திருநெல்வேலியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் உலகத்தரம் வாய்ந்த நீச்சல்குள வளாகம் அமைக்க ரூ.5 கோடி ஒப்பளிப்பு.

- ✶ வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காட்பாடி கிராமத்தில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.16.45 கோடி ஒதுக்கீடு.

* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் மேசைப் பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையம் அமைக்க ரூ.12.60 கோடி ஒதுக்கீடு.

* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப் பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையம் அமைக்க ரூ.13.33 கோடி ஒதுக்கீடு.

* காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரிலுள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் அருகில் கெனோயிங் மற்றும் கயாகிங் விளையாட்டிற்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைத்திட ரூ.2.58 கோடி ஒப்பளிப்பு.

* சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தின் அருகில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் 150 சிறுமியர்கள் தங்குவதற்கு ஏற்ப அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய விளையாட்டு விடுதி அமைக்க ரூ.736 இலட்சம் ஒப்பளிப்பு.

* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விடுதி அமைக்க ரூ.474.47 இலட்சம் ஒப்பளிப்பு.

* காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தாலுகா நீர்ப்பெயர் கிராமத்தில் ரூ.4.85 கோடி செலவில் தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம் அமைக்க நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம் அமைக்க ரூ.1.60 கோடி ஒப்பளிப்பு.

* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள் அமைப்பதற்கு ரூ.14.59 கோடி ஒதுக்கீடு.

* மாநில விளையாட்டு சங்கங்கள் தமிழகத்தில் தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், தமிழக அணியை பல்வேறு தேசிய போட்டிகளில் கலந்துகொள்வதற்கு கூடுதல் மானியத் தொகை ரூ.2.01 கோடி நிதி ஒதுக்கீடு.

- சென்னை தென்பகுதியில் உள்ள பெரும்பாக்கம் மற்றும் எழில்நகரில் விளையாட்டு வசதிகளை அமைப்பதற்கு, ரூ.1.53 கோடி ஒப்பளிப்பு.

- மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள்ள விளையாட்டு விடுதிகளில் 140 மாணவர்கள் தங்குவதற்கு ஏதுவாக கூடுதல் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திட முறையே ரூ.97 இலட்சம் மற்றும் ரூ.96 இலட்சம் ஒதுக்கீடு.

- சென்னை, எழும்பூர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் கையுந்து பந்து ஆடுகளம் மற்றும் பார்வையாளர் அமரும் இடத்திற்கு கல்வாலியம் மேற்கூரை அமைக்க ரூ.142.35 இலட்சம் மதிப்பில் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- தருமபுரி, விழுப்புரம் மற்றும் உதகமண்டலத்தில் விளையாட்டு விடுதி கட்டுவதற்கு திருத்திய நிருவாக ஒதுக்கீடாக ரூ.288.20 இலட்சம் மற்றும் கூடுதல் நிதி ஒப்பளிப்பாக ரூ.121.55 இலட்சம் அனுமதி.

- சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் பயிற்சி ஓடுதளப் பாதையின் அருகில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் அமைந்துள்ள ஸ்குவாஷ் ஆடுகளத்திற்கு குளிர்ச்சாதனை வசதி அமைக்க ரூ.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் 60 வீராங்கனைகளுடன் செயல்பட்டு வரும் பெண்கள் சிறப்பு விளையாட்டு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.78.04 இலட்சம் தொடர் செலவினம் ஒப்பளிப்பு.

- உலக ஜுனியர் ஸ்குவாஷ் சேம்பியன்ஷிப் (World Junior Squash Championship) போட்டி நடத்துவதற்கு தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்திற்கு ரூ.50 இலட்சம் சிறப்பு மானியமாக ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கற்பிக்கும் கலை சோதனைக் கூடம் அமைக்க ரூ. 22.05 இலட்சம் ஒப்பளிப்பு.

- தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான உதவித்தொகை உயர்த்தும் பொருட்டு ரூ.18 இலட்சமாக ஆண்டு ஒதுக்கீடு உயர்வு.

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் மின்னணு மொழி ஆய்வகம் அமைக்க ரூ.14.52 இலட்சம் ஒதுக்கீடு.

- சென்னையில் தேசிய அளவிலான வளைகோல்பந்து போட்டி நடத்துவதற்கு ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு சங்கத்திற்கு சிறப்பு மானியம் வழங்குவதற்கு அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் தலை சிறந்த சாதனைக்கான ஊக்கத்தொகையை உயர்த்தும் பொருட்டு ரூ.7.66 இலட்சம் கூடுதல் மானியம் ஒதுக்கீடு.

- கோயம்புத்தூர், அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியில் தேசிய மாணவர் படை பயிற்சி உட்கட்டமைப்பை நவீனப்படுத்தும் பொருட்டு .22mm துப்பாக்கி சுடுதல் பாவிப்பு வாங்குவதற்கு ரூ.3 இலட்சம் ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களுக்கான 12 குடியிருப்புகள் கட்ட ரூ.3.50 கோடி ஒப்பளிப்பு.

- சென்னை–84, நேரு பூங்கா அருகில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய நிருவாக அலுவலகம் கட்ட ரூ.10.67 கோடிக்கு நிருவாக அனுமதியும், 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.3 கோடி ஒப்பளிப்பு.

- வேளச்சேரி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குள வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக் கூடத்தை தரம் உயர்த்த ரூ.1.50 கோடி ஒப்பளிப்பு.

- மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.1.32 கோடி ஒப்பளிப்பு.

❖ ❖ ❖

“அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்” என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்